# ஞானச்சுடர்

## 200ஆவது மலர்




ஆவணி 2014

ஓம்

முருகா


வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

**பொருள் :** தீயவர் சொல்லும் வெறுக்கத்தக்க சொற்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர் துறவிகளிலும் பார்க்கத் தூய்மை உடையவராவர். (159)

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரிற் பின்.**

**பொருள் :** உண்ணாமல் தவஞ் செய்வார் பெரியர். பிறர் தம்மை நோக்கிச் சொல்லும் கடுஞ் சொற்களைப் பொறுப்பவர் தவஞ் செய்வாரிலும் பெரியர். (160)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்

அவனவ ளதுவெனு மவையொரு மூன்றுஞ்
சிவனார் விளையாட் டென்னத் தேர்ந்து
மவுன நிலையில் மனத்தை நிறுத்தித்
தவத்தை யாற்றி முத்திசா ருவமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 03

அறமே யாற்றுதும் தினமே யாற்றுதும்
புறங்கூறு கில்லேம் பயனில புகல்கிலேம்
மறவினை புரிகிலேம் மாதரை நினைக்கிலேம்
திறமே யுடையேம் சிவமோ நாமென்றும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 04

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு — 2

200 ஆவது மலர்

2014

ஆவணி



## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வாக்கு | கு. சோமசுந்தரம் | 01 -02 |
| செல்வச்சந்நிதியான்... | சிவத்திரு வ. குமாரசாமிஐயர் | 03 -04 |
| பசிக்கு விருந்தளிக்கும்... | சிவ. மகாலிங்கம் | 05 -06 |
| தெய்வம் பொறுக்குமா?... | கோப்பாய் சிவம் | 07 -10 |
| ஆற்றங்கரையானின் அருள்... | திருமதி சி. யோகேஸ்வரி | -11 |
| பக்தி | செல்வி பா. வேலுப்பிள்ளை | 12 -14 |
| பல்லாண்டு தொடரட்டும்... | வேல்நந்தன் | 15 -16 |
| தர்மசங்கடம் | நா. நல்லதம்பி | 17 -19 |
| வாழ்க வளர்க | ஆ. சிவநாதன் | -20 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 21 -25 |
| என்ன புண்ணியஞ்... | ச. லலீசன் | 26 -28 |
| வானமுள்ளளவும்... | கே.எஸ். சிவஞானராஜா | 29 -30 |
| பிள்ளையார் திருவுருவம் | செல்வி S. ஐடா | 31 -33 |
| இருநூறு சுடர் தந்தாய்... | துரை. கணேசமூர்த்தி | -34 |
| திருஞானசம்பந்தரும் சைவ... | சி.வ. .இரத்தினசிங்கம் | 35 -38 |
| ஞானச்சுடர் சஞ்சிகையின்... | கு. ரவீந்திரன் | 39 -40 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 41 -43 |
| வாழ்த்துச் செய்தி | திருமதி இ. கலைவாணி | 44 -45 |
| விறகு வியாபாரப் பெருமான் | அ. சுப்பிரமணியம் | 46 -49 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 50 -51 |
| ஞானச்சுடரே வாழிய நீ | இரா. ஸ்ரீநடராசா | -52 |
| அர்த்தமுள்ள இந்துமத... | வி. செல்வரத்தினம் | 53 -54 |

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 | 200ஆவது மலர்

2014 | ஆவணி



## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 55 -57 |
| காஞ்சியம் பதியில்... | அமரர் சிவ. சண்முகவடிவேல் | 58 -60 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 61 -65 |
| சிறுவர் கதைகள் | – | 66 -68 |
| சதாபிஷேக விழாக்காணும்... | சந்நிதியான் ஆச்சிரமம் | 69 -70 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 71 -72 |
| 200ஆவது மலரில்... | திருமதி த. வசந்தகுமாரி | -73 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 74 -77 |
| தியாகத்தின் மாண்பு | மு. சிவலிங்கம் | 78 -79 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 80 -82 |
| பிரார்த்தனை உரை | ச. விநாயகமூர்த்தி | -83 |
| இன்றைய தலைமுறையும்... | திருமதி S.K. சிந்துரா | 84 -85 |
| 200ஆவது மலராக... | சிவ. ஆறுமுகசாமி | 86 -87 |
| இலங்கையின் முத்தான... | சந்நிதியான் ஆச்சிரமம் | 88 -89 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 90 -94 |
| சைவப் பணியில்... | சி. கணேசலிங்கம் | -95 |
| சைவசித்தாந்தம் | இரா. சாந்தன் | 96 -98 |
| உற்சவகால நிகழ்வுகள் | – | 99-100 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)


சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ரீமுக ஆவணி

# போஷகரின் ஆசிச்செய்தி



ஞானச்சுடர் ஆன்மீக வெளியீட்டின் 200ஆவது நூல் வெளிவருவதையிட்டு சைவத் தமிழ் மக்கள் அனைவருமே பெரு மகிழ்ச்சியடைகிறார்கள். எந்த ஒரு நூலுக்கும் கிடையாத பெருமை ஞானச்சுடருக்கே உரியதாகும். எமது யாழ்ப்பாண மக்கள் கந்தபுராண கலை கலாச்சார விழுமிய மரபுகளை தொடர்ந்தும் பின்பற்றி வருகிறார்கள்.

இன்று எமது மண்ணிலே மேலைத்தேய ஆடைகளை அணிவதும், தலைவிரி கோலமாக இறைவனைச் சென்று ஆலயத்தில் வழிபாடு செய்வதும் ஒரு தொடர்கதையாக மாறி வருகின்றது. இது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும். நாவலர் பெருமான் வாழ்ந்த எமது பூமியில் இன்று இளம் சமுதாயத்தினர் ஆலய வழிபாடுகள் செய்வதை தவிர்த்து மது கலாச்சாரத்தில் ஊறி வாழ்க்கை நடாத்துவது வேதனைக்குரியதாக அமைகின்றது. இவை எல்லாம் நீங்க வேண்டும். சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, இன்று தமது அன்னதானப் பணியுடன் நின்றுவிடாது பல சமய சமூக சேவைகளை செய்துவருவது யாவரும் அறிந்த விடயமாகும். ஆச்சிரமத்தின் சுவாமிகள் தன்னை மறந்த சூழ்நிலையில் ஆச்சிரமத்தின் பணிகளைச் செவ்வனே திறம்பட நடாத்தி வருவது போற்றப்படவேண்டிய ஒன்றாகும். இத்தகைய பணிகளை எவ்வித தடங்கலுமின்றி தொடர்வதற்கு மக்கள் பேராதரவை தொடர்ந்து வழங்கிய வண்ணம் இருக்கின்றார்கள். ஞானச்சுடர் நூல் தொடர்வதற்குக் காரணம் சமயம் சார்ந்த கட்டுரைகள் ஆன்மீக செய்திகளை முக்கியமாகப் பிரசுரிப்பதாகும். கட்டுரைகளை வழங்கும் பெரியார்கள் தாமாகவே முன்வந்து வழங்கிய வண்ணம் இருக்கின்றார்கள். வெள்ளிக்கிழமைகள், உற்சவ காலங்களில் வேற்பெருமானை தரிசிக்க வரும் அடியார்களுக்கு அன்னதானப் பணியுடன் அறிவுப் பசியையும் வழங்குவது சிறப்புக் குரியதாகும். இளம் சமுதாயத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வைகாசிப் பெருவிழா, திருவாசக விழாக்களை நடாத்தியும், மாணவர்களுக்கான வினாவிடைப் போட்டியை ஏற்படுத்தி பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கி மாணவ மணிகளை சமய விழுமியங்களைப் பின்பற்றி வருவதற்கும் ஊக்கம் வழங்கிவருவது பாராட்டப்பட வேண்டியதாகும். தொடர்ந்தும் ஞானச்சுடர் இதழானது மல்லிகைமணம்போல் வெளிவரவேண்டும். இந்து சமய மக்களின் அறிவுப் பொக்கிஷமாக வெளிவர ஆற்றங்கரை வேற்பெருமானின் திருவருளும் என்னுடைய நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகிறேன். மக்கள் பணியே மகேசன் பணியாகத் தொடர்ந்து நடாத்திவரும் சுவாமிகள் பல்லாண்டு காலம் வாழவும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சுவாமிகளுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பிற்கும் எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

பிரதமகுரு

சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்

வல்வை சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

# அகில உலக சைவக் குருமார் சம்மேளன
# இந்துமத குரு பீடாதிபதியின்
# ஆசிச்செய்தி



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ''ஞானச்சுடர்'' ஆன்மீக மலரின் இருநூறாவது மலர் வெளிவருவதையிட்டு இப்பேரவையின் போஷகர் என்ற வகையில் உவகையடைகின்றேன்.

முதலாவது மலரிலிருந்து ஒவ்வோர் மலரும் மாதந்தோறும் புத்தம் புதிய தகவல்களைத் தாங்கி வெளிவந்து அனைவரதும் பேராதரவினால் அபரிமிதமான வளர்ச்சியடைந்திருப்பதை எவரும் மறைக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது.

இதற்குப் பின்னணியில் இருப்பவர்களின் ஆற்றுப்படுத்தலில் மேன்மேலும் இம்மலர் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுச் சிறப்புடன் வெளிவர அடியேனுடைய நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றோம்.


''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P
பிரதமகுரு
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்
புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்

உ

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# ஞாலம் புகழும் ஞானச்சுடர் வழியே நற்பணிகள் சிறக்கட்டும்



"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற ஆன்மீகச் சிந்தனைக்கு அமைவாக, செயற்பட்டுவரும் அறப்பணி நிலையமான சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆன்மீக வெளியீடான "ஞானச்சுடர்" இருநூறாவது மலர் வெளிவருவது பெருமிதத்திற்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

1990களில் கடும் போர்ச்சூழலின் நடுவில் கால்நடையாகவும், துவிச்சக்கர வண்டியுடனும் அலைந்து, திரிந்து நெல் சுமந்து அன்னப்பணி ஆற்றி அதனை இன்று வரை தொடருகின்ற "அமுதவாரிதி" மோகனதாஸ் ஸ்வாமிகளும் அவருடன் இணைந்து பணியாற்றும் ஆச்சிரம சமூகம் உலகளாவிய ரீதியில் பாராட்டுக்குரியது.

ஆச்சிரமத்து கல்விப்பணி இங்கிருந்து அநுராதபுரம் வரை நடக்கிறது. நலிவுற்றோர் நலம் காப்பு, வைத்திய பணிகள், அனர்த்த உதவிகள் என்று அறநெறி வழுவாப் பணிகள் பற்பல நடக்கின்றன.

இவற்றுக்கு எல்லாம் செல்வச்சந்நிதிச் செவ்வேட் பெருமானின் பெருங்கருணையும் தவநிறை குருநாதரின் குருவருளுமே காரணம் என்பதில் வியப்பு உண்டாகின்றது.

இவ்வாறு பல்கிப் பெருகியுள்ள மனிதநேயப் பணிகளால் பெருமை பெற்றுத் துலங்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் இன்னோர் மகத்துவமே ஞானச்சுடரின் இடையீடற்ற இனிய வரவு. இருநூறு காணும் இம்மலர் பலநூறு காண வாழ்த்தி, நம் செந்தில் மேய வள்ளி மணாளன் திருவடிகளை சிந்திக்கிறோம்.

**– "நீர்வைமணி" சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் –**

# ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# பக்தியும் பல்சுவையும் தரும் ஞானச்சுடர் வாழ்க

செல்வச்சந்நிதியை வீட்டிலிருந்தே சிந்திப்பதற்கு, தொழுவதற்கு வழிகாட்டுவது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியீடு செய்யப்படும் ஞானச்சுடராகும். ஞானச்சுடரைக் காணும்தோறும் படிக்குந்தொறும் செல்வச்சந்நிதி வேற் பெருமானையும் முருகப்பிரானது திருவருளையும் எண்ணிப் பார்க்கின்றோம். மனத்தால் வழிபடுகின்றோம். மலர் கைக்குக் கிடைத்ததும் பெருமானது மாமருந்தான திருநீறு அணிந்து கொள்கின்றோம்.

அழகான அட்டைப்படம் முருகப்பெருமானையும், செல்வச்சந்நிதி மூலஸ்தான வேலையும், பூவரச மரத்தையும், சிவசின்னங்களையும் நமக்கு சிந்தையில் கொண்டுவருவதோடு சந்நிதியான் ஆச்சிரம தாபகர் மயில்வாகனம் சுவாமிகளையும் சைவ கலை பண்பாட்டுச் சின்னத்தையும் சிந்திக்க வைக்கின்றது. பின்புறமோ காலத்துக்கேற்ற புதுமையில் பல்சுவை அம்சங்களைக் கொண்டமைந்து வருகிறது. சந்நிதியானின் வருடாந்த உற்சவ நாட்கள், பெருமானது அழகுக் கோயில் முகப்பு என்பவை சாலச்சிறந்தது.

உள் அட்டையில் மாதாமாதம் இரு குறள்களை அறிந்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டும். கீழே யோகர் சுவாமிகளின் நல்ல சிந்தனைப் பாடலில் ஒருபகுதி மெதுமெதுவாகவும் ஆழமாகச் சிந்தித்து தெளிவுபடுத்தும் வரிகள் அழகூட்டும். பின்புறம் அடுத்தமாத நிகழ்ச்சி நிரல் தெரியப்படுத்துவது மட்டுமன்றி வரலாற்று தகவலையும் பேண உதவுகின்றது.

உள்ளே பொருளடக்கத்தோடு பின்புறம் மலர்வெளியீட்டாளர், மதிப்பீட்டாளர் சிந்தனைகள் சுருக்கமாக அலங்கரிக்கப்பட்டது. தொடர்ந்து சமூகத்தை, சமய வாழ்க்கையை செப்பனிடக்கூடிய அவ்வக்கால சிந்தனைகள் அடங்கிய சுடர் தரும் தகவல் அமிர்தமாக உள்ளது. மேலும் சைவ மரபுக்கேற்ப பிள்ளையார் சுழியை சரியாக பதிப்பித்தல் நன்று. தொடர்ந்து பல்சுவை

விருந்தளித்து மக்களை சைவ சமய வாழ்வில் சரியான நெறிமுறையில் வாழ்விக்கின்ற கட்டுரைகள் எடுத்துக்காட்டுக்களுடன் பயன் தருகின்றது. இடையிடையே அருமையான கவிகள் உள்ளத்தை தொட்டுக்கொள்ளும் சிந்தனைகளாக அமைகின்றது.

மேலும் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பொன்மொழிகள் தனித்துவம் மிக்கதானதோடு ஏற்று வாழ்க்கையில் கடைப்பிடிக்கச் செய்யும் வாசகங்களாக அமைவது மிகச்சிறப்பு. இவை நெஞ்சுக்கு அறிவுறுத்துவனவாக உள்ளது.

மேலும் அந்தந்தக் காலத்தின் செய்திகள் சந்நிதியான் ஆலயத்து நிகழ்வுகள், குருபூசைகள், சைவச்சான்றோர் பற்றிய விடயங்கள் மிகப்பயனுடையவை.

மேலும் அரிய சைவ நூல்களை காலத்துக்குக் காலம் சிறிது சிறிதாகச் சேர்த்து பல நூல்களைப் படிக்கவும் அதன்வழி சிந்திக்கவும் செயற்படவும் வழிகாட்டி வருகின்றது.எடுத்துக்காட்டாக திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நூல், தவமுனிவனின் தமிழ் மந்திரம், அருணகிரியாரின் திருப்புகழ், பேராசிரியரின் சைவத் திருக்கோயிற் கிரியைநெறி என்பன அமைவது மிகமிகச் சிறப்பானதாகும்.

இவற்றோடு நித்திய அன்னதானப் பணிக்கு உதவியோர், தொகை, பொருட்கள் நன்றி மறவாமைப் பண்போடு பிரசுரிப்பது மிகச்சிறந்ததாகும். மேலும் பல எழுத்தாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுவது, அவர்களின் ஆக்கங்களைப் பிரசுரிப்பதும் ஞானச்சுடர் பிரதியை மாதாமாதம் பெற்று வருகின்ற பெயர் விபரங்களையும் வெளிக்கொணர்வது பெரிய வரலாற்று அம்சமாகும்.

சிறிதாகத் தொடங்கிய சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானக்கந்தன் என்ற பெயருக்கேற்ற வகையில் தினம் தினம் நித்திய அன்னதானம் வழங்குவதோடு ஞான தானத்தை வழங்குவதும், வெள்ளிதோறும் சொற்பொழிவுகள், கதாப் பிரசங்கங்கள், பஜனைப் பாடல்களைப் பாடி ஒவ்வொருவரையும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டும் நிகழ்ச்சிகளோடு மாதாமாதம் ஞானச்சுடரும் ஒவ்வோர் புதுமைகளைக் கொண்டுவருவது மிகமிக மகோன்னத மானவையாகும். இச்சஞ்சிகை 200ஆவது மலராக வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

-சைவப்புலவர்

செ. கந்தசத்தியதாசன் -

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்துவருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். 200ஆவது மலர் ஆவணிமாதம் எல்லோரது கைகளிலும் பல்வேறு விடயங்களுடன் திகழப்போகின்றது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் எது எப்படி நடந்தாலும் ஞானச்சுடர் சஞ்சிகையானது கிரமம் தவறாது வெளிவருகின்றது என்று கூறியதோடு இனிவரும் காலங்களிலும் இச்சுடரானது எல்லோருக்கும் ஞானத்தைப் பரப்பும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

199ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரானது சைவ மக்களின் "ஞான பொக்கிஷமாக" திகழ்கின்றது. இச்சுடரை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் தனது உரையில், சூரியன் கிரமம் தவறாது ஒவ்வொரு நாளும் உதிப்பதுபோல் ஞானச்சுடர் மலரும் கிரமம் தவறாது ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறும்போது ஞானச்சுடர் மலரானது அகில உலகெங்கும் சென்று தனது சுடரைப் பரப்பி வருவதோடு, ஆவணிமாத ஞானச்சுடரானது 200ஆவது சஞ்சிகையாக மலர்ந்தாலும் புதுப்பொலிவுடன் திகழப்போகின்றது என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# சுடர் தரும் தகவல்

1993ஆம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உருவாக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சமய விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு பிரதி வெள்ளிக்கிழமைதோறும் அடியார்கள் பயன்பெறும் வண்ணம் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வு எனும் வரிசையில் பலவித ஆன்மீக நிகழ்வுகளை நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. அந்நிகழ்வுகள் இன்றுவரை எவ்வித தடங்கலுமின்றி தொடர்வது சந்நிதி வேற்பெருமானின் பெருங்கருணை என்றே கூறவேண்டியுள்ளது.

ஆனாலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் விடயங்கள் அனைத்தும் ஆவணமாக்கப்பட வேண்டிய தேவை காரணமாக ஒரு சஞ்சிகையை மாதாந்த வெளியீடாக வெளியிட வேண்டும் எனும் கருத்து முன்வைக்கப்பட்டது. அதன் பயனாகவே 1998ஆம் ஆண்டு தைமாதம் எமது முதல் மலராகிய ஞானச்சுடர் வெளியிடப்பட்டது. சுமார் இருபத்தைந்து பக்கங்களுடன், இருநூறு பிரதிகளை நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் உருவாக்கி அதனை ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்த அன்பர்களுக்கு வழங்கியதோடு, ஆக்கங்களை வழங்கும் பெரியோர்களை அணுகி அவர்கள் மூலம் ஆக்கங்களைப் பெற்று ஞானச்சுடர் மலர் மாதாந்தம் பிரகாசித்தது. எவ்வளவோ இடர்பாடுகள் மத்தியிலும் மலர்வெளியீடு எவ்வித தடங்கலுமின்றி தொடர்ந்து இடம் பெறுவது சந்நிதி வேலவனது அருளாட்சி என்பதை அறியமுடிகின்றது.

அந்தவகையில் இம்மலர் வெளியீடு வளர்ச்சிபெற்று 200ஆவது மலராக இருந்தாலும் 2000 பிரதிகள் வெளிவருவது ஒரு பிரமிப்பூட்டும் நிகழ்வாகவே அமைந் துள்ளது. ஒரு ஆன்மீகம் சார்ந்த சஞ்சிகை நீடித்து தொடர்ந்து வருவது இலகுவான காரியமல்ல. எந்தவிதமான விளம்பரங்களும் அற்ற வகையில் ஞானச் சுடர் மலர் மாதாந்தம் மலர்வது ஒரு சாதனை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

அதனடிப்படையில் 1998ஆம் ஆண்டு தைமாதம் எம்மால் வெளியிடப்பட்ட முதலாவது ஞானச்சுடர மலரை எவ்வித மாறுதல்களும் இல்லாத வகையில் 200ஆவது மலரோடு இணைத்துள்ளோம். அதனைப் பார்க்குமிடத்து ஞானச்சுடர் எவ்வளவு தூரம் பரிணமித்துள்ளது என்பது கண்கூடாகத் தெரியும்.

இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக இருப்பது சந்நிதி வேற்பெருமானின் அருளாட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நிறைந்திருப்பதை எமது மனக்கண்களூடாகக் காணமுடிகின்றது.

# ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# செல்வச்சந்நிதி ஆச்சிரம வெளியீடாக வரும் 200ஆம் ஞானச்சுடர் மலர் வாழ்த்து

உலகம் புகழ் தொண்டைமா னாறுச் சந்நிதி ஆச்சிர மத்திலே
கலையுலகில் முன்னிற்கும் ஞானச்சுடர் சஞ்சிகை கீர்த்தியாக
நிலவியே மாதாந்தம் வெள்ளிநாள் பெரிய சபை முன்னாகவே
தலைமையுள மோகனதாஸ் சுவாமியது கரமூடே வெளியாகுமே

அலங்கார முதற்பக்கம் முருகனுடன் மயில்வாகனம் சாமி விளங்க
இலங்கும் வள்ளுவர் குறளும் யோகசாமி நற்சிந்தனை மிளிர
நலம்பேணும் சுடர் தகவல் முதலான நல்லுரையும் நனிகாட்டியே
கலங்கரையும் விளக்கைப்போல் நாடெல்லாம் ஞானச்சுடர் நாடி வருமே

வாரியார் அநுபூதி அருளம்பல வாசகமும் ரமணருரையும்
மாரியாம் நீர்வைமணி யோகானந்தர் குகதாசன் ஞானராஜா பாட்டும்
காரிகைமார் கட்டுரையும் மற்றன்பர் ஆன்மீக உரையுந் தாங்கி
பாரிதாய் ஞானச்சுடர் பரந்துலாவி இருநூறாம் மலராக மலர்ந்து வந்ததே

பற்றுடனே ஞானச்சுடர் இவ்வாறு இருநூறாய் மலர்வதற்கு
சுற்றமென ஆச்சிரமப் பேரவையை சுவாமிகளை முதற் போற்றியே
வற்றாது ஆதரிக்கும் சந்தாதார் அனைவரையும் தொடர்ந்து போற்றியே
எற்றாலும் குறைவின்றி யாவரையும் மனமார வாழ்த்துவேனே

திருநீறும் ஐந்தெழுத்தும் உருத்திராக்கம் பூண்ட பெரியார் ஆசியோடு
இருநூறாம் ஞானச்சுடர் வெளிவரவே காரணராய் இருந்து வாழும்
பெருமானர் மோகனதாஸ் சுவாமிகளை மற்றன்பரும் நன்றாய் வாழ
ஒருமுகமாய மனமார போற்றியென் வாயார வாழ்த்துவேனே

சந்நிதிச் செல்வனை சண்முக நாதனை
பொன்னடி யேத்தி பொருவடி வேலேந்தி
அன்னைதேவ யானை வள்ளியம்மை சமேதராய்
வண்ண மயிலில் வரக்கண்டே வாழ்த்துவேனே யானே

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்-

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. ஆனந்தகுமார்
(லண்டன்)

Dr. G. பவானி
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Dr திருமதி பத்மராணி குகானந்தன்
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

S.S. றஜீந்திரன்
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

சி. சிவமூர்த்தி
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

திருமதி கி. மாலினி
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

A. நாகரெத்தினம்
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

இ. குமாரசாமி J.P.
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

பொ. குமாரசாமி
(சட்டத்தரணி, நவிண்டில்)

Dr. V. சச்சிதானந்தராஜா
(கண்ணா கிளினிக், சித்தங்கேணி)

திருமதி கௌரி சுரேசன்
(ஆசிரியர், ஆவரங்கால்)

செ. கந்தசாமி
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

நா. சிவசிதம்பரம்
(கோணாவளைலேன், கொக்குவில்)

நவீந்திரன் மகிழினி
(மீசாலை மேற்கு)

S. அருளையா
(கொழும்பு)

ச. பத்மநாதன்
(தெற்குத் தோப்பு, புத்தூர்)

சி. சிவயோகநாதன்
(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)

தே. தேவராஜேந்திரன்
(திகிரி லேன், தும்பளை)

பொ. நாகலிங்கம்
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

இ. நிர்த்தனசுந்தரம்
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

முத்து கணேஷ்
(மஞ்சத்தடி, இணுவில்)

K. கஜமுகன்
(இராசவீதி, நீர்வேலி)

செ. சிவலிங்கம்
(மலர் வசந்தம், இணுவில்)

N. ஜெயரட்ணராசா
(பண்ணாகம், சுழிபுரம்)

சி.து. கலைச்செல்வம்
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

வ. ரவிச்சந்திரன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)

வை.ச. பரஞ்சோதி
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

ச. ஸ்ரீவிவேகானந்தராசா

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

கிருபாகரன் திவ்வியா

(மந்துவில் மேற்கு)

கிருபாகரன் கீர்த்திகா

(மந்துவில் மேற்கு)

சீ.சி. கந்தையா (பலாலி)

(ஆவரங்கால்)

மு. முருகதாஸ்

(சிறுப்பிட்டி தெற்கு)

T. தியாகலிங்கம்

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்

(மானிப்பாய் தெற்கு)

இ. தயாபரன்

(கோண்டாவில்)

S. சாம்பவி

(யாழ்ப்பாணம்)

அருளையா சுப்பிரமணியம்

(நீர்வேலி மேற்கு)

த. புவனேந்திரன்

(அந்திரானை, ஈவினை)

ஆ. விநாயகமூர்த்தி

(சாளம்பை, கரணவாய் மத்தி)

ச. சிவகுமாரன் G.S.

(அமுதசுரபி, கட்டுடை)

K. நடராசா

(பொறியியலாளர், பத்தமேனி)

சி. நவரெத்தினம்

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

உரிமையாளர்

(லக்ஷி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)

சி. சுப்பிரமணியம்

(சமரபாகு, உடுப்பிட்டி)

M.P. தர்மலிங்கம்

(பத்திரிகை முகவர், உடுப்பிட்டி)

சிறி மாதவன்

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

ந. பொன்னுத்துரை

(தொம்பை வீதி, உடுவில்)

ச. திவாகரன்

(உரும்பராய் மேற்கு)

க. சச்சிதானந்தன்

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

நா. மகேந்திரராசா

(பிறேம மகால், வல்வெட்டி)

திருமதி ஜெகதீஸ்வரன் குமுதாதேவி

(சுண்ணாகம் மேற்கு)

வ. சிவலிங்கம்

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

கா. அருளானந்தன்

(அராலிவீதி, சங்கானை)

பத்மநாதன் குணசுந்தரி

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்

(அச்சுவேலி)

வே. இராஜேந்திரா

(ஆவரங்கால்)

ச. மார்க்கண்டு

(ஊரெழு மேற்கு)

திருமதி கமலஹாசன் மஞ்சுளா

(வல்வெட்டி)

கௌ. சித்தாந்தன்


(இணுவில் மேற்கு)







# ஞானச்சுடர்




தை மலர் 1998


வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

## குறள் வழி

"முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

பொருள்: ஒருசெயலை செய்யுமுன்பு அச்செயலை செய்ய முடியுமா? அதனைச் செய்யும்போது ஏற்படும் இடையூறு, அச்செயல் முடிந்தால் ஏற்படும் பயன் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்தே செய்க.

# ★ ஞானச்சுடர் ★

வெளியீடு: 2 சுடர்: 1

1998 - தை

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1) திருமுறைச் செல்வம் | 1 – 3 |
| 2) கண்கண்ட தெய்வம் | 4 – 5 |
| 3) மானுடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 6 – 8 |
| 4) துர்க்கா துரந்தரி | 9 – 10 |
| 5) பக்திக்கு வழிகாட்டிய திருவாசக விழா | 11 – 12 |
| 6) தர்மம் எங்கே | 13 – 15 |
| 7) சந்நிதியான் | 16 – 16 |
| 8) புகலிடம் பிறிதொன்றில்லை | 17 – 18 |
| 9) சிரிப்பும் சிந்தனையும் | 19 – 19 |
| **மாணவர் பகுதி** | |
| 10) பக்தி இலக்கியங்கள் | 20 – 23 |
| 11) *Easy way of Learning English* | 24 – 25 |
| 12) விஞ்ஞான விளக்கம் | 26 – 26 |
| 13) ஒற்றுமையில் வேற்றுமை | 27 – 28 |


- சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

அச்சுப் பதிப்பு; தமிழ்ப்பூங்கா அச்சகம்,
நெல்லியடி, கரவெட்டி.





# சந்நிதியான் ஆச்சிரம

# சைவ கலை - பண்பாட்டுப் பேரவை

## தொண்டைமானாறு

**ஸ்தாபிதம் 27- 09- 92**

### போஷகர்கள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்)

ஸ்ரீலஸ்ரீ பண்டிதர் சைவப்புலவர்
கை. நவசிவாயக் குருக்கள்

ஸ்ரீலஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் J. P.
(வல்லை ஸ்ரீமுத்துமாரியம்மன் பிரதமகுரு)

பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்
(வல்லை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)

**தலைவர்;**

சு. திருப்பரங்கிரிநாதன்
(தபாலதிபர்,
காங்கேசன்துறை)

**செயலாளர்;**

ந. அரியரத்தினம்
(அதிபர், யா/ தொண்டைமானாறு,
வீரகத்திப்பிள்ளை ம. வி)

**பொருளாளர்**

செ. மோகனதாஸ்
(நிர்வாகி சந்நிதியான்
ஆச்சிரமம்)

**உபதலைவர்**

செ. நடராசா
(தபாலதிபர் வளலாய், அச்சுவேலி)

**உபசெயலாளர்;**

பண்டிதர் க. முத்துவேலு

**நிர்வாகசபை உறுப்பினர்:**

க. கந்தசாமி
(ஓய்வுபெற்ற தபாலதிபர், கரணவாய்)

சி. சிவலோகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தங்கராசா ஆறுமுகானந்தன்
(நார்க்கற் லேன், உடுப்பிட்டி)

சிற்பக்கலைஞர் கு. சிவசம்பு
(ஆயுர்வேத வைத்தியர்)

செ, அருட்பிரகாசம் (அம்மான்)

சி. நாகலிங்கம்
(லிங்கம்ஸ் பந்தல் அமைப்பாளர்
கரணவாய் தெற்கு)

இசைமணி சி. துரைராசா
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

வ, சிவலிங்கம்
[உரிமையாளர், சிவலிங்கம் அரிசி ஆலை]

## தைமாத சிறப்புப் பிரதி பெறுபவர்கள்

சோ. தண்டபாணிக தேசிகர் J. P
(முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

சி. கதிரவேற்பிள்ளை D M O
(ஆதார வைத்தியசாலை மந்திகை)

ந. நற்குணம்
(சுசீலா நகைமாடம் பருத்தித்துறை)

இ. சண்முகலிங்கம்
(பிரதான வீதி - தொண்டைமனாறு)

நா. தெய்வேந்திரம்
(இந்திரா கபே - நெல்லியடி)

சி. சண்முகம்
(கணக்காளர், உடுப்பிட்டி)

சி. கணபதிப்பிள்ளை
(தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

வ. வேலாயுதம்
(ஆசிரியர், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

திருமதி சுரேந்திரநாதன்
(அதிபர், கெருடாவில் இ. த. க. பாடசாலை)

கெ. பரமானந்தம்
(பரு, ப. நோ. கூ, சங்கம்)

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்

வழங்கிய

## "அருளாசிச் செய்தி"

சைவப்பெருமக்களே!

சந்நிதியான் ஆச்சிரமம் செய்து வருகின்ற தர்மப்பணிகள் பல. அவற்றை நெறிப்படுத்துமுகமாக சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினை அமைத்து வாராந்த சொற்பொழிவுகளை ஏற்படுத்தி வருடாந்தம் நடைபெறுகின்ற, விசாகப் பெருவிழா, கந்தசஷ்டிப் பெருவிழா, திருவாசகப் பெருவிழா போன்றவற்றை நடாத்தியும் சான்றோர்களுக்கு பட்டயங்களை வழங்கியும் தமிழுக்கும், சமயத்துக்கும் தொண்டாற்றிவரும் பேரவை அறிவுச் சிந்தனைகளை எழுத்து வடிவிலே தருவதற்கு மாதந்தோறும் "ஞானச்சுடர்" என்ற நூலை வெளியிட முன்வந்தமையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இன்றைய சூழ்நிலையில் சமயக் கருத்துக்களை வளர்ந்துவரும் சமுதாயத்துக்குக் கொடுக்க வேண்டியது எங்களது மேலான பங்காகும். அவ்வகையில் சிந்தனையைத் தூண்டுமுகமாக மாதந்தோறும் வெளிவரும் மலர் அமைய வேண்டியது எல்லோரது விருப்பமுமாகும். சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை எடுத்து இருக்கும் முயற்சிகளுக்கு எல்லோருடைய ஆதரவும் ஆசிகளும் கிடைக்கவும் பணிகள் மேலும் சிறக்கவும் இறைவனை வேண்டி ஆசிகள் கூறிப் பிரார்திக்கின்றோம். "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்

# மலர்க்குழுவின் இதயத்திலிருந்து

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் 1994ஆம் ஆண்டு 'அருள்கனி' என்ற நூலைச் சிறப்பு வெளியீடாக வெளியீடு செய்தனர். தற்பொழுது "ஞானச்சுடர்" என்ற பெயரில் திங்கள் இதழாக இதனைத் தொடர்ந்து வெளியீடு செய்யவுள்ளோம். அதில் முதல் மலராகிய இந்தத் தை மாத இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது பேரவை 01. 01, 1993ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமையிலிருந்து வாராந்த வெள்ளி நிகழ்வைத் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றது இதைவிட வருடாந்த வைகாசிப் பெருவிழா, உற்சவகாலச் சிறப்பு நிகழ்வுகள், கந்தசஷ்டிகால நிகழ்வுகள், வருடாந்த திருவாசகவிழா என்பவற்றையும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடாத்தி வருகின்றது இவ்வாறான நிகழ்வுகளில் நேரடியாக வந்து பங்குபற்றிப் பயனடைய இயலாதவர்களுக்கும் எமது ஆத்மீகக்கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என்பது எமது மலர் வெளியீட்டின் பிரதான நோக்கமாகும். அத்துடன் பேரவையால் மேற்கொள்ளப்படும் மேற்கூறிய பல்வேறு வகையான செயற்பாடுகளும் அங்கே பரிமாறப்படும். ஆத்மீகக்கருத்துக்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். இத்தகைய நோக்கங்களுடன் மாணவர் சமுதாயம் பயனடையக் கூடியதாக மாணவர் பக்கம் என்ற அம்சத்தையும் உள்ளடக்கியதாக வெளிவருகின்ற திங்கள் இதழை ஆற்றங்கரை முருகப் பெருமானின் திருப்பாதங்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

திங்கள் இதழ் உயிர்த்துடிப் புள்ளதாய் பல்வேறு தரத்தினரும் பயன் பெறக் கூடியதாய் அமைவதற்குக் காரணாக இருப்பவர்கள் இவற்றிற்கு ஆக்கங்களை வழங்குகின்ற பெரியவர்களாவர் இவர்களுக்கு எமது உளப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் அத்துடன் எம்முடன் மிகநீண்ட காலத் தொடர்புள்ளவர்களாக இருந்து வருகின்ற தமிழ்ப்பூங்கா அச்சக உரிமையாளர்கள் ஊழியர்கள் தொடந்தும் எம்முடன் மிகச்சிறப்பாக ஒத்துழைத்து வருவதனாலேயே எம்மால் எமது சேவைகளைச் சிறப்பாகத் தொடரமுடிகிறது. அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் இவற்றுடன் அட்டைப் படத்தை மிக அழகாக வரைந்து வழங்கி எம்முடன் ஒத்துழைத்து வரும் சித்திர ஆசிரியரும் பட்டதாரியுமாகிய திரு இ. ஸ்ரீநடராசா ஆசிரியருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறுதியாக, இந்த ஆத்மீக சஞ்சிகையைப் பயன்படுத்திப் பயனடைகின்ற நல்ல உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி

மலர்க்குழு சார்பாக

ந. அரியரத்தினம்

சந்நிதியான் ஆச்சிரம சைவ
கலை பண்பாட்டுப் பேரவை

30-01-98

# திருமுறைச் செல்வம்

## திருமுறைகளின் சிறப்பு

பன்னிரு திருமுறைகள் தமிழ் மொழியில் இறைவனைப் போற்றித் துதிக்கும் தோத்திர நூல்களாகும். இவற்றை இருபத்தேழு அருளாளர்கள் அருளினார்கள். திருமுறைகளை அருளியோரில் மதுரை சோமசுந்தரப்பெருமானும் ஒருவராக இருப்பது திருமுறைக்குரிய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பதினோராம் திருமுறையின் முதலாவது பாடல் திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம் ஆகும். பக்தி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக இருந்த காரைக்காலம்மையார் திருமுறை பாடிய ஒரேயொரு பெண்மணியாகக் காணப்படுகிறார். இறைவனுடைய திருவருளுக்குப் பூரணமாக ஆட்பட்ட அருளாளர்கள் மொழிந்த தெய்வத்தன்மை பொருந்திய மந்திரவாசகங்களே திருமுறைகள் ஆகும். இவை இறைவனைப் போற்றித் துதிக்கக் கூடிய அர்ச்சனை மலர்களாகக் காணப்படுகின்றன. இந்து சமயத்தின் ஆதார நூல்களாகக் காணப்படுகின்ற வேதமந்திரத்துக்கு நிகரானவை அருளாளர்கள் அருளிய திருமுறைப் பாடல்களாகும். சித்தாந்த கலாநிதியாகிய மகான் காசிவாசி செந்திநாதையர் அருளிய தேவாரம் வேதசாரம் என்ற நூலில் இந்த உண்மையை அவர் நிறுவியுள்ளார்.

பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற்கடவுளாகக் கூறுகின்றன, தேவாரம் வேதசாரமாக இருப்பதைப் போன்று திருவாசகம், உபநிடதசாரமாகவும், திருமந்திரம் ஆகமசாரமாகவும் காணப்படுகின்றன. திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்டு இருந்த கதவை அப்பர் சுவாமிகள் தேவாரம் பாடியே திறக்கச் செய்தார் என அவருடைய வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. வேத மந்திரத்துக்கு உள்ள சக்தி திருமுறைக்கும் உண்டு என்பதை இந்தச் சம்பவம் எடுத்து விளக்குகிறது. பக்தியோடு படிப்பவர்களின் உள்ளத்தில் திருவருளைப் பதியவைக்கும் நூலாக உடல்நோய், உளநோய், உயிர்நோய் ஆகிய மூவகை நோய்களையும் நீக்கும் மருந்தாகக் காணப்படும் பன்னிரு திருமுறைகளும் சைவத் தமிழர்களின் பொக்கிஷங்களாகும். இவற்றை உணர்ந்து ஓதுபவர்களுக்கு இம்மைப்பயனும், மறுமைப்பயனும் முழுமையாகக் கிடைக்கும், இது உலக வாழ்வில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிடைப்பதோடு தலைமை சிவஞானமுத்தியும், பரகதியும் கிடைக்கும் சைவர்களுக்கு இருக்கின்ற மூலபண்டாரமாகிய திருமுறைச் செல்வத்தைப் போற்றாமல் குப்பை கூழங்களாக இருக்கின்ற தெருப்பாடல்களை எல்லாம் நாம் போற்றியதன் விளைவே இன்று நாமும் நமது இனமும் படும் துன்பங்கள் அனைத்துக்கும் மூல காரணமாகும். இறைவன் நமக்கு வாயைத் தந்தது அவன் புகழ்பாடுவதற்கே ஆகும். ''வாயே வாழ்த்து கண்டாய்'' என அப்பர் பெருமானும் ''பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்'' எனச் சுந்தரரும் ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என அருணகிரியாரும் இதனைத் தங்கள் பாடல்வரிகளில் குறிப்பிட்டுள்ளார்கள்

நாம் ஒவ்வொருவரும் நமது நாளாந்த வாழ்வில் எவ்வளவோ பயனற்ற சொற்களைப் பேசித்தள்ளுகிறோம் வார்த்தைகளால் பலரைச் கட்டுவிடுகிறோம் வெளிவிடும் வார்த்தைகளைப் பொருளறிந்து பயனறிந்து கூறுவதில்லை, உணர்ச்சிவசப்பட்டு வசனங்களைப் பேசிவிட்டுப் பகைமையையும் தேடிக் கொள்கிறோம். எமக்குக் கல்வியையும் அறிவையும், ஞானத்தையும் தந்த இறைவன் புகழைப் பாடுவதற்கே அவன்

நாவை நமக்குத் தந்தான் என்பதை ''நாமேல் நடவீர் நடவீரினியே'' என மந்திர மாலையாகிய கந்தர் அனுபூதி குறிப்பிடுகிறது. சைவத்தையும், தமிழையும் பாதுகாப்பதற்காகத் தோன்றிய ஆதீனங்களில் மிகவும் பெரியதும் சிறப்புமிக்கதாகவும் திகழ்வது தருமபுர ஆதீனமாகும். இந்த ஆதீனத்தின் முதல்வராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் மனத்துக்கு உபதேசம் செய்யும் பாடல் ஒன்றைப பாடியுள்ளார். ஆசைகளை விட்டு மலங்களை நீக்கி, ஆத்மார்த்த பூசையாகிய சிவபூசை செய்து சிவமூல மந்திரமாகிய ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி திருமுறைகளைப் பாடாத உனக்கு இறைவன் ஏன வாயைத் தந்தான் எனப் பின்வரும் பாடலின் ஊடாக அக விசாரணை செய்கிறார்.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

வேதங்களைத் தன்னுடைய திருவாயால் அருளிய இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாயால் தமிழ் வேதமாகிய திருமுறைகளைக் கேட்க விரும்பினான் என்பதையும் தமிழிலே இறைவனுக்குச் செய்யக்கூடிய அர்ச்சனை மலர்களாக இருப்பது திருமுறைப் பாடல்கள் என்பதையும் பின்வரும் பெரியபுராணப் பாடல் விளக்குகிறது.

மற்று நீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை
நமக்கு அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலத்திலிருந்து சோழர்காலம் வரை எழுந்த பக்தி இலக்கியங்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள் ஆகும். அடியார்களை முருகப்பெருமானிடம் ஆற்றுப்படுத்துகின்ற சிறந்த பாராயண நூலாகிய திருமுருகாற்றுப்படை முதல் சிவனை மறவாச் சிந்தையாளர்களாகிய சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் பெரியபுராணம் வரை திருமுறைச் செல்வம் விரிந்து காணப்படுகிறது. சோழ சாம்ராஜ்யத்தின் பேரரசனாகத் திகழ்ந்த இராஜஇராஜசோழன் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு தொகுப்பித்தான். திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில் வந்த பெண் ஒருத்தியைக் கொண்டு திருமுறைப் பாடல்களுக்குப் பண் வகுப்பித்தான். சைவ ஆலயங்களில் பண்ணோடு திருமுறைகளைப் பாடுவதற்கு ஓதுவார் மூர்த்திகளை நியமித்தான். இராஜஇராஜசோழனின் சிவபக்திக்கு பெருமபுகழுக்கும் உதாரணமாகத் திகழும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கிரியைகளில் திருமுறைகள் பாடுவதற்கென நாற்பத்தெட்டு ஓதுவார் மூர்த்திகளை இராஜஇராஜசோழன் நியமித்தான் எனக் கல்வெட்டுச் சாசனம் ஒன்று குறிப்பிடுகிறது. சோழமன்னர்களால் எழுப்பப்பட்ட ஆலயங்களில் திருமுறைகள் பாடுவதற்கெனத் தேவார மண்டபங்களும் அவற்றை எழுதுவதற்கெனத் திருக்கைக் கோட்டி மண்டபங்களும் அமைக்கப்பட்டன. பண்ணோடு திருமுறைகள் பாடப்படும் பொழுது அதற்கேற்ப நடனம் ஆடும் ''பண்ணும் பரதமும்'' என்ற நிகழ்வும் ஆலயங்களில் நடைபெற்றன. ஆலயக் கிரியைகளில் ஒன்றாகிய தோத்திரம் பாடும் நிகழ்வில் திருமுறைகள் படிக்கும் மரபு ஏற்படுத்தப்பட்டது.

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்பதே தேவாரம் என்பதன் பொருள் ஆகும்.[3] ஆரம்பகாலத்தில் சம்பந்தரின் பாடல்கள் திருக்கடைக் காப்பு என்றும் அப்பரின் பாடல்கள் தேவாரம் என்றும் சுந்தரரின் பாடல்கள் திருப் பாட்டு என்றும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் மூவர்தமிழும் தேவாரம் என்ற பொதுப்பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றன. ஞானக் குழந்தையாகிய சம்பந் தரின் பாடல்களைக் கொஞ்சு தமிழ் என்றும் அப்பர் பெருமானின் பாடல்களைக் கெஞ்சு தமிழ் என்றும், சுந்தரரின் பாடல்களை மிஞ்சு தமிழ் என்றும் அறிஞர் பெருமக்கள் அழைப்பார்கள். குழந்தையானது பெற்றாருடன் கொஞ்சிக்குலாவும் நடையில் அமைந் திருப்பது சம்பந்தரின் பாடல்கள் ஆகும். அடிமை ஒருவன் எஜமானுடன் பேசுகின்ற பணிவுடைமையுடன் கூடிய மொழியில் அமைந்திருப்பது அப்பரின் பாடல்கள் ஆகும், தோழமை உணர்வுடனும் உரிமையுடனும் இறைவனோடு தொடர்பு கொள்ளும் பாடல்களாக இருப்பவை சுந்தரரின் பாடல்கள் ஆகும்.

---

சைவத்தின் பிரமாண நூலாகிய பன்னிரு திருமுறைகள் பற்றித் "திருமுறைச் செல்வம்" என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை) எங்கள் சஞ்சிகையில் தொடர் கட்டுரை எழுதுகிறார். இத்தொடரின் முதலாவது கட்டுரை "திருமுறைகளின் சிறப்பு" என்ற தலைப்பில் இந்த மலரில் வெளிவருகிறது. இக்கட்டுரைகளைத் தொடர்ந்து படிப்பதோடு அவற் றைப் பேணிப் பாதுகாத்து வைத்துத் திருமுறைச் செல்வத்தின் பயனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று அன்பாக வேண்டுகின் றோம்.

— ஆசிரியர்

# கண்கண்ட தெய்வம்

1994ம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவம் 10ஆம் திருவிழாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. பக்தர்கள் கூட்டம் வருவதும் போவதுமாகக் கோயில் வீதி காலையிலேயே பார்ப்போருக்கு மனதில் பக்திப்பெருக்கை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த வருடமும் வழமைபோல முருகேசு சுவாமிகளுடன் தொடர்புள்ள பக்தர்கள் கூட்டம் ஒன்று கோயிலின் கிழக்கு வீதியில் அமைந்துள்ள திரு த. அருணாசலம் வீட்டில் கூடியிருக்கின்றனர். (சுவாமிகள் இறுதிக்காலத்தில் தங்கியிருந்த வீடு) முருகேசு சுவாமிகளின் விருப்பப்படி அன்றும் காலைப்பூசையில் கோயிலில் விசேஷ அபிஷேகங்கள் நடைபெற்றன. அபிஷேகங்கள் முடிந்தபின் கோயில் பூசகர்கள் வழங்கிய இறைவனுக்கு படைக்கப்பட்ட நைய்வேத்தியங்களைப் பெற்றுக்கொண்டு முருகேசுசுவாமிகளும் அவருடன் சேர்ந்த பக்தர்களும் அருணாசலம் வீட்டை வந்தடைந்தனர். அவர்களில் உரும்பிராயைச் சேர்ந்த தர்மலிங்கம் பவானி குடும்பத்தினர் மற்றும் இ புஸ்பநாதன் குடும்பத்தினர், கைதடியைச் சேர்ந்த த. பத்மராஜன், கரணவாய் வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த ச. பொன்னம்பலம் போன்ற பல அடியார்கள் காணப்பட்டனர். இவர்கள் எல்லோரும் தாம் கொண்டுவந்த நைய்வேத்தியத்தைப் பங்கிட்டு மருந்தாக நினைத்து அவற்றை அருந்திக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது நெற்றியில் திருநீற்றுக் குறியுடன் சந்தனப்பொட்டிட்டு ஒளிவீசும் கண்களுடன் முழுநிறைவுடைய வயது முதிர்ந்த ஒரு சுவாமிகள் அங்கே வந்தார்கள். திருவமுதை அருந்திக் கொண்டிருந்தவர்களை நன்கு கவனித்து அருணாசலம் அவர்களின் மனைவியிடம் சென்று தனக்கும் திருவமுது வழங்குமாறு மௌனமான பாஷையில் கேட்டார்கள். திருமதி அருணாசலம் அவர்கள் தான் அருந்திக் கொண்டிருந்த எச்சில் அமுதை எப்படி சுவாமிகளுக்குக் கொடுப்பது என்று மனச்சஞ்சலப்பட்டு நிற்க நிலைமையைப் புரிந்து கொண்ட முருகேசு சுவாமிகள் அங்கே வந்திருந்த அந்தப் புதிய சுவாமிகளிடம் இந்தாருங்கள் ஐயா உங்களுக்கு இங்கே இருக்கிறது என்று கோயிலில் இருந்து கொண்டு வந்த அமுதை எடுத்துச் சுவாமிகளுக்கும் வழங்கினார்கள், சுவாமிகள் அதனைப் புன்முறுவலுடன் பெற்றுக்கொண்டு ஆலயம் நோக்கிச் சென்றார்கள் இதைத்தொடர்ந்து அங்கே கூடியிருந்த அடியார்களும் ஆலயத்தைச் சென்றடைந்தனர். என்ன ஆச்சரியம் அங்கே எந்த இடத்திலும் அந்தச் சாமியாரைப் பின்பு எவரும் காணமுடியவில்லை,

அந்தவருடம் பேரவையால் வெளியிடப்பட்ட "அருள்கனி" நூல் வெளியீடு தொடர்பான வேலைகளில் ஈடுபட்டபின் அன்று மாலை முருகேசு சுவாமிகளைச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அடியேன் சந்தித்த பொழுது முருகேசுசுவாமிகள் "மாஸ்ரர் உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன் எங்கடை ஆள் இன்றுகாலையும் வந்து விட்டுப் போகின்றார்" என்று கூறினார்கள், எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சுவாமிகளிடம் யார் வந்தார்கள் என்று விபரமாகக் கேட்ட பொழுது ஆற்றங்கரை வேலவன் சந்நிதி முருகப்பெருமான் இந்தக் கலியுகத்தில் தானே மனித உருவில் உலாவிக் கொண்டு கோயில் திருவிழாக் காலங்களில் அங்குள்ளவர்களை வழிநடாத்தி அடியவர்களில் தானும் ஒருவராகச் செயற்பட்டு வருகின்ற வழக்கத்தை எடுத்துக் கூறினார்கள். சந்நிதி முருகனின் முதல்பூசகர் மருதர் கதிர்காமர் காலம் தொடக்கம்

அவருக்கு முருகப்பெருமான் தெரிவித்த வாக்குக்கிணங்க இந்த ஆலயத்தில் இந்த வழக்கம் இருந்து வருவதையும் சுவாமிகள் சுட்டிக்காட்டினார்கள்.

இதனால்தான் திருவிழா நடைபெறுகின்ற சிறப்புக்காலங்களில் மட்டுமன்றி ஏனைய சாதாரண பூசைக்காலங்களில் கூட ஒவ்வொருவரும் மிகவும் பயபக்தியுடன் தங்கள் தங்கள் கடமையில் தவறாதும் அதேநேரம் மற்றவர்களின் செயற்பாட்டில் அதிகம் தலையிடாதும் செயற்படுகின்ற வழக்கத்தை இன்றும் இந்த ஆலயத்திற் கடைப்பிடித்து வருகின்றனர்.

ந. அரியரட்ணம்

தொண்டைமானாறு

குறிப்பு:- சந்நிதி முருகப்பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளது இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்டு மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச்செய்யலாம்.

---

## மானுட வாழ்க்கை

மானுட வாழ்க்கையின் அருமையை சிறப்பை அறியாத தன்மை இன்று அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. மிருகங்கள் செய்கின்ற காரியங்களையே நாங்களும் செய்கின்றோமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மிருகங்கள் சாப்பிடுகின்றன நாங்களும் வயிறு நிறையச் சாப்பிடுகின்றோம். மிருகங்கள் உறங்குகின்றன நாங்களும் வசதியாகப்படுத்து உறங்குகின்றோம், மிருகங்கள் இனப்பெருக்கம் செய்கின்றன நாங்களும் எமது சந்ததியைப் பெருக்குகின்றோம். மிருகங்களும் சண்டையிடுகின்றன நாங்களும் எமக்கிடையே மோதுகின்றோம் இவ்வாறு மிருகங்கள் செய்கின்ற காரியங்களை மட்டும் நாமும் செய்வோமானால் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம் இல்லாத நிலை தான் ஏற்படும். மனித நேயத்திற்குரிய மனிதாபிமானத்திற்குரிய மானுட தர்மத்தை ஒவ்வொரு மனிதனும் முதலில் கடைப்பிடிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

அன்பு, தர்மம், நீதி, உண்மை ஒற்றுமை போன்ற பண்புகளை எமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வகையான பண்புகளை வளர்க்கின்ற இடமாக, களமாக, பாடசாலைகளும் மத நிறுவனங்களும் செயற்பட வேண்டும்.

நல்லை ஆதீனமுதல்வர்

மயில்வாகன சுவாமிகளுடைய

குருபூசைத் தினத்தில் ஆற்றிய உரையிலிருந்து

---

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்தில் இருந்து)

நீடாழியுலகத்து மறை நாலோடைந்து என்று நிலைநிற்கும் வண்ணம் மகரிஷி வேதவியாசரால் அருளிச் செய்யப்பட்ட "மகாபாரதம்" என்னும் மாண்புமிகு காவியத்தின் கருத்தாம்சத்தைத் தொடராகச் சொல்ல எல்லாம்வல்ல பஞ்சக்கர வானை பதம் பணிந்து சரணடைந்து முதற்கண் துதி செய்கின்றேன்.

தொன்மையும் மேன்மையும் மிக்க இந்துதர்மம் என்னும் ஆலவிருட்சத்தினைத் தாங்கி நிற்பது வேதங்களென்னும் வேர்களாகும். அதன் கிளைகளாக ஆகமங்களும் உபநிடதங்களும் விளங்குகின்றன. அந்தச் சநாதன தர்மத்தின் உயிர்நாடியாக மூலாதாரமாக வேதங்கள் விளங்குகின்றன. அவற்றின் கண்களாக விளங்குபவை இதிஹாசங்களாகும்.

வேதங்களும் ஆகமங்களும் உபநிடதங்களும் சாமான்ய மானுடரால் கற்றறிந்து ஒழுகமுடியாதவை. இதன் பொருட்டே வேதங்களை வகுத்த வேதவியாச மகாமுனிவர் எல்லா மானுடர்களும் கற்றறிந்து பயன்பெறும் வண்ணம் வேதத்தின் சாரங்களையெல்லாம் திரட்டி மகாபாரதமென்னும் அரிய பொக்கிஷத்தினை உலகுக்குத் தந்தருளினார்.

இந்துதர்மம் இன்றளவும் நிலைத்திருப்பது அவற்றின் தர்மங்களைச் சாமான்ய மக்கள் கைக்கொண்டொழுகுவதற்குக் காரணமாக இருப்பதும் இதிஹாசங்களாகும். அவற்றில் கூறப்படும் தர்மநெறிமுறைகள் அவற்றினை விளக்கச் சுட்டிக்காட்டும் சம்பவங்கள் எல்லாம் சாதாரண மக்களிடையே பண்டுதொட்டுப் பயின்று வருவதனால் தான் இந்துமக்கள் அறங்காக்கும் காவலராய் தர்மம் பேணும் தர்மசீலர்களாய் வாழ்கின்றனர்.

மகாபாரதத்திலே மேன்மைமிகு தகைமைகள் யாவும் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன. வையகத்தில் மானுடராய் அவதரித்தோர் வாழ்வாங்கு வாழ வழிவகுப்பவை மகாபாரதத்தில் வரும் கோட்பாடுகளாகும். அவை மானுடம் மேன்மையடையவும் தூய்மையடையவும் வழிகாட்டுபவை. சத்தியம், தர்மம், தவம், தியாகம், கொடை, வீரம், பக்தி, செய்ந்நன்றி மறவாமை, கர்மபலன் என்னும் வாழ்வியலின் பல்வேறு கூறுகளையும் படம் வரைந்து காட்டுகின்றன மானுடம் மேன்மையடைய எத்தனை வழிகளுண்டோ அத்தனையும் சொல்லி நிற்கிறது மகாபாரதம்,

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் அவதார புருஷனாக ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் சத்தியத்தின் தலைமகனாய் பீஷ்மர், விதுரர் போன்றோரும், தர்மத்தின் உறைவிடமாய் யுதிஷ்டிரரும், வீரத்தின் விளைநிலமாய் அர்ச்சுனனும் கொடை மேன்மையின் உறைவிடமாய் கர்ணனும் விளங்குகின்றனர் துரியோதனன். துச்சாதனன், சகுனிமுதலானோரர் தீமையின் வடிவங்களாக விளங்கி அல்லற் படுகின்றனர். காந்தாரி, பாஞ்சாலி முதலானோர் கற்பின் வரைவிலக்கணமாக மிளிர்கின்றனர். குந்திதேவி தாய்மையின் தனித்துவமாக விளங்குகின்றாள், இன்னும் வீமன்,

கதலன், சகாதேவன், திருதராஷ்டிரன், துரோணாச்சாரியார், கிருபர், அஸ்வத்தாமன் அபிமன்யு, சல்லியன், திட்டத்துய்மன் போன்ற அளவிறந்த பாத்திரங்கள் ஒவ்வோர் வகையிலும் நிகரற்று விளங்குகின்றன.

அறத்தின் வழி செல்வதென்பது சிக்கலானது தர்மத்தின் நிலை என்பது சூழ் நிலைக் கேற்ப மாறுபடுவதும். இராஜதர்மம் ஒன்று, மானுடதர்மம் இன்னொன்று சாதாரண வாழ்வியல் தர்மம் வேறு வகை எனவே தர்மத்தின் வரைவிலக்கணங் களையும் பல்வேறு பாத்திரங்கள் மூலம் வரையறை செய்து விளங்க வைத்துள்ளது மகாபாரதம் என்னும் அறநூல்,

மகாபாரதத்தின் கதைகளை உற்றுநோக்கிக் கேட்டுணர்ந்து அதன்வழி நடக்கும் மானுடர் தர்மத்தின் வழிநடந்து மேனிலையடைவரென்பது முடிந்த முடிபானது. வாழ்வியலில் ஏற்படும் ஒவ்வொரு கணநேரத்தின் போராட்டங்களையும் மாற்றி யமைத்து வெற்றிகாணும் வழிவகைகளை வகுத்து வைத்திருப்பது மகாபாரதத்தின் மேன்மையான தன்மையாகும்,

அறத்தின் வழியே வெற்றியின் வழியென்று எடுத்துரைக்கும் மகாபாரதம் அற வழி தப்பின் தீமை ஏற்படும் இன்னல் ஏற்படுமென்று இயம்பி நிற்பதால் ''அறநூல்'', என்று பெரிதும் போற்றிப் பேணப்பட்டு வருகிறது அறம்தான் வாழ்வியலின் தலை யாய தர்மம் என்று போற்றப்படுகிறது எனவே அறவழியே மானுடம் செல்லும் வழியென்று தீர்க்கமாக முடிபு செய்து காட்டும் நூல் மகாபாரதமாகும்,

மகாபாரதத்தினை ஒருவர் கருத்தூன்றிப்படிக்கும் போதும் அதனைச் சொற் பொழிவாகத் தொடர்ந்து கேட்கும் போதும், அறத்தில் அளவற்ற பற்றும், மனத்தில் சமநிலையும், கொள்கையில் சமதர்மநோக்கும் ஏற்படும் தியாகத்தின் பால் பிடிப்பும், கொடையின் பால் பற்றும் உண்டாகும். சஞ்சலபுத்தி அகன்று மனோதிடம் ஏற்படும். அகந்தையும் ஆணவமும் அழியும். ஆத்மதிருப்தி ஏற்படும் வாழ்வில் வெற்றிக்கும் வழிகாட்டும். இதனாலேயே எம் இந்துமதத்தவரிடையே இதிஹாசங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பணிகள் ஆலயங்களிலெல்லாம் காலத்திற்குக் காலம் கைக் கொள்ளப்பட்டு வருகின்றன.

பாரதத்தின் மணிமுடியாகத் திகழ்வது, அதர்மம் அழியவும் தர்மம் நிலை நிற்கவும் தெய்வம் துணை நிற்கும் என்பதனைத் தம் செயல் முறைகள் மூலம் விளங்க வைத்து நின்ற ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவினால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்ட பகவத்கீதை ஆகும். பீஷ்மரால் தர்மபுத்திரனுக்கு அருளப்பட்ட அறிவுரைகளும் பக வத்கீதையின் கீதாசாரமும் மானுடர்க்குக் கிடைக்கமுடியாத பொக்கிஷங்களாகும், ஒவ்வொரு மனிதனும் அவற்றைக் கற்றுணர்ந்து அதன் வழிநடக்க வேண்டிய அரிய உபதேசங்கள் அவற்றிலே அடங்கியுள்ளன,

பாரதக் கதையிலே வரும் குருஷேத்திரப்போர் என்பது அன்று நடைபெற்றது மட்டுமல்ல இன்றும் ஒவ்வோர் மனிதனது உள்ளத்தின் கண் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது உண்மைக்கும் மாயைக்கும் நடைபெறும் போரானது இன்றுமட்டுமல்ல என்றும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் இந்த யுத்தத்தினை வெல்ல இறைவனைத் துணை கொள்ள வேண்டும். இறைவனைத்துணை கொண்டால் யுத்தம் ஜயமாகும். இதனால் உண்மை நிலைநிறுத்தப்பட அதாவது தர்மம் நிலைநிறுத்தப்பட இறையருள் வேண்டு மென்பதனை மகாபாரதம் வலியுறுத்தி நிற்கின்றது,

மகாபாரதத்தின் விரிவஞ்சி இன்றைய வேகயுகத்தில் அதனைக் கற்காது அதனைப் பலர் தவிர்த்து விட்டுள்ளனர். இதனால் இத்தர்மநூல் கற்போரின்றி நூலகங்களின் தட்டுக்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வரிய பெருநூலை மிகவும் சுருக்கமான முறையில் அதன் கருத்தம்சங்கள் மாறுபடா வகையில் யாவரும் அதனை உளங்கொண்டு பயன் பெறும் வகையில் இலகு தமிழில் எழுதுவதற்கு எந்தையாய் என்தாயாய் என்சற்குருவாய் விளங்கும் எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி வேலவனின் திருவருளை வேண்டித் தொடர்கின்றேன்.

(தொடரும்)

வாரியார் வாரிசு இசைஞான திலகம்
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்
"நூலகம்"
வலி வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை

## இறைவன் எங்கே

யோகர் சுவாமிகளின் மகிமையை அறிந்த வெளிநாட்டு அன்பர்கள் சிலர் அவரைத் தரிசிப்பதற்கு விரும்பி யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். அவர்களை உயர்ந்த உத்தியோகம் வகிக்கின்ற உள்நாட்டு அன்பர் ஒருவர் யோகர் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். அழைத்துச்சென்ற அன்பர் தன்னைப்பற்றியும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பற்றியும் பல விடயங்களைக் கூறி கடவுளைப் பார்ப்பதற்காக வந்துள்ளார்கள் என்ற கருத்துடன் கூறிமுடித்தார். அந்த அன்பரின் போலித்தனமான வாழ்க்கை முறையையும் உயர்ந்த பதவிவகிப்பதனால் அவருக்குள்ள ஆணவத்தையும் சுவாமிகள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். யோக சுவாமிகள் அந்த அன்பரைப் பார்த்து "நீ உடனே நீ கடமையாற்றும் இடத்திற்கு சென்று விடு உன்னை எதிர்பார்த்து பல பேர் அங்கே கச்சேரியில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் கடவுள் இருக்கிறார் என்று நீ நினைத்தால் உனது கடமையை முதலில் செய்திருப்பாய் அப்படி நீ சரியாக உனது கடமையைச் செய்தால் நீ கடவுளை அங்கேயே பார்க்கலாம்" என்று கூறி அவரை அவரது அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

வாராந்த வெள்ளி நிகழ்வில்
சுவாமி சித்ருபானந்தா
ஆற்றிய உரையிலிருந்து

துர்க்கா துரந்தரி

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் 73-வது அகவை

# நிறைவு நாள்

## வாழ்க பல்லாண்டு!

சிவபூமியெனப் போற்றப்படும் எம் ஈழத் திருநாட்டின் ஆன்மீகத்தாயாகவிளங்கும் அன்னையே! உங்கள் திருவடியை வணங்குகின்றோம். பழுத்த வயதிலும் தங்களுக்கு பழு திலாப் பணியாற்றும் பாங்கினைத் தந்தஅன்னை துர்க்கா தேவியை நினைந்து துதிக்கின்றோம்.

பண்டிதராய், பாவலராய், நாவலராய், அறக்காவலராய் நீங்கள் ஆற்றிவரும் அரும்பணிகளை சைவத்தமிழ் உலகம் என்றும் நன்றியோடு போற்றுதல் செய்த வண்ணமேயுள் ளது. இந்நாட்டின் திசைகள் எல்லாம் நிறைந்திருக்கும் தெய் வத் திருத்தலங்கள் பலவற்றுக்கும் சென்று ஆன்மீக அர்த் தங்களை விளக்கி எம் மக்களுக்கு வழிகாட்டிய மாண் பினை மதித்துப் போற்றுகின்றோம். கடல் கடந்தநாடு கள் பலவற்றிலும் கால்பதித்து ''ஈழத்துத் தங்கம் ஈடு இணையற்றவள்'' எனப் பிறநாட்டு நல்லறிஞர் பாராட் டிய வரலாற்றை எண்ணிப் பெருமை கொள்கின்றோம்.

தெல்லியூர் துர்க்கை அம்பாள் திருவருட் சிறப்பினைத் தேசமே போற்றவைத்த நம் துர்க்கா துரந்தரியே! ஆதர வற்ற குழந்தைகளை அரவணைத்து ஆறுதல் செய்யும் அறத்தின் நாயகியே! சொல்லும் செயலும் ஒன்றாகி வாழும் சோர்விலாத் தாயே!

அகவை எழுபத்துமூன்று நிறையும் இன்வேளை அனு தினமும் அரும்பணியாற்றும் தங்கள் நல்லருட்பணிகளை நினைந்து, வியந்து பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

வாழ்க பல்லாண்டு, பல்லாண்டு!

— திரு ஆறுதிருமுருகன்

# 73 ஆவது அகவை

சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களது

எழுபத்துமூன்றாவது அகவை நிறைவுநாளில்
(07- 01- 98)

## சந்நிதியான் ஆச்சிரம

## சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

மன நிறைவோடு வாழ்த்துகிறது

பல்லவி

வாழி துர்க்கை அருளாலே வாழி சிவத் தமிழ்ச்செல்வி
வாழிய நீடுழி வாழி பெரிதாக
(வாழி துர்க்கை)

அனுபல்லவி

துர்க்கா உபாசகராய், துர்க்கா துரந்தரியாய்
சோபித தொண்டுபல தொடர்ந்து புரிவோயே
(வாழி துர்க்கை)

சரணம்

01. செந்தமிழ்ப் பணிகளென்னசிவ நெறிப் பணிகளென்ன
திக்கெல்லாம் புகழ்மணக்கத்திவ்யபணி ஆற்றிநிற்போய்
(வாழி துர்க்கை)

02. முதலேழு, இடையேழு, கடையேழு வள்ளல் பற்றி
மொழிந்துள்ள வரலாறு முன்னர் நாம் கற்று உள்ளோம்
நிதர்சன மாகஅந்த வள்ளன்மை முழுவதையும்
நின்பால் மிகக்கண்டு நெஞ்சமெலாம் நிறைகிறமே
(வாழி துர்க்கை)

03. அம்மாவுங்கள் கையிருப்ப அமுத சுரபியதோ
அல்லது சிந்தாமணியோ வென்ற திசயிக்க
அம்பிகை துர்க்கா அருள்கொண்டு ஆற்றிநிற்போய்
ஆயிரம் பிறைகாண் அகவைவிஞ்சி வாழ்கவே
(வாழி துர்க்கை)

ஆக்கம்: பண்டிதர் க. முத்துவேலு

# பக்திக்கு வழிகாட்டிய திருவாசக விழா

வருடாந்த திருவாசக விழா 11-01-98 ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டது. இவ்விழா நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சாரிய ஸ்வாமிகள் தலைமையில் நடைபெற்றது.

காலை 10 மணியளவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் அபிடேகமும் அதனைத் தொடர்ந்து பூசையும் நடைபெற்றது. சமயகுரவர் நால்வரும் உள்ளடங்கிய படமும், திருவாசக நூலும் பூசையில் வைத்து பிரார்த்தனை செய்யப்பட்டன. சிவபுராணத்தை அடியார்கள் ஓதிக் கொண்டிருக்க பக்தி பூர்வமான சூழலில் திருப்படமும் திருவாசக நூலும் ஆச்சிரமத்திற்கு நல்லை ஆதீனகுரு முதல்வர் தலைமையில் கொண்டு வரப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் அவர்கள் தனக்கே உரித்தான தனியான பாணியில் விழாவினை தலைமை ஏற்று வழி நடாத்தினார்கள். எமது சமயத்தை, எமது பண்பாட்டை பெரியவர்களாகிய நாங்கள் சரியாகக் கடைப்பிடித்து ஒழுகுவதுடன் இளம் சமுதாயத்தினையும் இவ்வித செயற்பாடுகளில் நாட்டம் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியதாகச் சுவாமிகள் உரை அமைந்திருந்தது.

விழாவின் ஆரம்பத்தில் கரணவாயைச் சேர்ந்த சிவ ஸ்ரீ விஸ்வநாதக் குருக்களும் அவரது பிள்ளைகளும் இணைந்து நிகழ்த்திய தெய்வ ஸ்துதிச் சுலோகங்கள் விழாவிற்குப் பக்திச்சூழலை ஏற்படுத்தின. திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவினை வழங்கித் தனது அனுபவ முதிர்வினாலும் பேச்சுத்திறனாலும் சபையில் உள்ளோரை ஆத்மீக சிந்தனைக்கு அழைத்துச் சென்றார்கள். இதைத் தொடர்ந்து தேனருவி சிவஞானம் ஐயா அவர்கள் ஒரு குழந்தைக்கு தாய் பலாப்பழச்சுளையினை ஒவ்வொன்றாக எடுத்து ஊட்டுவதுபோல அவரும் திருவாசகத்தினுடைய நுண்ணிய கருத்துக்களையும், சிறப்புக்களையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி பின்பு அவற்றை வயலின் இசையுடன் சேர்த்து வழங்கி சபையில் உள்ள எல்லோரையும் மெய்ம்மறக்கச் செய்தார் என்றே கூற வேண்டும்.

இறைவன் பாடல்களைச் சேர்ந்து பாடுதல், இறைவனை சேர்ந்து பிரார்த்தித்தல் போன்ற செயற்பாடுகள் எமது சமயத்தில் நலிவுற்றிருப்பது எமக்குள்ள ஒரு பெரிய குறைபாடாகும். ஆனால் தேனருவி சிவஞானம் அவர்கள் தனது தனித்திறமையினால் விழாவில் கலந்து கொண்ட எல்லோரையும் மெய்ம்மறந்த நிலைக்கு வழிப்படுத்தி அவர்களது உள்ளத்தில் இருந்து உணர்வு பூர்வமாக வரக்கூடிய முறையில் "ஓம் சிவாய நம" என்ற பிரணவ மந்திரத்தை எல்லோரும் சேர்ந்து இசையுடன் கலந்து இசைக்கச் செய்தார்கள். இவ்வாறு இசைக்கின்ற பொழுது ஏற்பட்ட அந்தப் பக்தி நிலை அங்குள்ளவர்களுக்கு நாம் தேவ உலகத்தில் இருக்கின்றோமோ என்ற உணர்வைத்தான் ஏற்படுத்தியது. இவ் விழாவில் கலந்து கொண்ட அனைவரும் இதனை மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகவே கருதுகின்றனர்.

# திருவாசக விழாப் போட்டி முடிவுகள்

04-01-98 இல் போட்டிகள் நடாத்தப்பட்டு 11-01-98இல் நடைபெற்ற திருவாசக விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் திருவாசகத்தைப் பண்ணிசையோடு பாடுவதுடன் மாணவர்களது சமய அறிவும் பரீட்சிக்கப்பட்டது. போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் மூன்று இடங்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பெறுமதியான நூல் சான்றிதழ், பணம் ஆகிய மூன்றும் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான பரிசுகளை நல்லை ஆதீனமுதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

## பிரிவு - 1 (ஆண்டு 6 - 7)

முதலாம் இடம்;- செல்வி சி. பிரபாலினி
யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி

இரண்டாம் இடம்:- செல்வன் க. அருள்குமரன்
யா/ ஹாட்லிக்கல்லூரி

மூன்றாம் இடம்;- செல்வி கு. பாரதி
யா/ இந்து மகளிர் கல்லூரி

## பிரிவு - 2 (ஆண்டு 8 - 9)

முதலாம் இடம்;- செல்வி மா. தாருகாசினி
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி

இரண்டாம் இடம்;- செல்வன் க. வேதாரணியேஸ்வரன்
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி

மூன்றாம் இடம்;- செல்வி இ. தாட்சாயணி
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி

## பிரிவு - 3 (ஆண்டு 10 - 11)

முதலாம் இடம்;- செல்வி அ. கல்யாணி
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம்;- செல்வி இ. திவ்வியகௌரி
யா/ ஞானாசாரியார் கல்லூரி

## பிரிவு - 4 (ஆண்டு 12 - 13)

முதலாம் இடம்;- செல்வி வி. துஷ்யந்தி
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி

இரண்டாம் இடம்;- செல்வி ம. வத்சலா
யா/ ஞானாசாரியார் கல்லூரி

மூன்றாம் இடம்;- செல்வி சி. இராதிகா
யா/ ஞானாசாரியார் கல்லூரி

# தர்மம் எங்கே!

இந்து மதத்தில் அறம், தருமம் என இரண்டு சொற்கள் உபயோகப்படுகின்றன. இவ்விரண்டு சொற்களும் காலத்துக் காலம் வெவ்வேறு பொருள் தருகின்றன எனக் கருதுவாரும் உண்டு. வேதங்களுக்குப் பின் தோன்றிய தர்ம சாத்திரங்கள் "தர்மம்" என்னும் சொல்லுக்குக் கடமை என்ற பொருளைக் கணிக்குமாறு கூறியுள்ளன. இவற்றை வருணாச் சிரமதர்மம் என வகுத்தன பிராமணர். சத்திரியர் வைசியர், சூத்திரர் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள் வருணதர்மம் எனவும் பிரமச்சாரி, இல்லறத்தான், வானப்பிரஸ்தன், சந்நியாசி கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள் ஆச்சிரமதர்மம் எனவும் கூறப்பட்டன. வருணதர்மம் சமூகத்திற்கும் ஆச்சிரமதர்மம் தனிமனிதனுக்கும் உரியன,

கடமைக்கும் ஒழுக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு, ஒருவன் தனக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்வானாயின் ஒழுக்கம் உள்ளவனாக மதிக்கப்பட்டான். அவனே நன்னடத்தையுள்ளவன், பண்புள்ளவன், கடமை-பண்பு-நடத்தை என்பன ஒரு பொருட் சொற்கள், தர்மம் வடமொழி, அறம் தென்மொழி தர்மம் எனினும் அறம் எனினும் ஒக்கும்.

அறம் என்னும் சொல் தீயனவற்றை அறுத்தல் எனப் பொருள்படும். அதாவது தீமையிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளுதல் அவ்வாறு விலக்கிக் கொள்ளுதல் மட்டுமன்றித் தன்னை நல்லநெறியில் செலுத்தலும் வேண்டும். அட்டாங்க யோகங்களுள் இயமம், நியமம் என்பன ஆரம்பபடியாக அமைந்து விலக்கலையும் கைக்கொள்வனவற்றையும் கூறித் தர்மவழி மனிதனை அழைத்துச் செல்கிறது. இயமம் என்றால் விலக்குபவை நியமம் என்றால் கடைப்பிடிக்க வேண்டியவை,

செயலை நல்ல செயல் தீயசெயல் என்று தீர்மானித்தது யார், மனிதன் முற்றறிவு இல்லாதவன் அவனால் தீர்மானித் திருக்க முடியாது. முற்றறிவுடைய ஒருவனாலே தான் தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அறிவில் குறைந்த குழந்தைக்கு ஆசிரியன் புகட்டுவது போல இந்து சமயத் திருநூல்கள் அறிவினைப் புகட்டுகின்றன. முக்காலமுணர்ந்த ஞானிகள் வாயிலாக இவ்வகை அறிவுகள் கிடைத்திருக்கின்றன. நமது பயணம் முற்றுப் பெறவேண்டுமானால் வழிகாட்டிகளை நாம் ஏற்றேயாக வேண்டும்? அதில் விசாரணைக்கு இடம் இல்லை. அறிவுநூல்களைக் கற்றுத் தூய்மையான வாழ்வு வாழ மனிதனுக்கு இக்கலியுகத்தில் இடமுண்டா? சூழல் அவனை விடுமா. மிருகங்கள் போல உணவுக்காக மட்டும் அலைகின்றானல்லவா? எவ்வழியிலும் பணம் பொருள் சேர்க்கப்பாடுபடுகின்றான். யாருக்காகப் பொருள் சேர்க்கின்றானோ அவர்களால் கைவிடப்படுகிறான். எனவே தான் செய்த தர்மத்தின் பிரகாரம் வாழுகின்றான். வாழும் போதே நல்லதைச் சிந்திக்க நல்லதைச் செய்ய அவனுக்குச் சுதந்திரம் உண்டு, இதனாற் போலும்

தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் எனவும்''
''மனத்துக்கண்மா சிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற என்றும் வள்ளுவர் கூறி''

அறக் கோட்பாட்டை எளிமையாக்கியுள்ளார்.

தனக்கும் பிறருக்கும் தீமைதராத செயல்களே அறச் செயல்களாகின்றன தீமைதனை மனத்தாலும் நினைக்கக் கூடாது என்பது அறக்கோட்பாடாகும்.

"உள்ளத்தாலுள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள் ளத்தாற் கொள்வோமெனல்" என்னும் வள்ளுவன் வாய்மொழி பொருத்தப்பாடுடையதாகிறது

உபநிடதங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மத்தைச் சிறப்புத் தர்மமாக்கியுள்ளன, பிரசாபதிக்கு மூன்று புதல்வர்கள் அம்மூவரும் தேவர், அசுரர், மனிதர் எனப்படுவர் மூன்று புதல்வர்களும் தந்தையிடம் உபதேசம் பெறுகின்றனர். அவர் மூன்று "த 'வுக்குப் பொருள் கூறும் முகமாகத் தம்யத, தயத்துவ, தத்த என்னும் மூவகை மொழிகளை. யும் கூறிவைத்தார். தேவர்களுக்குரிய ஒழுக்கம் தம்யத அசுரர்கட்கு உரிய ஒழுக்கம். தயத்துவ மனிதர்கட்கு உரிய ஒழுக்கம் தத்த எனப்பட்டது. தம்யத-புலனடக்கம் தயத்துவ-கருணை; தத்த-ஈதல்

ஈதலாகிய அறத்தினை மனிதன் சிறப்புத் தர்மமாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் அவனிடம் சுயநலம் அதிகம்; கொடுக்க மனம் வராது கொடுக்க வேண்டி ஏற்பட்டால் புகழுக்காகக் கொடுப்பான் அல்லது வலுக்கட்டாயத்தின் பேரில் கொடுப் பான். தான் உபயோகிக்க முடியாத கழித்த பொருள் என்றால் கொடுப்பான் ஏழை ஒருவன் கைநீட்டுகிறான் விரும்பாமலே பத்துச் சதத்தை அவன் முகத்தில் வீசி எறி கிறான் அது தர்மமாக முடியாது. பொருளைக் கொடுக்கும் போதும் கொடுப் போருக் கும் வாங்குவோனுக்கும் இடையே இன்பம் ஏற்பட வேண்டும். அதுவே தர்மம் அதுவே கொடை அதுவே அறம் வள்ளுவன் "ஈத்துவக்கும் இன்பம் என்பார்,

அறப்பண்புகள் ஐவகை அவையாவன தூய்மை, தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அகிம்சை என்பன.

தூய்மை: உள்ளம், உடல் இரண்டும் தூய்மை பெற்றிருத்தல் இவற்றை உடையாலும் உணவாலும் பெறுவதுடன் எண்ணம், சொல், செயல் என்பவற்றிலும் தூய்மையைக் கடைப்பிடித்தல்.

தன்னடக்கம்: தன்னடக்கம் அழிவைத்தராது இல்லையேல் புலன்களுக்கு அடிமையாக வேண்டும். புலனடக்கம் இல்லையேல் வீண் ஆசைகளை ஏற்படுத்தி அழிய நேரிடும்.

பற்றின்மை: புலன் உணர்வுக்கு உட்பட்ட பொருட்களில் பற்று இல்லாமல் இருத்த லாகும் பற்றுவைத்தலே எல்லாத் தீமைகட்கும் காரணம் எனப் பகவத் கீதை கூறு கிறது. பொருள்களுக்கு ஒருவன் அடிமையாகி விடக்கூடாது

சத்தியம்: புலக்காட்சிக்கு அடிமையாகாத ஒருவன் சத்தியப் பொருளான கடவுளைக் காணுகின்றான், சொல்லில் மட்டுமல்ல செயலிலும் சத்தியம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

அகிம்சை: உயிர்கள் இறைவனின் அம்சம், அவற்றை உடலாலேயோ உள்ளத் தாலேயோ துன்புறுத்தல் கூடாது.

தற்கால உலகில் மேற்கூறிய அறப்பண்புகள் அருகிக் கொண்டு செல்வதையிட்டு இந்துவாகப் பிறந்தவன் மட்டுமன்றி மனிதனாகப் பிறந்த அத்தனை பேரும் கண்ணீர் வடிக்க வேணடும்- கொலை களவு முதலிய பஞ்சமா பாதகங்கட்குக் குறைவேயில்லை.

மது அருந்துவது தீமை என்று அருந்துபவனுக்குச் சொன்னால் ''நான் என் பணத்தில் குடிக்கிறேன் யாருக்காவது தொல்லை கொடுக்கிறேனா என்று கூறுவான். உண்மையை நன்கு சிந்தித்தால் அருந்துபவன் முதலில் தனக்குத் தீமை செய்கின்றான். அழிவைத் தேடுகிறான், குடிகுடியைக் கெடுக்கும் என்பர்.

எப்பழக்கம் எம்மால் கைவிட முடியாமல் இருக்கிறதோ அது தீயபழக்கம் அது அதர்மம் தினமும் பால் குடித்தவன் ஒருநாள் பால் இல்லை யென்றால் அவனை ஒன்றும் செய்யாது. தேநீர் குடித்தவன் கைவிட முடியாது திணறுவான், ஆதலால் தேநீர்ப் பழக்கம் தீயது அது மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது,

தர்மத்தில் இருந்து விலகிக் கொண்டு ஆண்டவனைத் தேடுவதில் அர்த்தமில்லை அரிய மனிதப் பிறவியிலேயே அறம் செய்ய வேண்டும். ''அன்றறிவா மென்னாது அறம் செய்க'' என்று குறள் பேசுகிறது. இன்று செய்வோம் நாளை செய்வோம் எனப் பின்போடாதீர்கள் தனக்கும் பிறருக்கும் தீங்கில்லாமல் வாழ்ந்தாலே போதும். நாம் செய்யும் செயல் நமக்கே நன்மையளிக்க வேண்டும். ஆதலால் தான் இந்து மதம் தர்மம் கர்மம் என்னும் இருசொற்களையும் இணைத்து அறக் கோட்பாட்டைக் கூறிவைக்கிறது நல்ல கர்மம் செய்தால் நல்ல தர்மம் வளரும், அது மனிதனுக்கு ஆத்ம விடுதலையை அளிக்கிறது. பிறவிப் பயனும் அதுவே.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

பண்டிதர்: கை நவசிவாயக்குருக்கள்
காரணவாய்

# தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி என்று தமிழர்கள் கூறப்படுகிறார்கள். இவ்வாறு வரலாற்றுச் சிறப்புடைய தமிழர்களின் பண்பாட்டுச்சிறப்பை வெளிப்படுத்த தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு என்று சொல்லிப் பெருமைப்பட்டு வருவதையும் காணமுடிகின்றது. அதில் தமிழர்களிடமுள்ள அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற அந்த உயர்ந்த ''தனியே அவற்கொரு குணமுண்டு'' என்று போற்றப்படுகின்ற பண்பு என்ன என்று கூறுவதற்கு பல சிறப்பம்சங்களை எடுத்துக் காட்டலாம். எமது மூதாதையர்கள் உணவு சமைக்கும் பொழுது வீட்டில் உள்ளவர்களைக் கணக்கெடுத்து அதற்கேற்றவாறு அரிசியை அளந்து போடும் பொழுது. தேவைப்படும் அளவைவிட யாரும் விருந்தினர்கள் வரலாம் என்று எதிர்பார்த்து ஒரு சிறங்கை அரிசியை மேலதிகமாகப் போட்டு சமைக்கின்ற அந்த விருந்தோம்பல் பண்பை தர்மசிந்தனை தமிழர்களுக்கே இருந்து வருகின்ற தனியான குணமாகமதிக்கப்படுகின்றது. எமது மூதாதையர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற அந்தப் பண்பை நாமும்....

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள்
கந்தசஷ்டி சொற்பொழிவிலிருந்து

சிவமயம்

# சந்நிதியான்

கலியுக வரதன் கந்தன் புகழ்பாட
கணபதியே நீதான் துணை

1. தொண்டமனாற்றங் கரைதனிலே தொன்மைமிகு வேலைய்யா
பண்டு தொட்டு இன்றுவரை பழகிவரும் பாலன் ஐயா!
சுட்டாரைச் சுட்டெரிக்கும் சுடர்மிகுவடி வேலுனதே:
நற்கீரனுக் கருளிய போல் நங்களையும் காருமையா!

2, கற்கிமுகி யால்தமிழர் காணாமல் போகினமாம்!
காணாமல் போனவரைக் கருணையுடன் பாருமையா!
பூதத்தைப் பொடியாக்கி பூவுலகைக் காருமையா!
பூவரசம் மரத்தடியில் புனிதன் அருள் காட்டுமையா!

3. கடலாடும் முருகனையா கருணைமழை பொழியுமையா!
இருளாடும் நம் இதயத்தில் இணையடியை வையுமையா!
அடங்குமட்டும் அடங்கிவிட்டோம் அனுபவித்தோம் போதுமையா!
தொடங்கிடவே நும்மாட்சி துணைநின்று காருமையா!

4. சந்நிதியான் இருக்கையிலே சங்கடங்கள் வந்திடுமோ?
எந்நிதியும் தேவையில்லை எமக்குநும் அருள் உளதால்!
வேலுண்டு! மயிலுண்டு! வினைதீர்க்க முருகனுளன்
வெற்றியுடன் சமாதானம் வேண்டுகின்றோம் தாருமையா!

5. அன்னதானக் கந்தாஉன் அருள்நாமம் நிலைத்திடலே
சந்நிதியான் ஆச்சிரமம் அருட்பசியும் நீக்குதையா!
கடவுள் நும் அருள்கிடைத்தால் கண்ணீரும் விலகுமையா!
எடுத்திடுவீர் வேல்கையில் எறிந்திடுவீர் பகையறவே!

6. திருநீற்றுக் கும்பியிலே தீபமாம் கற்பூரம்
இருவிழியால் கண்டுவிடில் இருளறுமே குமரேசா!
தருகின்றாய் எங்களுக்கு தளைத்திடவே வரங்களையும்!
உருகின்றோம் நாமெல்லாம் உன்னாமம் சொல்லிடவே!

சுலோஜனா ஜெயதாசன்
கருகம்பானை

# புகலிடம் பிறிதொன்றில்லை

மனிதருக்குத் துன்பம் வரும்போது அதனைத் துடைக்க வல்லவரை அவர்கள் நாடுவது உலக வழக்கம். அவ்வாறு துயர்துடைக்கும் ஆற்றல் கைவந்தவர், எதிர் காலத்தில் வரும் துன்பங்களையும் தீர்க்க வல்லவராகவும், ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பின் அவரிடமே அவர்கள் அடைக்கலம் புகுந்து விடுவது முண்டு.

அடியார் பெருமக்கள் - பக்குவான்மாக்கள், பற்றுக்கள் கடந்த தனித்தலைமைப் பெரும் பதியாகிய இறைவனையே எப்போதும் பற்றுக்கோடாகப் பற்றி நிற்பவர்கள். அவனிடமே அடைக்கலம் புகுந்து அந்த உறுதிப்பாட்டினாலே,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்''

என்று இறுமாந்து நிற்கக் கூடியவர்கள் அவர்கள்,

''அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை லல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே''

என்று அருளுகின்றார் அப்பர் அடிகள்

மணிவாசகரோ ''அமுதடியடைந்த அன்பர்'' அவரை ஆட்கொள்ள இறைவனே எழுந்தருளினான் குருவடிவாகிக் குவலயம் வந்தான். திருவருள்நோக்கம் தொட்டு திருவடிதீட்சை, ஞானோபதேசம் வரை செய்தருளினான். அமைச்சராக வந்தவரை அடியவனாக மாற்றியருளினான். மீளா அடிமையாக ஆட்கொண்டருளினான். அவர் பொருட்டு மதுரைப்பெருநன் மாநகரில் குதிரைச் சேவகனாயெழுந்தருளிப் பரிமேலழகராய்க் காட்சி நல்கினான் பின்னர் அங்கே பிட்டுநேர்பட மண் சுமந்தருளினான். பிரம்படிபட்டுப் புண்சுமந்த பொன்மேனியனுமாயினான். அடிகளாரைத் தன் அடியார் கூட்டத்தோடு விட்டுத் தான் மறைந்தருளினான். பின்னர் அடியார்கள் எல்லோரும் ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளினான். அடிகளார் மாத்திரம் தனித்தனர். வழிநின்று அருளாரமுத மூட்டிய வள்ளற் பெருமானது கருணையின் பெருமையை வியந்தும் நயந்தும் அப்பெருமானைப் பிரிய நேரிட்டமையை எண்ணி எண்ணி ஏங்கியும் அடிகள் அழுது அழுது அருளிய அமுதலாசகங்களே திருவாசகப் பாக்கள்.

''எளியேனை ஆட்கொண்டருளிய பரமகருணாநிதியே! அடியேனைப் பாதுகாத்தருள்க தேவரீரே! இந்த ஏழை அடியவனுக்குப் புகலிடம். வேறு புகலிடம் எதுவுமில்லை யாருமில்லை. என்னைக் கைவிட்டு விடாதே. தள்ளிவிடாதே புறமே போகவிடாதே. அடியேனைக் காத்தருள்க'' என்று மிக உருக்கமாக வேண்டுதல் செய்கின்றார் அடிகளார், அவரது பரிபூரணசரணாகதி நிலையைக் குறிக்கிறது பின்வரும் திருவாசகம்.

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய சயசய போற்றிபோற்றி

ச. விநாயகமூர்த்தி
சிரேஷ்ட போதனாசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

## தேடுழன் உன் தர்மம்

மனிதன் தன் உடலை விட்டதும் அவனுடைய பணம் அவனுடைய இரும்புப்பெட்டியில் தங்கிவிடுகிறது. அவனுடைய பசுக்கள் கொட்டகைகளிலே தங்கி விடுகின்றன, அவனுடைய அருமை மனைவியோ வீதிவரை வருகிறாள்; உற்றார் உறவினரோ சுடுகாடுவரை வருகிறார்கள். அவன் போஷித்து வளர்த்த உடலோ அக்கினியோடு ஐக்கியமாகிவிடுகிறது. ஆனால் அவனுடனேயே கூடப்போகும் தோழன் அவன்செய்த தர்மம் ஒன்றுதான்

ஆதாரம்:- சர்வோதயம்

தொகுப்பு:- க. கனகராசா

## சிரிப்பும் சிந்தனையும்



விசாலாட்சி:- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறியது ஔவையார் தானே?

காமாட்சி:- ஓம் நீ சொல்வது சரிதான் ஆனால் இந்தக் கேள்வியை 5ம் ஆண்டில் ஆசிரியரெட்டை எல்லே கேட்டிருக்க வேண்டும். இப்ப ஏன் விசாலாட்சி என்னட்டை கேட்கிறாய்.

விசாலாட்சி:- கோயிலைக் கட்டச் சொன்ன அந்த ஔவையாரை கொஞ்ச நாளாக நான் எவ்வளவு நன்றியோடை நினைச்சுக் கொண்டிருக்கிறன் தெரியுமே.

காமாட்சி:- ஏன் கொஞ்சக் காலமே எங்கடை ஊரிலை கோயில் கட்டி இரண்டு தலைமுறையா எல்லே எங்கடை கோயில் இருக்கு

விசாலாட்சி:- இல்லை காமாட்சி உனக்கு சொன்னால் என்ன எங்கடை அவரும் எந்ரை பெடியளும் இப்ப கொஞ்சக் காலத்திற்கு முன்பு தானே வெளிநாட்டுக்குப் போய் உழைக்கத் தொடங்கினவை அதற்குப் பிறகு தானே இவ்வளவு தொகையாக விலை கூடிய பட்டுச் சீலைகளையும் தங்க நகைகளையும் நாங்கள் வாங்கினனாங்கள் இந்தப் பிரச்சனையான காலத்தில் எங்கடை கோயிலும் இல்லாட்டி இவ்வளவு சீலைகளையும், நகைகளையும் என்னெண்டு நாங்கள் ஊருக்கு போட்டுக் காட்டுறது.

## மாணவர் பக்கம்

# பக்தி இலக்கியங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் பிறந்திருப்பது போல வேறு எந்த மொழியிலும் காணப்படவில்லை. பக்தி நெறி என்பது இறைவனுடன் இரண்டறக் கலத்தலைக் குறிக்கோளாகக் கொண்டு அவரிடத்தில் இடையறாது அன்பு கொண்டு ஒழுகுதலைக் குறிக்கும். சிவநேயச் செல்வர்களான நாயன்மார்களும் திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களும் தமது தெய்வமணம் கமழும் திருப்பாடல்களினால் பக்திநெறியான கொடுமுடிக்குச் சென்றனர். இறைவனுடைய அன்பினைப் பெறவேண்டும் என்ற ஒரே குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அவரையே இடையறாத சிந்தனையால் வைத்து வாழ்த்தி வணங்கிப் பாடினர்.

பக்திநெறி என்பது தமிழில் அன்புநெறி எனப் பொருள்படும். இவ்வகையான இலக்கியத்தைத் தோற்றுவித்தவர்கள் காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்களும் ஆவர். காரைக்காலம்மையார்,

''இடர்களையாரேனும் எனக்கிரங்காரேனும்
படருநெறி பணியாரேனும் - சுடருருவில்
அன்பறாக் கோலத் தெரியாடும் அம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு''

என்று சிவபெருமானிடத்தில் வைத்திருந்த அளவற்ற அன்பினை அற்புதத் திருவந்தாதியில் எடுத்துக் காட்டுகின்றார்.

''அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்''

என்று பூதத்தாழ்வார் தன் அன்பையே விளக்காக நாராயணருக்கு ஏற்றுகின்றார். இவர்கள் காட்டி வைத்த அன்பு நெறியே பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்களாக மாறின.

இப்பக்தி இலக்கியங்கள் வைதிக சமயங்களில் மறுமலர்ச்சியாகத் தோன்றின. தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் ஆதிக்கம் கொண்டிருந்த ஒரு காலத்தில்

''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'' அவதாரம் செய்தவர் சம்பந்தர். சமணர்களை நாயன்மார்களும் பௌத்தர்களை ஆழ்வார்களும் வாதம் செய்து வென்று வைதிக சமயத்தைப் புத்துயிர் பெறச் செய்தனர். இவர்களது முயற்சியினால் சமய எழுச்சி ஏற்பட்டது. 'காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பேன்' என்ற நிலையில் ஆழ்வார்களின் வாழ்வு அமைந்திருந்தது. சமயகுரவர்கள் சமணர்களுடன் அனல்வாதம் புனல்வாதம் செய்து சைவநெறி மேலோங்கச் செய்தனர்.

''சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரரும்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத் தெங்கே!

என்ற பாடல் வைதிக சமயங்கள் பத்திப் பாடல்களினூடாகவே மறுமலர்ச்சி அடைந்ததைத் தெளிவாகக் காட்டுகின்றது.

பக்தி இலக்கியங்களில் நாம் காணுகின்ற இன்னொரு பண்பு அடியார்கள் தாம் பெற்ற தெய்வ அனுபவங்களை நாயகன் நாயகி பாவத்தால் பாடியதாகும். இவ்வாறு இவர்கள் பாடியதற்கு ஒரு காரணம் உண்டு, உலகவாழ்க்கை இழிவானதென்று சமணமும் பௌத்தமும் எடுத்துக் கூறின. துறவே உயர்வானதென்று அவை போதித்தன. வைதிக சமயங்களோ வாழ்க்கை வாழ்வதற்கே என்று போதித்தன. எனவே இப்போதனை மக்கள் மத்தியில் எடுபட வேண்டுமாயின் உலகியலுக்கு ஊடாக இறைவனைக் காண முற்பட்டனர், அதனால்தான் நாயகன் நாயகி பாவனையில் பக்தி இலக்கியங்களைப் பாடினர். ஆன்மா தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடியதே பக்திப் பாடல்களாகும்

''முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!''

என்ற அப்பர் தேவாரம் இதற்குச் சான்று பகருகின்றது. பொதுவாக இம்மரபு கைக்கிளை மரபு என்று கூறப்படுகின்றது. பக்தி இலக்கிய மரபிலே காதற்சுவை ததும்பும் அமர கவிதைகளை அளித்த வைஷ்ணவ உலகம் தமிழ் இலக்கிய அகமரபை மீறியது போலச் சைவ நாயன்மார்கள் மீறவில்லை. சங்ககால இலக்கியங்களில் அமைந்துள்ள மரபினைத் தமது பக்தி உணர்விற்குக் கருவியாகப் பயன்படுத்திய வைஷ்ணவ ஆழ்வார்களின் பாடல்களிலே அன்பினைந் திணையல்லாத அகத்திணை மரபு புது மெருகுடன் பேரின்ப உணர்வு கலந்து வெளியாகியது. மரபு மீறிய நிலையிற் பாடியமை இவற்றிலே உணர்ச்சியும், உயிரோட்டமும் மீதூர இருப்பதற்கு ஒரு காரணம் எனலாம். கண்ணன் மீது பக்திக் காதல் கொண்ட ஆண்டாளின் அனுபவ உணர்ச்சிப் புலப்பாடே நாச்சியார், திருமொழி, நாயக நாயகி பாவத்திற் பாடிய பக்திக் கவிஞர்களுள் பெண்ணாக விருந்தே பெண்ணுணர்ச்சியைப் புலப்படுத்திப் பெருமையுறும் ஆண்டாள் பெற்ற பல்வேறு அனுபவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் வகையிலே அமைந்துள்ளன.

மாணிக்கவாசகரது திருக்கோவையார் என்ற நூலும் அகப்பொருள் மரபையே தழுவி அமைந்தது அதில் உள்ள நானூறு பாடல்களும் காதற்றுறை அமைந்து சிவனைப் பாடியவை ஆகும், சிவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொண்டு இந்நூல் பாடப்பட்டதாகும்,

பக்தி இலக்கியம் பாடிய மெய்யடியார்களின் பாடல்களில் வடமொழி இலக்கிய மரபு பரவலாகக் காணப்படுகின்றது நாயன்மார்கள் சிவனது திருக்கோலக் காட்சிகளையும் சித்திரித்துக் காட்டினர். சம்பந்தர் தேவாரங்களில் இராவணன் கைலாய மலையைப் பெயர்த்தமை, மாலும் அயனும் அடிமுடி தேடியமை போன்ற கதைகள்

இடம் பெறுகின்றன, திரிபுரம் எரித்தமை காமனை வென்றமை போன்ற கதைகளும் நாயன்மார் பாடலில் காணப்பட்டன. இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை நாரதசூத்திரம், சாண்டில்யசூத்திரம் என்பவற்றிலும் கருத்துக்கள் ஆழ்வார்களினால் சிறப்பாகப்பாடப்பட்டன, குலசேகர ஆழ்வார் இராம அவதாரத்தின் பெருமைகளை

''மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்!
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ!''

என்ற பாடலின் மூலம் விளக்கிக் காட்ட முற்படுகின்றார்.

பக்தி இலக்கியங்களில் தத்துவக் கருத்துக்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. அப்பருடைய பாடலில் ஆன்மாவின் இயல்பு ஆன்மாக்களுக்கு இறைவன் அருள் பாலிக்கும் திறம் அடியார்கள் இறைவனிடத்து அன்பு செய்யும் முறைமை கூறப்பட்டுள்ளன. சம்பந்தர் பாடல்களில் வினை உண்டாவதற்கு ஆன்மாவைப் பற்றி நிற்கும் பாசமே காரணம் என்றும் இறைவழிபாட்டின் மூலம் வினை கெடும் என்றும் கூறுகின்றார்,

''ஆண்ட நமக்கு ஆகம நூலால் ஆகம
சிலருக்கு அருள் நல்கும் பெம்மான்''

என்று சுந்தரர் பெருமான் யோகநெறியை வற்புறுத்திச் சொல்கின்றார். ஆணவம், கர்மம், மாயை ஆகிய கருத்துக்கள் பற்றி மணிவாசகர் தனது சிவபுராணத்திலே குறிப்பிடுகின்றார்.

பக்தி இலக்கியங்களில் அடியார்கள் இயற்கை அழகில் இறைவன் உருவத்தைக் கண்டு களித்த காட்சிகளும் காணப்படுகின்றன. சம்பந்தர் பாடல்களிலும் மாணிக்கவாசகர் பாடல்களிலும் இத்திறன்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன.

பக்தி இலக்கியத்தில் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை முறியடிக்கும் சமத்துவக்குரல் ஒலிக்கின்றது - இது நாயன்மார் பாடல்களில் மட்டுமன்றி ஆழ்வார் பாடல்களிலும் காணப்பட்டன.

''ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''
என்ற அப்பரது பாடலும்,

''குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிருந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்களாயினும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணி வண்ணற்கு ஆளன்றால்
கலந்த அடியார் தம் அடியார் எம் அடிகளே''

என்ற நம்மாழ்வார் பாடலும் இதற்குச் சான்று பகருகின்றது. சாதி, குலம், பிறப்பு போன்ற சமூக ஏற்றத்தாழ்வுகள் பக்தி இலக்கியங்களால் உடைக்கப்படுகின்றன.

''ஏழிசையாய் இசைப்பயனாய் என்று பல தோழனுமாய்'' என்று சுந்தரரும் 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்'' என்று அப்பர் சுவாமிகளும் இறை புகழ

பாடினார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் என்று சம்பந்தர் பிற்காலத்தவரால் பாராட்டுவதும் குறிப்பிடத்தக்கது. பண்கலந்த பாடல்கள் பலவற்றைப் பாடி மெய்யடியார்கள் பக்திப் பாடல்கள் இசையுலகில் ஏற்றமுற்றுக் காணப்படுகின்றன.

பக்தி இலக்கியங்களில் நாம் காணுகின்ற இன்னொரு முக்கியமான பண்பு மொழி உணர்வு பற்றியதாகும். சமண பௌத்தர்களுக்கு எதிராக பக்தி இயக்கத்தை முன்னின்று நடாத்திய நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்களது மொழிக்கு எதிராக தமிழ்மொழிக்குத் தெய்வீகத் தன்மை வழங்க முற்பட்டனர். தமிழோடு இசை பாட மறந்தறியேன் என்ற குரல் ஒலிப்பதில் நியாயமுண்டு. தமிழ்மொழியின் பெருமைகளை ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ், அசைவில் செழுந்தமிழ், மறையிலங்கு தமிழ் தவம் மல்கு தமிழ், திருநெறிய தமிழ், அருள்மாலைத் தமிழ், விலையுடைய அருந்தமிழ் இன்தமிழ், இறையெழுது மொழி ஞாலமிக்க தண்டமிழ் என்றெல்லாம் அடைமொழி கொடுத்துப் பாடினர். சம்பந்தர் தன்னைப் பற்றிக் கூறுமிடத்து நற்றமிழ் ஞானசம்பந்தன், அருந்தமிழ் ஞானசம்பந்தன், தமிழ்நாதன் ஞானசம்பந்தன், தமிழ்நாடு ஞானசம்பந்தன், சீரார்தமிழ் ஞானசம்பந்தன், செந்தமிழின் விரகன், தமிழ்க்கிழமை ஞானன் செந்தமிழான் என்றெல்லாம் தமிழையும் தன்னையும் சேர்த்துப் பாடுகிறார். "தமிழ் முரசு கொட்டித் தமிழ்க்கொடி ஏந்தித் தமிழ்க் கவிதையால் தமிழ்க் கடவுளைப் பாடி தூங்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பிய வீரத்தமிழர் ஒருவர் உண்டு என்றால் அவர் ஞானசம்பந்தரல்லாமல் வேறு யார்?" என்ற அ. ச. ஞானசம்பந்தன் கூறுகின்றார். மேலும் சாதாரண மக்களது சொல் வழக்காற்றையே பக்தி இலக்கியங்களில் காண முடிந்தது.

பக்தி இலக்கியங்கள் உலக வாழ்க்கையினூடாக அன்பு நெறியைப் போதித்து சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து தமிழ்மொழிக்கு முதன்மை அளித்து வைதீக சமயங்களை எழுச்சி பெறச் செய்தன எனலாம்.

இ. நடராாச
அதிபர்
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

## மக்களை எப்படித் திருத்தியமைக்கலாம்?

வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கு என்று திட்டம் போட்டு அத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மக்களைத் திருத்தியமைக்க முடியாது. பொறுமையுடன் சோர்வடையாமல் சத்தியத்தையும், தர்மத்தையும் கடைப்பிடித்து அவற்றைச் சிறுகச் சிறுக மக்களிடையே புகுத்துவதன் மூலம் மக்களைத் திருத்தியமைக்கலாம்.

ஆதாரம்: "தர்மசக்கரம்"

# *Easy way of Learning English*

1. Nouns - பெயர்ச் சொற்கள்
2. Verbs - வினைச் சொற்கள்
3. Pronouns - பிரதிப் பெயற் சொற்கள்

**NOUNS** are naming words

Mohan, Mala, Radio, Pen, Cow etc.

**VERBS** That tell about actions

Play, study, drink, wash etc.

**PRONOUNS** are words used instead of nouns.

They are I, we you, they, he, she, it

*Table I*

| Pronoun | | | |
|---|---|---|---|
| I — நான் | HAD | I | have |
| We — நாங்கள் | | We | |
| You — நீர், நீங்கள் | | You | |
| They — அவர்கள், அவைகள் | | They | |
| He — அவன் | | He | has |
| She — அவள் | | She | |
| It — அது | | It | |

## *Construction of Sentences ( Present form )*

1. I have a bicycle
2. We have Pencils
3. You have Pen
4. They have marbles
5. He has a car
6. She has many Sarees
7. It has a long tail

### Past form

1. I had a bicycle last week ( வைத்திருந்ததைக் குறிப்பது )
2. He had a kite yesterday ( ,, )
3. We had English test yesterday (நடந்து முடிந்ததைக் குறிப்பது)
4. You had a good lunch yesterday ( ,, )
5. They had gone to Canada ( ,, )

### Exercise I

a. Mohan ___ a new bicycle. ( write in present form )

b. We___ a heavy rain last night ( Past form )

c. Ranjith ___ lost his bicycle yesterday. ( Past form )

d. Mala and kamala___ many sarees. ( Present form )

e I___ toothache last Saturday. ( Past form )

### Exercise 2

#### UnderLine the Pronouns

Here is a butter fly. It sits on a flower. It has two pairs of wings. They are large and beautiful. We have hands but the butterfly has no hands. It has six legs.

have - பன்மையில் வழக்கமாக வைத்திருப்பதைக் குறிப்பது

has - ஒருமையில் வழக்கமாக ,,

had - ஒருமையிலும் பன்மையிலும் வைத்திருந்ததையும் நடந்து முடிந்ததையும் குறிப்பது.

( தொடரும் )

சி. துரைராசா

# விஞ்ஞான விளக்கம்

## ஆதாரம்:- அறிவியல் உண்மைகள்

நீரிழிவு நோயாளிகள் அதிகளவு சிறுநீரை வெளியேற்றுவது ஏன்?

- ★ நீரிழிவு நோயாளியின் குருதியில் அதிக செறிவில் வெல்லம் இருக்கும்.
- ★ இவ்வெல்லம் சிறு நீருடாக வெளியேற்றப்படும்.
- ★ வெல்லம் வெளியேற்றப்படும் போது அதிகளவு நீரும் (கரை திரவமாக) வெளியேற்றப்படும்.
- ★ எனவே அதிகளவு சிறுநீரை நோயாளி கழிப்பர்.

நீரிழிவு நோயாளிகள் மாப்பொருள் உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும் என்று அறிவுரை கூறப்படுவது ஏன்?

- ★ மேலதிக குளுக்கோசு இன்சுலின் உதவியினால் கிளைக் கோசனாகச் சேமிக்கப்படும்
- ★ இன்சுலின் சுரக்காவிடின் குளுக்கோசு குருதியில் செறிந்து காணப்படும்
- ★ நீரிழிவு நோயாளிகளில் இன்சுலின் சுரக்கப்படாது
- ★ எனவே மாப்பொருளின் இறுதி விளைவான குளுக்கோசு கிளைக்கோசனாக மாற்றப்படாது மேலும் குருதியில் வெல்லத்தின் செறிவு அதிகரிக்கும்
- ★ இதனால் மாப்பொருள் உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்

அளவுக்கு அதிகமான உப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொண்ட ஒருவருக்கு ஏன் அதிக தாகம் ஏற்படும்

- ★ உடலினுள் எடுக்கப்பட்ட அதிக உப்பை உடல் வெளியேற்ற வேண்டும்
- ★ உப்பு நீர்க் கரைசலாகவே வெளியேற்ற வேண்டும்
- ★ இதனால் உடல் அதிகளவு நீரை இழக்கும்
- ★ உடல் இழையங்களில் நீர் இழக்க அதிகளவு தாகம் ஏற்படும்.

# ஒற்றுமையில் வேற்றுமை

மக்களின் தொடர்ச்சியான உயிர் அழிவு இதனால் உலகமக்களின் கவனத்தை ஈர்க்கும் தன்மை என்பனவற்றில் மட்டுமன்றி இந்த அழிவுகளைக் கட்டுப்படுத்த முடியாத தன்மையிலும் இந்த அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகிய இருநாடுகளும் ஒற்றுமைப்படுகின்றன, ஆனால் உயிர் இழப்பிற்கான காரணம் மட்டும் வேறுபடுகின்றது.

### வங்காளதேசம்

உலகத்தில் பல்வேறு நாடுகளில் புவி நடுக்கம், எரிமலை வெடித்தல், மண்சரிவு, பனிக்காற்று, புயல், வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கைத் தாக்கத்தினால் உயிர் அழிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, ஆனால் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக புயல் வெள்ளப்பெருக்கு ஆகிய காரணங்களினால் உயிர் அழிவை எதிர் நோக்கும் நாடாக வங்காளதேசம் காணப்படுகின்றது. இதனால் ''இயற்கையின் தாக்கத்தால் மோசமான உயிர் அழிவை தொடர்ச்சியாக சந்தித்துவரும் உலகநாடு வங்காள தேசம்'' என்ற உலகத்தின் கவனத்தை தன்பக்கம் இந்தநாடு ஈர்த்துள்ளது. வங்காள தேசம் ஆசியாக் கண்டத்தில் மட்டுமன்றி உலகத்திலேயே வறிய நாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்துடன் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டு செறிவான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருவதால் வெள்ளப்பெருக்கு, புயல் என்பன ஏற்படும் பொழுது உயிர்களுக்கு மட்டுமன்றி உடமைகளுக்கும் பெரும் அழிவு ஏற்படுகின்றது. வங்காள விரிகுடாவை எதிர் நோக்கியிருக்கும் இந்தநாடு வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்க வேறுபாடுகளால் ஒவ்வொருவருடமும் புயல், வெள்ளப் பெருக்கு அபாயங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஒரு பனையளவு உயரத்திற்கு கடல் அலைகள் மேலெழுந்து கடற்கரைக் கிராமங்களை முழுமையாக அழித்த சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த அழிவுகளிலிருந்து நாட்டைக் காப்பாற்ற நவீன விஞ்ஞான உலகத்தினால் பெரிதாக எதையும் செய்ய முடியவில்லை.

### அல்ஜீரியா

ஆகாயவிபத்து உட்பட போக்குவரத்து நடைபெறும் பொழுது ஏற்படுகின்ற பல்வேறு வகையான விபத்துக்கள் மற்றும் தீவிபத்து, தற்கொலை போன்றவற்றாலும் இன, மத அரசியல் ரீதியான பல்வேறு வகையான மோதல்களினாலும் மனிதன் தனக்குத் தானே அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். இந்த வகையில் மோதல்களினால் தொடர்ச்சியாக அதிக உயிர் அழிவு ஏற்படும் நாடு என்ற வகையில் இன்று வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள அல்ஜீரியா என்ற நாடு உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இரவு வேளையில் கிராமத்துக்குள் புகுந்து நூற்றுக்கணக்கானவர்களை வயசு, பால் வேறுபாடு பார்க்காது கழுத்தை வெட்டி கொலை செய்வது பரிதாபமான காட்சியாக உலகமக்களால் நோக்கப்படுகின்றது. 1992 இல் இங்கே

நடைபெற்ற தேர்தல் ஒன்றில் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெற்றியீட்ட இருந்த சந்தர்பத்தில் இராணுவ ஆட்சியாளர் தலையிட்டு அந்த தேர்தலை செல்லுபடியற்றதாக்கியதே இந்த மோதல்களுக்கும் உயிர் இழப்புக்களுக்கும் காரணமாகத் தெரிகின்றது. இந்த படுகொலைகளுக்கான பழியை மோதலில் ஈடுபட்டுள்ள இஸ்லாமியதீவிரவாதிகளும் இராணுவ ஆட்சியாளர்களும் ஒருவர் மற்றவர் மீது மாறி மாறி சுமத்திக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அப்பாவி மக்களின் படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது மனிதாபிமானம் மனிதநேயம் என்று சிந்திக்கும் பொழுது இத்தகைய பரிதாபமான படுகொலைகள் ஒரு பக்கத்தில் மிகுந்த வேதனையை அளிக்கின்ற அதே நேரம் மறுபுறத்தில் வேடிக்கையான ஒரு நிகழ்வாகவும் தெரிகிறது ஆனால் மனிதனால் மனிதன்மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய படுகொலைகளை தடுப்பதற்கும் இன்றைய உலகத்தினால எதனையும் செய்ய முடியவில்லை.

ந. அரியரட்ணம் B. Ed.

## பணிவிடை

இராமனுடன் சீதை காட்டுக்குப் போனது போல் இலட்சுமணனுடன் அவன் மனைவி ஏன் காட்டுக்கு செல்லவில்லை இதற்குப் வாரியார் ஒரு கதை சொல்லியிருக்கிரார்.

வாரியார் காசிக்கு போகும் போது அவரிடம் வேலை பார்க்கும் ஒருவர் "சாமி எனக்கும் காசி பார்க்க ஆசையா இருக்கு" என்று சொன்னாராம். சரி சரி எனக்கு உபகாரமாக இருக்கும் நீயும் என் கூடவா. நானே டிக்கட் எடுத்துடறேன் என்று அனுமதி கொடுத்தார் வாரியார் கிளம்பி பஸ்ஸில் ஏறுகிற சமயத்தில் பார்த்தால் அந்த இளைஞரின் மனைவியும் ஒரு டிக்கட் எடுத்துக் கொண்டு உட்காந்திருந்தாள் பயணம் முழுக்க 'மீனாட்சி நீ சாப்பிட்டியா? "மீனாட்சி உனக்கு தலைவலிக்குதா? மீனாட்சி குடிக்க தண்ணி வேணுமா" என்று அந்த இளைஞர் தன் பெண்டாட்டியைத் தான் கவனிச்சுக் கிட்டிருந்தார் நான் ஒருத்தன் வர்றதே அவனுக்கு மறந்து பேச்சு என்றார் வாரியார்.

அதிலே பிறத்தியாருக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று போகிறவர் தன்னுடைய மனைவியை கூட்டிச் செல்லக் கூடாது. அது தெரிந்துதான் இலட்சுமணன் தன் மனைவி ஊர்மிளாவை காட்டுக்குக் கூட்டிச் செல்லவில்லை.

இளம்பிறை மணிமாறன்
சொற்பொழிவில் இருந்து

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

06. 02. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. க. சிவாஜி

(அதிபர், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை - சுன்னாகம்)

**விடயம்: "கூட்டுப் பிரார்த்தனை"**

சிறப்புரை; செல்வன் நா. நிஷாந்தன்
செல்வன் என். கேதீசன்

வழங்குபவர்கள்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவ மாணவிகள்

---

13. 02. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: இசைமணி சி. துரைராஜா

**விடயம்: "பண்ணிசை"**

வழங்குபவர்: திரு. சி. தில்லைமணி (மின்சாரப்பகுதி யாழ். மாநகரசபை)
வயலின்: பிரம்மஸ்ரீ ப. தியாகராஜசர்மா
மிருதங்கம்; வித்துவான் ச. ஹரிஹரன்

---

20. 02. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: திரு சி. நாகலிங்கம்

(லிங்கம்ஸ் பந்தல் அமைப்பாளர், கரணவாய்)

**சொற்பொழிவு: "வாராதிருக்க வழக்குண்டோ"**

வழங்குபவர்; சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் (இளைப்பாறிய அதிபர்)

---

27. 02. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் - மாத வெளியீடு

## மாசி - 1998

---

இவ்வண்ணம்
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மாத மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும் அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# வாக்கு

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு, தனு, கரண, புவன, போகங்களைப் படைத்துத் தந்துள்ளார். இவையனைத்தும் நல்ல காரியங்களைச் செய்வதற்கும், கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதற்கும் எமக்குப் பேருதவியாக உள்ளன. இவற்றை நல்ல வழியிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. எமக்கு ஐந்து புலன்கள் உண்டு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தும் இப் பஞ்சப் புலன்களுடனும் தொடர்புபட்டவை. பொதுவில், இவை மனிதனுக்கு அடங்கியிருக்கவேண்டியவை. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, இவை மனிதன் மீது மேலாண்மை செலுத்தி, அவனை ஆட்டிப்படைக்கின்றன. இதனால் மனிதன் தன்னியல்பை இழந்து, ஆசைகளைப் பெருக்கி, வாழ்க்கையில் அல்லற்பட வேண்டியுள்ளது. புலன்களின் செல்வாக்கினை தளர்த்தி, அவற்றினை எவனொருவன் தன் ஆட்சிக்குள் கொண்டு வருகின்றானோ, அவனே பெரியவன், மேலானவன் ஆகின்றான். இதற்கு நல்லறிவு தேவை. ஐந்தவித்தான் ஆற்றல் மிகப்பெரியது. செயற்கரிய செய்த பெருமையும் கிடைக்கின்றது. இந்த வகையில் இன்று சுவையோடு சம்பந்தப்பட்ட வாய் எனும் புலன் பற்றிச் சிறிது நோக்குவோம்.

வாய் என்பதன் முக்கிய அங்கம் நாக்கு ஆகும். நாக்கு, சுவைத்தல், வழங்குதல் ஆகிய இரண்டு முக்கிய தொழில்களைச் செய்கின்றது. பொருட்களின் அறுசுவைகளையும் உணர்ந்து அறிவிப்பது நாக்கு. நாக்கின் அடுத்த தொழிற்பாடு ஒலியுடன் தொடர்புடையது. ஒலிதான் முதலில் தோன்றியது என்பர். மனிதனும் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கிறான். இந்த ஒலியைப் பயன்படுத்தி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறருக்கு வழங்குகிறான்; அதாவது அவற்றை வெளிப்படுத்துகிறான். இதுவே நாவின் வழங்கல் தொழிற்பாடு. வழங்கல் என்பது தானம் செய்தல் ஆகும். தான தர்ம வழியில், தர்ம முறையில் செய்யப்பட வேண்டியது அவசியம். பாத்திரம் அறிந்து தானம் வழங்கப்பட வேண்டும். வேண்டாதன தவிர்த்து, விலக்கப்பட வேண்டியன நீக்கி, வேண்டப்படுவன மாத்திரம் கொடுக்கப்பட வேண்டியது நீதியாகும். இந்த வகையில் வாயிலிருந்து வெளிப்படும் வாக்கு அல்லது சொல் ஒளிபொருந்தியதாக விளங்க வேண்டும். "உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே உண்டாகும் ஒளி வாய்மை எனப்படும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

மற்றையோர்க்கு ஒரு சிறிதும் தீமையை விளைவிக்காத சொற்களைச் சொல்லுகின்ற அறம், வாய்மை ஆகும். அப்பர் பெருமானும், "வாயே வாழ்த்து கண்டாய்" என்று நாவுக்குப் பணிப்புரை வழங்குகிறார். நாவினை ஆண்டு நாவுக்கரசர் ஆனார். வாழ்த்துவதற்குத்தான் வாயைப் பயன்படுத்த வேண்டுமே தவிரப் பிறரைத் தூற்றுவதற்கோ, துன்புறுத்துவதற்கோ அல்ல என்பதை உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

மனிதனின் அற்புத சாதனையாக மொழிப் பண்பாடு விளங்குகின்றது. மொழியில் ஒலி வடிவம் உருப்பெறுவது மனிதனின் நாக்கில் ஆகும். எனவே, நாக்கு நன்கு கண்காணிக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இதற்கு இறைவனே வழி அமைத்துக் காட்டியுள்ளான். இறைவன் நாவினைப் படைக்கும் போதே, அது செய்யப் போகின்ற செயலை உணர்ந்து, முன்னேற்பாடாக, அதனை வாய் எனும் அரண் ஒன்றினுள் அமர்த்தி, அதனைச் சூழக் கூரிய பற்களால் வேலிபோட்டு, கடுமையான காவலுக்குட்படுத்தியுள்ளான். நாக்கு என்ற அருமையான உறுப்பு, அது வழங்கும் சொற்களினால் ஆக்கத்தையும் தருவிக்க முடியும், கேட்டினையும் வருவிக்க முடியும். ஆகையால், நா காத்து ஓம்பப்படவேண்டியது என்பது இறைவனின் சித்தமும் ஆகும் என்பதனையே இந்தக் கட்டுக்காவல் உணர்த்துகிறது.

"யாகாவா ராயினும் நா காக்க" என்றார் வள்ளுவர். மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் அறம் செய்ய முடியும். இவற்றுள் வாக்கு என்பதனால் செய்யப்படுகின்ற அறத்திற்குப் பெரும் பொருட் செலவும் தேவையில்லை. உண்மை பேசுதல், இன்சொற்களால் இனியவை கூறல்; வாழ்த்துரை வழங்குதல்; வார்த்தைகளின் வகையறிந்தும், சொற்களின் திறனறிந்தும் பேசுதல், பயனுள்ளவற்றைப் பேசுதல், சமாதானப் பேச்சுக்கள் என்பன சிறந்த அறம் தழுவிய செயல்களாகும். இதேவேளை எதிர்மறையான, குற்றங்கள் சார்ந்தவற்றில் நாக்கு ஈடுபாடு கொள்ளாதிருத்தலும் அறம் ஆகின்றது. புறங் கூறாமை, வஞ்சினம் பேசாமை, கடுஞ்சொல் கூறாமை, பொய் பேசாமை, விதண்டாவாதம் புரியாமை, சூளுரையாமை, சபதம் செய்யாமை, சாபம் இடாமை, கோள் மூட்டாமை போன்றவற்றைக் கடைப்பிடிப்பதன்மூலம் நா காத்தோம்பப்படுகிறது.

பெரும் பொருள் செலவு செய்து புரியும் ஈகையைவிட, அன்புடன் முகம் மலர்ந்து பிறர்க்கு இன்சொல் வழங்குவதன்மூலம் புரியும் ஈகை மிகச் சிறந்தது. இது செலவில்லாத, எல்லோருக்கும் இயலக்கூடிய அறம், தருமம், புண்ணியம் ஆகின்றது. இதனாலேயே திருமூலரும், "யாவர்க்குமாம் இன்னுரை தானே" என்றார்; பாரதியாரும் "அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்" என்றார். இனிய உளவாக இன்னாது கூறல் தேவையற்றது.

எனவே குடும்பத்திலும் சரி, வேலைத் தளத்திலும் சரி மற்றும் சமூகத்திலும் சரி, இன்முகத்துடன் யாவருடனும் இனிய சொற்களையே பேசி, அன்பினைச் சொரிந்து, மக்கட் பண்பினைப் பேணி, அறம் பரப்பி எல்லோரும் இன்புற்று வாழ வழி செய்வோம்.

"நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" கல்விக்குப் பயன் அறிவு. அறிவுக்குப் பயன் பணிதல் எனும் ஒழுக்கம் என்பதை நாம் சிந்தையில் நிறுத்துவோமாக.

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 54ஆவது பட்டமளிப்பு விழாவும், சைவ மகாநாடும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இராமகிருஷ்ண சங்க கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.**

# செல்வச்சந்நிதியான் திருவடியில் மலரும் 200ஆவது ஞானமலர்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்குரியதான உத்தம சிந்தனைகளை, மாஞாலத்தின் மாஇருள் களையவல்ல மாண்புமிகு கருத்துக்களை, உள்ளடக்கியதாக மலரும் அற்புத மலராக மிளிரும் ஞானச்சுடரின் 200ஆவது மலர் வெளிவரவிருப்பது, செல்வச்சந்நிதியானின் திருவருட் செயலாகும். காலத்தின் தேவையாக உள்ளதாகிய இப்பணியின் மேன்மையானது ஒப்புயர்வற்றது.

சமயமும் சமயவாழ்வும், ஒழுக்கமும் ஒழுக்கப் பண்புகளும் நலிவடைந்து வரும் காலகட்டமானது, எமது சைவத் தமிழ் சமூகத்தின் சீர்கேடான காலமாக இருக்கின்றது. இக்காலம் போர்க்காலத்தைவிடவும் கொடுமையானதாக உள்ளது. போர்க்காலத்தில் உயிராபத்து மட்டுமே இருந்தது. ஆனால் இன்று எம் இளைய தலைமுறையின் சீர்கெட்ட போக்கும், வெறும் படாடோபமாக விளங்கும் ஆலய வழிபாடும், கேளிக்கைக்குரியதாக விளங்கும் ஆலய நிகழ்வுகள் பலவற்றிலுமிருந்து மாறுபட்டு விளங்கும் செல்வச்சந்நிதியானின் பக்திச் சூழலில் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களைக் கைக்கொண்டொழுகி வரும் சபையாக சந்நிதியான் ஆச்சிரமம் மிளிர்கின்றது.

பசிப்பிணி போக்கும் ஆச்சிரமமானது காலத்தின் தேவையுணர்ந்து ஆன்மீக நெறிவளர்க்கவென முனைந்து வெளியீடு செய்த மலராக ஞானச்சுடர் மலர்ந்தது. ஆரம்ப காலத்தில் 2,3 கட்டுரைகளுடன் தொடர் கட்டுரைகள் சிலவற்றுடன் தெய்வீக சிந்தனைகள் கூடிய வகையில் வெளிவந்த ஞானச்சுடரின் வளர்ச்சியானது மிகவும் அற்புதமானது. இன்று உலகின் சைவர்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றது.

மலரில் இடம்பெற்றுவரும் ஆக்கங்கள் பலவும் நற்சிந்தனைகளை வளர்க்க வல்லதாகவும் மாணவர்கட்கு அறிவூட்ட வல்லதாகவும் இருக்கக் கூடியதாக அமைந்து சிறப்புப் பெறுகின்றது. ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் பலவற்றிலும் உன்னதமான செயற்பாடாக ஞானச்சுடர் வெளியீடு அமைந்துள்ளது. நித்திய அன்னதானப்பணி, இலவச மருத்துவ சேவை, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவி, பாடசாலைகளுக்கு நிதியுதவி, ஆதரவற்றோருக்கு அனுசரணை வழங்கல், அத்துடன் பேரவையின் நிகழ்வுகளில் இளம் சமூகத்தினரின் பேச்சாற்றலை வளர்க்க களமமைத்தல், மூத்த கலைஞர்களைப் போற்றிக் கௌரவித்தல், பலதரப்பட்ட கலைஞர்களையும் அழைத்து அவர்கள்மூலம் ஆன்மீகப் பணி புரிதல் எனப் பரந்துபட்ட சேவைகள் பலவற்றைக் குறிக்கோளாய் கொண்டியங்கிவரும்

சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலை பண்பாட்டுக்கென ஒரு பேரவையை அமைத்து இதன்மூலம் ஆன்மீகப் பணியை வளர்க்கும் ஞானச்சுடர் எனும் பனுவலை வெளியிட்டு வருகின்றது.

ஆன்மீக வழிகாட்டியாக விளங்கும் ஞானச்சுடரின் வளர்ச்சியை உற்று நோக்கும்போது சந்நிதியானின் திருவருளை வியந்து போற்றுவது ஒன்றே எம்மால் செய்யக்கூடியதாகவுள்ளது. இம்மலர் தன் ஆன்மீகப் பணியை மேன்மேலும் வளர்த்து எம்மக்களிடையே உள்ள ஆன்மீக வீழ்ச்சியை மீட்டெடுக்கக்கூடியதாக அதன் பணி உயர வேண்டும். இன்றைய காலசூழலிலே இதுவே தேவையாக உள்ளது. இம்மலரின் வளர்ச்சிக்கும், ஆச்சிரமத்தின் செயற்பாடுகள் மேன்மேலும் பரந்து விரிந்து வளர்ச்சி பெறவும், எல்லாம் வல்ல குருநாதன் செல்வச்சந்நிதியானைப் பிரார்த்தித்து அவனருள் வேண்டி நிற்கின்றோம்.

# ஞானச் சுடரே நீ வாழி வளர்க

ஞான ஊற்றின் பிரவாகமாகவும், ஞானக் கருவூலமாகவும், ஞானப் பொக்கிஷமாகவும், ஞானச்சுடராகவும் மிளிர்கின்ற, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் 200ஆவது மலராக நீ மிளிர்வதையிட்டு என்போன்ற வாசகர்கள் பெரிதும் புளகாங்கிதமடைகின்றோம்.

நீ எவ்வளவோ இக்கட்டான சூழ்நிலையில் சூல் கொண்டு பின் பிறந்து, மெதுவாகத் தவழ்ந்து, நடைபோட்டு இன்று வேகமாக ஓடிக்கொண்டிருப்பது பெரு வியப்புக்குரிய ஒரு கைங்கரியமாகும். நீ தாங்கி வருகின்ற ஒவ்வொரு கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும், பொன்மொழிகளும் பொதுமக்களுக்கு ஞானத்தை ஊட்டுவனவாக அமைந்திருப்பதை எல்லோரும் நன்கு உணர்வர். உன்னுடைய அமைப்பு, அழகு எல்லோரும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய எளிமையான வசன நடையைக்கொண்ட கட்டுரைகள், கருத்துக்கள், அழகிய வர்ணப் படங்கள் மலிவான விலை இவையாவும் உன்னை மேன்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. உலகிற்கு உன் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

மேலும் உன்னை அழகுற அச்சிட்டு நூல் வடிவில் உருவாக்கி வருகின்ற அச்சகத்தாருக்கும் மாதந்தோறும் கதைகள், கட்டுரைகள், பாடல்கள், தொகுப்புக்கள் யாவற்றையும் உன்னிடம் சமர்ப்பிக்கின்ற அறிஞர் பெருமக்களும், வாசகர்களும் ஞானச்சுடராகிய நீயும் நீடி வாழ்க வளர்க என வாழ்த்தி முருகப்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி அமைகின்றேன்.

-கரவை திரு சி. நவரத்தினம்-

வட இலங்கை சுதேச வைத்தியசபையினால் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட
"லங்கா இரத்தின ஜோதி" எனும் விருதுக்குரிய பத்திரத்தினை
பாராளுமன்ற பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க ஆச்சிரமத்திற்கு
வருகைபுரிந்து கையளிக்கும் நிகழ்வு



விருது வழங்கும் நிகழ்விற்கு வருகைபுரிந்த திரு பண்டு பண்டாரநாயக்க
அவர்களையும் அவரோடு வருகைபுரிந்த தொழில்நுட்பக் கல்லூரியின்
பொறுப்பாளர் திரு. யோகராஜன் அவர்களையும் சுவாமி அவர்கள்
பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு



கதிர்காமத்தில் உள்ள இந்து யாத்திரிகர் விடுதியில் கடமை புரியும் அன்பர்களோடு சுவாமிகளும் ஆச்சிரமத்தைச் சார்ந்தோரும்





# பசிக்கு விருந்தளிக்கும் சந்நிதியான் ஆச்சிரமம்

திரு சிவ மகாலிங்கம் அவர்கள்

அன்னதானக் கந்தன் என்று போற்றப்படும் செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் பல அன்னதான மடங்கள் இருந்து ஆலயத்திற்கு வரும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கி உணவளித்து வந்தன. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் ஆலயச் சூழலில் இருந்த மடங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டன. பல இலட்சக்கணக்கான பணம் செலவு செய்து உருவாக்கப்பெற்ற சித்திரத்தேரும் எரியூட்டப்பப்பட்டது. சந்நிதி முருகனையே தஞ்சமென அடைந்து ஆலயச் சூழலில் வாழ்ந்து வந்த அடியார்கள் அனைவரும் பாதிக்கப்பட்டார்கள். ஆலயத்தின் தெற்குப் பக்கத்திலே தென்னை மரச் சோலையின் நடுவே இருந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கிய ஆனந்தாச்சிரமமும் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ் ஆச்சிரமத்தினை நல்ல முறையிலே நிர்வகித்து வந்த மயில்வாகனம் சுவாமிகளின் பிரதம சிஷ்யர் மோகனதாஸ் சுவாமிகளால் சந்நிதியான் ஆச்சிரமம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஆச்சிரமம் வெறும் அன்னமிடும் பணியோடு மட்டும் நின்றுவிடாது சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, மருத்துவப்பணி எனப் பல்வேறு பணிகளைச் செய்துவரும் ஒரு தபோவனமாகத் திகழ்கிறது. ஞானபண்டிதன் சந்நிதி வேலவனின் திருவருள் உள்நின்று உணர்த்தியமையால் மாதாந்த சமய சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டுமென்ற விருப்பம் மோகனதாஸ் சுவாமிகளின் எண்ணத்தில் தோற்றம் பெற்றது. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் 1998ஆம் ஆண்டு தைமாதம் முதல் ஞானச்சுடர் என்ற ஆன்மீக மணம் கமழும் பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார்கள். 2014 ஆவணி மாத மலர் இருநூறாவது மலராக வெளிவருகிறது. ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில் மலரின் வெளியீடு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மலரின் இடதுபக்க மூலையில் மயில்வாகனம் சுவாமிகள் படமும், வலது பக்க மூலையில் கலை பண்பாட்டுப் பேரவையின் இலச்சினையும் இடம்பெறும். ஓம் என்ற பிரணவ மந்திரமும் வேலைக் கையில் ஏந்திய அழகன் முருகனின் உருவமும் முன் பக்க மட்டையில் காணப்படும். ஒவ்வொரு புத்தகத்தின் உள்ளேயும் சந்நிதியானின் விபூதிப் பிரசாதம் இருக்கும். சந்நிதியானின் திருவருளால் அச்சடிக்கும் தாள் தட்டுப்பாடாக இருந்த யுத்த காலத்திலும் ஞானச்சுடர் தவறாமல் வெளிவந்து கொண்டேயிருந்தது. ஆரம்ப காலத்தில் 250 பிரதிகள் மட்டுமே வெளிவந்த ஞானச்சுடர் இப்பொழுது 2000 பிரதிகள் வரை வெளிவருவதாக அறிகின்றேன். ஈழமணித் திருநாட்டில் மாத்திரமல்ல புலம்பெயர் நாடுகளில் வாழும் சந்நிதி அடியார்கள் பலருக்கும் ஞானச்சுடர் பத்திரிகை அனுப்பப்பட்டு வருகிறது.

ஞானச்சுடர் பத்திரிகை ஆரம்பித்த 1998ஆம் ஆண்டின் முதலாவது மலரின் முதற் கட்டுரையாக அடியேனின் திருமுறைச் செல்வம் கட்டுரை வெளிவந்திருந்தது. திருமுறைச்

செல்வம், முருக மந்திரம், தவமுனிவனின் தமிழ் மந்திரம் என்ற மூன்று தொடர் கட்டுரைகளை ஞானச்சுடர் மலரில் எழுதும் வாய்ப்பு ஆற்றங்கரை வேலவனின் திருவருளால் அடியேனுக்குக் கிடைத்திருந்தது. இம் மலரில் இவற்றைத் தொடராக எழுதியதால் இக்கட்டுரைகளைத் தொகுத்து மூன்று நூல்களை வெளியிட என்னால் முடிந்தது. முருக மந்திரமாகிய கந்தரநுபூதியைப் பற்றி எழுதிய நூலினை சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே வெளியிடும் வாய்ப்பினையும் பெற்றிருந்தேன். இந்நூலின் முன்பக்க மட்டையில் சந்நிதி எழுந்தருளி முருகனின் படமே போடப்பட்டுள்ளது.

பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் ஞானச்சுடர் தொடர்ந்து காலம் தவறாமல் வெளிவருவது சந்நிதியான் திருவருளால் என்றே கூறவேண்டும். எங்களுடைய சமயம் சார்ந்த சிந்தனைகளைச் சாதாரண மக்களிடம் கொண்டு செல்லும் சிறந்த ஊடகமாக ஞானச்சுடர் பத்திரிகை மிளிர்கிறது.

சந்நிதி முருகனின் அருட்பிரபாவம் அளப்பரியது; வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. அனுபவத்தால்தான் உணர்ந்து கொள்ளலாம். தமது வாழ்வில் தாம் அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்குத் தீர்வு காண்பதற்காகப் பக்தர்கள் பலர் சந்நிதியானை நாடி வருவார்கள். ஆடியும் பாடியும், அழுதும் தொழுதும் தங்கள் மனத் துயரங்களையெல்லாம் சந்நிதி முருகனிடம் முறையிடுவார்கள். பிரபத்தி நிலையில் நின்று ஆற்றங்கரை வேலவனிடம் தங்கள் முறைப்பாடுகளை வைப்பார்கள். தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் உரிமையுடன் மோதுவார்கள். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்ற மணிவாசகப் பெருமானின் வாக்கிற்கு அமைய "யாமிருக்கப் பயம் ஏன்" எனத் தனது அபய கரத்தைக் காட்டி அடியவர்களின் துன்பச் சுமைகளையெல்லாம் ஞான பண்டிதன் பொசுக்கி விடுவான். சந்நிதி வேலவனை நம்பி வழிபடுங்கள்; சிக்கெனப் பிடியுங்கள்; "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று உள்ளம் உருகிப் பாடுங்கள்; "காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்" என்று உறுதியுடன் வேண்டுங்கள் அழகன் முருகன் அடியார்களின் அன்புப் பிடியில் இருந்து தப்பவே மாட்டான். ஆற்றங்கரை வேலவன் குருவாய் நம்மை வழி நடாத்திச் செல்வான். நாம் அனைவரும் நற்கதி பெறுவோம்.

"நம்பினார் கெடுவதில்லை இது நான்கு
மறைத் தீர்ப்பு"

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| செப்ரெம்பர் | 03 | ஆவணி 18 புதன் | குங்கிலியக் கலயர் |
| செப்ரெம்பர் | 23 | புரட்டாதி 07 செவ் | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் | 06 | புரட்டாதி 20 திங் | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் | 24 | ஐப்பசி 07 வெள் | மெய்கண்டதேவர் |

# தெய்வம் பொறுக்குமா? மழை பெய்யுமா? சாந்தி நிலைக்குமா? திருந்துவோம், திருத்துவோம், வருகிறீர்களா?

திரு கோப்பாய் சிவம் அவர்கள்

ஏன் இந்த அநியாயம்? கலி முற்றி விட்டதா? எல்லா இடங்களிலும் மழை பெய்கிறது. நமது பிரதேசத்தில் மட்டும் அனல் போல வெயில் வறுத்தெடுக்கிறது. வெப்பம் தாங்க முடியவில்லை. கிணறுகள் வற்றுகின்றன. கால்நடைகள் அலைகின்றன. இன்னும் சில நாட்கள் இந்த நிலை நீடித்தால்.....!

ஒவ்வொரு நாளும் செய்தித் தாள்களை எடுத்தால் குலை நடுங்கும் செய்திகள். கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல், விபத்து, தற்கொலை அவச் சாவுகள்..... இப்படியே தொடர்ந்தால்.....!

இன வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், அரசியல் வக்கிரங்கள், பொய்யும் பிதற்றலுமான அறிக்கைகள், இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் கொடூரங்கள்..... முடிவில்லையா.....?

இவையெல்லாம் ஏன்? நாம் என்ன பாவம் செய்தோம்? இறைவன் ஏன் எங்களைத் தொடர்ந்து தண்டிக்கிறார்? இது ஒரு புறத்தில்.....

மறுபுறத்தில், வழுக்கிச் செல்லும் காப்பெற் வீதியில் படகுக் கார்களில் பயணங்கள், மேலைத்தேய நாகரிகத்தின் கலப்புடன் ஆங்கிலம் இடைவெட்டும் அழகான உரையாடல்கள், அளவுக்கு மிஞ்சிய அலங்காரங்கள், சாத்துப்படிகள், சுவிங்கம் மெல்லும் வாய்கள், நாள்தோறும் பிரசாக் கடைக்கும்...... கடைக்கும் ஓட்டங்கள், ஆட்களை மிரளவைக்கும் நடை உடை பாவனைகள், ஊர்கள் தோறும் பியர் கடைகள், இறைச்சிக் கடைகள்.....

இன்னொரு புறத்தில், அதிகாலை நான்கு மணிக்கு தூக்கத்தைக் கலைத்தவாறு ஒலிபெருக்கி ஓலங்கள், ஒன்றா, இரண்டா? நாலாபுறமும் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு பல ஆலயங்களின் ஒலிபெருக்கிகள். ஒரு சிறு குக்கிராமத்திலேயே நாலைந்து கோவில்கள். மரங்களுக்குக் கீழும் வீட்டு எல்லைகளுக்குள்ளும் இருந்த சிறு சிறு கொட்டில்களெல்லாம் இன்று கோபுரத்துடனும் ஸ்தூபியுடனும் கூடிய பெரிய கோயில்கள். அதுமட்டுமல்லாமல் எல்லாக் கோயில்களிலும் நடேசர் முதல் ஆஞ்சநேயர் வரை அனைத்துத் தெய்வங்களும் குடிகொண்டுள்ளன.

ஆனால், கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி மாபிள்கள் பதித்து ஊர்கூடி எண்ணெய்க்காப்புச் சாத்தி, கும்பாபிஷேகம் செய்து எல்லாம் முடிந்தபின் வணங்குவதற்கு ஆலயத்தில் ஆட்களைக் காணமுடியாது. ஒலி பெருக்கி மட்டும்தான் பாடும்.

நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? நமது சமகால வாழ்க்கைமுறையின் ஒரு குறுக்குவெட்டுத் தோற்றம் இங்கு காட்டப்பட்டுள்ளது.

திரும்பவும் தொடக்கத்தை வாசித்துப் பார்ப்போம். துன்ப நிலையின் தொடர்கதை. ஏன்? காரணம் என்ன? காரணம் இல்லாமல் காரியம் இல்லை. இதுவரை எழுதியிருப்பவற்றை மீண்டும் வாசித்துத் தொகுத்துச் சிந்தித்தால் காரண காரியங்கள் துலங்கும். ஒன்றுக்கு ஒன்று சமப்படுத்த முடிந்த காரணிகளை ஒன்றாக்கிப் பார்க்கலாம்.

இதுவரை பார்த்தது உயர்ந்தோர் மாட்டு. இனி, சாதாரணர்கள் சிந்தனைக்கு..... சுத்தம் சுகம் தரும். இது சாதாரண வாழ்க்கைக்குரிய

நியதி. இறைவழிபாட்டிற்கு இதற்கும் மேலே போய் புனிதமும் சேர்கிறது. கூட்டித் துடைத்துக் கழுவி அவ்வளவும் போதாதென்று சாணித்தண்ணீர் அல்லது மஞ்சள்நீர் தெளித்து தூய்மை பொலியச் செய்கிறோம். தலை தோய்ந்து தோய்த்துலர்ந்த சுத்தமான ஆடை அணிந்து ஆசார சீலர்களாக நாமும் மாறுகிறோம். இவையும் போதாதென்று புண்ணியாக வாசனம் செய்து எங்கும் தெளித்து, பஞ்ச கவ்வியம் கூட்டி அதனை அருந்தி உள்ளும் புறமும் சிவமயமாக்க முயற்சிக்கிறோம்.

இங்கு சொல்லப்பட்ட புறத்தூய்மைகள் மாத்திரமல்லாமல் பொய், களவு, காமம், பொறாமை, மது, மாமிசம் இவைகள் இல்லாத தெளிவான சிந்தனையும் சேர்த்துத்தான் ஆசாரம் என்ற சொல் விரிந்த பொருள் கொண்ட மிக முக்கியமான சொல்லாக நமது சமயத்தில் கூறப்படுகிறது. அதாவது ஒழுக்கம் என்பதையும் (அகத்தூய்மை) சுத்தம் என்பதையும் (புறத்தூய்மை) இணைத்த புனிதமான சொல் அது. ஆசாரமில்லாத எந்தச் செயலும் ஆண்டவனிடம் அணுகாது. இது வேத சிவாகமங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்பட்டு நமது முன்னோர்களால் தொடர்ந்து அனுசரிக்கப்பட்டு வரும் செயற்பாடு ஆகும். அந்தணர்களிடமும் சைவ ஒழுக்கம் மிக்க பெரியோர்களிடமும் அடிக்கடி இந்தச் சொல்லைக் கேட்கலாம். "அவர் ஆசாரமான ஆளா? அவரை இந்தக் காரியத்திற்கு அழைக்கலாமா?" என்றும், "இங்கே நாம் சாப்பிடலாமா? ஆசாரமாக இருக்குமா?" என்றும், அவர் ஆசாரமில்லாதவர், அவரைக் கோயிலுக்குள் விட வேண்டாம்" என்றும் ஒலிக்கின்ற இந்தக் குரல்கள் புனிதத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

நாம் குருபூஜை செய்து வழிபடும் நாயன்மார்களில் ஒருவர் கண்ணப்ப நாயனார். அவரிடம் ஆசாரம் இருந்ததா? இல்லை. ஆனால், இன்னொன்று இருந்தது. அதுதான் மூடபக்தி. தம்மை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்துவிடுகின்ற அந்த பக்தியும் நம்பிக்கையும் அங்கு இருந்தது. சாஸ்திர அறிவு அவரிடம் இல்லை. அவர் பிறந்து வளர்ந்த விதம் அப்படி. அவர் நிலையில் அவரது செயல்களை ஆண்டவன் ஏற்றுக்கொண்டார். கண்ணப்ப நாயனாரிடம் இருந்த அந்த பயபக்தியும் நம்பிக்கையும் நம்மிடம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவர் வரலாற்றைப் பெரியபுராணத்தில் பாடி வைத்தார் சேக்கிழார் பெருமான். நல்லதாகவும் சுவையாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர் தாமே சுவைத்துப் பார்த்து இறைவனுக்குப் படைத்தார். அவரது அறிவின் அளவு அத்தகையது. அதற்காக நாம் சுவைத்துப் பார்க்கத் தேவையில்லை. நல்லதை இறைவனுக்கு வழங்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு வர வேண்டும்.

நமக்குக் கிடைப்பவற்றுள் தூய்மையும் புனிதமும் உள்ளவையாக, சுவையும் சிறப்பும் உள்ளவையாக எவையெல்லாம் உண்டோ, அவற்றையே இறைவனுக்குத் தர வேண்டும் என்பது நம் முன்னோர் முடிபு. நாம் இன்று அப்படியா செய்கிறோம்?

தரமற்றவையே இறைவனுக்கு என ஏகமனதாக நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

பசுநெய் முதலிய பல பொருட்களைக் கடையில் வாங்கும்போது, "கோயில் தேவைகளுக்கு உகந்தது" என்ற வாசகம் இருப்பதைக் காண்கிறோம். அவை மலிவாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். அதன் பொருள் என்னவென்று சிந்தித்துப் பாராதவர்கள் சிலர் இருப்பார்கள். மிகச்சில அப்பாவிகள், இது மிகப் புனிதமானதாக இருப்பதால்த்தான் அப்படி எழுதியிருக்கிறார்கள் என நினைப்பார்கள்.

ஆனால் மிகப் பலருக்கு அதன் உண்மை அர்த்தம் நன்றாகத் தெரியும். "இது மிகவும் தரக்குறைவானது. இதை உங்கள் சாப்பாட்டுத் தேவைகளுக்கு வாங்காதீர்கள். கோயில் தேவைகளுக்கு மட்டும் இதைப் பயன்படுத்துங் கள்" என்பதுதான் அதன் உண்மைக் கருத்து. இதேபோலத்தான் வெற்றிலை, தேங்காய் முதலியவற்றைச் சந்தையில் வாங்கும்போது "ஐயா, கோயிலுக்கா, சாப்பிடுவதற்கா?" என்று கேட்கிறார்கள். நல்லவை நமக்கு. தரக்குறை வாக மலிவாகத் தருவார்கள் கோயிலுக்கு.

ஹோம அக்கினியில் இடுவதற்குரிய சமித்து எவ்வளவு புனிதமாக இருக்க வேண் டும்? நெய்யின் புனிதம் பற்றி முதலில் பார்த் தோம். சமித்து வாங்கினால் விடயம் தெரிந்த வர்களிடம் காட்டிப் பாருங்கள். அவற்றில் மா, பலா, பலாசு முதலிய பொருத்தமான சமித் துக்கள் எத்தனை இருக்கின்றன என்று! 'இப்பில்இப்பில்' முதலிய பொருத்தமற்ற எத் தனையோ சுள்ளிகள் அங்கு இருப்பதைப் பார்க்கலாம். அவற்றைக் கட்டியிருக்கும் கயிறு மிகவும் அருவருப்பான ரயர்க்கயிறு. சமித்துக் கட்டுவதற்கு வேறு கயிறு இல்லையா? வாங்கு பவர் இதுபற்றிச் சிந்திப்பதில்லையா? ஊரில் வறுமை நிலையில் விடயம் தெரிந்த சில தொழிலாளிகள் இருப்பார்கள். அவர்களிடம் கொஞ்சம் பணம் கொடுத்தால் நல்ல சமித் தாகத் தேடிப் பெறலாம். அக்கறையும் தேட லும் இருக்க வேண்டாமா?

பொருளை வாங்குபவர் அதுபற்றி அலட்டிக்கொள்வதில்லை. நமக்கு லாபம் தானே என எண்ணுகிறார். வாங்குபவர், விற் பவர் இருவரிடத்திலும் இந்த மனநிலை நன் றாகப் பதிந்திருக்கிறது. எங்கே, இல்லை என்று நெஞ்சில் கைவைத்து மனமாரச் சொல் லுங்கள் பார்க்கலாம்! ஐயருக்குக் கொடுக்கும் வேட்டி, செத்தவீட்டுக்குப் பயன்படுத்தும் பொருட்கள், கிருத்தியத்திற்கு வாங்கும் மரக் கறிகள் எனத் தனிரகங்களை நாமெல்லாரும் வைத்திருக்கிறோம். தரக்குறைவான எல்லா வற்றையும் கொடுத்துவிட்டு தரம் கூடிய எல்லா வற்றையும் நாம் ஆண்டவனிடம் கேட்கிறோம். **தெய்வம் பொறுக்குமா? மழை பெய்யுமா? சாந்தி நிலைக்குமா?**

கடையில் காசு கொடுத்தே எல்லாவற் றையும் பெற்றுவிடலாம் என நினைக்கும் காலம் இது. ஆலயத்திற்கும் சென்று காசை விட்டெறிந்துவிட்டு அர்ச்சனை என்ற பெயரில் இரண்டு பெரிய பட்டியல்களை நீட்டுகிறோம். ஒன்று எங்கள் உறவினர் அனைவரதும் பெயர், நட்சத்திரங்கள் அடங்கிய நீண்ட பட்டியல். மற்றது நாம் மனதிற்குள் தயாரித்து ஆண்ட வனிடம் நீட்டுகின்ற வேண்டுதல் பட்டியல். வீட்டிலிருந்தபடியே இந்தப் பட்டியல்களையும் பணத்தையும் ஆலயத்திற்கு அனுப்பிவிட்டு ஆண்டவன் நமது தேவைகளை நிறைவு செய்ய ஓடிவருவார் என எதிர்பார்த்திருக்கிறோம்.

வாரத்தில் ஒரு நாளாவது நம்மை உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை செய்து தகுதி உடையவர்களாக ஆக்கிக்கொண்டு இறைவனுக்கு வழங்கவேண்டிய பொருட்களை நாமாகவே தேடித்திரிந்து தரமானவையாக சேகரித்துக்கொண்டு ஒரு சில மணி நேரத்தை யாவது ஆண்டவனுடன் செலவிடுவோம் என்ற மனப்பான்மையுடன் எல்லாப் பிரச்சினைகளை யும் ஒருபுறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, முக்கியமாகக் கைத்தொலைபேசியை ஞாபக மாக வீட்டிலேயே வைத்துவிட்டு ஆலயத்திற்கு வருகின்றவர்கள் யாராவது உள்ளார்களா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்! தெய்வம் பொறுக்குமா? மழை பெய்யுமா? சாந்தி நிலைக்குமா?

தூய்மை, புனிதம் என்றெல்லாம் மீண்டும் மீண்டும் இங்கு கூறப்படுகிறது.

அதுசார்ந்த இரண்டு முக்கிய விடயங்களை இங்கு பார்க்கலாம். இவற்றுள் ஒன்று எச்சில் பற்றியது. மற்றது ஆடைகள், துணிகள் பற்றியது. இன்றைய தலைமுறையினர் மாத்திரமல்லாமல் முந்திய தலைமுறையினருக்குக் கூட இந்த இரு விடயங்கள் பற்றிய அக்கறை மிகக்குறைவாகவே உள்ளது.

எச்சில் என்பது அருவருப்பானது. ஒருவரது எச்சிலை இன்னொருவர் பயன்படுத்துவது சுகாதார ரீதியிலும் தவிர்க்கப்படவேண்டியது. ஒருவர் கடித்த உணவுப்பொருளை இன்னொருவர் உண்பது மாத்திரமல்லாமல் வாய் வைத்து நீர் அருந்துவதும் எச்சிலின் பாற்பட்டது. அண்ணாந்து குடித்தல் என்னும் அற்புதமான விடயம் தமிழர் - இந்துக்களிடையே மட்டும் உள்ள சிறப்பான ஒரு பண்பாட்டுக் கூறு. அண்ணாந்து குடிப்பதற்கு இலகுவாக மூக்குப்பேணி என்னும் ஒரு பாத்திரம் நம்மிடையே முன்னர் இருந்தது நினைவு கூரத்தக்கது. எனவே வாய் வைத்தல் என்பது தூய்மை அற்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இங்கு இதுபற்றி ஏன் கூறப்படுகின்றது என்பதைக்கூட இதைப் படிக்கும் பலர் விளங்கிக்கொள்ள மாட்டார்கள். கோவிலில் அல்லது வீட்டில் ஆன்மீகக் கிரியைகளில் ஈடுபடுவோர் பலர் கொஞ்சமும் கூச்சமின்றி வாய் வைத்து எச்சிற்படுத்தும் பொருட்களை பூஜையில் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, மாலையை இறைவனுக்குச் சாத்தும் பொழுது அதனை இடையில் துண்டிக்க நேரும்போது கையில் கத்தி எதுவும் கிட்டாத விடத்து உடனே பல்லால் கடித்துத் துண்டிக்கிறார்கள். சுவாமியின் வாகனங்களில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யும்போதும் சரி, மின்சார வேலைகள் செய்யும்போதும் சரி, கயிறு, மின்கம்பிகள் முதலியவற்றைத் துண்டிக்கும் தேவை வரும்போது பல்லு ஆயுதமாகிறது. இது மிகவும் பாபகரமானது.

ஒரு பெண் ஓர் ஆலயத்திற்கு அர்ச்சனைக்குக் குங்குமம் வாங்கிச் செல்கிறாள். இப்போது எல்லாம் பொலித்தீன் மயம்தானே. சிறு பொலித்தீன் பக்கற்றிலுள்ள குங்குமத்தைப் பிரித்தெடுத்து வெற்றிலையில் போட்டு அர்ச்சகரிடம் கொடுக்கவேண்டிய தேவை ஏற்படும்போது அவள் வாயை - பல்லைத் தான் ஆயுதமாகப் பயன்படுத்துகிறாள். இது கட்டுரையாசிரியர் நேரில் கண்டு திகைத்த காட்சி. அந்தப் பெண்ணுக்கு அது எச்சில் என்ற எண்ணமோ, அருவருப்போ, தவறல்லவா என்ற எண்ணமோ ஏற்படவில்லை. அந்தக் குங்கும அர்ச்சனை அவளுக்கு நன்மையைத் தருமா அல்லது தீமையைத் தருமா?

எந்தநேரமும் வெற்றிலை, புகையிலை சாப்பிடுபவர்கள் கோயிலுக்குள் நிற்கும்போது அவற்றைச் சாப்பிடுவது மட்டுமல்லாமல் சுண்ணாம்பு போடும்போது எச்சில்படுத்துவது தவிர்க்க முடியாது. அவர் எச்சில் படுத்திய சுண்ணாம்பை இன்னொருவரும் பயன்படுத்துகிறார். இவர்கள் எல்லாம் அந்த எச்சில் கைகளுடனேயே கோயில் பொருட்களைக் கையாளுகின்றனர். இவர்களுட் பலர் எந்த நேரமும் பற்களுக்கிடையில் சிக்கிய பாக்குச் சீவலை விரலால் நிமிண்டிவிட்டு அதே கையால் தெய்வீகப் பொருட்களையும் தீண்டுகிறார்கள். எவ்வளவு பாபம்? தெய்வம் பொறுக்குமா? மழை பெய்யுமா? சாந்தி நிலைக்குமா?

(தொடரும்...

# ஆற்றங்கரையானின்

# அருள் என்றென்றும் உண்டு

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

அது 2001ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். கருவறையில் திருமுருகனைக் கொண்ட அந்தச் சிறிய கோவிலை நான் முதன்முதலாகக் கண்ட நினைவு என் மனதில் மறதிபடியாது அப்படியே இன்றும் இருக்கிறது.



முருகனுக்குக் கோவிலமைத்து வழிபடவேண்டுமென்று அந்த சுவாமியின் மனதில் ஓர் எண்ணம் எழுந்ததாம். ஒரு மரத்தடியில் வழிபடத் தொடங்கி, சிறு கொட்டிலமைத்து, விக்கிரகம் வைத்து மளமளவென்று சிறு கோவிலாகிவிட்டதாம். விடயமறிந்தவர்கள் அந்தக் கோயிலின் கதையை எனக்குக் கூறினார்கள்.

கோவிலைச் சுற்றிவந்தபோது மனதினுள் பக்திமணம் பரவிவிடப் பரவசமானேன். கோவில் தரிசனம் மாதாந்தம் கிடைத்தது. காலம் தரித்து நிற்காமல் விரைந்தோடிக் கொண்டிருந்தது. கோவிலும் வளர்ச்சி கண்டு தரிசிப்போரை ஆனந்திக்கச் செய்துகொண்டிருந்தது. இடையே பல்வேறு நெருக்கடிகள். உள்நாட்டுப் போர் உட்பட பல இடர்கள் எதிர்ப் பட்டபோதும் முருகன் வழிநடத்திக்கொண்டிருந்தான். கோவில் ஆண்டுதோறும் புதுப்பொலிவு பெற்று இன்று பரந்து நிமிர்ந்து நிற்கிறது. வசந்த மண்டபம், இராஜகோபுரம் என்று மேலும் மேலும் விருத்திபெறப் போகிறது.

"எங்கே இந்தக் கோவில் இருக்கிறது?" என்று கேட்கிறீர்களா? இதோ இந்த ஞானச்சுடர் தான் எனக்கு அப்படி ஒரு கோவிலாகத் தோற்றமளிக்கிறது. ஞானச்சுடரை வாசித்ததும் கோவில் தரிசனம் செய்ததுபோன்ற சாந்தியும் ஆனந்தமும் ஏற்படுவதால் எனக்கு அப்படித் தோற்றம் காட்டுகிறது.

ஆரம்பகால ஞானச்சுடர் இன்று எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைத் தொடர் வாசகர்கள் அனைவரும் அவதானித்திருப்பார்கள். சஞ்சிகை ஒன்றினைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல. போரின்போது அச்சுத்தாள் கிடைக்காத வேளையிற்கூட ஒரு மலரேனும் நின்றுவிடாது ஞானச்சுடர் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. திருவருளும் குருவருளும் கைகொடுத்து இன்று இருநூறாவது மலர் வெளிவருகின்றது. ஆற்றங்கரையானின் அருள் என்றென்றும் ஞானச்சுடரை ஒளிரச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அதன் வளர்ச்சிக்கு இறையருளை வேண்டி நிற்கிறேன்.

# பக்தி

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

பக்தி என்றால் என்ன? யாருக்கு யாரிடம் உண்டாகும்? அது முதிர்ந்த அன்பினால் உண்டாகும் ஈடுபாடு. "அன்பு ஈன் குழவி அருள். உயிர்களிடம் காட்டவேண்டியது அன்பு. அதுவே இரக்கம் கருணை. தாய் தன் பிள்ளைகளிடமும், சகோதரர்களிடையேயும் உண்டாவது பாசம் தாய்ப் பாசம், பிள்ளைப் பாசம், சகோதரபாசம் அது பிரிக்கமுடியாத உறவு. நாட்டில், தேசத்தில், மொழியில் உண்டாவது பற்று. பக்தி பதியிடமும் (கணவன்) மாணவனுக்கு குருவிடமும், மனிதர்க்குத் தெய்வத்திடமும் உண்டாவது பக்தி. "அன்புதான் இன்ப ஊற்று". அன்பின் வெளிப்பாடு ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாக வெளிப்படும். தெய்வத்திடம் தோன்றும் மிகுந்த அன்பே பக்தி. தெய்வத்தை எண்ணிச் சிலர் பாடுவர்; சிலர் ஆடுவர், சிரிப்பர், அழுவர், சிலர் உரையாடுவர். மாணிக்கவாசகர் கூறுவதைக் கேட்போம்.

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
    திரண்டு திரண்டு உன்திரு வார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
    வெவ்வேறு இருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
    தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
    நம்பி இனித்தான் நல்காயே"

இது வாசகர் நிறைந்த அன்பால் இறைவனோடு உறவுகொண்டு உரையாடிய வாசகம்.

அப்பர் பெருமான் சிதம்பரத்தை தரிசிக்கிறார். சிவனின் திருநடனம் காண்கிறார். பக்தி மேவிட கண்ணீர்வார நடனத்தைப் பார்த்தபடியே நிற்கிறார். அவர் பார்வையில் "பத்தா! நீ என்று வந்தாய்? என்று கேட்பதுபோல் இருந்ததாக சொல்கிறார். இனம்புரியாத ஈடுபாடு. பக்தியின் பரவச நிலை.

பசி தாகம் வரும்போது குழந்தை அம்மா என்றழைக்கும். தாயிடம் கேட்டும் உரிமை பிள்ளைக்கு உண்டு. பிள்ளைக்கு எது எப்போது கொடுக்க வேண்டுமென்பது தாய்க்குத் தெரியும். அதுபோல சில பக்தர்கள் கவலையால், நோய்பிணியால் இறைவா என அழைப்பர். மனிதனுடைய இயல்பு தெய்வத்திடம் ஏதாவது எதிர்பார்ப்பது. இறைவனிடம் நாம் எதையும் எதிர்பார்க்கலாகாது என ஞானிகள் கூறியுள்ளனர். பக்தன் ஒருவன், இறைவனை நோக்கி, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையன், என் பக்தியால் யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்னை விட்டு எங்கு போவாய்" எனப் புலம்புவான். பக்தன் இறைவனைப் பற்றிப்பிடிக்கும்போது வேண்டத்தக்கது அறிபவர் அவர்.

சுந்தரர் இறைவனின் தோழர் இடுக்கண் களைவது நட்பு. ".....குண்டையூரில் பெற்ற நெல்லைக் கொண்டு செல்ல ஆளில்லையே எம்பெருமானே! அவற்றை எடுத்துச் செல்ல

இந்து யாத்திரிகர் விடுதியில் அன்னதானப் பணியாற்றும்
வவுனியா சிவபூமி அன்னதான சபை அன்பர்களுடன்
ஆச்சிரம சுவாமிகளும் அடியார்களும்





கதிர்காம இந்து யாத்திரிகர்கள் விடுதியில் இடம்பெறும் அன்னதானப் பணிக்கு உதவி புரியும் தொண்டர்களோடு சுவாமிகளும் அவரோடு இணைந்த அன்பர்களும்





அருள்வாய் எனக் கேட்கின்றார். நட்பும் பக்தியும் இருந்த படி அது. "பாடும் பணியே அருள்வாய்" அருணகிரியாரின் வேண்டுதல். பக்தி மூன்று வகை.

1. உரிமையோடு கேட்பது.

2. பண்டமாற்று. இதை நான் செய்கிறேன்; இதை நீ எனக்குத் தா எனக் கேட்பது. பலனை எதிர்பாராது தன்னால் முடிந்ததை இறைவனுக்குச் சமர்ப்பி. "யாவற்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை"

3. கைமாறு கருதாத அன்பு. பலனை எதிர்பார்ப்பதில்லை.

பக்தி என்ற பெயரில் சில மூடப்பழக்க வழக்கங்கள் கைக்கொள்ளப்படுவதால் ஆன்மீகம் திசை மாறுகிறது. தாம் பக்தர்கள் எனக் காட்டிக்கொண்டு போலிச்சாமிமார் (மதுப் பாவனையுடன்) பேயோட்டுதல், குறிசொல்லல், சாந்தி செய்தல் எனப் பெரும் பொருட் செலவை உண்டாக்கி வீட்டில் உள்ளவற்றையும் அபகரித்து மக்களை ஏமாற்றி விடுகின்றனர். பலி கொடுக்கும் வழக்கம் இன்றும் சில இடங்களில் நடக்கின்றன. நேர்த்திக்கடன் என்ற பெயரில் காவடி எடுத்தல், கஞ்சி வார்த்தல், அன்னதானம் செய்தல் என்பன நடைபெறுகின்றன. ஒருவன் பக்தியோடு காவடி எடுக்க மற்றொருவன் கேளிக்கையாக எடுக்கிறான். புறத்தோற்றம், புறச்செயல்கள் கண்டு பக்தி உடையவர் எனக் கணிப்பிட முடியாது. பக்தி இருக்கவேண்டும்; பகுத்தறிவும் வேண்டும்.

ஏதோ காலை மாலையில் ஆசார சீலராய் வீட்டில் விளக்கேற்றி தெரிந்த திருமுறைப்பாடல் பாடி அல்லது ஆலயம் சென்று மூர்த்தி வழிபாடு செய்வதும் பக்திதான். ஞானிகள், யோகிகளின் பக்தி தம்மை மறந்த நிலை; கடவுளிடம் ஐக்கியப்பட்ட நிலை. அவர்கள் வாயிலிருந்து வருவன தெய்வ வாக்கு.

படிப்பறிவில்லாத வேட்டுவத் தொழில் செய்து ஊனைப் புசித்த திண்ணன் காட்டின் நடுவிலே சிவலிங்கத்தைக் காண்கிறான். பிராமணர் ஒருவர் தினந்தோறும் காலையில் பூசை முடித்து போய்விடுவார். இது திண்ணனுக்குத் தெரியாது. அவனும் தினந்தோறும் ஒரு கையில் வில், மறுகையில் பூ, வாயில் நீர் கொண்டு வந்து இடத்தை சுத்தமாக்கி வாய் நீரினால் லிங்கத்தை அபிஷேகித்து, தீயில் இறைச்சியை வாட்டிப் படையல் செய்து பூக்களால் அர்ச்சித்து திரும்பிவிடுவான். தினந்தோறும் ஒருவர் பின் ஒருவராக பூசை நடைபெறும். இச்செய்கையால் கவலையுற்ற பிராமணருக்கு வேடனின் பக்தியை உணர்த்த விரும்பி கண்ணிலிருந்து இரத்தம் வடியச் செய்தார். பச்சிலை மூலிகைகளை இடித்துக் கண்ணில் அப்பினான். இரத்தம் வடிந்தபடியே இருந்தது. "ஊனுக்கு ஊன் நிகராகும்". தன் கண்ணைத் தோண்டி அப்பினான். மறுகண்ணால் வடிந்தது. தன் இரண்டாவது கண்ணைத் தோண்ட அம்பை எடுக்கிறான். ஒரு கரம் அவனது கையை "நில்லு கண்ணப்ப" (கண் + அப்ப- கண்ணப்ப) எனத் தடுக்கிறது. இறைவனின் காட்சியைக் கண்ட திண்ணன் கண்ணப்ப நாயனார் ஆயினார்.

மாடுமேய்க்கச் சென்ற விசாரசர்மர் மண்ணினால் சிவலிங்கம் அமைத்து பசுக்களின் பாலைக் கறந்து அபிஷேகம் செய்கிறார். இறைவன் சிறுவனின் பக்தி கண்டு அந்த உடலோடு தன்மகனாக்கி, பொற்கோயில், போனகமுமருளி சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டருக்கு நாயகப் பதவியும் தந்து (சண்டேஸ்வரர்) தன் பக்கத்தே இருத்திக் கொண்டார்.

நாயன்மார்கள் வரிசையில் சிறுத்தொண்டர் தன் ஒரேயொரு பிள்ளையை அரிந்து பிள்ளைக்கறி சமைத்து சிவனடியாராகவந்த

இறைவனுக்கு அமுது செய்தவர். நாவுக்கரசர் மீது அளவிலாப் பக்தி கொண்ட அப்பூதி அடிகள் வீட்டிற்கு, வீதிக்கு, மடத்துக்கு, தண்ணீர்ப் பந்தலுக்கு நாவுக்கரசரின் பெயரைச் சூட்டித் தன் பக்தியை வெளிக்காட்டியவர்.

அடுத்து, நம்மிடம் இறைபக்தியுண்டா? அது நமக்கு வருமா? வரலாம். "அவன் அருளால் அவன் தாள் வணங்கும்" எண்ணம் நமக்கு வரவேண்டும். நமக்கு ஏன் இந்தத் துன்பங்கள்? மனதில் நிம்மதி இல்லை. நிம்மதி எங்கே கிடைக்கும். ஆலயங்களில்தான் கிடைக்கும். அங்கே போவோம், ஆலய சுற்றுச்சூழல், சுற்றுப்பிரகார சித்திரம், சிற்பம், ஓவியங்களைக் காட்டும் கலைவடிவங்கள் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். ஆலய மணி யோசையைத் தொடர்ந்து அர்ச்சகர் வருகிறார். அபிஷேகம், அலங்காரம், தூபதீபம், நிவேதனம், அர்ச்சனை, கற்பூரதீபம் (பஞ்சாராத்தி) மணியோசை, சேமக்கலம், சங்கொலி, மந்திர உச்சாடனம், பஞ்சாராத்தி தீபஒளியில் சுவாமியின் முகதரிசனம் தெரியும். ஐம்புலன்களும் அடங்கும். மெய்மறந்த நிலை.

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும் சாத்வீகமாகும்" (பெரியபுராணம்)

தன்னை அறியாமலே தெய்வத்திடம் ஈடுபாடு உண்டாகும். தொடர்ந்து ஆலயம் சென்றுவர மன அமைதி உண்டாகும்.

நமக்குப் புலனடக்கம் குறைவு. இறை சிந்தனையும் குறைவு. நம்மை அறியாமலே எமது வாழ்க்கையில் நல்லது கெட்டது நடக்கும். மனித உருவிலோ வேறோர் உருவிலேதான் இறைவன் அருள்புரிவான். யாவும் என்செயல் அல்ல. சிவன் செயல் என்ற உணர்வு வரும். இவ்வுணர்வு தொடருமாயின் கடவுள் நம்மைக் காத்தார்; காக்கிறார்; காப்பார் என்ற நம்பிக்கை வரும் அதுவே பக்தியாகும்.

பக்தி யாரும் சொல்லி வருவதில்லை. நம்மால் முடிந்தளவு, விரதம், தொண்டு, தர்மகாரியங்கள் செய்து ஒழுக்கமாக வாழும்போது இறைவன் மனமான கோயிலில் உள்ளான் என்ற நினைவு வரும். ஆலயங்களுக்குச் சென்றுவர பக்தி வளரும். நீங்களும் முயன்று பாருங்கள்.

## சகலதுமே அவன் செயல் தான்

சந்நிதிக்கு ஒருதரம் சென்று பாருங்கள்
சஞ்சலங்கள் எல்லாம் பறந்து போகுங்கள்
சந்நிதியா னிடமே குறையைக் கூறுங்கள்
சகலதையும் தீர்த்து வைப்பான் நம்புங்கள்
சந்நிதியே தஞ்சம் என்று எண்ணுங்கள்
சகலரையும் காத்து அருள்வான் பாருங்கள்
சந்நிதியான் பெருமை தன்னைப் பாடுங்கள்
சகலதுமே அவன்செயல் தானென் றேயிருங்கள்

*-வ. யோகானந்தசிவம்-*

# பல்லாண்டு தொடரட்டும் உம்பணிகள்

திரு வேல்நந்தன் அவர்கள்

செம்மொழித்தாயே
பக்தியின் மொழியே
முருகன் தந்த தமிழே
உனக்கென் முதல் வணக்கம்
சந்நிதியில் வந்துதித்து - எம்
சந்ததியைக் காத்து நிற்கும்
சண்முக வடிவேலவனே
அன்னதானக் கந்தனே - உன்
அடிதொழுகிறேன்
என் கவிக்கு நீயே காப்பு.

முருகனின் வடிவாய் நின்று
அரும்பணி பல புரியும்
சந்நிதியான் ஆச்சிரமம்
மடத்துக்கே புது அர்த்தம் தந்து
மக்கள் துயர் போக்கி
மனதிலே பக்தியை விதைத்து
உடலையும் உள்ளத்தையும்
நிறைத்திடும் மனங்களின்
அங்கமாய்
எத்தனை மடங்கள் வந்தாலும்
இவர் பணிக் கீடாகுமா
சிறிய குடிசையாய்
தொடங்கிய பயணம் இன்று
பெரிய கட்டிட விசாலிப்புடன்
மோகன். சுவாமிகள்
கடமையும் கண்டிப்பும்
பக்தியும் கொண்டு
ஒரே வார்த்தை
உண்மையான சொல்
சொல்வதை விட
செயலில் காட்டிடும்
செயல்வீரர்
பசிப்பிணி போக்கிடும் நல்
மருத்துவராய் அவர்
தொண்டது தொடர - இன்றும்
அவர் கட்டளை ஏற்று
தொண்டது தொடர இங்கு
தொண்டர்கள் கூட்டம்
வாழையிலையதை அவர்
தந்திடும் போதே
வயிறு நிறைந்திடும் எமக்கு
வேகமாய்ப் பல பந்திகள்
கட்டளைக்கு கீழ்ப்பணிந்து
கடகட வெனக்
கறிசோறு நகர
நிறைந்திடும் மனம்
ஒரு திரு முருகன் வந்தான்
என்றுதான் எண்ணத் தோன்றும்.
சாப்பிட முன் ஒரு
சபை நடக்கிறது இங்கு
சந்நிதி முருகன் அருளாலே
கூப்பிடு தூரத்தில் இருந்தவன்
வழிகாட்ட பண்ணிசையாய்க்
கவியாய் பேச்சாய் சாப்பிடமுன்
ஒரு சபை நடக்குது இங்கே
எங்கிதைக் காணலாம் முடியாது
எங்கள் பண்பாட்டை
சமயத்தை மெய்யாய்
வளர்த்திடும் சபை இதுதானே

நாயக்கர் காலத்தில் நம் தமிழ்
மீட்டதும் மடந்தானே
நவீன காலத்திலும் நம் தமிழ்
மீட்பதும் இம் மடந்தானே
ஒரு மடத்துக்குள்ளே
எத்தனை காரியங்கள்
ஞானச்சுடராய் நூல் வெளியீடு
இருநூறைத் தொட்ட சாதனையில்
வறியோர்க்கு கல்வி நிதி அளிப்பீடு
மருத்துவமும் மாண்புடனே
பசித்தோர்க் குணவு
திருமணம் முடித்தோர்க்குணவு
எத்தனை ஆண்டுப் பணியிது
எப்படி முடிகிறது
அடியவர் அன்பளிப்புக்களாலும்
அவன் அருளாலும்
ஒரு திரு முருகன் வந்தான்
மோகனாய் இங்கு
உதித்தது உலகம் உய்ய
மனமுண்டானால் இடமுண்டு
என்பதற் கிம் மடமே சாட்சி
சந்நிதியான் அருளோடு
இன்னும் பல்லாண்டு தொடரட்டும்
உம் பணி.

# தினையளவு புண்ணியம் மலையளவு பலன்

காவிரிக் கரையில் சிவலிங்கத்தின்மீது காய்ந்த சருகுகள் வீழ்வதைக் கண்டு எச்சில் நூலால் ஒரு சிலந்தி பந்தரிட்டது. இந்தச் சிவபுண்ணியத்தால் சிலந்தி மறுபிறப்பில் சோழ நாட்டில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து தமிழகத்தை ஒரு குடையின்கீழ் ஆட்சிபுரிந்தது. சிவபெருமானுக்கு 70 சிவாலயங்களும் திருமாலுக்கு 3 திருக்கோயில்களும் கட்டி வழிபாடு செய்து சிவபதம் பெற்றது.

வேதாரணியத்தில் அணைகிற நெய்விளக்கைத் தீண்டிய சிவபுண்ணியத்தால் எலி, பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. பலிச் சக்கரவர்த்தியின் பெருமை அளவிடமுடியாது. ஆதலால் அணுத்துணையும் பாவம் செய்யாது சிவபுண்ணியம் செய்து நலமடைவோமாக.


நாம் இப்போது நுகர்கின்ற இன்ப துன்பங்களுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். அவரவர் செய்த வினை ஊழாக மாறி உருத்து வந்து ஊட்டும்.

நம் உடம்பின் நிழல் நாம் நடந்தால் நம்மைத் தொடர்ந்து வருவதைப்போல நாம் செய்த வினையும் நம்மைத் தொடர்ந்து வரும். இறைவன் நடுநிலை தவறாதவன், பாரபட்சம் இல்லாதவன். நாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுகதுக்கங்களை வகுத்து விதிக்கிறான். இறைவனுடைய அருளாணையால் விதிக்கப்பட்டது விதி எனப்படுகிறது. விதியை வென்றவர் எவரும் இலர். விதி வழி மதி செல்லும்.

நாட்டையும், நகரத்தையும், பொன்னையும், மணியையும், விலையுயர்ந்த உடைகளையும் தூசாக எண்ணித் துறந்து உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதியாகிய சீதாதேவி ஒரு மானை விரும்பினாள். கணவனுக்குக் கட்டளையிடாத அந்தக் கற்புக்கரசி கணவனைப் பார்த்து “இந்த மானைப் பிடித்துக் கொடும்” என்று ஏவினாள். இதற்குக் காரணம் விதிதான். விதியின் வலிமையை யார் வெல்ல முடியும்.

தெய்வானை அம்மன் ஆலயத்தோடு இணைந்து அன்னதானப்
பணியாற்றும் கதிர்காம அன்னதான சபை அன்பர்களோடு ஆச்சிரம
சுவாமிகள் கதிர்காம ஆலய சூழலில்





கதிர்காம அன்னதான சபை அன்பர்களோடு சுவாமிகளும்
அவரைச் சார்ந்தோரும்





# தர்மசங்கடம்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

நாம் செய்ய வேண்டிய ஒரு கடமையில் - தர்மத்தில் தடையான நிலை வருவதனைத் தர்மசங்கடம் என்று சொல்வர். தடைவரும்போது, அறிவு தொழிற்படாமல், செய்யாது விட்டால் அதர்மம் மேலோங்கும்; தர்மம் மறைந்துவிடும். செய்யத் தக்கது எது? தகாதது எது? என நமது மனதில் ஒரு போராட்டம் வரும். அந்த இடத்தில் நல்லறிவைக் கொண்டு சீக்கிரமாக ஒரு முடிபு எடுத்தாக வேண்டும். அப்போதுதான் தர்மத்தை நிலைநாட்ட முடியும். இதனைத்தான் அறிவறிந்த மக்கள் செயலாகக் கொள்வர்.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும். (குறள் 511)

என்பது பொய்யாமொழிப் புலவர் கூற்றாகும்.

விசுவாமித்திர முனிவர் போய், அரிச்சந்திரனிடத்தில், தனக்குப் பணம் தேவையென்று கேட்டுப் பெற்றுக்கொண்டார். சில நிமிஷத்தில் அப்பணத்தை அரசனிடமே திருப்பிக் கொடுக்கிறார். தேவை வரும்போது வந்து கேட்கிறேன் எனக் கூறிவிட்டுப் போய்விடுகிறார்.

சில நாட்களின் பின் அவ்வரசனிடம் வந்து, தான் இருப்பதற்கு இடந் தேவைப்படுகிறது எனக் கேட்கவே, அரிச்சந்திரன் தனது அரண்மனையை அவர் பெயரில் உறுதியெழுதிக் கொடுத்தான். இப்பொழுது அரண்மனையும் அதனுள் அடங்கிய பொருள், பணம் எல்லாமும் முனிவருக்குச் சொந்தமாய் விட்டது! அந்த நிலையில் இந்த முனிவர், "முன்பு நான் தந்த பணத்தைத் தா" எனக் கேட்டார். இந்தத் தர்மசங்கடமான நிலையில், சடுதியாக முடிபை எடுத்து, "சில நாட்கள் தவணை கொடுங்கள்; பணம் தருகிறேன்" என்று கூறிவிட்டான் அரிச்சந்திரன்! தர்மம் வெற்றி பெற்றது; முனிவர் தோற்றுப் போனார்; அவர் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்; தர்மத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம் என்பதெல்லாம் அரிச்சந்திரன் கதைமூலம்தான் அறிந்து கடைப்பிடித்ததாக மகாத்மா காந்தி சொன்னது நாம் அறிந்ததே! அறிவு குறைந்த மக்கள், நீங்கள் பணம் தரவில்லையே எனச் சாதாரணமாகச் சொல்லிவிடுவார்கள். கொடுத்த பணமும் என்னுடையது; நாடும் என்னுடையது என்றும் நினைப்பார்கள். ஆனால், உண்மைக்கு அரிச்சந்திரன் எனப் புகழ் பெற்றவனல்லவா இவன்.

இன்னும், அயோத்தியை ஆண்ட தசரத மன்னன், ஒருமுறை சம்பரன் என்பவனோடு யுத்தம் செய்தபோது, தேர்ச்சாரதியை இழந்துவிடுகிறான். அப்பொழுது, அவனோடு சென்று வாடிவீட்டில் தங்கியிருந்த கைகேயி, தனது சாரத்திய அனுபவத்தினால் அரசனுக்கு உதவிசெய்து, வெற்றி தேடித்தந்தாள், அப்பொழுது, தனக்கு உதவிய கைகேயிக்கு இரண்டு வரம் தருவதாகச் சொல்லியிருந்தான். ஆனால் கணவனிடம் வரம் பெறுவதா? கைகேயி அதனைப் பொருட்படுத்தவில்லை.

பிற்காலத்தில், இராமனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டுத் தான் தீர்த்தயாத்திரை செல்ல விரும்பினான் தசரதன்; அதற்கான ஆயத்தங்கள் செய்தான்.

இராமன் முடிசூடி அயோத்தியில் அரசனாக வந்தால், "அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய நல்லறமும், துரப்பது எப்படி?" விதி விளையாடியது! இராமாவதார நோக்கம் நிறைவேறும் பொருட்டு இராமனை வனஞ்செல்ல வைக்கிறாள் கைகேயி!

"தோடிவர்ந்த தார்ச் சம்பரன் தொலைவுற்ற வேளை
ஆடல் வென்றியான் அருளிய வரம் அவை இரண்டும்
கோடி" என்றனள், உள்ளமும் கோடிய கொடியாள்" (கம்பர்)

இராமனைப் பிரிய நேர்ந்தால் தன் உயிர் பிரியும் என்ற தனது சாபத்தை நினைந்து தசரதன் சிந்திக்கும் பொழுது,

"..............................
முன்னே தந்தாய் இவ்வரம்; நல்காய்; முனிவாயேல்
என்னே மன்னா! யார் உளர் வாய்மைக்கு இனி? என்றாள் கைகேயி.

அப்பொழுது தசரதனுக்கு ஏற்படுகிறது தர்மசங்கடம்!

"ஒறுப்பினும் அந்தரம்; உண்மை ஒன்று ஓவா
மறுப்பினும் அந்தரம், என்று வாய்மை மன்னன்"

தனது தர்மத்தை நிலைநாட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதுபோன்று இலக்குமணனுக்கு ஏற்படும் தர்மசங்கட நிலையைப் பார்ப்போம்.

பஞ்சவடியில் இராம இலக்குமணர் சீதையுடன் வசித்தபொழுது, இராவணனால் ஏவப்பெற்ற மாரீசன், மாய மானாகப் பஞ்சவடிச் சூழலில் உலாவுகிறான். மாய மானின் அழகில் மயங்கிய சீதை, அதனைப் பிடித்துத் தரும்படி கேட்கிறாள். அது மாய (பொய்) மான் என்று எவ்வளவோ சொல்லியும் கேட்காத சீதைக்காக, அம் மானைப் பிடிக்கவென இராமன் சென்றான். மான் அகப்படாமல் அதிகதூரம் அலைய வைத்தது இராமனை! அதனால் அதனைக் கொல்ல அம்பை ஏவினான். மாயமான் பூமியில் விழும்போது, "இலக்குமணா! ஓடிவா" என்று அவலக்குரல் எழுப்பி இறந்தது.

"அண்ணனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டது; போங்கள்" என்று சீதை வற்புறுத்துகிறாள். "இது மானின் மாயவித்தை; அவருக்கு ஆபத்து இல்லை" என இலக்குமணன் அண்ணியிடம் எடுத்துக்கூறினான். சீதை கேட்கவில்லை. "அண்ணன் இறந்தால், என்னை மனைவியாக்கலாம் என எண்ணுகின்றாயோ? எனத் தகாத வார்த்தையால் ஏசுகிறாள். இத்தனையுங் கேட்டபின் போகாமல் இருக்க முடியுமா? போனால்? பெரிய தர்மசங்கடமான நிலையில் தடுமாறினான் இலக்குமணன். விதி விளையாடியது. இலக்குமணன் போனான்; இராவணன் வந்து சீதையைக் கவர்ந்து சென்றான்.

இஃதிவ்வாறாக, சீதையைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவதற்கு அனும சுக்கிரீவரது உதவியை நாடிய இராமனுக்கு தர்மசங்கடம் ஏற்படுகிறது. வாலியோடு போருக்குப் போனால், இராமனின் பாதி வல்லமை வாலிக்குப் போய்விடும்! சுக்கிரீவனின் மனைவியை வாலியிடமிருந்து

மீட்டுத்தருவதாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றுவது எப்படி? போர்முறை தவறி, மறைந்து நின்று வாலிமேல் பாணத்தை ஏவினான் இராமன். வாலி தரையில் சாய்ந்தான்.

இருவர் போர் எதிரும்காலை, இருவரும் நல் உற்றாரே;
ஒருவர் மேல் கருணைதூண்டி, ஒருவர்மேல், ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி, வாய் அம்பு மருமத்து எய்தல்
தருமமோ? பிறிது ஒன்று ஆமோ? தக்கிலது என்னும் பக்கம்
(கம்பர்)

என வாலி இராமனிடம் கேட்கிறபொழுது, தர்மத்தைக் காப்பதற்காக இராமன் பட்ட தர்மசங்கடம், நமக்குப் பட்டறிவாக இருப்பதை உணர்ந்து கொள்வோமாக.

பாரதக் கதையிலே, கர்ணன், "பிறப்பறியாதவன்" என அர்ச்சுனனால் இகழப்படுகிறான். இதுவரை அவனை நண்பனாக வைத்திருந்த துரியோதனன், கர்ணனை அங்கதேசத்துக்கு அதிபதியாக்கிக் கௌரவித்தான். இப்படி, அர்ச்சுனனும் கர்ணனும் பகைவராகியபின், பாண்டவரைப் பெற்ற குந்திதேவியார்தான், தனக்கும் தாய் என்பதைக் கர்ணன் அறிந்து கொள்கிறான். ஆயினும் பாரதப்போர் மூண்டபொழுது, துரியோதனனுக்காகப் போர் புரிந்து செஞ்சோற்றுக்கடன் கழிக்கவேண்டுமே என்ற தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்படுகிறான் கர்ணன்; தனது தம்பியோடு போர் புரிகிறான்.

பாரதப் போரின் இறுதிக்கட்டத்திலே, வில் ஆசிரியரான துரோணர் துரியோதனன் பக்கத்தில் நின்று சமர்புரிகிறார். அவரை யாராலும் வெல்ல முடியாது. அப்படியானால் தீயவர்களை அழிக்கவென அவதாரம் எடுத்த கிருஷ்ணபகவான் தருமனுக்கு ஒரு யோசனை கூறுகிறார். துரோணருக்கு அவரது மகன் அசுவத்தாமன்மீது அளவற்ற அன்பு உண்டு. அவனுக்கு உயிராபத்து என்றால் துரோணரின் மனநிலை பாதிப்படையும். இதனைப் பயன்படுத்தி, அசுவத்தாமன் இறந்துபோனான் என்று யுத்தகளத்திலே துரோணருக்குச் சொன்னால், அவர் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுவார்; அப்போது அவரை யாரும் கொன்றுவிடலாம். இப்படித் தருமனைச் சொல்லும்படி கிருஷ்ணர் கேட்டார். தர்மம் வெல்லாவிட்டால் அதர்மம் மேலோங்கிவிடும்.

பொய்மையும் வாய்மையிடத்த; புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் (குறள் 292)

ஆக, "அசுவத்தாமா இறந்தது மெய்யே" என்று சொன்னான் தருமன்; துரோணாச்சாரியார் இறக்க நேரிட்டது; தர்மம் வெற்றி பெற்றது. தீயவனான துரியோதனனுக்குத் துணைபோனமைதான் தூயவரான துரோணர் செய்த சிறுதவறு என்பதனை நாம் அறிந்து கொள்வோமாக.

இவ்வாறாக இலக்கியங்களிலே பல உதாரணங்களை நாம் காணலாம். இலக்கியங்கள் நமது அன்றாட வாழ்வியலைச் செம்மைப்படுத்தக்கூடிய அறிவுரைகளைக் கூறுகின்றன. இங்கே தர்மசங்கடமான நிலை பற்றிய உதாரணங்கள் சிலவற்றைக் காட்டினோம். மாணவர் மேலும் விரிவாகப் படித்துப் பயனுள்ளவற்றை அறிந்துகொள்வாராக.

# வாழ்க வளர்க

திரு ஆ. சிவநாதன் அவர்கள்

சந்நிதியான் ஆச்சிரம வெளியீடான ஞானச்சுடர் 2014ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் 200ஆவது மலர் வெளிவருவது கண்டு உள்ளம் மகிழ்கின்றது. ஆற்றங்கரை அமர்ந்து நாடிவரும் அடியவர்களுக்கு தேடிச்சென்று அருளை வாரி வழங்கும் சந்நிதி வேலன் அருட்சிறப்பைக் கண்டு உள்ளம் நெகிழ்கிறது. அன்னதானக் கந்தன் என எல்லோராலும் போற்றி வாழ்த்தப்படுகின்ற சந்நிதி வேலோன் அன்னதானத்தினால் உடல் வாழ்வை நிறைவடையச் செய்வோன் சந்நிதியான் ஆச்சிரமம்மூலம் சமூக பண்பாடுகளை பேணி வளர்ப்பதுடன் மாதந்தோறும் பிரகாசிக்கும் ஞானச் சுடர்மூலம் உள்ளக் கயமைகளைக் களைந்து ஞான ஒளியை ஏற்றும் செயற்பாடு முருகப் பெருமானின் அருள் வெள்ளத்தை அடியவர் உள்ளத்தில் பாய்ச்சும் செயற்பாடாக அமைகின்றது.

இவ் ஞானச்சுடரானது இலங்கையில் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் பிரகாசித்து நிற்பது சந்நிதி வேலவனின் அருட்பிரவாகத்தை உள்ளுணர்வால் உணர்வோருக்கு உணர்த்தி நிற்கின்றது. ஞானச்சுடர் சந்நிதி வேலவனின் அருட்சிறப்பை வெளிப்படுத்துவது மட்டுமன்றி உலகில் வாழும் இந்துமக்கள் எல்லோருக்கும் சமய அறிவையும் உணர்வையும் ஊட்டுவது மட்டுமன்றி ஞானிகளின் வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தி சமூகத்தில் வாழும் எல்லா மட்டத்தினருக்கும் அறிவுப்பசி தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது. பல்வேறு அறிஞர்களாலும் சான்றோர்களாலும் எழுதப்படும் கட்டுரைகள், கவிதைகள் பல்வேறு கோணங்களில் மக்களை நல்வழிப்படுத்தும் செயற்பாடாக அமைந்துள்ளது. அது மாத்திரமன்றி ஆராய்ச்சி நூல்களும் தத்துவ விசாரங்களும் முத்துக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்படும் தன்மை ஞானச்சுடரின் தனித்துவ மேன்மையை பறைசாற்றி நிற்பதாக அமைந்துள்ளது.

மேலும் எமது சமயப்பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் அழியவிடாது பாதுகாத்து இன்றைய சந்ததியினருக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் அறிவுறுத்தும் செயற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றமை எமது சமுதாயத்திற்கு ஆற்றும் பெரும்பணியை உணர்த்தி நிற்கின்றது. மேலும் ஞானச்சுடர் வரலாற்று ஆவணமாகவும் வரலாற்று தொடர் நிகழ்வுகளையும் பதிந்து வைக்கும் சான்றாகவும் விளங்கி வருகின்றது. இவ்வாறு எமது சமூகத்தின் அரும் பொக்கிஷமாகவும் முருகப்பெருமானின் அருட்பிரவாகத்தை வெளிப்படுத்தும் செயற்பாடாகவும் விளங்கும் ஞானச்சுடர் வெளியீடானது எத்தனை அனர்த்தங்கள் இடர்பாடுகள் வந்தபோதும் அதனுள் அகப்படாது அவற்றை எல்லாம் தகர்த்தெறிந்து வளர்ந்து நிமிர்ந்து நின்று 200ஆவது மலர் வெளிவருகின்ற தன்மை மனித எண்ணங்களுக்கு செயற்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதை எம் அனைவருக்கும் உணர்த்தி நிற்கின்றது. இவ் ஞானச்சுடரானது மோகனதாஸ் சுவாமிகளின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை மனித வாழ்வின் உயர் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கீதா உபதேசத்திற்கேற்ப கர்மயோகியாக மோகனதாஸ் சுவாமி அவர்களை முன்நிறுத்தி சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள் இக்கலியுகத்தில் வாழும் மக்களுக்கு கலியுகக் கந்தனின் சிறப்பை உணர்த்தி நிற்கும்.

எனவே நாமெல்லோரும் சந்நிதி வேலவனின் அருட்கடலில் மூழ்கி ஞானச்சுடரின் 200ஆவது மலர் வெளியீட்டுக்கு "வாழ்க" "வளர்க" என வாழ்த்தி வளம்பெறுவோமாக.

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 9. சார்ந்தவருக்கு இன்பம் தருபவன்

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்.

**பொருள்:**

இறைவன் தன்னை அடைந்தவர்க்கு இன்பத்தைத் தருபவன்; தன்னை அடையாத வர்க்கு இன்பத்தைத் தராதவன். இவ்வாறு ஒரு சாரார்க்கு மட்டும் நன்மை செய்வதனால் அவன் ஓர வஞ்சனை உடையவன் போலும் என்று எண்ண வேண்டா. அவன் என்றும் ஒருபால் கோடாதவன்; நடுவு நிலைமையன். எல்லாவுயிர்களுக்கும் தனது பேரின்பத்தை வழங்கவேண்டும் என்பதே அவனது திருக்குறிப்பாகும். அது பற்றியே அவனுக்குச் சங்கரன் என்ற பெயர் வழங்குகிறது.

"சங்கரன்" என்பதற்கு, எல்லாவுயிர்களுக்கும் இன்பத்தைச் செய்பவன் என்பது பொருள். சம்- இன்பம்; கரன்- செய்பவன்.

**சொற்பொருள்:**

நண்ணார்க்கு- தன்னைச் சாராதவர்க்கு, நலம் இலன்- இன்பம் செய்யான், நண்ணினர்க்கு- தன்னைச் சார்ந்தவர்க்கு, நல்லன்- இன்பத்தைச் செய்வான் (இவ்வாறு ஒரு சாரார்க்கு மட்டும் நன்மை செய்பவன் நடுவுநிலைமையன் ஆவனோ? எனின், அவ்வாறு எண்ண வேண்டா) சலம்இலன்- அவன் ஓர வஞ்சனை இல்லாதவன், பேர்சங்கரன்- எல்லா உயிர்களுக்கும் தனது பேரின்பத்தை வழங்குபவன் என்ற பொருளில் உண்மை நூல்கள் அவனைச் சங்கரன் என்று குறிப்பிடுகின்றன.

**விளக்கம்:**

அவரவர் படுகின்ற துன்பங்களுக்குக் காரணம் அவரவர் செய்துகொண்ட வினைகளே ஆகும். ஆயின் அதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. அடுத்தடுத்துத் துன்பம் வருகிறபோது அவர்கள் ஆண்டவனைப் பழிக்கிறார்கள். "இறைவன் நான் படும் துன்பத்தைக் கண்டும் வாளா இருக்கிறானே. அவனுக்கு இரக்கமில்லையா? என்கிறார்கள்.

இவர்களே நல்வினைப் பயனால் தமக்கு இன்பம் வரும்போது அவற்றை நல்லன என்று இயைந்து அனுபவிக்கிறார்கள். அப்போது அவர்கள் இறைவனை நினைப்பதில்லை; இறைவனுக்கு நன்றி சொல்வதில்லை. ஆனால் தீவினைப் பயனால் துன்பம் வரும்போது மட்டும் அவர்கள் இறைவனை நினைக்கிறார்கள்; துன்பத்தை நீக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இது என்ன முறைமை?

நல்வினையும் தீவினையும் ஆகிய இரண்டும் அவர்கள் முன் செய்து கொண்டவை தாமே. அவற்றுள் ஒன்றை மட்டும் விரும்பி ஏற்பதும், மற்றொன்றுக்கு வருந்துவதும் பேதைமையன்றோ?

மருத்துவ நூல்கள் உடல்நலம் பேணும் வழிகளைக் கூறுகின்றன. இன்ன காரணங்களால் இன்ன நோய்கள் வரலாம்; அக்காரணங்களைத் தவிர்த்தால் அந்நோய்கள் இன்றி இனிது வாழலாம் என்று அறிவுறுத்துகின்றன. ஆனால், பலர் அம் மருத்துவக் குறிப்புக்களைப் பின்பற்றுவதில்லை. அவற்றுக்கு மாறான வழியில் நடக்கிறார்கள். அதனால் நோய்களை வரவழைத்துக் கொள்கிறார்கள். இளமை மிடுக்கில் அந்த நோய்கள் மடங்கியிருக்கும். அப்பொழுது அந்நோய்கள் பெரிதாகத் தோன்றுவதில்லை. உடம்பில் வலிமை குறைகிற முதுமையில் அந்நோய்கள் பல்கிப் பெருகி வந்து தாக்கி வருத்தும். அப்பொழுது அவர்கள் வேறு யாரையேனும் நொந்து கொள்ள முடியுமா? நோய்க்கு யார் காரணம்? அவர்கள் தானே காரணம். மருத்துவ நூல்கள் சொன்ன நல்வழியில் நில்லாது மாறி நடந்ததனால் தமக்குத் தாமே நோயைத் தேடிக் கொண்டார்கள். அஃது அவர்களுடைய குற்றம் தானே.

அதுபோல மெய்ந்நூல்கள் வினையிலிருந்து விடுபடும் வழிகளைக் கூறுகின்றன. யான் எனது என்னும் பற்றுக்களே வினைக்குக் காரணம். அப்பற்றுக்களை நீக்கினால் வினைகள் இல்லையாகும் என்று கூறுகின்றன. அப்பற்றுக்களை எப்படி நீக்கிக் கொள்வது? இறைவனிடத்து வைக்கும் பற்றினாலேயே அப்பற்றுக்களை நீக்க முடியும் என்று மெய்ந்நூல்கள் கூறுகின்றன.

இறையன்பு உடையவர்க்கு அது வளர வளர, யான் எனது என்னும் பற்று மெல்ல மெல்ல நீங்கும். அவர்கள் அப்பற்றுக்களை முற்றிலும் விடுத்து எல்லாம் அவன் செயல் என இறைவன் வழியில் நிற்பர். அவர்களே இறைவனை நண்ணியவர்கள். அவர்கள் பற்றின்றி இருப்பதனால் இறைவனைப் போல அவர்களும் வினையின் நீங்கியவரே யாவர்.

இறைவனை மனம் மொழி மெய் என்னும் மூன்றினாலும் பற்றினால் தீவினை பற்றாது ஒழியும் என்பதை,

"முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

என்றாற் போல வரும் தேவாரத் திருமொழிகள் வலியுறுத்துகின்றன.

இவ்வாறு உண்மை நூல்கள் வினை நீங்கும் வழியை உரைக்கின்றன. ஆயினும் மக்கள் அவ்வழியில் நடப்பதில்லை. உலகப் பற்றாகிய சேற்றில் அழுந்திக் கிடக்கின்றனர். பற்றுக்களை விடாதபோது வினைகள் வந்து வருத்தத்தான் செய்யும். அவ்வருத்தம் அவர்கள் தேடிக்கொண்டதுதானே. அதற்கு இறைவனை நோவது ஏன்?

குளிர்காலத்தில் வாடையும் பனியும் உடலை வாட்டுகிறது. அருகிலேயே குளிர் காய்வதற்கேற்ற தீ கொழுந்து விட்டு எரிகிறது. அத்தீயை அணுகி அமர்ந்தால் பனியும் நடுக்கமும் பறந்தோடுமே. இன்பக்களிப்பை எய்தலாமே. அவ்வாறு செய்யாமல் தீயை விட்டு விலகி நின்றால் வாடையும் பனியும்

வருத்தத்தானே செய்யும். அவ்வருத்தத்திற்கு ஏது காரணம்? தீ காரணமா? தான் அத்தீயை விட்டு விலகி நின்றது காரணமா? தீயின் மேல் யாரும் குற்றம் சொல்லார். அது தன்னை யார் அணுகினாலும் அவரது குளிர் நடுக்கத்தைப் போக்கி அவர்க்கு நலம் செய்வது. அதனையே அணுகி நில்லாமல் விலகி நின்ற தன் செயலே தான்படும் துன்பத்திற்குக் காரணமாகின்றது.

வாடையும் பனியும் போல் உள்ளவை உலகப் பற்றுக்கள். குளிர்காயும் நெருப்புப் போல் இருப்பவன் இறைவன். பற்றுக்களாகிய பனியிலும் குளிரிலும் அகப்பட்டுத் துன்புறு கின்றன உயிர்கள். அவை படும் துன்பத்திற்கு இறைவன்மேல் குற்றம் சொல்லலாமா? குளிர் காயும் நெருப்பைப் போலத் தன்னை யார் அணுகினாலும் அவரது பிறவித் துன்பத்தைப் போக்கிப் பேரின்பத்தைத் தர அவன் காத்திருக் கிறான். அவனை அணுகி நில்லாமல் உயிர் கள் விலகி நிற்பதே அவை படும் துன்பத் திற்குக் காரணம் ஆகும்.

இறைவன் உலகப் பற்றை நீக்கித் தன்னையே புகலாக அடைந்த அன்பர்களை ஏற்றுக்கொண்டு அவர்க்கு வரும் வினைத் துன்பத்தைப்போக்கிப் பேரின்பத்தை வழங்கு வான். பற்று நீங்காத ஏனையோரை வினை வழியே செலுத்திப் பிறவித் துன்பத்திற்படுமாறு செய்வான். அவரை வினை வழியே செலுத்து வதும் அவரைப் பக்குவப்படுத்தி ஆட் கொள்ளும் பொருட்டேயாகும். இக் கருத்துப் படவே "நண்ணினர்க்கு நல்லன் நண்ணார்க்கு நலமிலன்" என்றார் ஆசிரியர்.

இவ்வாறு தன்னைச் சார்ந்தார், சாரா தார் ஆகிய இருவரிடத்தும் இறைவன் செய்யும் செயல்கள் வெவ்வேறாய் அமைந்தாலும் அவை யாவும் கருணைச் செயல்கள் என்றே கூறப் பெறும். அன்பரிடத்துச் செய்வது அறக் கருணை எனப்படும். அல்லாதாரிடத்துச் செய் வது மறக்கருணை எனப்படும். அவன் எல்லா உயிர்களிடத்திலும் உடனாக இருந்து அவ்வுயிர களின் நிலைகளுக்கு ஏற்ப அவற்றை நடத்து கிறான். அவனது செயல் யாவும் அருட் செயலே. இதனை உணர்ந்தால், அவன் சலம் (வஞ்சனை) இலன் என்பதும், நடுவு நிலைமை யன் என்பதும், சங்கரன் என்ற பெயர் அவனுக் குச் சாலப் பொருந்தும் என்பதும் நன்கு விளங்கும்.

### 10. பிறவிக்கு மருந்து ஆவான்

உன்னும் உளது ஐயம் இலது உணர்வாய் ஓவாது
மன்னு பவம் தீர்க்கும் மருந்து.

**பொருள்:**

இடைவிடாது தொடர்ந்து பற்றி வருகின்ற பிறவியாகிய நோயைத் தீர்க்கும் மருந்து ஒன்று உள்ளது. அஃது உங்களிடமே உள்ளது; உங்கள் அறிவினுள்ளே உள்ளது. அம் மருந்துதான் இறைவன். அவன் உளனா, இலனா என்று ஐயுற வேண்டுவதில்லை. அவனைப் புறத்தே தேடாமல், உமது அகத்தே நோக்கி உணர முற்படுங்கள்.

**சொற்பொருள்:**

ஓவாது- ஒழியாமல், மன்னுபவம்- நிலைபெற்று நிற்கின்ற பிறவியாகிய நோயை, தீர்க்கும் மருந்து- தீர்க்கின்ற மருந்து ஒன்று, உணர்வாய்- உங்களது அறிவிற்கு அறிவாய், உளது- உங்களுடன் இருக்கின்றது, ஐயம்இலது- அதன் இருப்பில் நீங்கள் ஐயம் கொள்ள வேண்டா, உன்னும்- அதனை உள்முகமாக நோக்கி உணர முற்படுங்கள்.

**விளக்கம்:**

**பிறவியாகிய நோய்:**

செய்யுளில் "பவம்" என்ற சொல் பிறவியைக் குறிக்கும். ஆசிரியர் பிறவியை நோய் என்று வெளிப்படையாகக் கூறவில்லை. ஆயினும் இறைவனை மருந்து என்று வெளிப்படக் கூறியிருப்பதனால் பிறவியை நோயாகக் கூறுவதே ஆசிரியருக்கு கருத்து என்பது புலனாகும்.

உடலைப்பற்றி நின்று துன்புறுத்தும் நோய் போல, உயிரைப் பற்றி நின்று துன்புறுத்துவது ஆகலின் பிறவி நோய் எனப்பட்டது.

**துன்பத்தையே விளைவித்தல்:**

நோய் துன்பத்தையே விளைவிப்பது. ஆனால், பிறவி இடையிடையே இன்பத்தையும் விளைவிக்கிறதே. அப்படியிருக்க, அதனை நோய் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம்.

பிறவியில் இடையிடையே இன்பம் உளதுபோலத் தோன்றினாலும் உண்மையில் விளைவது பெருந்துன்பமேயாகும். இவ்வுண்மையை ஓர் அரிய உவமையால் விளக்கியருளினார் திருநாவுக்கரசர். ஆமையைக் கொன்று உண்பவர் நெருப்புமூட்டி அடுப்பில் உலை நீரை ஏற்றி அதில் ஆமையை இடுகின்றனர். நீர் சிறிது சிறிதாகச் சூடேறுகிறது. அந்த ஆமை தனக்கு வரப்போகும் அழிவை அறியாது தனக்கு நல்ல நீர் கிடைத்தது என்று எண்ணிக் களித்து அதில் மூழ்கித் திளைக்கிறதாம்! அந்த இன்பம் அதற்குத் துன்பமாய் முடியப் போகிறதே. உலகில் ஐம்புல நுகர்ச்சியால் வரும் இன்பம் இத்தகையதேயாகும். எனவே உலகில் சிறிது இன்பம் உளதாயினும் அது துன்பமாகவே முடிதல் கண்கூடு. இதனால் பிறவி துன்பத்தையே விளைவிக்கும் என்பதும், அது பற்றியே அது நோய் எனப்பட்டது என்பதும் தெளிவாகும்.

**நன்மருந்து:**


பிறவிநோய் என்பது அறிவில்லார்க்குச் சிறிதும் புலனாகாது. ஆனால் அறிவுடையார்க்கு அது நன்கு விளங்கித் தோன்றும். ஆதலால் அவர் அந்நோயைத் தீர்க்கும் மருந்தை நாடி நிற்பர். பிறவி நோய்க்கு நன்மருந்தாக இருப்பவன் இறைவன். "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான்" என்றருளினார் திருநாவுக்கரசர்.

உலகத்து மருந்துகள் வேறு வேறு இடங்களிற் கிடைப்பன. ஆகவே அவற்றைப் பெறுதற்கு அலைதல் வேண்டும். சில சமயங்களில் அவை கிடைக்காமலும் போகலாம். ஆனால், இறைவனாகிய மருந்து அத்தகையதன்று. அது நோயுடையார்க்கு வேறாய் இல்லாது அவரோடு ஒன்றாய் இருப்பது என்பார் "உணர்வாய் உளது" என்றார்.

மேலும் உலகத்து மருந்துகள் உடலுக்கு உரியவை. ஆதலால் அவை உண்ணுதற்கு உரியவாகின்றன. இறைவனாகிய மருந்தோ உயிருக்கு உரியது. ஆதலால் அ்.து எண்ணுதற்கு உரியதாகின்றது. அது பற்றியே "உன்னும்" (நினையுங்கள்) என்று அறிவுறுத்தினார் ஆசிரியர்.

கதிர்காம யாத்திரையின்போது செல்லக்கதிர்காம ஆலய தரிசனத்தின் நிகழ்வில் சுவாமிகளும் அவரது அன்பர்களும்






தெய்வானை அம்மன் ஆலய அன்னதான சபைக்குரிய மண்டபத்தில்
சுவாமி அவர்களோடு யாத்திரையில் இணைந்த அடியார்களை
கதிர்காம அன்னதான சபையைச் சேர்ந்தோர் உபசரிக்கும் நிகழ்வு



சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து கதிர்காமத்திற்கு சென்ற யாத்திரைக்
குழுவினர் வெருகலம்பதி ஆலய அன்னதான மண்டபத்தில் அமர்ந்திருக்கும்
காட்சி அடியார்களோடு ஆலய பரிபாலன சபைத் தலைவரும்



**ஐயம் இலது:**

இறைவன் நம் அறிவில் உள்ளவனாயினும் அறிவிலே உள்ள மயக்கம் காரணமாக நாம் அவனை உணராமல் இருக்கிறோம். அவனது இருப்பைக் குறித்தே ஐயப்படுகிறோம்.

திருமூலர் பின்வருமாறு சொல்லுகிறார். "சிவபெருமான் எல்லாம் வல்லவன்; கடல் நீரைக் கரையின்றியே அடங்கி நிற்கும்படி செய்தவன். இவ்வுலகை இயக்கி வரும் அவனை "இல்லை" எனக் கூறிப் பிணங்குதல் வேண்டா. அவன் ஏனைய கடவுளர்க்கெல்லாம் முதல்வனாய் நின்று எப்பொழுதும் உயிர்கட்கு நலம் புரிந்து வருகின்றான்" என்கிறார்.

"இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே"

என்பது திருமூலர் திருமொழி.

இம்முறையிலேயே ஆசிரியர் உமாபதி சிவமும் கூறுகிறார். "இறைவனது இருப்பில் நீங்கள் ஐயங்கொள்ள வேண்டா. அவன் பிறவிப் பிணியைத் தீர்க்கும் மருந்தாக விளங்குகிறான். உங்கள் அறிவிலுள்ள மயக்கத்தை விடுத்து அவனை உணர முயலுங்கள்" என்று அறிவுறுத்துகிறார்.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 55
## சந்நிதிவேலன் செந்தமிழ் மாலை

பல்லவி

கதிதருவாய் ஐயா கதிர்வேலா - நல்ல|| - பாழும்
விதிவழி யலைந்துலையும் வினையனேன் தனக்கு நல்ல

அநுபல்லவி

சதிபதியாய் எழிலார் சந்நிதி தனில் அமர்ந்து
துதிபுரி யெனதிரு தொல்வினை கள்களைந்தே

சரணம்

நதிமதி யணிசிவனின் நற்குரு வானவனே
அதிபதி யெனநின்று அருளிடும் வேலவனே
பதியிதின் நிதியெனவே பகரநின் றருள்பவனே
நிதிபதி யிவனென நீணிலத் துயரநல்ல

அதிரசத் தமிழமுதை அள்ளியுண்ட முருகா
ஐதியலை துயில்மாயன் யெளவனமார் மருகா
ததியுறு மத்தெனவே தரணியி லுழலுமெனை
எதிரதி லருள்வாரி இப்புவி காவாயோ?

-இராசையா குகதாசன்-

# என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே...

திரு ச. லலீசன் அவர்கள்

1998ஆம் ஆண்டில் என்பதாக ஞாபகம். வெள்ளை வேட்டியுடன் மோட்டார் சைக்கிளில் திருநெல்வேலியில் இயங்கிய பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களைத் தேடிவந்தார் அந்த மனிதர்.

ஞானச்சுடருக்கெனக் கட்டுரை பெறுவதே அவரது வருகையின் நோக்கம். வந்திருப்பவர் யாரென அன்று நான் அறிந்திருக்கவில்லை. கலாசாலையில் ஆசிரிய மாணவராகப் பயின்று கொண்டிருந்த என்னை அந்தக் காந்தக் கண்கள் அன்று பற்றிக்கொண்டன. அதற்குள் ஓர் ஈர்ப்பு இருப்பதாக உணர்ந்தேன்.

வந்திருந்தவரின் முகக்குறிப்பை அறிந்தோ என்னவோ கட்டுரையை வழங்கிய விரிவுரையாளர் சிவ மகாலிங்கம் "இந்தப் பெடியனுக்கும் பேசுற ஆர்வம் இருக்குது. சந்நிதியில ஒருக்கா விட்டுப் பாருங்கோவன்..." என என்னைக் காட்டி வினயமாக வேண்டினார். வந்தவரிடம் ஒரு சிரிப்பு.

"நாங்கள் நினைச்சு ஒண்டுமில்லை மாஸ்டர். முருகன் விரும்பினால் சரி. ஒரு வெள்ளிக்கிழமைக்கு ஆளை விடுவம்" வெள்ளை வேட்டி மனிதர் பதிலிறுக்கிறார். வந்தவர் விடை பெறுகிறார். அவர் யாரென அறியும் ஆர்வம் மேலிடுகின்றது.

"இவர்தான் மோகனதாஸ் சுவாமி. சந்நிதியில் ஆச்சிரமம் நடத்துகிறார். ஞானச்சுடர் என்ற ஆன்மீக சஞ்சிகையையும் வெளியிடுகின்றார்." அவரைப் பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்கிறார் சிவத்தமிழ் வித்தகர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் உரையாற்றும் ஆவல் என்னுள் மேலெழுகின்றது. மோகனதாஸ் சுவாமிகள் என் ஆசானூடாக அழைப்பார் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தேன்.

அந்த நாளும் வந்தது. ஞானச்சுடரின் பின்அட்டையிலும் எந்தன் பெயர். "குருவாய் வருவாய்" இது சிவ மகாலிங்கம் ஐயா வழங்கிய தலைப்பு. பேச்சுக்கான கருத்துக்களும் அவரது உபயந்தான்.

உரை முடிந்தபின் உரை குறித்துச் சுவாமியின் அபிப்பிராயம் எப்படியிருக்குமோ என அறிய ஏங்கியது மனம். எனது ஆசான் வழக்கம் போலவே என்னைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினார்.

"சுவாமி நல்லது. நல்லதில்லை என்று எதுவுமே சொல்லமாட்டார். அடுத்த முறை பேசக்கூப்பிட்டார் என்றால் உன்ரை பேச்சு அவருக்குப் பிடிச்சிருக்கு என்று அர்த்தம்" சிவ மகாலிங்கம் ஐயா என்னுடைய முகக்குறிப்பறிந்து பகர்ந்த விடை அது.

அடுத்த ஆண்டில் நான் எதிர்பார்த்திருக்காத சந்தர்ப்பம் ஒன்றில் சிவ மகாலிங்கம் ஐயாவிடம் வந்த மோகன் சுவாமிகள் "அந்தப் பேசுற பெடியனையும் காண வேண்டும்" என்கிறார்.

"ஒரு வெள்ளிக்கிழமை பேசுறியா?..." சுவாமி என்னிடம் நேரடியாகவே கேட்கிறார். "பிறகென்ன மோகன் சுவாமி உன்னைக் கேட்கிற அளவுக்கு வளர்ந்திட்டாய்..." சிவ மகாலிங்கம்

ஐயா தட்டிக்கொடுக்கிறார். வருடம் ஒன்றிற்கு மூன்று நான்கு தடவைகள் என்னைப் பேசுவதற்கு வாய்ப்பளித்த சுவாமிக்கும் எனக்கும் இடையிலான பக்திப் பிணைப்பு வலுக்கிறது. மறுபுறத்தில் என் பேச்சால் ஈர்க்கப்பட்டு அன்பு கொண்ட அன்பர்கள் பலரது தொடர்பும் வலுக்கிறது. அவர்களுட் சிலர் எனது வீட்டிற்கு வந்து பாராட்டிச் செல்லும் பாக்கியமும் கிடைக்கிறது.

"பேசுற பேச்சை எழுதிப்பாரடாப்பா..." மோகன் சுவாமி என்னைக் கட்டுரையாளனாக்கிப் பார்க்க வேண்டும் எனத் திருவுள்ளம் கொள்கிறார்.

எழுத்துச் சோம்பேறி என எனக்கு நானே பட்டம் கட்டிக் கொண்ட நான், ஒருசில கட்டுரைகளை முயன்று எழுதிப் பார்க்கிறேன்.

"என்னையே கேட்கிறார் என்றால் ஞானச்சுடருக்கு ஆக்கம் கிடைப்பதில்லையோ?" என்மனம் எனக்குள் கேள்வியெழுப்பிக் கொள்கிறது.

மலர் வெளியீட்டிற்காகக் கிடைக்கும் ஆக்கங்கள் என பெரிய பெரிய கோவைகள் சுவாமிகளின் கரங்களில் இருப்பதைக் கண்டு கொள்கிறேன். எனது எண்ணம் தப்பென்று தெரிந்து கொள்கிறேன். காலம் சிறிது நகர்ந்தது.

சுவாமிகளின் தூண்டுதலின் உந்துதலால் கட்டுரை ஒன்றை எழுதிப் பார்த்தேன். ஆன்மீக உலகின் பயன் கருதி என்னை வளர்க்க வேண்டும் என்று சுவாமிகள் நினைத்தாரோ என்னவோ எனது ஆக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கி ஞானச்சுடரில் பிரசுரித்தார். அன்று நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவு கிடையாது.

உதயன் நாளிதழில் ஆன்மீக மற்றும் இலக்கிய, சமூக விடயங்களை தொடர்ந்து கட்டுரைகளாக்கவும் பலரது அபிமானத்தைப் பெற்றுக்கொள்ளவும் இதுவே எனக்கு அத்திபாரமாக அமைந்தது.

27.02.2009இல் ஞானச்சுடருக்கு ஆக்கங்களை நல்குபவர்களை ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

வெவ்வேறு அளவுகளில் விருதுகள். எழுத்தாளர்களின் தகுதி வரிசை கருதி அவை வழங்கப்பட்டன. அதிலும் எனக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

சுவாமிகள் என்ன நினைத்தாரோ, பெரிய எழுத்தாளர்களுடன் என்னையும் சேர்த்து வைத்து மதிப்பளித்தார். அந்த உற்சாகம் தொடர் கட்டுரைகளை எழுதும் ஆர்வத்தை என்னுள் ஊட்டியது.

உயர்தர மாணவர்கள் பயன்பெறக் கூடிய விடயப் பரப்புக்களைத் தெரிந்து கட்டுரைகளாக்கினேன். அக்கட்டுரைகளுள் தனது பாடத்திற்குப் பொருத்தமானவற்றை மாணவி ஒருத்தி போட்டோப் பிரதி செய்து வைத்திருந்தமையையும் கண்டேன். ஞானச்சுடர் இளையோரைச் சென்றடைவது கண்டு களிப்புற்றேன்.

வாசிப்புப் பழக்கம் அருகிவிட்ட இன்றைய நாட்களில் ஆன்மீக சஞ்சிகைகளை வாசிக்கும் மாணவர்களும் அருகிவிட்டார்கள். இத்தகைய சஞ்சிகைகளை வாசிக்கும் இளையோரை "ஒரு போக்கு" எனப் பட்டம் கட்டும் நிலைமையும் இருக்கிறது.

"ஞானச்சுடர் ஒரே அட்டைப் படத்துடன்தான் வெளிவருகின்றது. உரிய நேரத்தில் வெளியிடப்பட்டாலும் உரியவர்களுக்கு கிடைப்பதில் கால தாமதங்கள் ஏற்படுகின்றன. புத்தகத்தின் பைண்டிங்கின்போது வெளியே கிளிப் அடிப்பது அழகைக் குறைக்கிறது" என்

மனதில் தோன்றிய குறைகளை ஒரு முறை சுவாமிகளுக்கு அடுக்கிக் கொட்டினேன். ஆயிரக் கணக்கான பிரதிகளை பைண்டிங் செய்வதில் உள்ள ஆளணிப் பிரச்சினை. முகவரியிட்டு அனுப்புவதில் உள்ள ஆளணிப் பற்றாக்குறை என நிலைமையை விளக்கினார் சுவாமி. வெள்ளிக்கிழமை அல்லாத வேறு நாட்களில் ஆச்சிரமத்திற்குச் சென்றபோதுதான் சஞ்சிகை வெளியீட்டில் ஆக்கம் தெரிதல், சரவை பார்த்தல், அச்சடித்தல், கிளிப்படித்தல், முகவரியிடல், அஞ்சலிடல் எனப் பல வேலைகளில் சுவாமிகளே பிரதான பாத்திரமாக விளங்குகின்றார் எனக் கண்டு கொண்டேன். வாயடைத்துப்போனேன்.

திருவாவடுதுறை ஆதீன முதல்வரை ஈராண்டுகளுக்கு முன்னர் சந்தித்த நீர்வை மணி ஐயாவின் புதல்வர் மயூரகிரி சர்மாவிடம் இலங்கையின் ஆன்மீக நிலவரங்களைக் கேட்டறிந்த ஆதீன சுவாமிகள், தனக்கு இலங்கையில் இருந்து ஞானச்சுடர் மாத்திரம் ஒழுங்காகக் கிடைப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தாராம்.

இன்று ஞானச்சுடரின் 200ஆவது வெளியீடு என்னும்போது மெய் சிலிர்க்கிறது. வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கே தேநீர் கொடுப்பதற்கு நேரமில்லாத வாழ்க்கையில் நாங்கள். ஆனால் அன்னமிடும் பணி, ஆன்மீக அறிவூட்டும் பணி, வைத்தியப் பணி, சமூக நலத்திட்டப்பணி எனப் பல தளங்களில் பயணிக்கிறது ஆச்சிரமம்.

ஆச்சிரமம் இன்று உயர்ந்து நிற்கின்றது. என் போன்றவர்களை உயர்த்திக் கொண்டும் இருக்கிறது.

ஆன்மிக வாழ்க்கையில் சுயமுயற்சிக்கு முக்கிய இடம் இருக்கிறது. இதை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். மனித சுயமுயற்சி செய்யாவிட்டால் சோம்பியிருந்தால் தெய்வகிருபை இருந்தாலும் உரிய பயன் தராது. எனவே இறைவனை நம்புவதோடு சுயமுயற்சியும் கட்டாயம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார்! என்று முயற்சியே செய்யாமல் சோம்பி இருக்கக்கூடாது. உனக்குத் துணை நீயேதான். மற்றவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணத்தை விட்டு விட்டு உன்னை நீயே உயர்த்தும் முயற்சியில் ஈடுபடு.

உலகில் இன்பம் பெறவோ, சொர்க்க வாழ்வு பெறவோ, நரக தண்டனை களிலிருந்து தப்புவதற்காகவோ பக்தி செலுத்துபவன் உண்மையான பக்தன் அல்ல. எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் பக்திக்காக பக்தி செலுத்துபவனே உண்மையான பக்தன். இந்தப் பக்தனின் பக்தியே சுத்த பக்தி. இதுவே மேலானது. உயர்வானது. உன்னதமானது. புனிதமானது. இன்பமோ துன்பமோ, வாழ்வோ தாழ்வோ எந்த நிலையிலும் உள்ளத்தில் சமநிலை குலையாமல் சலனமடையாமல் வைத்துக்கொள்வதுதான் யோகமும் ஆன்மிகமும் ஆகும். பயிற்சி பெற்ற யோகியின் மனம் எந்தச் சூழ்நிலையாலும் பாதிக்கப்படுவதில்லை.

*— ஆன்மிகச் சிந்தனைகள் —*


சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாவருடம் இடம்பெறும் திருவாசக விழா
நிகழ்வின்போது பீடத்தினை எடுத்துவரும் காட்சி



திருவாசக விழாவின்போது நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில்
பங்குபற்றிய ஆசிரியர்களும் மாணவர்களும்



திருவாசக விழாவிற்கு வருகைதந்த நல்லை ஆதீன முதல்வரும்
விரிவுரையாளர் ச. லலீசன் அவர்களும் உரை ஆற்றும் நிகழ்வு





# வான முள்ளளவும் வளரும் சுடர்

திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்

ஞான முருகனின் ஞான விளக்கே
ஞானக் கொலுவான ஞானச்சுடர் வாழி.
மேலான நிலைகாண மேவு பணியாக
மெத்த வழிகாட்டும் முருக இதழ் வாழி.

தான தருமங்கள் சொல்லி லடங்காது
தவமிருந்து பெற்ற வரமிதுவோ - அவ
தானமாக, தினம் அழகானதாகப் பெரி
தானதாக பேறருளு மாச்சிரமம் வாழி.

போன காலமதில் பொதிந்த சாரமெலாம்
புண்ணிய வானாக எமை நடத்திற்று.
"நானென தென்று" நவின்ற தனைத்துமே
நம்மை விட்டோடியதே ஞானச்சுடரால்.

பேனை தொட்டுமே எழுதும் போது மெய்
பொலிந்து வரும் குழைந்த கருத்துப் போல்,
வான முள்ளளவும் வளரும் பிறையாக
வருகுதே ஞானச்சுடர் இருநூறாக.

தேனமுதாம் சைவம் தமிழ் ஒழுக்கமெலாம்
தித்திக்க அவையவை சிறக்கப் பணியாற்றியே,
ஆன முதியவர், குழந்தைகள், மாணவர், தாயவர்
அடிப்படை தேவைகளை அறிந்து அறம் பெருக்குமே.

தேனாக அருள்சொட்டும் தெவிட்டாத சுடரை
திசையெட்டும் பரவிடச் செய்த் திருத்தொண்டை
ஊனோடு உயிரோடு உறவோடு உலகாக
ஒப்பிலா சக்தியென உரத்துச் சொல்வோம்.

தானாக யாருமே செய்ய முடியாது மோகன
தாஸ் சுவாமிகளுக்குள் முருகன் விளையாட
ஏனென்று எதற்கென்று எப்படியென்று எதுவுமே
எல்லைக் கப்பால் வினாவின்றி இலங்கும் சுடர்.

காணாமல் வீணினில் காலம் கரைந்தோட
கலகங்கள் எம்வாழ்வில் நிதமும் எமைவாட்ட
பேணாத விழுமியச் செல்வமெலாம் விட்டோட
பெரும் பொக்கிஷமாம் சந்நிதியை என்மனம் நாட

கோனாகும் அரசரும் கும்பிடும் சந்நிதிக்கு
குறையொன்றுமில்லை, கூப்பிட்ட குரலுக்கு
தானாக வருவதை தக்கதாய் உந்தமக்கு,
தாற்பரியமாய் சொல்லும் ஞானச்சுடரே வாழி.

மேனாடு எங்ஙணும் சந்நிதியின் திருநீறு
மீளா அடியவரின் சுகமீயும் வரலாறு
ஞானாமிருத சுடரே ஞானச்சுடர் இருநூறு
ஞாலமெங்கும் பெருகுமே தொண்டைமானாறாய்.



# பிள்ளையார் திருவுருவம்

செல்வி S. ஜடா அவர்கள்

இறைவனுக்கு உருவம் இல்லை. இறைவனோ எல்லா உருவங்களிலும் உள்ளார். பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவன்.

ஒலிகளில் ஓங்காரமாகி உள்ளவர் பிள்ளையார். வரிவடிவங்களில் பிள்ளையார் சுழியாக உள்ளார். பிரணவமாகவும், பிரணவப் பொருளாகவும் உள்ள வர். வேதங்களின் முதலாக உள்ளவர். வேதங்களாகவும் உள்ளவர் பிள்ளையார்.



தன்னை நினைப்பவர், தன்னை வழிபடுபவர், தன்னைத் தியானிப்பவர்களின் உள்ளத்தில் பிள்ளையார் எப்படித் தோன்றுகிறார்? தத்துவார்த்த மூர்த்தியாகவும் பொருள் பொதிந்த உருவமாகவும் தோன்றுகிறார்.

விலங்கு வடிவமாகத் தோன்றுகிறார்.

மனித வடிவமாகத் தோன்றுகிறார்.

பூத வடிவமாகத் தோன்றுகிறார்.

தேவர்கள் வடிவமாகத் தோன்றுகிறார்.

விலங்காய், மனிதராய், பூதமாய்த், தேவராய் இந் நான்கு படைப்புக்கள் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார்.

யானைத் தலையும், சுளகுச் செவியும், தும்பிக்கையும் யானையாகிய விலங்கிடம் இருந்து பெற்றார். புருவ வடிவத்தையும், கண்களையும் மனிதரிடம் இருந்து பெற்றார். பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூத கணத்தில் இருந்து பெற்றார். நான்கு கைகளையும் தேவர்களிடம் இருந்து பெற்றார்.

"ஐந்து கரத்தனை, யானை முகத்தனை, இந்து இளம் பிறை போலும் எயிற்றனை" எனத் திருமூலர் பிள்ளையாரின் வரி வடிவத்தை திருமந்திரத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

இறைவனின் திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே உயிர்களின் நோக்கம். பிள்ளையாரின் திருவடிகள் உயிர்கட்கு அபயம் கொடுக்கும் திருவடிகள். உண்மை யான அறிவு எதுவோ அதுவே ஞானம். உயிர்கள் பாசங்களால் கட்டப்பெற்றுத் துன்பப்படாமல் இறைவன்பால் உயிர்களை வழிப்படுத்துவதே "ஞானம்". ஊழ்வழி வினைகள் அறவேண்டும். வருவினையும் செய்வினையும் நீங்கவேண்டும். ஞானம் பொருந்தினால் வினைகள் தாமாக நீங்கும். துன்பம் போகும். இன்பம் பெருகும்.

பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன. உயிர்களின் துன்பத்தைப் போக்கு கின்றன. இன்பம் பெருகுகின்றன. பிள்ளையாரின் வயிறு பெருவயிறு. பேழை வயிறு. அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கமாகி உள்ளன. பரவொளியாக உள்ள அனைத்தும் அடங்கி

**எவர் சாந்த குணத்தைப் பெற்றிருக்கின்றாரோ அவர் நன்மை அடைவர்.**

உ ள. அண்டங்கள் யாவும் அடங்கி உ ள. அனைத்து உலகமும் அடங்கி உ ள. அனைத்து உயிர்களும் அடங்கி உ ள.

பிள்ளையாரின் திருவுருவம் அனைத்தையும் அடங்கிய திருவுருவம். பிள்ளையார் எங்கும் எதிலும் உ ள்ளார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து வியாபித்து நிற்கிறார். இந்தத் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கும்.

பிள்ளையாருக்கு நான்கு கைகளுடன் தும்பிக்கையும் சேர்த்தால் ஐந்து கைகள். தொடர்ச்சியாக இடையீடு இன்றி நடைபெறும் ஐந்து தொழில்களையே ஐந்து கைகளும் குறிக்கின்றன.

ஐந்து கைகளில் ஒரு கையில் பாசம் உ ள்ளது.

ஒரு கையில் அங்குசம் உ ள்ளது.

ஒரு கை அஞ்சேல் என அபயம் காட்டி நிற்கிறது.

ஒரு கையில் மோதகம் உ ள்ளது. மற்றது தும்பிக்கையாகும். பற்றுள்ளதைப் பிறப்பிப் பதும் பாசம் பிணித்து நிற்பதும், பாசம் படைத்தலைக் குறிப்பது. ஐந்தொழில்களுள் முதலாவது படைத்தல் தொழில்.

பிறவி எடுத்தாலே வினை சூழ்ந்து கொள்கிறது. துன்பங்களும், இன்பங்களும் மாறி மாறி வருகின்றன. இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு ஓடி பிறவியில் இருந்து விடுபட வரும் உ யிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிக்கும் கை அபயக் கை காத் தல் தொழில். ஐந்தொழில்களுள் இரண்டாவது அங்குசம் அழித்தலைக் குறிக்கும். பிள்ளை யாரின் ஒரு கையில் அங்குசம் உ ண்டு. ஐந்தொழில்களுள் மூன்றாவதாகிய அழித்தல் தொழிலை அங்குசம் தாங்கிய கை செய்கிறது.

அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளித்த அபயம் பெற்ற உ யிர்கட்கு அருளலைச் செய் வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கை கீழ்நோக்கி இருப்பதன் காரணம் பிற விக்கு அஞ்சி வரும் உ யிர்கள் அடையுமிடம் திருவடியாகிய முத்திப்பேறு என்பதை உ ணர்த்த வேயாம். ஐந்தொழில்களுள் நான்காவது அருளல் தொழில். ஐந்தொழில்களுள் ஐந் தாவது மறைத்தல் தொழில். திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கையே. பிள்ளையாரின் முகத்தில் இரு கொம்புகள் உ ள. இடது பக்கத்தில் உ ள்ள கொம்பு முழுமையான அழகான கொம்பு. வலது பக்கத் தில் உ ள்ள கொம்பு ஒடிந்த கொம்பு. வலது பக்கத்தில் முழுமையான நீட்டுக் கொம்பு இருந்தது. பிள்ளையார் பாரதக் கதையை வியாச பகவான் சொல்ல எழுதியவர். அப்பொழுது வலது கொம்பை உ டைத்து எழுத்தாணியாகப் பயன் படுத்தி எழுதினார். இதனால் வலது கொம்பு உ டைந்த கொம்பாகவே உ ள்ளது.

இடது கொம்பு பதி ஞானத்திற்கு உ ரி யது. ஒடிந்த கொம்பு (வலது) பாசஞானத்திற்கு உ ரியது. சுளகு போன்ற இரு செவிகள் பிள்ளையாருக்கு உ ண்டு. அகன்று விரிந்த இச் செவிகள் யானையின் செவிகளைப் போன் றவை. உ யிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் இச்செவிகள் காக்கின்றன. வினைகளினால் வரும் துன்பங்களில் இருந்து போக்கி அருள்கின்றன. பிள்ளையாருக்கு மூன்று கண்கள் உ ள. வழமையான இரு கண் களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து மூன்று கண்கள் உ ள. பிறைச் சந்திரனைத் தனது முடியில் பிள்ளையார் அணிந்துள்ளார். குற்றங் கள் தேய்ந்து உ டல் சிறுத்து வட்டமான சந்திரன் பிறைவடிவம் கொண்டது. அறியாமை

என்னும் இருள் தேய, ஞானம் பெற்ற உயிர் களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல் வைப்பார் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை எடுத்துக் காட்டுகிறது.

பிள்ளையார் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி பாம்பு படம் எடுப்பதுபோல் எழுந்து பரந்து நின்று உயிர்களைச் சிவமயமாக்குகின்றது.

இப்படியாக பிள்ளையார் அடியவர் களுக்கு அருள்புரிவதற்காக எடுத்த திருமேனி யின் திருவுருவத்தில் சிவதத்துவங்கள் அடங்கி உள்ளன. நாம் பிள்ளையாரின் திரு வுருவத்தை நினைத்து, வழிபட்டு, தியானிக் கும்பொழுது நமக்கு ஈடேற்றம் உண்டு. ஆன்ம ஈடேற்றம் உண்டு. உயிர் உயர்ச்சி அடையும். ஓங்கார ஒலியானவன். பிள்ளையார் சுழி வரி வடிவானவன்.

விலங்கு, மனிதர், பூதர், தேவர் இவர் கள் இணைந்த திருவுருவத்தைக் கொண்டவர். அவரே பிள்ளையார்.

## "லங்கா இரத்தின ஜோதி" விருதினை வென்று வரமாகும் சுவாமிகள்



ஆச்சிரமத்தின் பல்வேறு சமூகப் பணிகளை - சைவ
ஆச்சிரம பீடாதிபதி மோகனதாஸ் சுவாமிகள் - முழு
மூச்சாக முன்னின்று முழுதாக ஆற்றிட - சந்நிதி
முருகனே வழிகாட்டி மகிழ்கிறான் பாரீர்.

இலங்கை, இந்தியா, உலகம் என்றிவ்வாறு தொடவே
எட்டுத் திக்கும் இன்னோரன்ன பணிகள் ஓங்கியே.
துலங்கும் வகைதெரிந்து தொண்டைமானாறு போற்றியே
தொடுக்கும் வரங்கள் கொடுக்குமே சந்நிதி.

யாராலுமே நினைத்துப் பார்க்கவே முடியாது - ஆம்!
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமாய்
பாராளும் மன்னர்களையே போற்றிட வைத்த
பணிகள் ஒன்றா! இரண்டா! பலப்பல வாகும்.

கல்வி, கலாச்சாரம், பண்பாடு, அப்பாலும் சென்று
கருதரிய காலை மதிய இரவு உணவு தானமளித்து
சொல்பவை, செய்பவை, நல்லவை அனைத்தையும்
சோபித்துச் சிறப்பிக்கும் ஞானச்சுடர் பிரகாசிக்கிறதே!

விளம்பரப் படுத்தப்படாத இச் சேவைகளுக்காக
விஷேட விருதான லங்கா இரத்தின ஜோதி என்ற
வளம் தரு விருதினை வென்ற ஸ்ரீமான் ஐயாவே
வரமாகும் மோகனதாஸ் சுவாமிகள் வாழ்க!. வெல்க!

-கே.எஸ். ராஜா-

# இரு நூறு சுடர் தந்தாய் வாழி

திரு துரை கணேசமூர்த்தி அவர்கள்

மெய் ஞானச் சுடரான வடிவேலிற் கருவாகி
திரு வாகி யுருவாகி யிரு நூறு சுடராகி – இன்னும்
பல நூறு மலராகி யுயர் ஞான நெறியாகி – மனம்
ஏகித் திரு நெறி காக்கும் ஞானச் சுடரே வாழி!

திரு நீற்றுப் பொதி யணிந்து இரு நூறு மலராகி
ஆவி யோ டனைத்திலுமாகித் திரு நன்றே யுணர்த்தி
விரித்துப் பொருளதைக் கருத்தா லிருத்தி – பாங்குற
விருத்தி யிரு நூறு கண்டாய் ஞானச் சுடரே வாழி

ஞாலத்திலே வுயர் ஞானச் செருக் கோடதனை
அணையா திருத்தி நல் லற நெறியுங் காட்டி
பக்தி யொடு பரவச மூட்டிக் குறை வில்லா
இறை யின்பந் தர வல்லாய் ஞானச் சுடரே வாழி

அருளூறும் அமுத வெற்பிடை யொளிருஞ் சுடரென
அடரிட ரகற்றும் ஞானக் கலை யாழியே வாழி
ஊழி யோட னைத்து இழிநிலை தீர்த்த வுந்தன்
தேனமுத வாக்கம் பல சுவைத்தோம் சுடரே வாழி

ஞாலத்திலே யோங்கு புகழ் ஞானச் சுடரே வாழி
கோலத்திலே குமர வடிவுடைக் குன்றா மலரே வாழி
காலத்திலே மாதமொரு சுடர் தந்து மூத்தாய் வாழி
வாழி சந்நிதி வேலனருள் என்றும் வாழி.

# திருஞானசம்பந்தரும் சைவமும்

திரு சி.வ. இரத்தினசிங்கம் அவர்கள்

சீருமிக்க சைவமும் செழுமிய தமிழும் அனாதியானவை. இவற்றின் ஆரம்பம் எப்போ தென்றோ, ஆரம்பகர்த்தா யாரென்றோ அறிய முடியாத தொன்மை வாய்ந்தவை. சைவத்தைத் தவிர்ந்த ஏனைய பிற பிரதான மதங்கள் ஆரம்பித்த காலத்தையும் ஆரம்ப கர்த்தாக்களையும் தீர்க்கமாக அறிய முடிகின்றது. சைவத்தின் மூலத்தைச் சரியாகக் கண்டறிந்து விண்டவர் யாருமிலர். சிந்துநதி தீரத்திலும் அதற்கு அப்பாலும் ஒரு காலத்தில் சைவம் செறிந்து பரந்து செழிப்புடன் மக்களால் பின்பற்றி வளர்க்கப்பட்டு வந்தது என்பதை ஆதாரபூர்வமாகத் தொல்லியலாளர்கள் ஆராய்ந்தறிந்து வெளிப்படுத்தி உள்ளனர். ஆனால் இம்மதம் இன்று இந்திய உபகண்டத்திலும் மற்றும் இலங்கையிலும் காலூன்றி வேரூன்றி வளர்கின்ற அதேவேளை இந்நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழும் மக்களிடையேயும் சிறப்புடன் பின்பற்றப்பட்டு வருகின்றது.

காலத்துக்குக் காலம் பிற சமயங்களின் ஆதிக்கம் மேலோங்கியும் சைவம் தாழ் நிலையிலும் இருந்ததுண்டு. சமணமும் பௌத்தமும் ஒரு காலத்தில், அதாவது அவற்றின் ஆரம்ப காலங்களில் சைவத்தை அழித்தொழித்துக் குழிதோண்டிப் புதைக்க முற்பட்டன. பின்னாட்களில் இஸ்லாமும், கிறிஸ்தவமும் சைவத்துக்கு ஊறுசெய்ய முற்பட்டன என்பது வரலாறு கூறும் உண்மை. இன்றும் அவை வெவ்வேறு உபாயங்களைக் கையாண்டு சைவ மக்களை மதம் மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

இருப்பினும் சைவத்தை அவற்றால் முடமாக்கி அழித்தொழிக்க முடியாமல் போய் விட்டது. இன்றும் எழுபத்திரண்டு மில்லியன் சைவ சமயிகள் உலகெங்கணும் பரந்து வாழ்கின்றனர். குன்றா இளமையுடனும் செழிப்புடனும் சைவம் இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு காலங்கள்தோறும், சைவ மதத்தில் உதித்துப் பரசமயங்களைச் சாடிச் சைவத்தின் மேன்மைக்காக கடினமாக உழைத்த பல மகான்களின் முயற்சியே காரணமெனலாம்.

ஆதியில் இந்து மதத்திற்குச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த ஆதிசங்கரர், இராமானுஜர், மாத்துவர், சைதன்யர் போன்ற மகான்கள் தொடக்கம் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பின்நாட்களில் உதித்த ஆறுமுக நாவலர், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ரமண மஹரிஷி, சுவாமி சிவானந்தர், குன்றக்குடி அடிகளார், விபுலானந்த அடிகளார், சிவயோக சுவாமிகள், பல ஆதீன கர்த்தர்கள் போன்ற மேலும்பல மகானுபவர்கள் சைவம் மீட்சிபெற்று மேன்மை அடையச் செய்யத் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தவர்கள். அப்படியான பேரருளாளர்களுள் ஒன்பது நாயன்மார்கள் சமணம், பௌத்தம் ஆகிய பரசமயங்களின் பிடியிலிருந்து அரும்பாடுபட்டுச் சைவத்தைக் காத்தருளினர். அப்படிப் பர சமயங்களை ஒழித்துச் சைவநெறியின் மேன்மையை நிலைநிறுத்தப் பாடுபட்டுப் பல வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து அவற்றை முறியடித்துச் சாதனை புரிந்த சாதனையாளர்கள் மூர்த்தி நாயனார், நமிநந்தி அடிகள், தண்டியடிகள், குலச்சிறை நாயனார், மங்கையர்க்கரசியார், நின்றசீர் நெடுமாற நாயனார், சாக்கிய நாயனார், அப்பர்

சுவாமிகள், சம்பந்தர் சுவாமிகள் ஆகிய ஒன் பதின்மர். சமணத்தையும் பௌத்தத்தையும் தமிழ் மண்ணிலிருந்து வேரறுத்துச் சைவ நெறியை மேலோங்கச் செய்த பெருமைக் குரியவர்களாவர். பரசமயிகளின் கைகளில் சிக்குண்டு சிறுமைகளையும் பேரிடர்களையும் சந்தித்து வெற்றிபெற்ற அத்தகைய பெருந் தகையாளர்கட்குச் சைவமும் தமிழும் நாமும் தலைதாழ்த்தி வணங்கக் கடப்பாடுடையோம்.

மேற்கூறப்பெற்ற ஒன்பதின்மரில் ஐவர் சமகாலத்தவர்கள். (நாயனாரின் சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் மொத்தம் பதினொரு பேர். அவர்கள் பற்றிய விபரங்களை இதன் இறுதி அங்கத்தில் காணலாம்.) திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாய னார், குலச்சிறை நாயனார், மங்கையர்க் கரசியார், மூர்த்தி நாயனார் ஆகியோரே அந்தப் பெருமைக்குரிய அருளாளர்களாவர். அவர்கள் சைவத்தைக் காக்க எடுத்த பெரு முயற்சிகள் பற்றிய விபரங்களைப் "பெரிய புராணம்" முதலிய திருமுறைகளில் இருந்து எம்மால் அறிய முடிகின்றது. அப்படிச் சைவம் வாழ வழிசமைத்த பெருமைக்குரிய சைவசிகா மணிகளுள் தலையாயவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரே என்பதில் ஐயமில்லை. சேக்கிழார் சுவாமிகளின் பெரிய புராணத் திலுள்ள 4286 பாடல்களுள் 1255 பாடல்கள் ஆளுடைய பிள்ளையாரின் சரிதத்தையும் பெருமைகளையும் விளக்குபவையாக உள் ளன. அதாவது பெரியபுராணத்தில் நான்கி லொரு பங்கிற்கு மேற்பட்ட பகுதி சம்பந்த சுவாமிகளைப் பற்றியும் மீதி நான்கில் மூன்று பகுதி மட்டுமே ஏனைய அறுபத்திரண்டு நாயன் மார்கள் பற்றியும் தொகையடியார்கள் பற்றியும் பாடப்பட்டுள்ள சிறப்பு நோக்கற்குரியது.

"வேத நெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூத பரம் பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீத வள வயல் புகலித்
திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்"

பெரியபுராணத்தில் ஆளுடைய பிள்ளை யாரின் சரிதத்தை எழுத ஆரம்பிக்கும்பொழுது சேக்கிழார் சுவாமிகள் திருவானவரின் பாத மலர்களைப் போற்றிப் பாடிய துதிப்பாவிது. இதில் சுவாமிகள் சுட்டிக் காண்பித்துள்ள "மிகுசைவத் துறைவிளங்க" என்ற வாசகங் கள் மூலம் சம்பந்தர் சுவாமிகள் சைவ சமயத் தைக் காத்து மேம்படுத்த ஆற்றிய அரிய சேவைகளை எம்மால் உணரமுடிகின்றது. இவ்விரண்டு வார்த்தைகளாலேயே சம்பந்த சுவாமிகளின் பெருமையைப் பறைசாற்றி விட்டார் என்றால் மிகையாகாது. சமயகுரவர் நால்வருள் இவரும் ஒருவர். அதுமட்டுமன்றி தேவார முதலிகள் என வழங்கப்படும் மூவரில் இவரும் ஒருவர் என்று எண்ணப்படுகின்ற பெருமைக்கும் உரியவராவார்.

சோழவள நாட்டின் காவிரி ஆற்றங் கரையில் பசுமை நிறைந்து விளங்கும் தொன்மைமிக்க சீர்காழி பதியுண்டு. அந்தப் புண்ணிய ஷேத்திரத்தைச் சீகாழி (அல்லது

திருவாசக விழாவின்போது பரிசுபெற்ற மாணவ மாணவிகளோடு

நல்லை ஆதீன முதல்வரும் திரு. J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் அவர்களும்





திருவாசக விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைபுரிந்த அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார் திரு. க. குகசிவபாலன் அவர்களும் இணை மக்கள் வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் சிவகுரு பத்மநாதன் அவர்களும் கலந்துகொண்ட நிகழ்வு





சீர்காழி) என்ற பெயரோடு திருக்கழுமலம், பிரமபுரம், வேணுபுரம், திருப்புகலி, வெங்குரு, திருத்தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், திருப் புறவம், சண்பைநகர், கொச்சைவயம் என்ற பன்னிரு திருநாமங்கள் கொண்டு அழைக் கப்பெறும் பெருமையுடைத்து. அவ்வூரின் சிறப்புமிக்க பெயர் வரிசையினைச் சம்பந்தர் சுவாமிகளே தனது இரண்டாந் திருமுறையில் 70ஆம் பதிகத்தில் உள்ள பாடல்கள் 12இல் பதினொரு பாடல்களில் இந்தப் பன்னிரு நாமங்களையும் அழகாக வரிசைப்படுத்திப் பாடியுள்ளார்.

"பிரமனூர் வேணுபுரம் புகலி
வெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்
சிரபுரம் புறவம் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம்
உள்ளிட் டங்கு ஆதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்
கழுமலம் நாம்பரவும் ஊரே"

எனத் தாம் உதித்த திருத்தலத்தைப் பெருமைப்படுத்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரப் பாடலாகப் பாடியருளி உள்ளார்.

தமிழகத்தைப் பீடித்த சமணம், பௌத்தம் ஆகிய நோய்களை நீக்கிச் சைவ நெறியை மேம்படுத்தித் திருநீற்றின் மேன் மையை உலகுக்கு உணர்த்தக்கூடிய ஆற்ற லுடன் ஒரு திருமகனைத் தந்தருள வேண்டு மெனத் அத்தலத்தில் எழுந்தருளியுள்ள தோணியப்பரை வேண்டித் தவமிருந்தார்கள். சீகாழிப் பதிவாழ் அந்தண குலக் கவுணியர் கோத்திரச் சிவநேசச் செல்வராம் சிவபாத இருதயர், பகவதியார் என்ற தம்பதியினர். அவர் களது தவப்பயனாக நாளுங்கோளும் நன் னிலைகளில் நிற்கச் சித்திரை மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தில், பரசமயங்களை அடக்கிச் சைவத்தின் பெருமையை விளங்கச் செய்யவும், திருநீற்றின் மேன்மையை ஓங்கச் செய்யவும் கூடிய ஆற்றல் பெற்ற சிவமக னாகத் திரு அவதாரம் செய்தார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

மூன்றாம் வயதிலேயே தெய்வ மைந் தன் "அம்மே! அப்பா!" என்று திருத்தோணியப் பரையும் பெரியநாயகி அம்மையாரையும் கூவி அழைத்துச் சிவஞானங் குழைத்த ஞானப் பாலை அமுதுசெய்து பெருஞானம் பெற்றுத் திருஞான சம்பந்தர் என்று நாமம் பெற்றார். சிவஞான சம்பந்தம் வாய்ப்புண்ட பிள்ளையார் மூன்றாம் வயதிலேயே "தோடுடைய செவியன்" என அடியெடுத்துத் திருப்பதிகம் பாடியருளி னார். மூன்றாம் பிராயத்தில் ஆரம்பித்த அவரது அரும்பணி பதினாறு பிராயம்வரை நீடித்துச் சைவத்தையும் தமிழையும் வாழ வைத்தது என்றால் அது இறைவனின் திருவரு ளன்றி வேறொன்றுமில்லை.

அந்தப் பெருந்தகையாளர், பாலறா வாயர், கவுணியர்கோன், ஆளுடைய பிள்ளை யார், ஆளுடைய நம்பி, காழிப் பிள்ளையார், காழியர் கோன், காழி வேந்தன், கொச்சையர் கோன், மெய்ஞானப் பூசுரன், தமிழாகரன், தமிழ்விரகன், தமிழ்ஞான சம்பந்தன், சைவ சிகாமணி, ஞானபண்டிதன், பரசமய கோளரி போன்ற பற்பல திருநாமங்களால் அழைக்கப்

பெற்றார். சம்பந்த சுவாமிகள் தென்னகத்தின் ஷேத்திரங்கள் பலவற்றுக்கும் தல யாத்திரைகள் மேற்கொண்டு அங்கண் உறை நாதர்கள்மீது திருப்பதிகங்கள் பாடியுள்ளார். தமிழ் ஞானசம் பந்தர் பாடியருளிய பாடல்கள் பதினாறாயிரம் என்பர். பதினொராந் திருமுறையில் நம்பியாண்டார்நம்பி சுவாமிகள் அருளிச் செய்த "ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்"

"நகரம் கெடப்பண்டு திண்தேர்
மிசைநின்று நான்மறைகள்
பகரம் கழலவ னைப்பதி
னாறா யிரம்பதிகம்
மகரம் கிளர்கடல் வையம்
துயர்கெட வாய்மொழிந்த
நிகரம் கிலிகலிக் காழிப்
பிரானென்பர் நீணிலத்தே"

என்ற பாடல் மூலமும் "ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையில்"

"வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஓங்கவும் - துன்றிய
பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும் - முன்னிய
சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன
வந்தங் கவதரித்த வள்ளலை - அந்தமில்சீர்
ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறையவற்றின் வான்பொருளை - ஆன்சீர்த்
தத்துவனை நித்தனைச் சைவத்தவர் அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை....."

என்ற பாடலிலும் ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்த தேவாரப் பாடல்கள் பதினாறாயிரமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆனால் இன்று நமது கைகளில் கிடைத்துள்ளவை 384 திருப்பதிகங்களில் (திருவிடைவாய்" என்ற சிவபதியில் அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து பெறப்பட்ட திருப்பதிகம் உள்ளிட்டது) காணப்படும் 4158 பாடல்கள் மாத்திரமேயாகும். ஏடுகளில் எழுதப்பட்டவை இற்றுப்போயும், செல்லரித்தும், இயற்கை அனர்த்தங்களாலும், பரசமயக் குண்டர்களின் அவச் செயல்களினாலும் பல அரிய பொக்கிஷங்கள் அழிந்துபோயின. அழிவுகளிலிருந்து தப்பிய 4158 பாடல்கள் அடங்கிய மூன்று திருமுறைகளும் பெரியபுராணம் மற்றும் பல பிறகால நாயன்மார்களின் திருப்பாடல்கள், நம்பியாண்டார் நம்பி அவர்கள் அருளிச் செய்த "திருத்தொண்டர் திருவந்தாதி", ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் மற்றும் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை" ஆகிய பிரபந்தங்கள் மூலமாகவும் திருஞான சம்பந்த சுவாமிகளின் பெருமைகளையும் அவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டுகளையும் எம்மால் இன்று அறிந்துகொள்ள முடிகின்றது. (தொடரும்...

# ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# ஞானச்சுடர் சஞ்சிகையின் 200ஆவது மலருக்கான

# வாழ்த்துச் செய்தி

திரு கு. ரவீந்திரன் அவர்கள்

**வி**ழுமியம் என்பது உயர்வானவை, மேன்மையானவை, உன்னதமானவை, உயிரினும் மேலான பெறுமதி உடையவை எனக் குறிப்பிடப்படுகிறது. நாம் எவற்றை இழப்பினும் விழுமியங்களை இழந்துவிடக்கூடாது. விழுமியங்கள்தான் மிருகங்களிலிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுகின்ற அடையாளங்கள் ஆகும்.

மனித விழுமியங்கள் மூல விழுமியங்கள், உலகியல் சார்ந்த விழுமியங்கள் என வகுக்கப்படுகிறது. மூல விழுமியங்களுக்குள் ஆன்மீக, ஒழுக்க விழுமியங்கள் அடங்குகின்றன. ஆன்மீக, ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதில் ஆலயங்கள் பெரும் தொண்டாற்றுகின்றன. அதே போன்ற ஒரு அரும்பணியை மேற்கொண்டு வருகின்ற, ஆற்றங்கரை வேலவன் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருட்பதியிலே அமைந்திருக்கின்ற சந்நிதியான் ஆச்சிரமத்தைக் குறிப்பிடலாம். சந்நிதியான் ஆச்சிரமம் தானங்களில் சிறந்த தானமான அன்னதானப் பணியை நீண்டகாலமாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருவது உலகறிந்த ஓர் விடயமாகும்.

இவ்வாறான பணிகளோடு பாடசாலை மாணவர்களிடையே, பொதுமக்களிடையே விழுமியப்பண்புகளை வளர்ப்பதற்காக சைவ சமய அறிவுப்போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பவற்றை முன்னெடுத்து வருகின்றன. வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பாடசாலைகள், முன்பள்ளிகள், பொது நிறுவனங்கள் போன்றவற்றிற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் யாவும் மோகனதாஸ் சுவாமிகள் அவர்களுடைய வழிகாட்டல்களில் நடைபெற்று வருவது பாராட்டுக்குரியதாகும்.

இப்பணிகளோடு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை என்ற ஒரு ஆன்மீக அமைப்பினை நிறுவி அதனூடாக ஞானச்சுடர் என்ற சஞ்சிகையினை மாதா மாதம் வெளியிட்டு வருகின்றார்கள். இச் சஞ்சிகை இன்று 200ஆவது மலராக வெளிவருவது எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

சமய விழுமியங்கள் சார்ந்த ஒரு மலர் 200ஆவது வெளியீட்டினை எட்டுவது என்பது மிகச் சாதாரண விடயமல்ல. பல சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக, ஒழுங்காக இம்மலர் வெளிவருகின்றது. இம்மலரில் பல கோணங்களில் பல விடயங்கள் சிறப்பாக வெளிவருகின்றன. குறிப்பாக சந்நிதியானின் "அற்புதங்கள் என்னும் பகுதி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்து விடுகிறது. நூல் கிடைத்ததும் முதலில் இப்பகுதியை வாசிப்பவர்கள் பலர் உள்ளனர்.

கடல் கடந்த நாடுகளில் உள்ள எமது உறவுகள் இம்மலரைப் பெற்றுப் பயன் படுத்துவதில் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். இம்மலரை வாசித்து முடிக்கின்றபொழுது

சந்நிதி வேலவன் ஆலயத்திற்குச் சென்று வந்த உணர்வு தமக்கு ஏற்படுகிறது என்றும் இம்மலரை வெளியிடுகின்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சிறந்த, பொருத்தமான, தேவையான ஒரு பணியை ஆற்றுகின்றது என்றும் குறிப்பிடுகின்றனர்.

இம்மலரை ஒரு வருடம் பயன்படுத்தி அதனைச் சரியான முறையில் உள்வாங்கி உள்ளார்களா என்பதை அறிவதற்கு அவ்வருடத்தில் வெளியிடப்பட்ட மலர்களில் இருந்து வினாக்களைத் தொகுத்து மலரைப் பயன்படுத்தும் வாசகர்களிடையே போட்டி நடாத்தப் படுகிறது. வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுகிறது. இது வாசகர்களை மேலும் விழிப்படையச் செய்கிறது.

எமது மக்களின் சமய விழுமியங்களை வளர்ப்பதற்காக வெளியிடப்படுகின்ற இவ் ஞானச்சுடர் சஞ்சிகைக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது. இருப்பினும் கூட அன்பளிப்பாக மிகச்சிறிதளவு பணமே பெற்றுக்கொள்ளப்படுகிறது. இது மலரைப் பயன்படுத்தும் வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். வசதி படைத்தவர்கள், வெளிநாடுகளில் உள்ள அன்பர்கள் இப்பணிகளுக்கு அன்பளிப்புக்களை வழங்கி உதவுவது சாலப்பொருத்தமானது என்பதனை இவ்வேளையில் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மனிதனை மனிதனாக வாழ வைப்பதிலே "ஞானச்சுடர்" சஞ்சிகை காத்திரமான பங்களிப்பைச் செய்துவருகின்றது என்றால் அது மிகையாகாது. இம்மலரின் 200ஆவது இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். மேலும் பல ஆண்டுகள் இம்மலரினை வெளியீடு செய்து எமது சைவ சமய மக்களின் ஆன்மீக விழுமியப் பண்புகளையும் ஒழுக்க விழுமியப் பண்புகளையும் வளர்க்கவேண்டும் எனவும், மோகனதாஸ் சுவாமிகளின் வழிகாட்டலில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் மேன்மேலும் விரிவுபடுத்தப்படவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்வதோடு பேரவையினருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க ஞானச்சுடர், வளர்க பேரவையின் பணிகள்.

## ஆற்றருகோடு அமர்ந்த சந்நிதி வேலே

சந்நிதி வேலே சந்நிதி வேலே

சரண் புகுந்தாற் கருளும் சந்நிதி வேலே

எண்ணி லடங்காத பக்தர்கள் நாடும் சந்நிதி வேலே

எல்லோர் துயரும் தீர்த்தருளும் செல்வச் சந்நிதி வேலே

ஏழைகள் நாடும் செல்வந்தர் சூழும் சந்நிதி வேலே

நாற் திசை பக்தர்கள் மனஉறை கோவில் சந்நிதி வேலே

பிழை பொறுத் தருளும் மனம் வெளுத் தருளும் சந்நிதி வேலே

ஆற்றரு கோடு அமர்ந்தருள் புரியும் செல்வச் சந்நிதிவேலே.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

திருவாசக விழாவின்போது பரிசு பெற்ற மாணவர்களுடன்
திரு. ஆ. யோகதாசன் குடும்பத்தினர் சிறப்பித்த நிகழ்வு



விழாவின்போது இடம்பெற்ற அறுபத்து மூவர் குருபூசை நிகழ்வு



கதிர்காம உற்சவத்தின் நிமித்தம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து
ஆரம்பித்த பாத யாத்திரைக் குழுவினர்





(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்


திரு அன்னைதாசன் அவர்கள்

உண்மையில் எங்களுடன் வந்தவர்களின் கூற்றின்படி சூரன்கோட்டை என்றதும் எம்மனதில் ஏதோ அந்தக்காலத்து கோட்டை சுண்ணக்கற்களும் சாந்தும் கொண்ட ஒருவகையான கோட்டை அமைப்பாக இருக்கும் என்று. அப்பூங்காவினுள் நுழைந்ததும் அங்கு கண்ட காட்சிகள் என்னை, எம்மை பிரமிக்க வைத்தனவாக இருந்தன. முழுக்க முழுக்க ஓர் சிங்கள விகாரை சூழ் அழகான ரம்மியமான ஓர் சோலையுள் நிற்பது போன்று மிகமிகப் பிரமாண்டமான டகோபாலை மையப்படுத்திய சூழலில் மிகமிக அழகான நவீனமயமான கண்ணாடிகள் அலுமினிய சட்டங்கள் சூழ்ந்த பிரிப்புக்கள் நிறைந்த பெரிய விசாலமான அறைகள் சூழ்ந்த மண்டபங்கள் இரண்டு காட்சிக்கு விருந்தாகின. அன்பு வாசகர்களே நீங்கள் அன்று பார்த்த அல்லது உங்களுக்குள் வரலாற்று ரீதியான அமைப்பின் விளக்கங்களுக்குரியதாக இவை சற்று மாறுபட்டும் இருக்கலாம். எது எப்படியோ எமது தலைப்புக்கு ஏற்றவகையில் சிறியேன், எம் கூட்டத்தினர் எதனைக் கண்டோமோ அவற்றையே இங்கு தருகின்றேன்.

தகதக தங்கம் போன்ற புத்தரின் உலோகச்சிலைகள் பல அவர்களுக்கேயுரித்தான கலைவண்ணம் தாங்கிய பித்தளையில் அமைந்த தட்டங்கள் யானைச் சிலைகள் அசல் தங்கம்போல பொலிஷ்பண்ணி மினுங்கிக்கொண்டிருந்தன. இரவைப் பகலாக்கும் வர்ணஜால விளக்கொளிகளில் ஓர் ஆலயச்சூழல் என்பதிலும் பார்க்க ஓர் பொருட்காட்சிச் சாலையைப் பார்க்கும் உணர்வே எமக்கு, எனக்கு ஏற்பட்டது.



சூரன் படுத்துறங்கிய கட்டில் எனும் படியான ஓர் கற்பாறைத்தட்டு காணப்பட்டது. அத்தட்டின் பகுதி மட்டும் கருங்கல்லாக அமைய ஏனைய பகுதிகள் நவீன கிறனைற் கற்கள் சூழ பளிச் சென்றிருந்தன.




சூரனின் சிலை ஓர் பெரும் சிலையாக இருந்தது. அதுவும் மிகவும் நவீன பாணியில் அமைந்த கண்ணாடி அறையினுள் காணப்பட்டதுடன் அதனுள் காணப்பட்ட பித்தளையில் செதுக்கிய உலோக யானைச்சிலையின்

அழகு...... அப்பப்பா எதைச் செய்தாலும் எமது சிங்களச் சகோதரர்களது கைவண்ண மெருகூட்டலை பாராட்டியே ஆகவேண்டும். இங்குள்ள பித்தளையினாலான சிறு தட்டுக்கள் சிலைகள் வரை அவர்களது பராமரிப்புக் கலையின் திறமைக்குச் சான்றாக அமைந்துள்ளதை என்மனம் வியந்து கொண்டேயிருந்தது.

கதிர்காமம் என்பது காடு, காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல், அரவுகள் நடமாட்டம், பயம், பீதி என்ற கற்பனையோடு வந்த எனக்கு ஓர் பூலோக சுவர்க்கத்தில் நிற்பது போன்ற உணர்வே ஏற்பட்டது. அத்துடன் இச்சூரனுக்கு விசிறுவதற்காகவோ என்னவோ ஓர் சிறிய மின்சார மேசை விசிறியும் அங்கு காணப்பட்டது. நவீன தத்துவத்தின் வெளிப்பாட்டையும் காட்டி நிற்கின்றது.

இத்தகு நவீனத்துவம் மிக்க சூழலில் அங்கு காணப்பட்ட அந்தப் பலாமரம் எங்கள் எல்லோரையும் கவரத் தவறவில்லை. ஆம் நிலத்தில் படும்வண்ணம் அழகான பச்சைப்பசேலென்ற காய்கள் காய்த்துக் குலுங்கிய வண்ணமாக மிகத் தத்ரூபமாக இருந்தது. பின்பு அதனை ஊன்றிக் கவனித்தபொழுது அது ஓர் கலைஞனின் கைவண்ணச் சிற்பம் என்று தெரிந்தது.



அவற்றைப் பார்க்கப் பார்க்க நேரம் போவதே தெரியவில்லை. அத்துடன் சூரன் அணிந்ததாக ஓர் உடுப்புத் தொகுதியும் ஓர் கண்ணாடிப் பெட்டியினுள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது. ஆக கந்த புராணச் சூரனின் உடுப்புக்கள் இவர்களுக்கு இப்பவும் பேணக் கூடியதாக இருக்கிறதா? என வினாவவும் இடம் இருக்கிறது அல்லவா. அதுமட்டுமல்ல இருக்கும் அமைப்புக்களைத் தொகுத்துப் பார்க்கின் நாம் நினைப்பது போல வெறும் சூரன்கோட்டையன்றி இதற்கு ஓர் சிங்களவரலாற்றைக் கொண்டு அவர்களின் சரித்திரம் பேசும் ஓர் கோட்டைபோற்தான் இருக்கிறது. வருங்காலச் சந்ததிக்கும் இது காட்சியாகும். சாட்சியாகும்.

இந்தச் சூழலில் பல குகைகள் இருக்கிறதாகவும் அதற்குள் இன்னும் தாடிமுடி தரித்த பல சித்தர்கள் வசிப்பதாகவும் சொல்லிக்கொண்டார்கள். இக்கோட்டையின் பின்புறத்தைப் பார்த்தால் ஒரே பெருங்காடாக இருட்டுக் கட்டிகளாக சிறுசிறு மலைகளும் தெரிந்தன. நான் நினைக்கிறேன் பகல் வேளையில் பார்த்திருந்தால் அக்காட்டுச் சூழலின் ஆழ அகலத்தை ஓரளவுக்கு எம்மால் உணர்ந்திருக்க முடியும். உண்மையில் அவற்றைப் பார்க்கப் பார்க்க பலமணி நேரத்தைச் செலவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் எமது நிலமைகருதி நாம் விரைவாகத் திரும்பவேண்டியிருந்தது. காரணம் எமது இரவு உணவும்

தெய்வானை அம்மன் மடத்தினிலேயே ஏற்பாடாகி இருந்தமையால் 8.00 மணியுடன் திரும்பினோம். நாம் திரும்பிவரும்பொழுதும் பக்தர்கூட்டம் எம் முருகனின் திருக்கோயிலைச் சூழநின்று கொண்டேயிருந்தது. வழிபாடுகளை இயற்றிக்கொண்டே நின்றனர். அவ்வேளை ஓர் பெரிய வெள்ளித்தட்டு நிறைய அப்பிள், திராட்சை, கெக்கரி, வாழை, அன்னாசி ஆகிய பழங்களை ஒரு அம்மையார் பகிர்ந்து அளித்துக்கொண்டிருந்தார். எனக்கும் ஓர் திராட்சைப்பழம் கிடைத்தது. வாங்கிய என் உள்ளத்திலே ஓர் சிந்தனை இவர்கள் தங்கள் பழிதீர்க்கப் படைத்ததில் பங்கேற்று அப்பழியில் ஒரு பகுதியை நானும் ஏற்க வேண்டுமா? என்ற எனக்கேயுரிய சிந்தனை பொறிதட்டியது. அதை மீறி மகனே! இது என் பிரசாதமடா, உனக்கு கிடைத்தற்கரிய திருவருட் பிரசாதமாக நான் அப் பெண்ணூடாகத் தந்துள்ளேன் மாந்தடா என ஓர் சிந்தனைச் சிதறல் தூண்ட மிகவும் பயபக்தியுடன் அதனை அருந்தினேன். எம்முடன் வந்த வேறு சிலருக்கும் இவை கிடைத்தன.

அன்பு வாசகர்களே இங்கே ஒன்றைக் குறிப்பிடவேண்டும். நல்ல பெரிய பார்வைக்கு குளிர்ச்சியான வாழைப்பழங்கள் தெரிந்து மிகப்பெரிய சீப்பாகப் பார்த்து வாங்கி தேங்காய் பழம், பாக்கு, வெற்றிலை, சாம்பிராணி, கற்பூரம் எனத் தட்டில் அடுக்கிப் பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் ஐயாவிடம் நீட்டி பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்து அப்பழங்களை ஐயா அர்ச்சித்து அதில் கற்பூரம் சாம்பிராணியைத் தவிர வேறு பழத்தில் ஐயா கையை வைத்து விட்டாரோ என்று பார்த்து வாங்கி ஏழை எளியவர்களுக்கு எதுவும் கொடாது பக்குவமாக வீட்டிற்கு எடுத்துச் சென்று எமக்குக் கிடைத்த திருவருளைச் சிதறவிடாது வீட்டிற்கே கொண்டு செல்ல வேண்டும் என்ற எங்களின் மதக்கோட்பாடு எங்கே. நாம் தேடித் தேடிச் சேகரித்து எந்தை முருகனுக்குப் படைத்தோம். அவை திருமுருகனடியார்களின் வயிற்றைச் சேர்ந்தால் தான் எங்கள் தெய்யோவின் திருவருள் கிடைக்கும் என்று பங்கிட்டு அளித்து மகிழ்ந்து ஏகும் அவர்களின் பக்தி எங்கே என்று ஒப்பிடவும் என் மனம் தவறவில்லை. சரி பிழை விளக்கங்கள் பலவற்றைப் பண்டிதர்கள் பௌராணிகள் சொல்லலாம். சமயம் என்பது வாழ்வு பேசுவதோ கதைப்பதோ நடிப்பதோ அல்ல என்பதையும் கந்தன் இச்சந்நிதியில் எனக்கு, எமக்கு உணர்த்தினான் என்பதையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள அவாவுறுகின்றேன். அத்துடன் அங்குள்ள நேர்த்தி ஒழுங்கை அறிவதற்காக ஒரு சகோதரனிடம் வினாவினேன். நாம் காவடி எடுப்பதானால் காவடிக்காக எவ்வளவு கட்டணம் என்றேன். இப்பவானால் இரண்டுபேருக்கும் (தவில் வாத்தியம்) 200, 300 ரூபாவரை என்றும் திருவிழாக் காலங்களில் என்றால் சற்று வித்தியாசப்படும் என்றும் கூறினார்கள். ஆக அதிலும் ஓர் சேவை மனப்பான்மையுடன் ஒரு திருப்பணி செய்வதாகவே படுகிறது. ஆனால் காவடி எங்கள் ஊரவர்களது போலன்று மிகச்சிறியதும் நடுத்தரமானதாகவும் பாரிய அலங்காரங்கள் அற்றவை என்பதைக் குறிப்பிடவேண்டும்.

ஆக இவற்றை எல்லாம் பார்த்தபடியிருக்க வாருங்கோ வாருங்கோ சாப்பாட்டிற்கு நேரமாச்சு என்ற அழைப்புவர மீண்டும் அதே திருமடத்திற்கு இரவு உணவுக்காகச் சென்றோம். மிகவும் அன்பான உபசரிப்பு. ஆனால் ஆளணித்தட்டுப்பாட்டை உணரக்கூடியதாக இருந்தது. அங்கே அவர்கள் எவ்வளவு சிரமத்தின் மத்தியில் தங்கள் பணியை அடியார்களுக்கு அன்னமிட அர்ப்பணிக்கிறார்கள் என்பதையும் உணரமுடிந்தது. எமது அடியவர்களே பரிமாற எல்லோரும் ஆனந்தமாகப் போதும் போதும் என அருந்தி இரவு 9.40 மணிக்கு மீண்டும் எமது விடுதி சென்றோம். அடுத்தநாள் அதிகாலை 4.00 மணிக்கு... (தொடரும்...

# வாழ்த்துச் செய்தி

**கலாநிதி கலைவாணி இராமநாதன் அவர்கள்**

சந்நிதியானின் சந்நிதியைத் தரிசிக்க வைக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் "ஞானச்சுடர்" என்னும் ஆத்மீக சஞ்சிகை தனது 16ஆவது ஆண்டிலே 200ஆவது மாதத்தில் கால் பதிக்கின்றமை அனைவரையும் ஆனந்தமடையச் செய்கின்றது. கௌரவ மோகன் சுவாமிகள் இந்த ஆச்சிரமத்தினை வித்திட்டு வளர்த்து பல்வேறு அறப்பணிகளை பல்வேறு நிலைப்பட்ட அறிஞர், அடியவர், அருளாளர் குழாத்தையும் அப்பணியில் ஈடுபடுத்தி இந்த மலரை இன்று பெருவிருட்சமாக்கியிருப்பது சந்நிதிக் கந்தன் திருவருள் என்றே சொல்லவேண்டும். சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் இப்பெரும்பணி "ஞானச்சுடராக" இன்று ஈழத்தில் மட்டுமல்ல உலகளாவிய நிலையிலும் தனது பேரறிவினையும் பெரும் தர்மப்பணியினையும் பரப்பி வருகிறது. "தொண்டு செய்வார் துன்புறுவார் அல்லர்" என்னும் சம்பந்தப் பெருமான் திருவாக்கிற்கு ஞானச்சுடர் தரும் செய்திகளும், ஆச்சிரமம் ஆற்றும் பணிகளும் இலக்கணமாய்த் திகழ்கின்றன.

அடியவர்களின் வயிற்றுப் பசிபோக்கும் அருட்பணியுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் ஆத்மீகத் தாகமுடையவர்களின் அருட்பசியை அறிவுப் பசியைப் போக்கும் விருந்தாகவும் அமைந்திருப்பதுதான் அதன் 200ஆவது மாத வளர்ச்சிக்கும் ஆதாரமாய் இருக்கின்றதெனில் மிகையாகாது. "செவிக்குணவில்லாவிடில் வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்" என்ற வள்ளுவர் வாக்கின்படி ஞானச்சுடரும் சந்நிதியான் ஆச்சிரமமும் இருவழிப் பாதையிலும் தற்துணிவோடும் முருகப்பெருமானின் பேரருளோடும் உன்னதமான பணியாற்றுவதை வாழ்த்திப் பாராட்ட சந்நிதியான் எமக்களித்த வாய்ப்புக் கூட அவனின் பெரும் கருணையாகும்.

இந்து ஆலயங்கள் அறப்பணிகளை சமூகப் பணிகளையும் ஆற்ற முன்வர வேண்டும் என்பதற்கு ஞானச்சுடர்மூலம் சந்நிதியான் ஆச்சிரமப் பேரவை மாதந்தோறும் அறைகூவல் விடுக்கின்றது. ஈழத்தில் ஒருசில ஆலயங்கள் துர்க்காபுரம் துர்க்கை அம்மன் ஆலயம்- தெல்லிப்பளை, அருள்மிகு நாகபூஷணி அம்மன் ஆலயம்- நயினாதீவு, வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம் போன்றவை இன்றைய காலகட்டத்தில் மக்களின் பசிப்பிணிபோக்க சேவையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது. சந்நிதியான் ஆச்சிரமம் நித்திய அன்னதானப் பணியுடன் வாரத்தில் இரண்டு நாட்கள் வைத்தியசேவை, சாதுக்கள், முதியோர், துறவிகளை ஆதரித்தல் ஆகிய பணிகளைச் சேவையாகச் செய்து வருகின்றது. ஞானச்சுடர் மூலம் அறிவுக்கும் உணவு வழங்குவதிலும் தன்னிகரற்ற சேவையை வழங்கி வருவதனை அனைவரும் பாராட்டி வாழ்த்துவதுடன் நம்மையும் இத்திருப்பணிகளில் ஓரளவாவது ஈடுபடச் செய்வோமானால் அதுவே சந்நிதி முருகனின் பெரும் கருணையைப் பெற்றுத் தரும் பெரும்பேறாகும்.

ஞானச்சுடரில் மாதந்தோறும் மலரும் வாடா மலர்களாக குரளமுதம் முதல் யோகர் சுவாமிகள் வரை மட்டுமல்ல, குழந்தைகள், இளைஞர்கள், முதியோர், சாதுக்கள், துறவிகள்

**பொறுமை பெருந்தன்மைக்கு அணிகலன்.**

எனச் சமூகத்தின் சகல தரப்பினரையும் அரவணைத்து பல்வேறுதரப்பட்ட செய்திகளை வழங்கி வருகிறது. அருணகிரிநாதர், தாயுமானவர், திருமூலருடன் ஈழத்தில் நாவலர், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி முத்தையா எனப் பல்வேறு ஆத்மீக அடியவர்களையும் இணைத்து மக்கள் சமுதாயத்திற்கு அன்னாரது சேவைகளையும் பணிகளையும் நினைவூட்டுவதால், தாமும் அவ்வாறு வளரவேண்டுமென்ற ஆத்ம தாகத்தை நிச்சயமாக ஞானச்சுடர் மக்களிடையே வளர்ந்து வருகின்றதென்றால் மிகையில்லை.

"ஞானச்சுடர்" சஞ்சிகையின் ஒளிவீச்சு - ஆத்மீக தீபம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக ஈழத்து மக்கள் வாழ்வில் அருள்ஒளி பாய்ச்சி பெரும் ஆலவிருட்சமாக நின்று நிலைபெற சந்நிதிக் கந்தனின் திருவருளை வணங்கி வாழ்த்திப் போற்றுகின்றேன். "வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ" என்ற சேக்கிழார் அருள்வாக்குப்போல நாமனைவரும் அறவழியில் வாழவும் ஆத்மீக ஞானமடையவும் ஞானச்சுடரானது எல்லோருக்கும் என்றும் வழிகாட்டியாக வளரட்டும் என்று பாராட்டிப் பணிவோம்.

தவத்திரு மோகன்சுவாமிகளும் அவரது சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் அருட்பணிகளையும் என்றும் வாழ்த்தி சந்நிதி முருகனின் திருவருளில் எல்லோரும் நிலைபெறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததினால்
பூமேல் மையல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே"
(கந்தரநுபூதி)

"ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்க்கவே"

## அவனருளின்

புண்ணிய நாற் பாதங்களும்
மறையருள் வேதங்களாய்
தன் னொளி பரப்பும்
தனித்துவ வடிவங்களாய்
சந்நிதி முருகனருளாய்
எங்கள் ஞானச் சுடரும்
நுண்ணிய கருத்துக்கள்
நுனுக்கிய கடலாய்
எண்ணிய படியே
எடுத்தியம்பும் மொழியும்
பண்ணிய பணிகள் யாவும்
அவனருளின் பயனே!

- இராம ஜெயபாலன் -

# விறகு வியாபாரப் பெருமான்

திரு அ. சுப்பிரமணியம் அவர்கள்

சிவநெறிபேணும் செந்தமிழ்ப் புராணங்கள் மூன்று. அவை கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவே. சிவபெருமானுடைய முக்கண் போன்று ஒளிர்வன. இவற்றுள் கந்தபுராணம் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளால் பாடப்பெற்றதாகும். "கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை" என்பர். முருகப்பெருமானுடைய செயற்கரிய செயல்களும் வள்ளி திருமணம் முதலிய திருவிளையாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளன. முருகப்பெருமானே முதல் அடி கொடுத்துத் திருத்தங்களும் செய்துள்ளதாய வரலாறுமுடையது. பெரியபுராணம் சேக்கிழார் பெருமானால் அருளப்பட்டதாகும். "உலகெலாம்" என்று தொடங்கி "உலகெலாம்" என்று முடிகிறது. இதன்கண் 63 தனியடியார்களதும் தொகையடியார்கள் 9 பேர்களதும் தொண்டின் பெருமைகள் பேசப்படுகின்றன. சேக்கிழார் சுவாமிகள் இதற்கிட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்" என்பது. ஆயினும் இதன் பெருமை கருதிப் "பெரியபுராணம்" எனப்படுகிறது. இது திருமுறைகளுள் பன்னிரெண்டாம் திருமுறை யாகும்.

"திருவிளையாடற்புராணம்" பாடியவர் பரஞ்சோதி முனிவராவர். இதில் கடவுளரின் அருளாடல்களும் அச்செயல்களோடு இணைந்த கோவில்களின் பெருமைகளும் பேசப்படு கின்றன. இது "ஆலவாய்மான்மியம்" எனவும் அழைக்கப்படுகிறது. இது சோமசுந்தரப் பெருமானுடைய 64 திருவிளையாடல்கள் பற்றி உரைக்கிறது. ஆடல்கள் பெரிதும் மதுரை மாநகரையே சூழ்ந்து வருவதாலும் சோமசுந்தரப் பெருமானது விளையாட்டுக்களாதலும் "மதுரைப் புராணம்" எனவும் அழைக்கப்படுகிறது. "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி..." எனும் மணிவாசகப் பெருமானது வாக்கிற்கமைய இறைவன் மேற்கொண்ட செயற்கருஞ் செயல்கள், விளையாட்டு என்பது மரபு. கூடல்மாநகரை அதாவது மதுரையம்பதியில், எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் சோமசுந்தரப் பெருமானுடைய தல மகிமை பேசும் விளையாட்டாதலின் "கூடற் காண்டம்" எனவும் அமைந்துள்ளது. "விறகு விற்ற படலம்" வரகுண பாண்டியனுக்குச் சிவலோகம் காட்டிய வரலாறு என்கிறார். பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு பாடுகிறார்.

"நெடியவன் பிரமன்றேட நீண்டவன் றென்னந் கேழின்
முடியதாஞ் சிவலோகத் தைக்காட்டிய முன்றயகையன்
படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகாளாகி
அடிமை யென்றடிமை கொண்ட அருட்டிறம் எடுத்துச் சொல்வாம்"

(திருவிளையாடற் புராணம் 2031)

வரகுண பாண்டியனுடைய அரசவைக்கு "ஏமநாதன்" எனும் வடநாட்டு யாழ்ப்பாணன் வந்தான். அவன் வேறு பல அரசவைகளிலும் யாழ் வாசித்து அங்குள்ள புலவர்களை வென்று விருதுகளும் பரிசும் பெற்று வந்தவன். இங்கும் அரசனைப் புகழ்ந்து வாழ்த்தி யாழ்

வாசித்தான். மகிழ்ந்த மன்னவன் பாணனுக்குப் பரிசு பல கொடுத்து இருப்பிடமும் உணவுப் பொருளும் கொடுத்தான்.

இவையெல்லாம் பெற்ற ஏமநாதன் தற்பெருமை தலைக்கேற யாழ் வாசித்தலில் தன்னை வெல்வார் எவருமில்லை என்று கர்வம் கொண்டமையை உணர்ந்த வேந்தன் தனது அவைப்புலவரான பாணபத்திரனை அழைத்து "நாளை அவையிலே ஏமநாதனுடன் பாடுக" என்று பணித்தான். இது கேட்ட பாணன் "தென்னவர் கோனே, அடியேன் உமது திருவுள்ளக் கருத்தின் வலியாலும் கூடலில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் அருளாலும் நெறி வழுவாது பாடி ஏமநாதனை வென்று செருக்கினை ஒழிப்பேன்" என்று சூளுரைத்துச் சென்றான். செல்லும்போது கடைவீதிகளில் ஏமநாதனின் மாணாக்கர் பாடும் இசைகேட்டு ஐயகோ! நான் கெட்டேன் என்று வருந்தி சோமசுந்தரப் பெருமானிடம் சரணடைந்து முறையிட்டு இல்லமேகி உறங்கலானான்.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ" எனும் மணிவாசகப்படி இறைவன் இடையில் அழுக்கடைந்த கந்தையை உடுத்தி முடியில் கொடுவாள் செருகிக் கால்களில் தேய்ந்த செருப்புகள் மாட்டிப் பழைய தைக்கப்பட்ட உறையுள் இசைக்கருவியாகிய யாழையும் தண்டையும் வைத்துத் தோளில் மாட்டித் தலையில் சும்மாடு தாங்கி விறகு சுமந்து பள்ளம் பட்ட தலையினராய் ஆடிப்பாடி வரக்கண்ட அன்புள்ளம் கொண்டவர் விறகு வாங்குவோராய் விலை கேட்க அதிகவிலை கூறி அதிர்ச்சியூட்டி இளைத்தவர்போல் சுமைதாங்கிமேல் விறகுக் கட்டை இறக்கி வைத்து மடுவில் முகம் கழுவி நீர் பருகி மாலையானதும் ஏமநாதனது வீட்டை அடைந்தார்.

இருள் கவிய வாசல் திண்ணையோரம் விறகுக் கட்டை வைத்துச் சிரம பரிகாரம் செய்து பசி வயிற்றைக் குடைவது போன்று பாவனை செய்து உறங்குதல் அற்றவராய் உறையுள் இருந்தெடுத்த யாழினை வாசித்துப் பாடினார். இதுகேட்டு எழுந்து வந்த ஏமநாதன் இனிமையாகப் பாடும் "நீ யார்?" என்றான். அதுகேட்டுப் பயந்தவர்போல் நடித்தவர் பதறினராய் நான் "பாணபத்திரனின் அடிமை" என்றார். அத்தோடு இசை ஞானியாய பாணபத்திரனிடம் பயிலும் மாணாக்கருள் யானும் ஒருவனாக இசைகற்று வந்தேன். ஆனால் எனது மூப்பின் காரணமாக "பயிலும் தகுதி இழந்தாய்" என்று தள்ளி விட்டான். அதனால் பசிபோக்கவென விறகு வெட்டி விற்று வந்தேன். அதுகூட இன்று விலைபோகவில்லை. இருட்டி விட்டது. இத் திண்ணையில் படுத்து விடிந்ததும் எழுந்து செல்ல எண்ணினேன். உறக்கம் வராமையால் உறைக்குள் கிடந்த யாழை மீட்டிப் பாடினேன். அது தங்கள் உறக்கத்தைக் கெடுத்து விட்டமையை "மன்னிக்க வேண்டுகிறேன்" என்றார்.

"காற்றுப்போன துருத்திபோல் தொந்தி சரிய நின்றவரை ஏமநாதன் பார்த்து "விறகு விற்கும் பெருமானே; "நீ பாடிய அப்பாடலை மீண்டொருதரம் பாடுக" என்றான். விறகாளரும் யாழை இடது தோளில் சாத்தி தண்டை எடுத்து நரம்பைத் தெரிந்து தாக்கிப் பண்ணெழுப்பி முறுக்காணியைச் சுழற்றி வார் கட்டில்கௌவும் படி நரம்பைப் பிணித்து "வம்பறா மல"ரில் இருந்து தேன் ஒழுகினாற்போன்று பரவுமாறு சுருதியை எழுப்பிச் சுரங்கள் ஏழும் தானங்கள் தோறும் விரல் சென்று பரவ வயிறு குளிபட அழும் முகம் காட்டி நிற்கும் மாசறச் "சாதாரிப் பண்"ணினைப் பாடினார். இதுகேட்ட ஏமநாதன் மனமொழி மெய்மறந்து மயங்கவும் இறைவர் விறகோடும் மறைந்தருளினார்.

மயக்கம் தெளிந்த ஏமநாதன் "இது நான் அறிந்த சாதாரிப் பண் அன்று. இம் மண்ணில் யாரேனும் இதனை அறிந்துளோம் என்று கூறினாருமில்லை. இது தேவகானம். பாணபத்திரனால் விலக்கப்பட்ட முதியோன் இசையிதுவாயின் அவனது இசையாசிரியனது திறமை எத்தகைத்தோ? என்றெண்ணி மறு நாள் அரசவையில் மூக்குடைபட விரும்பாது மானமும் பதைப்பும் பயமும் முன்தள்ள இரவோடிரவாக மாணாக்கருடன் சேர்ந்து வடதிசை நோக்கி ஓடலானான்.

அக்கணம் பாணபத்திரன் கனவில் வந்த இடபாரூடராய சோமசுந்தரப் பெருமான் "யாம் பாணபத்திரனின் அடிமையென்று கூறி முதிய விறகாளாகி இசைபாடி மயக்கி அவனு டன் சீடரையும் வடதிசைக்கோட்டி விட்டோம்" என்றருளி மறைந்தார். இதனால் பதறியெழுந்த பாணன் "எம்பிரானே! இதற்கா தங்களிடம் முறையிட்டேன். தற்புகழ்ச்சி கொண்டவனை வெல்லும் வகையை எனக்கருள்வதை விடுத்து விறகு வெட்டியாகி வெயிலில் அலைந்து தலை நோவச் சுமந்து என்னையே பாவியாக்கினீரே" என்று அழுது தொழுது விழுந்தெழுந்து நீராடி பெருமான் சந்நிதானமடைந்து வீழ்ந்து வணங்கி அங்கப்பிரதட்சணம் செய்து அரசவை அடைந்து வேந்தனைப் பணிந்து நின்றான்.

பாணபத்திரன் வரவுகண்ட மன்னன் ஏமநாதனை அழைத்துவர ஏவலாளரை ஏவி னான். அரசன் கட்டளையை நிறைவேற்றச் சென்ற ஏவலர் வீட்டில் அவன் இல்லாமை கண்டு திகைப்ப அயல்வீட்டார் வந்து அம் மனிதன் நேற்று இங்கிருந்தான். மாலைநேரம் விறகு சுமந்து வந்த கிழவன் ஒருவன் தான் பாணபத்திரனின் அடிமை என்றும் பாட்டுப் பாடினான். அதன்பின் நடந்ததெதுவும் அறி யோம். நீவிர் தேடுபவனும் பிறரும் இரவோடிர வாக ஓடிவிட்டனர் போலும். பெரிய திருடர் கூட்டம் போலும்" என்றனர். இது கேட்ட ஏவலா ளர் அதை அப்படியே அரசனிடம் கூறினர். இதுகேட்டு அதிசயித்தவரசன் பாணபத்திர னைப் பார்த்து "நீ நேற்று இங்கிருந்து சென்ற பின்பு யாது? செய்தாய்" என்று கேட்டார்.

அக்கேள்வியைச் செவிமடுத்த பாண பத்திரன், அரசே! நான் இங்கிருந்து சென்ற போது வீதியில் ஏமநாதனின் மாணவர் பாடியது கேட்டுப் பதறி அவனை வெல்லும் முறை அருளவேண்டி சோமசுந்தரப் பெருமானிடம் விண்ணப்பித்து வீட்டுக்குச்சென்று உறங்கி விட்டேன். இரவு எனது கனவிலே தோன்றிய இடபாரூடராகிய சோமசுந்தரப்பெருமான் "உம் பொருட்டாக விறகாளாக வேடம் பூண்டு விறகு சுமந்து வீதிவழி நடந்து ஏமநாதனின் மனை யடைந்து இருள் கவிய வாசல் திண்ணை யோரம் விறகுக் கட்டினை வைத்து "சாதாரிப் பண் பாடி வென்று அவனை வடநாட்டுக்கு ஓட்டிவிட்டோம்" என்றார். யானும் விழித் தெழுந்து இறைவனை அடைந்து அழுது தொழுது இங்கு வந்தேன். இதுவே நடந்தது என்று பணிவுடன் கூறினன்.

ஏவலர் வந்து கூறியதும் பாணபத்திரன் கண்ட கனா நிகழ்ச்சியும் ஒத்திருத்தலால் இது கூடல்வாழ் சோமசுந்தரப் பெருமானது திருவிளையாடலேயென்று உணர்ந்த வரகுண பாண்டியன் இசைவல்லானை யானைமீதமர்த்தி வீதிவலம் வந்து மணியும் பொன்னும் பொரு ளும் முத்துமாலையும் சீர்வரிசை செய்து தனதுள்ளக் கிடக்கையை உருக்கமாக வெளிப்படுத்தினான்.


ஸ்ரீமத் மயில்வாகன சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் வெளியிடப்பட்ட
அருணாசல அட்சரணமாலை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் இசை அமைத்த
சத்தியன் (முரளி) அவர்களோடு இணைந்து பாடிய பல்கலைக்கழக
மாணவிகளையும் ஆச்சிரம சுவாமிகள் கௌரவிக்கும் நிகழ்வு





வட இந்திய யாத்திரையின்போது அம்பாஜி நகரில் உள்ள அம்மன் ஆலய
தரிசனத்திலும் பஞ்சலிங்க தரிசனத்திலும்
ஆச்சிரம சுவாமிகளுடன் பங்குபற்றிய அடியார்கள்





"ஆதலா லெனக்குடையர் நீருமக்கு நான் அடியேன்
ஈதலா லெமக்கும்மோடு வழக்குவேறில்லை நான்
ஓதலாவதோர் குறையுளதின்று தொட்டுமக்கு
வேத நாதனைப் பாடலே கடனென விடுத்தான்"

(திருவிளையாடற்புராணம்- 2099)

இதுகேட்டு மகிழ்ந்த பாணபத்திரன் வேந்தன் பாதம்பணிந்து அரசு தந்தவையனைத்தும் நற்றமிழ் வல்ல நாவலர்கட்கும் மாணவர்க்கும் பகிர்ந்தளித்துப் பெருமானை என்றும் பாடும் தொழிலே தொண்டாய்க் கொண்டு இல்லமேகி இன்புற்றிருந்தார். "யார் அறிவார் அரன்றன் அலகிலா விளையாடல்"

"பரஞ்சோதி முனிவர் திருவடி போற்றி"
"கூடற் பெருமான் கூத்தே போற்றி"
"திருவருள் சரணம்"

# திருநீர் அணிவது எதற்காக?

குளியலைப்போலவே திருநீரணிவதும் அன்றாட வாழ்க்கையின் ஓர் முக்கிய பாகமாயிருந்தது. முற்காலத்தில்,

முழு விசுவாசத்துடன் ஒரு சிட்டிகை திருநீர் எடுத்து நெற்றியில் வைத்த பின்னே பண்டைய பக்தர்கள் ஜெபத்துக்கு அமருவர். ஜெபத்தில் நம்பிக்கை நிறைந்திருப்பது போலவே திருநீரில் மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கின்றன.

சுத்தமான திருநீர் தயாரிக்கும் முறை காலப்போக்கில் மாற்றமடைந்த போதிலும் பழைய முறைகளை கடைப்பிடிப்பவர்களுமுண்டு. புல் மட்டும் அருந்தும் பசுவின் சுத்தமான எருவை சிவராத்திரி அன்று உமியில் எரித்துக் கிடைக்கும் சாம்பலைத் தண்ணீரில் கலக்கி மறுபடியும் உலரவைத்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தபின் நெற்றியிலிடுவதற்காக பாதுகாத்து வைக்க வேண்டும்.

திருநீரை நனைத்தும் நனைக்காமலும் அணிவதுண்டு. திருநீரணிந்தால் உடலின் துர் நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கும், உடல்நிலையை மேன்மையடையச் செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியாகத்தின் வடிவமான சிவபெருமானை மகிழ்விக்க மிகச்சிறந்தது திருநீர் அணிதல் என்று இந்துமதம் கருதியுள்ளது. நெற்றி, கழுத்து, தோள், மூட்டு முதலிய இடங்களில் திருநீர் அணிய வேண்டும் என்று பொதுவாகக் கூறுவதுண்டு.

திருநீரை நனைத்து அணிவதன்மூலம் உடல் வெப்பம் குறைவதனால், ஜுரம் பாதித்தவர்களின் நெற்றியில் நனைந்த திருநீர் பூசினால் ஜுரம் இறங்குவதைக் காணலாம்.

மூலிகைச் செடிகளை சுத்தமான நெய்யில் ஹோம குண்டத்தில் வேக வைத்த பின் எஞ்சியிருப்பதை திருவிபூதி என அழைப்பதுண்டு.

-ஓலைச்சுவடி-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| திரு ராகுலன் | புத்தூர் | 1000. 00 |
| திரு செந்திலிங்கம் | புத்தூர் | 1000. 00 |
| வே. பொன்னம்பலம் குடும்பம் | கைதடி | 5000. 00 |
| சுரேஷ்குமார் அகல்யா | பிரான்ஸ் | 5000. 00 |
| சி. சிவரூபன் | அச்சுவேலி | 5000. 00 |
| திருமதி இ. விஜேந்திரன் | ஏழாலை | 3000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 3000. 00 |
| M. சிவகுமார் | ஜேர்மனி | 2000. 00 |
| திரு மகேந்திரன் | புலோலி | 3000. 00 |
| அ. சத்தியசீலன் | கொக்குவில் | 2000. 00 |
| அ. அசோக் | அல்வாய் | 5000. 00 |
| யோ. அமுதாம்பிகை | கனடா | 5000. 00 |
| ந. ரஞ்சன் | ஏழாலை | 2000. 00 |
| சி. தெய்வீகரன் | இன்பருட்டி | 4000. 00 |
| S. மகேஸ்வரன் | சுவிஸ் | 2000. 00 |
| ப. கிருபாகரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| ஸ்ரீ அஸ்வின் | பிரான்ஸ் | 5000. 00 |
| பா. பிரதீபன் | அளவெட்டி | 1000. 00 |
| ம. சிவபாதன் | அளவெட்டி | 1000. 00 |
| இ. சோதிபாலன் | அளவெட்டி கிழக்கு | 1000. 00 |
| திருமதி நந்தகோபால் குடும்பம் | நோர்வே | 5000. 00 |
| அக்ஷயன் திலீபன் | டென்மார்க் | 17000. 00 |
| அன்ரியம்மா மூலம் சங்கர் | கனடா | 5000. 00 |
| தாட்சாயிணி கணாதீபன் | தெகிவளை | 10000. 00 |
| Dr S. குகதாசன் (கண் வைத்திய நிபுணர்) | கோண்டாவில் | 15000. 00 |
| ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) | இணுவில் | 5000. 00 |
| செல்வி சுபாஷினி சிதம்பரநாதன், S. தர்மலிங்கம் மாதர்சங்க வீதி | சித்தங்கேணி | 5000. 00 |
| சி. செல்வநாயகம் | கைதடி வடக்கு | 5000. 00 |
| சோ. கந்தபாக்கியம் | தும்பளை | 4000. 00 |
| உ. அஸ்விதா | சுவிஸ் | 3000. 00 |
| அ. சிவகுமார் | தாவடி | 8000. 00 |

| | | |
|---|---|---|
| வே. ஜெயரஞ்சன் | கல்வியங்காடு | 5000. 00 |
| K. கிருஷ்ணமேனன் | அச்சுவேலி | 190 பவுன்ஸ் |
| பார்வதி வல்லிபுரம், கிருஸ்ணபிள்ளை | கரணவாய் | 1000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | பருத்தித்துறை | 3500. 00 |
| க. காண்டீபன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| சோமசுந்தரம் சரஸ்வதி | பிரான்ஸ் | 100 யூரோ |
| திரு கிருஸ்ணபிள்ளை குடும்பம் | பிரான்ஸ் | 20000. 00 |
| குமாரசாமி குடும்பம், ஜெயக்குமார் குடும்பம் | சாவகச்சேரி | 5000. 00 |
| இ. திருஞானசம்பந்தர் | மலேசியா | 20000. 00 |
| சு. பொ. நடராசா (அண்ணா தொழிலகம்) | இணுவில் | 10000. 00 |
| க. சபாபதிப்பிள்ளை | பருத்தித்துறை | 6000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் ஆத்தியடி | பருத்தித்துறை | 3000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தவநந்தன் | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| செ. யதுர்ஷன் | புத்தூர் | 1000. 00 |
| M. சதாசிவமூர்த்தி | கனடா | 150 டொலர் |
| வ.ஆ. தங்கமயில் | வதிரி | 2மூடை அரிசி |
| சபா ரேடர்ஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம் | கனடா | 100 டொலர் |
| வ. குமாரசாமி | ஏழாலை | 5000. 00 |
| திரு புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையம் | சாவகச்சேரி | 15000. 00 |
| K. ஜெகதீஸ்வரன் (உற்சவகாலத்திற்கு) | டென்மார்க் | 25000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 5000. 00 |
| S. மயூரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சரணியா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திருமதி சி. இராசதுரை | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| ராம் துஷித்தா | தாவடி | 1000. 00 |
| க. நடராஜா | தாவடி | 500. 00 |
| வ. சர்வேஸ்வரன் | தாவடி | 300. 00 |
| புண்ணியமூர்த்தி சஜீபன் | மாவிட்டபுரம் | 5000. 00 |
| இ. மதுஷன், இ. விதுஷன் | இளவாலை | 2000. 00 |
| ப. நிதர்ஷிகா, ப. தனுஷிகா, ப. கனுஷ்காந் } ஈச்சமோட்டை | சுண்டுக்குழி | 2000. 00 |
| ச. கமலநாதன் நாவற்குழி | கைதடி | 5000. 00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 5000. 00 |

(தொடரும்...

# ஞானச் சுடரே வாழிய நீ!

திரு இரா. ஸ்ரீநடராசா அவர்கள்

எந்நிதியும் தருவான் செல்வச் சந்நிதியான் என்பது அவனடி தொழுதிடும் அடியார்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். சந்நிதிக் கந்தனின் அருள்பெற்று அறப்பணி புரியும் ஆச்சிரமமாக சந்நிதியான் ஆச்சிரமம் விளங்குகின்றது. நித்திய அன்னதானப்பணியோடு அளப்பரிய சமூகப்பணிகளையும் ஆற்றிவருவது சந்நிதியான் ஆச்சிரமத்தின் தனிச்சிறப்பாகும். இதற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்குபவர் முருகப்பெருமானின் முழுமையான அருட்கடாட்சம் பெற்ற மோகனதாஸ் சுவாமிகளாவர். சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்வேறு சமூகப் பணிகளையும் கௌரவித்து மோகனதாஸ் சுவாமிகளுக்கு "லங்கா இரத்தின ஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூகப்பணிகளில் முக்கியமானது "சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை"யினால் மாதாந்தம் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" எனப்படும் ஆன்மீக சஞ்சிகையாகும். இந்நூல் வெளியீடு தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை எவ்வித தடங்கலுமின்றி தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது முருகப்பெருமானின் அருட்செயல்களில் ஒன்றாகும். பதினாறு வருடங்களைக் கடந்து இன்று இருநூறாவது சுடர் வெளிவருவதையிட்டு சைவ உலகம் பெருமை கொள்கிறது. காலத்துக்குக் காலம் ஞானச்சுடர் புதுப்பொலிவு பெற்று பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. சைவ மக்கள் ஒவ்வொருவரும் வாசித்துப் பயன்பெறக் கூடிய பல அரிய எழுத்தாக்கங்கள் இதில் அடங்கியுள்ளன. கதைகள், கட்டுரைகள், கவிதைகள், பொன்மொழிகள், தகவல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் ஆன்மீகக் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் அழகு முருகனின் உருவப்படத்தோடு சந்நிதியான் ஆச்சிரமத்தின் முகப்பையும் கொண்டு கவர்ச்சியான அட்டைப்படத்துடன் உள்ளே சென்றால் குறள்வழி, நற்சிந்தனை, சுடர் தரும் தகவல் மற்றும் ஆன்மீக எழுத்தாளர்களின் கட்டுரைகள், கவிதைகள், சிறுவர் கதைகள், சைவ சமய வினாவிடைகள். சமய நூல்களின் விளக்கவுரைகள் எனப் பல்வேறுபட்ட அம்சங்களையும் தாங்கிவரும் ஞானச்சுடரே! உன் சிறப்பை அளவிட முடியாது. இன்றுவரை ஞானச்சுடரில் பல்வேறுபட்ட அறிஞர் பெருமக்களும், அடியார்களும், வாசக அன்பர்களும் தங்கள் காத்திரமான படைப்புகளை வழங்கி ஆன்மீக உலகை விளிப்படையச் செய்துள்ளனர். ஆன்மீக நாட்டம் குறைந்து வரும் இக்காலகட்டத்தில் "ஞானச்சுடர்" உலகமெங்கும் அருள்ஒளி பரப்பிக் கொண்டிருப்பது சைவ மக்கள் பெற்ற பெரும் பேறாகும்.

நாகரிகம் என்ற போர்வையில் சைவ கலை பண்பாடுகளும், இறை நாட்டமும் அருகிவரும் இவ்வேளையில் சந்நிதியான் ஆச்சிரமம் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிவரும் இப்பெரும்பணி தொடர சந்நிதி முருகனின் அருள் கிடைத்துக்கொண்டேயிருக்கும். சைவ மக்களின் அக இருளைப்போக்கி அறிவொளி ஏற்றி மனிதனை மனிதனாக வாழவைப்பதில் பெரும் பங்காற்றிவரும் ஞானச் சுடரே! இன்னும் பலநூறு சுடர் ஏற்றி வாழிய நீ! வேல் கொண்டு விளையாடும் முருகப்பெருமான், நூல் என்னும் ஞானச்சுடர்மீது வந்திடுவான். முருகப் பெருமானின் அருள்பெற்ற ஞானச்சுடரே! சைவ மக்கள் அனைவரினதும் கரங்களிலே தவழ்ந்து வாழிய நீ பல்லாண்டு.

மலர் வெளியீட்டுக்கு வருகைபுரிந்த பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா அவர்களும்
திரு. சி. பத்மநாதன் J.P. அவர்களும் உரை ஆற்றும் நிகழ்வு





ஞானச்சுடர் வெளியீட்டின் நிகழ்வில் பேரவைப் போஷகருள் ஒருவராகிய பிரம்மஸ்ரீ ப. மனோகரராக்குருக்கள் உரையாற்றும் நிகழ்வு



ஞானச்சுடர் வெளியீட்டுரை வழங்க வருகைபுரிந்த செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள்



# அர்த்தமுள்ள இந்துமத தத்துவங்களும் கோட்பாடுகளும்

திரு வி. செல்வரத்தினம் அவர்கள்

இந்துமதம் அனாதியானது, விஞ்ஞான பூர்வமானது உலக மதங்களில் தொன்மை யானது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்ச உண்மைகளையும், உயிரின் இயக்கத்தை யும், மிக அழகாக உணர்த்துவது இந்துமதம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் - ஒவ்வொரு காலத்தில் - ஒரு தேசத்தில் - ஒரு நாளில் - ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ஆனால் நமது இந்து மதமானது, ஒரு காலத்தில் - ஒரு தேசத்தில், ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல், உலகம் தோன்றிய காலம் முதலாய் வந்து கொண்டிருக்கும் ஒரு மதம். ஒப்பற்ற மதமும்கூட. இந்துமதம் என்பது ஒரு சன்மார்க்க முறை- நல்வாழ்க்கை நடத்தும் முறையாகும்.

இந்துமதமானது, ஆன்மீக பலத்தால் மாத்திரமே இருந்து வருகிறதே ஒழிய, பிரசார பலத்தினாலோ எண்ணிக்கை பலத்தினாலோ இருக்கவில்லை. எல்லா மதங்களையும் அவற்றின் முடிவுகளையும் தன்னுள் அடக்கிக்காட்டி ஒரு மதத்தையும் இழக்காமல் திகழ்ந்து விளங்குவது இந்துமதம்.

இல்லறத்தாலும் துறவறத்தாலும் இறைவனை அடையலாம் என்று கூறுவது இந்துமதம். "முத்தியடைவதற்கு ஏற்ற மதம் எங்கள் இந்துமதமே. எப்பெயரைக் கொண்டு எங்கு நின்று வழிபடினும் அவையனைத்தையும் இறைவன் ஏற்றுக்கொள்கிறான் என்ற சமரசக் கருத்தினை வெளியிடுகிறது இந்துமதம்.

இதனை,

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்று சிவஞான சித்தியாரில் கூறப்பட்டுள்ளது.

நல்லவர்களை வளர்ப்பது இறைவனுடைய திட்டம். அதற்காக அவர் உலகை அமைத்திருக்கிறார். ஆனால் நல்லவர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாகக் கெட்டவர்கள் தோன்றிவிடுகிறார்கள். அப்படி அவர்கள் தோன்றத் தோன்ற அவர்களை அழிக்கும் செயலை இறைவன் செய்தே வருகிறார்.

அதாவது நல்லவர்களைக் காப்பாற்றுவதன் மூலமாகவும் கெட்டவர்களை அழிப்பதன் மூலமாகவும் இறைவன் இப்பூமியைத் தாங்குபவர் ஆகிறார். இது இந்துமத தத்துவமாகும்.

இந்துமதத் தத்துவத்தின்படி நாம் செய்யும் தவறுகளுக்குத் தண்டனையின்றித் தப்பமுடியாது. அதை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். சிலருக்கு இந்த ஜென்மத்திலேயே அது ஏற்படலாம். அல்லது மறு ஜென்மத்துக்கும் போகலாம்.

எல்லாம் விதிப்படிதான் நடக்கும் விதியை எவராலும் வெல்ல முடியாது என்று இறைவனை மறந்து வாழக்கூடாது. விதியை மதியால் வெல்லலாம். இறை பக்தியினால், அந்த விதிப்படி நடந்தால் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படும். அதனால் அந்தப் பாரம் குறையும். இதுதான் இந்துமதத் தத்துவம்.

இந்துமதத்தின் தத்துவங்கள் மேலை நாட்டினரை வியப்படைய வைத்தது. மகான்கள் பல இடங்களில் தோன்றி, இந்துமதத் தத்துவங்களை உலகினருக்கு விளக்கினார்கள். நாம் என்ன என்ன செய்கிறோம் அதற்குத் தக்கதாக பலன் பெறலாம் என்று இந்து மதம் தெளிவாகக் கூறுகிறது. தினை விதைத்து விட்டு நெல் அறுவடை செய்யமுடியாது. அதேபோல் பாவங்களைச் செய்துவிட்டு - தவறுகள் செய்துவிட்டு நிம்மதியாக வாழமுடியாது.

இந்து மதத் தத்துவங்கள் ஆன்மீகத்தைப் பற்றியும் விளக்குகிறது. லௌகீதத்தைப் பற்றியும் விளக்குகிறது. அவ்வண்ணமே துறவறத்தின் பெருமையையும் இல்லறத்தின் மேன்மையையும் விளக்குகிறது.

இந்துமதம் போற்றி வருகின்ற, ஆலய வழிபாடும், புராணக் குறிப்புகளும், விஞ்ஞான வானியல் அடிப்படையில் அமைந்தவையே அன்றிக் கட்டுக்கதையல்ல. இதை இன்னும் ஆழமான ஆராய்ச்சிகள்மூலம் அணுகுவோமானால் நம் உடல் நலத்திற்கும் ஆரோக்கிய வாழ்வுக்கும் தேவையான அனைத்தும் நம் இந்துமதத்தில் இருப்பதை நம்மால் உணர முடியும். நம் மதம் பொய்யான, போலியான எதையும் எப்போதும் சொல்லவில்லை. இதில் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் இன்று நாம் மிகுந்த பிரயாசையுடன் ஆராய்ந்து அறிவிப்புக்களாகச் செய்துவரும் விஞ்ஞான உண்மைகளே. நவீன விஞ்ஞான யுகத்தின் கண்டுபிடிப்புக்கள் அனைத்தும் நம் முன்னோர்கள் எப்போதே சொல்லி வைத்துள்ள மெய்ஞ்ஞான உண்மைகளேயாகும். மேலும் இவையே இந்துமதத் தத்துவங்களேயாகும்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் என். தாசாலமன் என்ற பெண்மணி "இந்து மத வேதங்கள் உலகில் மிகப்பழமையான நூல்களாய் இருக்கின்றன. இதன் காலத்தை சரியாக சொல்லமுடியாது. கிறிஸ்து பிறப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவை ஓலைச்சுவடிகளில் இருந்து இருக்கின்றன. நான் சமஸ்கிருதம் நன்கு படித்து இருக்கிறேன். சமஸ்கிருதம் படிக்காதவர்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய வாய்ப்பை இழந்தவர்கள். சமஸ்கிருதம் படித்து இருந்தால் உலகத்திலே பிறமொழிகளில் கிடைக்க முடியாத அருமையான நுட்பமான விஷயங்கள் பலவற்றை தெரிந்து இருக்கலாம்" என்று சொன்னார்.

பேரறிஞர் மார்க்ஸ் முல்லர் "ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க உரோம நூல்களைப் படித்தால் போதாது; நம்முடைய அக வாழ்க்கை நிறைவானதாகவும், பல நலம் பொதிந்ததாகவும் உலகளாய் விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமையவேண்டுமாயின் இந்து மதத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாதது ஆகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்த வல்லதாக உள்ளது" என்றார்.

கடவுள் பக்தி உள்ளவர் ஒருவன் கடவுளைப் பார்க்க முடியாது. ஆனால் அவன் எல்லா உயிர்களிடமும் கடவுளை உணருகிறான். எல்லா உயிர்களிடமும் அன்பாக இருக்கிறான். அதனால் அவன் யாரிடமும் பகைமை கொள்வதே இல்லை. இதுவே இந்து மதம் காட்டும் பக்தி வழி. இதனை உலகில் உள்ள எல்லா மக்களும் உணர்ந்து விட்டால் இன்று உலகில் இத்தனை பேராபத்துக்களும், பூசல்களும், சச்சரவுகளும் வர இடமில்லை.



# போற்றித் திருவகவல்

## சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கன்னார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக் கருள்வாய் போற்றி



**பதவுரை:-**

மூவா நான்மறை முதல்வா போற்றி- எக்காலத்தும் மூத்தல் இல்லாத நான்கு வேதங்கட்கும் முதல்வனே நினக்கு வணக்கம்; சே ஆர் வெல்கொடி சிவனே போற்றி- ஆனேற்றின் வடிவு எழுதப்பட்ட வெல்லும் கொடியினையுடைய சிவபெருமானே நினக்கு வணக்கம்; மின் ஆர் உருவ விகிர்தா போற்றி- ஒளி பொருந்திய உருவத்தினையுடைய விகிர்தனே நினக்கு வணக்கம்; கல் நார் உரித்த கனியே போற்றி- கல்லின் கண் நார் உரித்த பழச்சுவையை ஒப்பவனே நினக்கு வணக்கம்; கனக குன்றே காவாய் போற்றி- பொன்மலை போன்றவனே காப்பாற்றுவாயாக நினக்கு வணக்கம்; ஆ ஆ எனக்கு அருளாய் போற்றி- ஆ ஆ என்று வியக்கத்தக்க பேற்றினை எனக்கு அருள் புரிவாயாக நினக்கு வணக்கம்.

மூவா முதல்வா எனவும், நான்மறை முதல்வா எனவும் தனித்தனி இயையும். "மூவா முதலாய் நின்ற முதல்வா" (புணர்ச்சிப் 10) "மூவா முதலானே" (ஏசறு 8) என வருவன காண்க. நான்மறை முதல்வா என்றார். நான்கு வேதங்களை அருளியமையானும் அவற்றால் போற்றப்படுதலானும். "வேத மெய்ந்நூல் சொன்னவனே" (நீத் 43) எனவும், "வேதங்கள் ஐயாவென வோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" (சிவபுரா 34:5) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.

சே- ஆனேறு; இடபம். இறைவனது கொடியில் ஆனேறு எழுதப்பட்டமையின் "சேவார் கொடிச் சிவனே" என்றார். "சேவக மேந்திய வெல்கொடியான்" (பொற் 16) "ஏற்றுயர் கொடியுடையாய்" (பள்ளி 1) எனவும், "வருமிடபக் கொடி யுடையான்" "செங்கண் ஏறணி வெல் கொடியான்" "சேவுயருந் திண்கொடியான்" (தே. ஞான 12:10; 105:7; 129:1) "சேவார்ந்த வெல்கொடியாய்" (நாவு 246:9) "சேவேந்திய கொடியான்" (சுந் 82.8) எனவும் வருவன காண்க. எக்காலத்தும் தோல்வியின்மையின் "வெல்கொடி" என்று கூறினார்.

இடபக்கொடியை விதந்து கூறினாராயினும், அரவு மதி கொன்றை வெண்ணீறு மூவிலைவேல் முதலியன கொண்டிருத்தலுங் கொள்க.

"கொடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தில் நீறும் ஐவாயரவு
முடிமேன் மதியும் முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவு மென்கண்ணு ளெப்போதும் வருகின்றனவே" (20)

எனப் பொன்வண்ணத்தந்தாதியில் வருதலுங் காண்க.

இறைவன் உருவு ஒளிமிகுந்ததாதலின் "மின்னார் உருவ" என்றார். "மின்னேரனைய பூங்கழல்கள்" (ஆனந்த 1) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. விக்ருத என்னும் வடமொழியினின்றும் பிறந்த விகிர்தன் என்பது விகிர்தா என விளியேற்றது. விகிர்தம்- வேறுபாடு. அன்பால் நினைவார்க்கருள் செய்ய வேண்டி இறைவன் பல வேறுபாடுகளையுடைய உருவுகளை மேற்கொள்வனாதலின் "உருவ விகிர்தா" என்றார். "வேடம் பல பல காட்டும் விகிர்தனம் வேதமுதல்வன்" எனத் தேவாரத்து (ஞான 204:10) வருதல் காண்க.

கல்லின்கண் நார் உரித்தல் எவர்க்கும் செய்தற்கரியதொன்றாக அதனைச் செய்த இறைவன் பெருவன்மையுடையனாயினும் கனிபோல் இனிமை தரும் தன்மையையுடையன் என்பார். "கன்னாருரித்த கனியே" என்றார்.

"கல்நா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான்"
(தெள் 9)
"கல்நா ருரித்தென்ன யாண்டு கொண்டான்" (பூவல் 9)

எனவும், "கனியே போற்றி" (போற் 108) "அளிந்ததோர் கனியே" (பிடித் 4) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.


"மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே" (நாவு 205:7)

என்னும் தேவாரமும் ஈண்டறியற்பாலது. உரித்த கனியே எனப் பெயரெச்சத்தாற் கூறினும் உரித்தவனே, கனிபோன்றவனே என்பது பொருளாகக் கொள்க.

கநகம்- கனகம்; பொன். வடசொல். இறைவன் பொன் மலை போன்றவனாதலின் "கனகக் குன்றே" என்றார். "சுடர் பொற் குன்றை" (புணர்ச்சி 1) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

மலர் வெளியீட்டின்போது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றிய இளை. அதிபர் வ. கணேசமூர்த்தி அவர்களும் ஆசிரியர் க. ஶ்ரீச்சந்திரன் அவர்களும்





மாதாந்தம் இடம்பெறும் ஞானச்சுடர் மலரின் வெளியீட்டின்போது இளை. ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் அவர்களும் திரு. சிவ. ஆறுமுகசாமி J.P. அவர்களும் உரையாற்றும் நிகழ்வில்





"கனகக்குன்றத் தெழிற் பெருஞ் சோதியை" நாவு 113:5
"செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை" நாவு 241:6,
"அங்கனகச் சுடர்க்குன்றை" நாவு 298:1.
"கனகமால் வரையை" சுந்தரர் 68:6

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கனகக்குன்றே காவாய் போற்றி என இயைத்துப் பொருள் கொள்க. "காவாய் கனகத் திரளே போற்றி" என அப்பரடிகள் (தே 269:9) அருளியமையுங் காண்க.

ஆவா என்பது வியப்பின்கட் குறிப்பு. ஆ, ஆ என்னும் சொற்கள் நடுவே வகர உடம்படுமெய் பெற்று ஆவாவென்றாயின. இவ்வாறு,

"ஆவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்" தெள் 7
"ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று சாவாதிருந்தான்" திருவுந்தி 6
"ஆவா வென்ன ஆசைப்பட்டேன்" ஆசைப் 3
"ஆவா வென்றருளி... உடலைச் சிதையாத தெத்துக்கு" குழைத் 2
"ஆவா விருவ ரறியா வடி" திருக்கோவை 72

என பிறாண்டும் வருவன காண்க.

(தொடரும்...

## ஆன்மீக சாதனை

நாம் நமது தவறுகளைப்பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் மற்றவரது சிறிய குறைகளைக்கூட மிகப் பிரமாண்டமாக விபரிக்கின்றோம். இதனால் நம்மால் தெய்வீக நிலையை அடைய முடிவதில்லை. ஆகவே நாம் முதலில் நமது தவறுகளை மறைப்பதை நிறுத்த வேண்டும். அதுமட்டுமன்றி அடுத்தவரது தவறுகளை மிகைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறுகளைத் தேடுவது தவறு. அதற்குப் பதில் நம்மிடம் இருக்கும் சிறிய தவறுகளைக்கூட பெரிய தவறாக நினைத்து அதனைச் சரிப்படுத்த வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

நாம் நமது தவறுகளைக் கண்டுபிடித்து அவற்றைக் களைய முற்படுவதுதான் உண்மையான சாதனை. தீயவற்றை விலக்கி மேன்மையான பழக்கங்களைக் கைக்கொள்ளுவது தான் அதற்கு ஒரே வழி. அதுவே உண்மையான ஆன்மீக சாதனை.

# காஞ்சியம் பதியில் காணுமிட மெல்லாம் கண்ணுதல் வழிபாடு

அமரர் சிவ சண்முகவடிவேல் அவர்கள்

கந்தபுராணம் உலகத்தில் எந்த நாட்டிற்கோ, எந்த நகரத்திற்கோ இல்லாத சிவவழிபாட்டுச் சிறப்பைக் காஞ்சியம் பதியிற் கண்டு காட்டுகின்றது. கற்பனாலங்காரமோ அல்லது கருத்துக் கருவூலந் தானோ என்று வியக்குமளவிற்கு வியந்து பேசப்படுகின்றது. அதில் ஒரு சிலவற்றைச் சிந்தனைக்கு விருந் தாகச் செப்புகின்றோம்.

தாமரை மலராசனத்தில் வீற்றிருக் கின்ற பிரமதேவரும் திருமாலும் பக்கலாக இருக்கின்ற பல தேவரும் பல்லாண்டு பாடுகின் றார்கள். சிறந்த அன்னமும் கருடனுமாகிய பறவைகளை ஊர்தியாகக்கொண்டு வந்துற லால் அவர்கள் பொருந்தி வாழும் சத்திய லோகத்தையும் வைகுண்ட லோகத்தையும் போன்றுளது காஞ்சிபுரம்.

இன்பத்தை இரையாகத் தேடுகின்ற இந்திரன் முதலாம் தேவர்களும் முனிவர் களும் ஏனையவர்களும் அக்காஞ்சி நகரில் வந்து சூழ்ந்திருக்கும் செயலால் காஞ்சிபுரத் தைப் பொன்னகர் என்றும் புகலலாம்.

கின்னரர்களும் சித்தர்களும் கலந்து இருத்தலால் அவர்களது நகரம் போலும். நாகராசர்கள் பரந்து வாழும் வகையால் அவர் களது வாழ்விடமாகிய நாகலோகத்தையும் காஞ்சிபுரம் நிகர்த்தது.

காஞ்சி நகரில் அட்டதிக்குப் பாலகர் கள் அனைவரும் அணைதலால் முற்காலத் தில் அவர்கள் சிவபெருமானிடம் பெற்றுக் கொண்ட பதங்கள் போலவும் தோன்றுகின்றது. மண்டலத்தில் மாறுபாடின்றி உலாவுகின்ற சூரியனும் ஏனையவும் சூழ்தலால் காஞ்சி ஆகாயத்திற்கும் ஒப்பு என்பர் கற்றுணர்வாணர்.

வேதமுதல்வராகிய சிவபெருமான் ஒரு மாமரத்தின் நீழலில் வீற்றிருக்கப் பெற்ற சிறப்பினையும் காஞ்சித்தானம் பெற்றுள்ளது.

பழமை மிக்க ஊழிக்காலத்தில் ஏழு கடல்களும் உட்புகாது. எல்லைப் புறத்தில் சூழ்ந்து நிற்கும். சிவபெருமான் அங்கிருக்கப் பெற்றும் மாயைகளால் சூழப்பெற்ற ஆன்மாவை ஒக்கும்.

காஞ்சிப் பதியைச் சூழ்ந்துள்ளது மதில். அம்மதில் மேகமண்டலத்திற்கும், வித்தியாதர லோகத்திற்கும் சுவர்க்க உலகத்திற்கும், சத்திய லோகத்திற்கும் நாகலோகத்திற்கும் பாதாள லோகத்திற்கும் செல்லும் பொருட்டு நிறுத்தப்பட்ட பொன்மதில் போன்றது.

நீண்ட அந்தப் பெரிய மதில், ஐவகை நிறங்கள் பொருந்திய நவரத்தினக் குவியல் களையும் ஆகாயத்தில் உதிக்கின்ற சூரிய சந்திரர்களது சூரியகாந்த சந்திர காந்தங் களுடன் பிற பொருள்களையும் விளக்கிப் பொதியப் பெற்று முழுவதும் நிரம்பிய திரவிய சாலை போன்றது.

சிறகில்லாத பெரிய மதில் வரிசை களைப்போல வீதிகள் எங்கும் விளங்குகின்ற மாளிகை வரிசையும் அதனைச் சூழ்ந்து மதிலும் நீர்நிறைந்த நெடிய புறக்கடலாற் சூழப்பெற்ற

சக்கரவாள மலையையும் அம்மலைக்கு இருப் பிடமாக அளவிலாத அண்டங்களையும் ஒப்பன.

அந்த மதிலின் மேல் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த எந்திரங்கள், பகையரசர்கள் சதுரங்க சேனைகளோடும் பின் வாங்கும்படி விரைவிற்றள்ளும். வாளைக் கொண்டு சுழற்றும். வளை தடியினால் அடிக் கும். தூக்கும் பிடித்து இழுக்கும். எறியும், வாயிற்போட்டு விழுங்கும். கொல்லும். கன்மாரி சொரியும். வில்லினால் போர் புரியும்.

உருக்கிய செம்பையும் ஈயத்தையும் நெய்யுடன் எதிரிகள் மீது எறியும். சக்கரா யுதங்களை வீசும். வச்சிராயுதத்தைச் செலுத் தும். இருக்கும். எழுந்து நிற்கும். குதிக்கும். பகைவரைக் கோபித்து நெருக்கும். தாழும் உலகத்தை அளந்த திரிவிக்கிரம மூர்த்தி யைப் போல் வளரும்.

இன்னும், முரசுப் பறையை முழக்கும் கொம்பை ஊதும். உடுக்குகளை அடிக்கும். சுழன்று ஆடும். வானில் உயர்ந்து சஞ்சரிக் கின்ற பறவைகளையும் சாய்க்கும். மதில்மேல் ஓடிச்செல்லும். திரும்பி வரும். சூரிய சந்திரர் களைத் தடுப்பது போலவும் உயரும்.

மேலும் சூலப்படையைச் செலுத்தும். இருப்புலக்கையை எறியும். வேற்படையை வீசும். மழுப்படையை விட்டிடும். சுடுமணலைச் சொரியும். அளவில்லாத வலைகளை வீசி இழுக்கும். அகழியில் அள்ளிப்போடும். நல் ஒழுக்கத்தை நழுவவிட்ட பூதங்களைப் போலப் போக்குவரவு செய்யும்.

ஒளிமிக்க அக்கினிப் பொறிகளைக் கக்கும். பகைவர்கள் செலுத்துகின்ற பாண மழையை விழுங்கிவிடும். பறவைகளைப் போலப் பறந்து திரியும். இகழுவோர் நாவை யும் நெஞ்சையும் வெட்டும். அச்செயற்பாடு கள் எல்லாம் வருணிப்புக்குள் அடங்குவன அல்ல.

தேவர், அசுரர், முனிவர், சித்தர், இயக்கர், கின்னரர், கருடர், காந்தருவர் ஏனை யோர் தங்கள் பெரிய இருப்பிடங்களை வெறுத்துவிட்டு, காஞ்சி நகரில் வசிக்கின்ற வசிப்பிடங்கள் வேறாக உள்ளன.

கமண்டலம் தமதருகில் விளங்கும். பிராண வாயுவை எதிரே செலுத்தி, மூக்கு நுனியிற் கட்பார்வையைச் செலுத்துவர். ஓரா சனத்திருந்து சிவபெருமானுடைய திருப்பாதங் களை இருதய தாமரையில் இருத்தி பெருந் தவமாற்றுகின்ற முனிவர்களுடைய ஆச்சிரமங் கள் பலவுள.

நான்கு வேதங்களையும் ஓதுகின்ற பிராமணர்கள் யாகங்கள் வேட்பார்கள் எங்கும். நல்லொழுக்கத்தில் நடப்பவரும் பாரம்பரியத் தைப் பேணுகின்றவர்களும் பஞ்சப் புலன் களை ஒருவழிப்படுத்தினோரும் வேதியர்களும் ஆகாயத்தை அளவிடும் மாளிகைகள் மலிந்த வீதிகளுக்கும் காஞ்சி நகரில் குறைவேதும் இல்லை.

கண்டு, கேட்டு, உண்டு, மோந்து, பரிசித்து அறிகின்ற ஐம்பொறிகளையும் இட மாக்கிக் கொண்டிருக்கின்ற அடியார் கூட்டமும் கண்களின் வழியே ஆனந்தநீர் சொரிய தொழுகின்ற தேவர் கூட்டமும் ஆலயங்கள் தோறும் குறைவு இல்லாத நிறைவாகும்.

ஆங்கு நிகழுகின்ற நாட்டியச் செயல் யாவும் சிவபெருமானுக்காகப் புரியும் நிருத்தமே யாம். பாடும் பாடல்கள் யாவும் சிவதோத்திர மாகும். அந்நகரிலுள்ளார் கேட்டுக் கொண் டிருப்பன யாவும் சிவன் கீர்த்திப் பிரபாவமாம். அங்குள்ள கூட்டங்கள் யாவும் திருத்தொண்டு புரியும் கூட்டங்களாகும்.

அந்நகரில் ஒலிகள் யாவும் வேதம். நீரனைத்தும் கங்கை. அரிய கற்கள் அனைத் தும் இலிங்கம். அங்கு வாழ்பவர் தேவர். அனைத்து மரங்களும் கற்பகம். இன்பம்

தருவது யாகம். உணவு உட்கொள்ளல் பூசை, மந்திர செபம் வார்த்தைகள், நடத்தல் - வலம் வருதல். நினைத்தல் தியானம். விழுதல் எல்லாம் சிவனடி வணக்கம் இந்த அமைவு காஞ்சிப்பதி ஒன்றிற்கே அல்லாமல் வேறு எந்த நகர்க்கு உள்ளது?

அரியபல் லிசையு மறைபுனல் கங்கை
யருஞ்சிலை யிலிங்கமங் குறைவோர்
சுரர்தரு வனைத்தும் கற்பக மின்பந்
துய்ப்பது வேள்வியூண் பூசை
உரைசெப நடத்தல் வலம்வருந் தன்மை
யுன்னலே தியானம் வீழ்ந்திடுதல்
பரனடி வணக்க மாவது காஞ்சிப்
பதிக்கலா லெந்நகர்க் குளதே. (கந்தபுராணம்)

# ஆலம் விழுதுயர்வு ஆகாயமட்டும் அப்பனருளுயர்வு முத்தியை எட்டும்

செம்பொன் கதிரைமலைப்பாதம் இமயமென சிலம்புகலந்தார்ப்ப
அம்புராசியிடைவேல் கரைமணலும் வானுயர்வு முகிலும் தாழ
பண்ணுடை வான் மழையுடுவும் பார்த்திலங்கிடும் மேன்மை
செல்வச்சந்நிதியின் வேல் குணப்பெருமை யாரளவிடப் பாரார்!

வேலையுண்டனன் அகத்தியமாமுனி யுலகமுமடங்கிற்றானே யெங்கும்
சாலை தவப்பெருந் தொண்டைக்கடலூரும் சிறப்புற்றோங்கியதே யிங்கு
பங்கமிலா மயில்வாகனன் செங்கைசிவக்கப் பேரருளானதே யாச்சிரமம்
பொங்கிடும் நாள்சுவை யடிசில்களாறும் நிதம் பொழிந்திடும் வேலவன் கரமே கரபியாகும்!

கேடாயெமை விட்டகலா முறுவல்நாதா நின் பதத்தோடிணைத்தாய்
பாடாமை யென்றுமெமதுள்ளம் கோடாமை வேண்டும் உனது வேலால்
வீடாமை தந்து மனவிழைவுய்க்கு மிங்குவடிவேல் வரம்பெற்றேன்
ஆடாத சிந்தை மனமொன்று கூட்டி வரவேண்டும் சந்நிதிவேலே!

யோகத்தினாலுனை யென்றுமுணரப்படாதெமையாள நின்று
பாகத்திலொன்று மாய்கின்ற பாதபதுமங் கெடாது யேற்கும் வேலே
வேத யாகத்தை நீக்கிப் பயனற்றளவும் ஞானயோகத்தை கூட்டுமரனே
போகத்தி லென்றும் மல்கி யிடரின்றி பெரிதாயீதே மோகத்தை அழித்தாள்வாய் வேலா!


பொன்னோடுரைத்த நலம் விடமுற்றதென்று புகழாயிருந்த ஊனுடலையேற்றி
நெடிதுரைத்த எந்நாளும் நின்னாறெழுத்தை புகலாது பொன்னோடிசைந்து யோகம் தழைத்தலைந்தேன்
மின்னான வாழ்வை வீணாக்கிக் கொண்ட வென்னை பண்ணாக யேற்றுபதம் படைத்த ஒளியே
முன்னாக நின்றவுன்னருளால் எமக்கு எட்டிய மோட்சவீடு செல்வச்சந்நிதிதானே வேலா!

-சு. தெய்வேந்திரம்-

# மதிப்பீட்டுரை

சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வருகைபுரிந்த தொண்டுநாத சுவாமி அவர்களும், ஆச்சிரம சுவாமி அவர்களும் உரையாற்றும் காட்சி



மலர் வெளியீட்டின் நிகழ்வில் பங்குபற்ற வந்த இளை. ஆசிரியை புனிதவதி சண்முகலிங்கம் அவர்களும் ஆசிரியை சசிலேகா ஜெயராஜன் அவர்களும் உரையாற்றும் நிகழ்வு





# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

-வாரியார் சுவாமிகள்-



42. குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையும் அற்றதுவே.

## பதவுரை

குறியை- தியானிக்கப்படுகின்ற பொருளை, குறியாது குறித்து- காலம் இடம் முதலியன இன்றிப் பிறவற்றை நினையாமல் அதனையே தியானித்து, அறியும் நெறியை- பசுஞான பாசஞானங்களால் அன்றி பதிஞானத்தால் அறியும் உண்மை வழியை, தனி வேல் ஐ நிகழ்த்திடலும்- ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய கடவுள் மௌனகுருவாய் வந்து உள் நின்று உணர்த்தியவுடனே, உலகோடு செறிவு அற்று- உலகத்தாரோடு நெருங்கும் உறவு அற்று, உரை அற்று- வாக்கும் அற்று, சிந்தையும் அற்று- நினைவும் அற்று, அறிவற்று- சுட்டியறிகின்ற அறிவும் அற்று, அறியாமையும் அற்றதுவே- அறியாமையும் அடியுடன் நீங்கிவிட்டன.

## பொழிப்புரை

தியானத்துக்குரிய அருட் குறியை, பிறவற்றைக் குறியாது குறித்துத் தியானித்து, பாச ஞானம் பசுஞானங்களை விட்டு பதிஞானத்தால் அறிந்து நிலைத்து நிற்கும் உண்மை நெறியை, ஒப்பற்ற வேலையுடைய முருகன் அருட்குருவாய் வந்து, உபதேசித்து உள் நின்று உணர்த்தியவுடனே, உலகத்தவரோடு நெருங்கிய தொடர்புகளும், பேச்சும், மனமும் சுட்டியறிகின்ற அறிவும் அறியாமையும் அடியுடன் அற்றுவிட்டன.

## விரிவுரை

இந்தப் பாடல் மிகச் சிறந்தது. இதில் அடிகளார் தமக்குப் படைத்த சுவாநுபூதியைக் கூறுகின்றார். இதில் ஒரு நயம், தனக்கு என்ன

வந்தது என்று கூறாமல், என்ன என்ன அற்றுவிட்டன என்று கூறுகின்றார். ஒருவன் ஒரு நண்பனைப் பார்த்து வள்ளல் ஒருவன் எனக்கு உதவினான். அதனால் கடன் தொல்லைகளும் பஞ்சமும் பட்டினியும் போய்விட்டன என்று சொல்வது போல் அமைந்துள்ளது.

முன் தனக்கு முருகன் உணர்த்திய அநுபூதி ஞானத்தைச் சொல்லவில்லை என்று 12, 20, 28, 30,- ஆவது பாடல்களில் கூறினார். அப்படிச் சொன்ன அடிகளார் எப்படியாவது அன்பர்கட்கு அறிவிக்க வேண்டும் என்ற கருணையினால் உடன்பாட்டு முகத்தால் கூறாது எதிர்மறை முகத்தால் கூறிய பாடல் இது.

**குறியை:-**

வேத சிவாகமங்களாலும் திருமுறைகளாலும், சித்தாந்த சாத்திரங்களாலும், "சிவம் ஒன்றே, குறிக்கத்தக்க பொருள், தியானப்பொருள்" என்று உறுதியுடன் அறுதியிட்டுக் கூறப்படுகின்றது.

ப்ரம்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ் ஸம்ப்ரஸூயந்தே
நகாரணம் - காரணந்து த்யேயச் சம்பு"

என்று வேதம் முழங்குகின்றது.

இத்தகைய சிவமே முருகன் ஆதலின் தியானப் பொருள் அப் பரமனேயாகும்! அவனன்றி வேறு பொருள் தியானிக்கற் பாலதன்று.

ஆதலால் தியானிக்கத்தக்க அந்த அருட்குறியைக் குறித்துத் தியானிக்கின்றபோது, பிறவற்றைக் குறியாது குறிக்க வேண்டும்.

**குறியாது குறித்தறியும் நெறியை:-**

துரோணர், குருகுலத்தில் ஒரு மரத்தின் கிளையில் ஒரு கள்ளிக் காக்கையின் பதுமையை வைத்து, மாணவர்களை அழைத்து "இந்தக் குறியை ஒரே கணையால் அடிக்க வேண்டும். அடித்தவனுக்கு முதற்பரிசு அளிக்கப்படும். குறிபார்த்து நில்லுங்கள்" என்றார். எல்லோரும் ஆடாமல் அசையாமல் வில்லும் அம்பும் ஏந்தி நின்றார்கள். துரோணர், "துரியோதனா! லட்சியத்தைப் பார்க்கின்றாயா?" என்றார்.

துரியோதனன்: "பார்க்கின்றேன்."

துரோணர்: "பதுமை கட்டிய கிளை தெரிகின்றதா?"

துரியோதனன்: "தெரிகின்றது"

துரோணர்: "மரம் தெரிகின்றதா?"

துரியோதனன்: "தெரிகின்றது"

துரோணர்: "நான் தெரிகின்றேனா?"

துரியோதனன்: "தெரிகின்றீர்"

"கீழே வை வில்லை" என்றார் துரோணர்.

தருமர் முதல் எல்லா மாணவர்களும் அவ்வாறே கூறினார்கள்.

முடிவில் அர்ச்சுனனைப் பார்த்து, "பார்த்தா! இந்தக் குறியைப் பார்க்கின்றனையா?" என்றார்.

அர்ச்சுனன்: "ஆம், பார்க்கிறேன்" என்றான்.

துரோணர்: "கிளை தெரிகின்றதா?"

அர்ச்சுனன்: "இல்லை"

துரோணர்: "மரம் தெரிகின்றதா?"

அர்ச்சுனன்: "இல்லை"

துரோணர்: "நான் தெரிகின்றேனா?"

அர்ச்சுனன்: "இல்லை"

துரோணர்: "இப்போது அந்தப் பட்சி தெரிகின்றதா?"

அர்ச்சுனன்: "இல்லை"

துரோணர்: "என்ன தெரிகின்றது?"

அர்ச்சுனன்: "பட்சியின் தலைமட்டும் தெரிகின்றது."

துரோணர்: "நல்லது இப்போது தலை தெரிகின்றதா?"

"இல்லை தலையுந் தெரியவில்லை; பறவையின் உடம்பும் தெரியவில்லை. கழுத்து மட்டுந்தான் தெரிகின்றது" என்றான் பார்த்தன்.

"விடு கணையை" என்றார் குருதேவர்.

அர்ச்சுனன் கணையை விட்டான். பதுமையின் தலை கீழே விழுந்தது.

"துரியோதனா! குறி வைத்துப் பார்க்கின்ற உனக்குக் கிளையும் தெரிகின்றது. மரமும் தெரிகின்றது. நானும் தெரிகின்றேன் என்றால் கணையை யார்மேல் எதன்மேல் ஏவுவாய்? குறி பார்க்கின்ற உனக்கு மற்றவை தெரியலாமா?" என்று அறிவுறுத்தினார் துரோணர்.

இதுபோல் முருகன் திருவடியிலே குறி வைத்துத் தியானிக்கின்றவர்கள் பிறவொன்றையும் குறிக்கக் கூடாது. தியானப் பொருளில் அது அதுவாய் ஒன்றிவிடவேண்டும். இந்த அரிய பெரிய அருள் நலமாகிய உண்மை நெறியை அருணகிரியார் முருகனருளால் கைவரப் பெற்றார். "நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெலவாம்" என்ற திருவிளையாடற் புராணப் பாடலையும் இங்கு நினைவு கூர்க.

**நெறியை:-**

நெறியை- வழி, அருள் நிறைந்த உண்மை நெறி; இது காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற திரிபுடியற்ற நிலை.

**தனிவேலை நிகழ்த்திடலும்:-**

தனிவேல் ஐ. ஐ- கடவுள்.

ஒப்பற்ற வேலையேந்திய கடவுளாகிய முருகன் அருட் குருவாகத் தோன்றி என்னுள் அத்துவிதமாகக் கலந்து இந்த நெறியை உணர்த்தியருளினான். இது வாக்கினால் உரைக்கற்பாலதன்று. அதனால் நிகழ்த்தியருளினார்.

இதனைக் கல்லின்கீழ் எழுந்தருளிய தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர்கட்கு உணர்த்தியருளினார். அவர் கூறும் அருள் வசனம் இது:

நன்னல மைந்தர் காள் ஞான போதகம்
சொன்னடை யன்றது துயரம் நீங்கியே
இந்நிலை மோனமோ டிருந்து நந்தமை:
உன்னுதலை என உணர ஓதினான்.

-கந்தபுராணம்

இதனைச் சிவஞான சித்தியார் 8ஆம் சூத்திரம் 30ஆவது பாடலால் அறிக. அப்பாடல் இது:

அறியாமை அறிவகற்றி அறிவின் உள்ளே
அறிவுதனை யருளினான் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாம் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றும் தோன்றிடுவான் நிராதரா னாயே.

**இதன் பொருள்:-**

அறியாமை அறிவகற்றி- அறியாமையாகிய கேவலாவத்தையும் அறிவாகிய சகலாவத்தையும் சிவஞானத்தால் நீக்கி, அறிவின் உள்ளே அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து- ஆன்மாவினிடத்துப் பரமான்மாவாய்ப் பிரியாது உள்ளிருந்த சிவத்தை அருளினாலே பகுத்தறியாது அறிந்து, குறியாதே குறித்து- தற்போதத்தால் சுட்டி நிச்சயிக்காது, அருளினால் விரிய நிச்சயித்து, அந்தக்கரணங்களோடும் கூடாதே வாடாதே- பின்பு கருவிகளோடு கூடிச் சகலப்படாமலும் கேவலப்படாமலும், குழைந்து இருப்பையாயின்- அவ்வருளோடு கூடி நிட்டை செய்து இருக்கப்பெறின், பிறியாத சிவன் தானே பிரிந்து தோன்றி- பெத்த நிலையில் ஆன்மாவோடு பிரிவின்றி அபேதமாய் நின்ற சிவன் இச்சுத்த நிலையில் பிரிந்து பேதமாய்த் தோன்றி, பிரபஞ்சபேதம் எலாம் தானாய்த் தோன்றிய- தநுகரணாதி உலகப் பொருள்கள் யாவும் சிவ சொரூபமாய்த் தோன்றக் காட்டி, நெறியாலே இவையெல்லாம் அல்ல ஆகி நின்று- உண்மையிலே இவ்வுலக பேதமெல்லாம் தானல்லவாக வேறாய் நின்று, என்றும் நிராதாரனாய் தோன்றிடுவன் - என்றும் பற்று ஒன்றின்றித் தனியே தோன்றுவன்.

குறியாக் குறியினில் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றும்
செறியாச் செறிவே சிவமென லாமே.

-திருமந்திரம் (2638)

இந்தத் திருமந்திரப் பாடலும், மேலே கண்ட அநுபூதிப் பாடலும் ஒத்திருப்பதை உய்த்துணர்க.

"குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறியாய் நின்றுவிட ஆங்கே - பிறிவறவும்

ஞானச்சுடர் மதிப்புரை ஆற்றும் அதிபர் ஆ. சிவநாதன் அவர்களும்
இளை. பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களும்





மலர் வெளியீட்டின் பொழுது மலருக்குரிய மதிப்புரை ஆற்றவந்த அதிபர் செ. பரமேஸ்வரனும் சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்களும்





சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைம்மாறு நானொழிதல் காண்"

என்று தன் அநுபவத்தைத் தாயுமான அடிகளார் அழகாகக் கூறுகின்றார்.

பின்னேயுள்ள இரண்டு அடிகளில் தன் அநுபவத்தை அடிகளார் கூறுகின்றார்.

**செறிவற்றுலகோடு:-**

உலகு- என்பது உலகத்திலுள்ள மக்களைக் குறிக்கும். உலகில் வாழும் மக்களோடு பழகும் கலப்பு அற்றுவிட்டது. செறிவு- கலப்பு.

**உரை சிந்தையும் அற்று:-**

பேச்சும், பேச்சுக்கு மூலமான சிந்தையும் அற்றுவிட்டன.

"மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே"

-சிவபுராணம்.

"உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே"

-கந்தரலங்காரம் (61)

**அறிவற்றறியாமையு மற்றதுவே:-**

அறிவு என்பது, பாச ஞானத்தையும் பசு ஞானத்தையுங் குறிக்கும்.

"பாசஞா னத்தாலும் பசு ஞானத் தாலும் பார்ப்பரிய
பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி"

-சிவஞான சித்தியார் (9ஆம் சூத்திரம்)

பாச ஞானம் என்பது வேத முதலிய நூல்களால் வருவது. பசு ஞானம்- நான் பிரமம் என்று எண்ணுவது.

எனவே பாச ஞானம் பசு ஞானம் என்ற இருவகையான அறிவும் அற்றது.

"அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை அழகிய வாறே"

-திருமந்திரம் (2362)

"அறிவும் அறியாமையுங் கடந்த அறிவுதிரு மேனி
யென்றுணர்ந்துன்
அருண சரணார விந்தமென்று பெறுவேனோ"

-(குகையில்) திருப்புகழ்

## கருத்துரை

தியானப் பொருளை தனிவேற் கடவுள் குருவாக உள்நின்று உபதேசித்து உணர்த்தியவுடனே, மனம், அறிவு அறியாமை யாவும் நீங்கிவிட்டன.

(தொடரும்...

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

நீதிக்கதை

# சிறுவர் கதைகள்

**சிங்கராஜா சொன்ன தீர்ப்பு**

ஓர் ஆலமரத்தடியில் பல விலங்குகள் ஓய்வாக அமர்ந்திருந்தன. அவைகள் தங்களுக்குள் பேச ஆரம்பித்தன. அப்போது சில பறவைகளும் வந்து மரக்கிளைகளில் அமர்ந்து அவைகளுடன் பேச்சில் கலந்து கொண்டன.

பேசிக்கொண்டிருக்கும்போது "யார் உயர்ந்தவர்" என்ற கேள்வி எழுந்தது. விலங்குகள் தாங்களே உயர்ந்தவர்கள் என்று வாதிட்டன. பறவைகளோ உயரப் பறப்பதால் தாங்களே உயர்ந்தவர்கள் என்று வாதிட்டன.

அந்தக் கூட்டத்தில் சில ஆமைகளும் இருந்தன. நீரிலும் நிலத்திலும் வாழும் ஆற்றல் பெற்றதால் தாங்களே உயர்ந்தவர்கள் என்று தங்கள் பங்குக்கு அவை வாதிட்டன.

அந்தப் பக்கமாக காட்டின் அரசன் சிங்கம் வந்தது. விலங்குகளும், பறவைகளும், ஆமைகளும் தங்கள் பிரச்சினையை சிங்கராஜாவின் முன் வைத்தார்கள்.

சிங்கராஜாவும் யோசித்தார். "தீர்ப்பு சொல்றதுக்கு எனக்கு ஒரு மாசம் அவகாசம் வேணும். சரியா ஒரு மாசம் கழிச்சு எல்லாரும் இதே இடத்துக்கு வந்துடுங்க. உங்களிலே யார் உயர்ந்தவர்னு நான் சரியா சொல்லிடறேன்".

தங்களின் ராஜாவின் சொல்லுக்கு அனைத்து விலங்குகளும், பறவைகளும், ஆமைகளும் கட்டுப்பட்டன. வழக்கம்போல பிரிந்து சென்றன.

சில நாட்கள் சென்றன. அந்தக் காட்டிற்கு பக்கத்துக் காட்டிலிருந்து ஒரு கொடூரமான சிங்கம் வந்தது. அந்தக் காட்டில் நுழைந்ததும் கண்ணில் பட்ட விலங்குகளை அடித்துக் கொன்று தின்றது. இந்த விஷயத்தை ராஜாவிடம் தெரிவிக்க ஒரு காகம் வந்தது. ராஜா உங்களுக்கு என்னோட பணிவான வணக்கம். நம்ம காட்டுக்கு எங்கிருந்தோ ஒரு சிங்கம் வந்திருக்கு. அது தன் இஷ்டத்துக்கு எல்லாரையும் கொன்று சாப்பிடுது. எல்லாரும் பயந்துகிட்டிருக்காங்க. நீங்க தான் அதுக்கிட்டேயிருந்து விலங்குகளைக் காப்பாத்தணும்".



இதைக் கேட்ட சிங்கராஜா கோபத்துடன் கர்ஜித்தார். "அப்படியா எவ்வளவு தைரியம் இருக்கும் அந்த சிங்கத்துக்கு. சரி, நான் பார்த்துக்கிறேன்." காகம் புறப்பட்டுச் சென்றது.

இரண்டொரு நாட்கள் சென்றன. அந்தச் சிங்கத்தை எப்படிக் காட்டைவிட்டு விரட்டுவது என்று யோசிக்க ஆரம்பித்தது. அந்த சமயத்தில் அந்த கொடூர சிங்கம் எதிரே வந்து நின்று சிங்கராஜாவைப் பார்த்து முறைத்தது.

சிங்கராஜாவும கோபப்பட்டு அந்தச் சிங்கத்துடன் சண்டையிட ஆரம்பித்தது. அந்த சிங்கம் ஆக்ரோஷமாக சிங்கராஜாவைத் தாக்க ஆரம்பித்தது. சிங்கராஜா இதை எதிர்பார்க்க வில்லை. இதை வேடிக்கை பார்த்த பறவைகள் பயந்துபோய் அங்கும் இங்கும் பறக்க ஆரம்பித்தன.

பறவைகள் இங்கும் அங்கும் பறப்பதைப் பார்த்த மற்ற விலங்குகள் பறவைகளிடம் அதுபற்றி விசாரித்தன. பறவைகளும் அவைகளிடம் விஷயத்தைக் கூறின. தங்கள் ராஜா தாக்கப்படுவதை அறிந்த விலங்குகள் அனைத்தும் ஒன்றுகூடி, ராஜாவைத் தாக்கிக் கொண்டிருந்த அந்தச் சிங்கத்தைத் தாக்க ஆரம்பித்தன. அனைத்து விலங்குகளும் ஒன்று சேர்ந்து தாக்கியதால் அந்த கொடூர சிங்கத்தால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. பலமான காயத்துடன் அந்தச் சிங்கம் காட்டைவிட்டே ஓடத் தொடங்கியது.

தக்க சமயத்தில் வந்து தன்னைக் காப்பாற்றிய சக விலங்குகளுக்கும் சிங்கராஜா தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் சில பறவைகள் பெரிய மாமரம் ஒன்றின்மீது அமர்ந்து பேசிக்கொண்டிருந்தன. அப்போது சில மனிதர்கள் அந்த மரத்திற்குச் சற்று தொலைவில் ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டிக்கொண்டே தங்களுக்குள் பேசிக்கொண்டார் கள். அவர்கள் பேசிய பேச்சு பறவைகளின் காதுகளில் விழுந்தன.

அவர்கள் அந்தக் காட்டில் வசிக்கும் சில யானைகளை பிடிப்பதற்காக அந்தப் பள்ளத்தை தோண்டிக்கொண்டிருப்பதாக பேசிக்கொண்டார்கள். பள்ளம் தோண்டி முடித்ததும் நீளமான கிளைகளை வெட்டி அந்தப் பள்ளத்தின் குறுக்காகப் போட்டார்கள். பின்னர் அந்தக் கிளைகளின்மீது இலைகளைப் பரப்பி அந்தப் பள்ளம் தெரியாதவாறு மூடினார்கள்.

பள்ளம் இருப்பது தெரியாத யானைகள் அந்தப் பக்கமாக வந்தால் அவ்வளவுதான். அந்தப் பள்ளத்தில் விழுந்து மாட்டிக்கொள்ளும். சில நாட்கள் கழித்து மனிதர்கள் அந்த யானைகளை பள்ளத்திலிருந்து வெளியேற்றி தங்களுடன் அழைத்துச் சென்று விடுவார்கள்.

பறவைகள் உடனே இதைப்பற்றி தங்களுக்குள் பேசி ஆலோசித்தன. "இந்த விஷயத்தை யானைகளிடம் சொல்லி, நாம் யானைகளைக் காப்பாத்திடலாம்" புறா சொன்ன யோசனையை கிளியும் மைனாவும் மற்றும் சில பறவைகளும் ஆட்சேபித்தன.

"வேணாம். அதுங்க எப்படியாவது போகட்டும். அவங்கதான் உயர்ந்தவங்கன்னு சொல்றாங்க இல்லே. அவங்களுக்குப் போய் நாம எதுக்கு உதவணும்?"

இதைக்கேட்ட புறா தனது வருத்தத்தைத் தெரிவித்தது. "இல்லே நீங்க சொல்றது தப்பு. நாம எப்பவும் அடுத்தவங்களுக்கு நன்மையே செய்யணும். அதுதான் நல்லது". புறாவின் கருத்தை மயில் ஆமோதித்தது. கடைசியில் அனைத்துப் பறவைகளும் யானைகளைக் காப்பாற்ற தங்களது சம்மதத்தைத் தெரிவித்தன.

உடனே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று யானைகளைத் தேடின. யானைகளும் சிங்கராஜாவும் மற்றும் சில விலங்குகளும் ஏதோ ஆலோசனையில் இருந்தன.

பறவைகள் கூட்டமாய் வருவதைப் பார்த்த சிங்கராஜா அவைகளிடம் விசாரித்தார். "என்ன, எல்லாரும் கூட்டமா வந்திருக்கீங்க? ஏதாவது விஷேசமா?" "ராஜாவே, நம்ம காட்டிலே சில மனிதர்கள் யானைகளைப் பிடிக்கப் பெரிய பள்ளம் தோண்டி வெச்சிருக்காங்க. அதுல யானைகள் மாட்டிக்கக்கூடாதுன்னு எச்சரிக்கவே இங்கே வந்தோம்".

"ரொம்ப நல்ல வேலை செய்திருக்கீங்க. உங்களை நான் பாராட்டுறேன்." யானைகளை பறவைகள் ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டன. அடுத்த நாள் ராஜா அனைத்து விலங்கு களையும் பறவைகளையும் ஆமைகளையும் கூப்பிட்டு ஒரு கூட்டம் போட்டது.

"கொஞ்ச நாளைக்கு முன்னால உங்களிலே யார் உயர்ந்தவங்கன்னு உங்களுக் குள்ளே பிரச்சினை வந்துச்சு, இல்லையா. நானும் ஒரு மாசம் கழிச்சு சொல்றேன்னு சொல்லியிருந்தேன். இன்னைக்கு நான் உங்களிலே யார் உயர்ந்தவர்னு சொல்லப்போறேன்."

சொல்லிவிட்டு சிங்கராஜா சிறிது நேரம் பேசாமலிருந்தார். எல்லோருக்கும் ராஜாவின் தீர்ப்பைக் கேட்க ஆவல் பிறந்தது. இப்போது சிங்கராஜா பேச ஆரம்பித்தார்.

"கொஞ்ச நாளைக்கு முன்னாலே பக்கத்துக் காட்டிலேயிருந்து ஒரு சிங்கம் வந்து என்னைத் தாக்க ஆரம்பிச்சது. அந்த சமயத்திலே நம்ம காட்டில வசிக்கிற விலங்குகளாகிய நீங்க எல்லாரும் உங்க உயிரை பெரிசா மதிக்காம சண்டை போட்டு என்னை ஆபத்திலே இருந்து காப்பாத்தினீங்க. வீரத்திலே விலங்குகளாகிய நீங்கதான் உயர்ந்தவங்க."

இதைக்கேட்ட விலங்குகள் மகிழ்ச்சி அடைந்தன. ஆனால் பறவைகளும் ஆமைகளும் சோகத்தில் ஆழ்ந்தன. "பறவைகளே, நீங்க வருத்தப்படாதீங்க. நான் இன்னும் முடிக்கலே." சிங்கராஜா தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

"நேற்று பறவைகளாகிய நீங்க யானைகளை ஒரு பெரிய ஆபத்திலிருந்து காப்பாத்தினீங்க. நீங்க நினைச்சிருந்தா யானைகளும் ஒரு விலங்குதானேன்னு காப்பாத்தாம விட்டிருக்கலாம். ஆனா அப்படி செய்யாம யானைகளுக்கு உதவி பண்ணியிருக்கீங்க. அதனாலே அன்பிலே நீங்கதான் உயர்ந்தவங்க."


இதைக்கேட்ட பறவைகள் மகிழ்ச்சி அடைந்தன. ஆமைகள் மீண்டும் வருத்தப்பட்டன. "ஆமைகளே, நீங்க கவலைப்படாதீங்க. நீங்க யாருக்கும் எந்தத் தொந்தரவும் செய்யாம அமைதியா வாழறீங்க. மனசாலகூட நீங்க யாருக்கும் தீங்கு நினைக்கிறதில்லே. அதனாலே அமைதியிலே நீங்கதான் உயர்ந்தவங்க."

இதைக்கேட்ட ஆமைகள் பெரும் மகிழ்ச்சி அடைந்தன. நல்ல தீர்ப்பை சொன்ன சிங்கராஜாவிற்கு விலங்குகளும், பறவைகளும், ஆமைகளும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டன.


## ஆன்மீகச் சிந்தனை

மனம் புதிதாக எதையும் படைக்க முயற்சிக்காமல் தடுத்து, அனுபவ நாட்டம் கொள்ளாமல் செய்து, அதனை இறைவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடுத்துவதே தியானம். ஆனால் மனம் ஒருமைப்பாடு புதிதாகப் படைக்கவும் அனுபவிக்கவும் வழிவகுக்கிறது. தியானம், இவற்றைத் தவிர்த்து இறைவனைத் தேடும் முயற்சியாகிறது. சாதாரண மன ஒருமைப்பாடு காலமென்ற கட்டுப்பாட்டுக்குள் நடைபெறுகின்றது. இதற்கு மாறாக தியானம் காலத்தைக் கடந்த நிலையில் வாழ்வதற்குச் செய்யும் முயற்சியாக விளங்குகின்றது.

செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர் மதிப்புரை ஆற்றும் நிகழ்வு



மலருக்குரிய மதிப்பீட்டின்போது இளை. அதிபர் தவமலர் சுரேந்திரன் அவர்கள் உரையாற்றும் நிகழ்வு



ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை நிகழ்த்தும் யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகமும் ஆசிரியை திருமதி கௌரி சுரேசனும்






## சதாபிஷேக விழாக்காணும் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் தொண்டன் கலாபூஷணம், தம்பு துரைராஜா அவர்கள், தம்பதிகளாக நீடு வாழ வாழ்த்துகின்றோம்

**சந்நிதியான் ஆச்சிரமம்**

16.09.2014 அன்று 90ஆவது அகவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் திரு தம்பு துரைராஜா அவர்கள், ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் அருட்பார்வையால் ஆட்கொள்ளப் பட்டவராய், சுவாமிகள் விட்டுச் சென்ற பணிகளைச் செய்துவருவதற்குப் பேறு பெற்றவராக விளங்கி, வாழ்த்தப் பெறுகின்றார்.



திருவாசகம் - ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் ஞாபகார்த்தமாக, திருக்கேதீஸ் வரத்தில், திருவாசக மடம், இந்து கலாச்சார மண்டபமாக மிளிர்வதற்கு அடிகோலியவர்கள் திரு த. துரைராஜா அவர்களும், சி. தியாகராஜா (STR) அவர்களுமே. அந்த மடத்திலே, சுவாமிகள் எண்ணியபடி குருபூஜைகள், திருவாசக முற்றோதல், மாணிக்கவாசகர் குருபூஜை, நூல் வெளியீடு செய்தல், யாத்திரிகர்களுக்கான தங்குமிட வசதிகள், மங்களகரமான நிகழ்வுகளுக்கான வசதிகள் யாவற்றையும், சைவ கலாச்சார பண்பாடுகளுடன் ஒருங்கே பயனுறும் வண்ணம், மேற்படி தொண்டன் - தம்பு துரைராஜா அவர்கள், முழுப்பிரயத்தனம் செய்தவராய்ப் போற்றப்படுகின்றார்.

அல்லாமலும், ஈழத்துச் சிவாலயங்கள் பற்றிய தொகுப்பு நூலையும் பதிப்பித்து உலகறிய வைத்த பெருமைக்குப் பாத்திரமாக விளங்குகின்றார்.

சுவாமிகள் பெயரால் இயங்கும் தொண்டர் சபையானது, திருக்கேதீஸ்வர உற்சவ காலங்களிலும், ஏனைய விஷேட தினங்களிலும் அன்னதானம் மற்றும் அடியார்களுக்கு வேண்டிய அவசியப் பணிகளிலும் தன்னை அர்ப்பணிக்க இச்சபையின் செயலாளராக விளங்கும் த. துரைராஜா அவர்கள், அவருடன் இணைந்து தலைவரான சி. தியாகராஜா அவர்களும் பெரும் முனைப்போடு செயலாற்றி வருகிறார்கள். தேனீயின் முயற்சியும், எறும்பின் சுறுசுறுப்பும் இவர்களிடம் தோற்றுவிடும். மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினர். சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் சிவநெறிக் கலாநிதிப் பட்டத்தையும், இந்து கலாச்சார அமைச்சு, கலாபூஷண விருதையும் வழங்கிச் சிறப்பித்தது. 90 வயதிலும், இளமையோடு 80ஆவது அகவையை வென்ற துணைவியார் திருமதி இரத்தினேஸ்வரி அம்மையாரோடு சதாபிஷேக விழாவில் ஸ்ரீமான் துரைராஜா அவர்கள் சகல சௌபாக்கியங்களோடு, நூற்றாண்டு வென்றிட யாம் வாழ்த்துகின்றோம்.

# ஊனம் அகற்றும் சந்நிதியான் தீர்த்தம்

தேர் ஓடிக் களைத்தனையோ முருகா!
தீர்த்தமாட வா அப்பனே முருகா!
தேவரோடு முனிவர்களும் நினது
தீர்த்தம் கண்டு மனம் இன்புறுவர்
வேரோடு வன்மம் நீங்க முருகா
வேலோடு விரைந்து வருக முருகா
வெந்து நொந்த குடும்பங்கள் நினது
வற்றாத அருள் தீர்த்தம் ஆடிடுவர்

பாரினிலே பயமின்றி பவுத்திரமாய் வாழ
பயபக்தியைத் தரவேண்டும் என் அப்பனே முருகா!
பணஆசை பேராசை யாவும் அடங்க
பாவநாசத் தீர்த்தம் ஆடிடுவார் உன் அடியார்
ஊரோடு ஒத்துவாழ உறவுகொள்ள முருகா!
உயிராக எழுந்துவாழ என் தெய்வமே முருகா
உடை நடை பாவனைகள் யாவும் ஊனம் அற
உன் அடியார்கள் மகிழ்ந்து தீர்த்த மாடிடுவர்

*-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-*

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஆறுமுகநாவலர்-

## ௧௨. சிவாலய தரிசனவியல்

318. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?

ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச் சந்தியாவந்தனம் முதலியன முடித்துக்கொண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம் முதலியன வைக்கப்பட்ட பாத்திரத்தைத் தாமே எடுத்துக்கொண்டேனும் பிறரால் எடுப்பித்துக் கொண்டேனும், வாகனாதிகளின்றி நடந்துபோதல் வேண்டும்.

319. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?

கால்களைக் கழுவி, ஆசமனஞ் செய்து, தூல லிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

320. திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?

பலிபீடத்தையும் துவசத்தம்பத்தையும் இடப தேவரையும் கும்பிட்டுப் பலிபீடத்துக்கு இப்பால், வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப்பக்கத்திலும், கிழக்கு நோக்கிய சந்நிதியாயினும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்திலும் நின்று, அபிஷேக சமயம் நிவேதன சமயம் அல்லாத சமயத்திலே, ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். நமஸ்காரம் ஒரு தரம் இருதரம் பண்ணல் குற்றம்.

321. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கை இரண்டு, செவி இரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு அவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

322. இந்த நமஸ்காரம் எப்படிப் பண்ணல் வேண்டும்?

பூமியிலே சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல் வேண்டும்.

323. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து அவயவமும் நிலத்திலே பொருந்த வணங்குதல்.

324. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து இரண்டு கைகளையும் குவித்து, ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்ல வைத்து மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் ஏழு தரமாயினும் இருபத்தொரு தரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணி, மீட்டுஞ் சந்நிதானத்திலே நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

325. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனம் செய்தல் வேண்டும்?

முன்பு துவாரபாலகரை வணங்கிய பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்துப், "பகவானே, உம்முடைய திருவடிகளை அடைந்து, அடியேன் உள்ளே புகுந்து, சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு, உள்ளே போய், முன் விக்கினேசுவரரைத் தரிசனம் செய்து, பின் சிவலிங்கப்பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து, ஆதி சைவரைக் கொண்டு அருச்சனை செய்வித்துப் பழம், பாக்கு, வெற்றிலை முதலியன வற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணித் தரிசனம் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, அதன் பின் சபாபதி தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயகுரவர் நால்வரையும் தரிசனம் செய்தல் வேண்டும்.

326. விக்கினேசுவரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு, மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

327. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

பிரதக்ஷிணஞ் செய்து, சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டுத், தோத்திரஞ் செய்து, மூன்றுமுறை கைகொட்டிச், சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்து வலமாக வந்து, இடபதேவருடைய இரண்டு கொம்பினடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்து, எழுந்து இருந்து, பஞ்சாஷரத்தை நூறு தரமும் அகோர மந்திரத்தை நூறு தரமும் செபித்துக்கொண்டு எழுந்து, வீட்டுக்குப் போதல் வேண்டும்.

(தொடரும்...


இளை. அதிபர் க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களும் இளை. பிரதி அதிபர் க. நடேசு (தெணியான்) அவர்களும் மலருக்குரிய மதிப்பீட்டு நிகழ்வில்





மதிப்பீட்டுரை ஆற்றவந்த இளை. ஆசிரியர் க. நவரெத்தினம் அவர்களும்
யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்களும்
உரை நிகழ்த்தும் நிகழ்வு



# 200 ஆவது மலரில் எமது வேண்டுகோள்

திருமதி தவேந்திரநாதன் வசந்தகுமாரி அவர்கள்

200ஆவது மலராக மலர இருக்கும் ஞானச்சுடர் மலரின் ஊடாக சந்நிதிக் கந்தனுக்கோர் உருக்கமான வேண்டுகோள்!!

1998ஆம் ஆண்டு முதன்முதலில் சந்நிதியானிடம் எனது குடும்பத்துடன் வழிபடச் சென்றபோது எனது கணவரின் மனதில் தனது தாயாரின் நினைவான இங்குள்ள வயோதிபர்களிற்கு எமது வெதுப்பகத்தில் உற்பத்தி செய்கின்ற பாணில் பிரதி வெள்ளிதோறும் ஒரு குறிப்பிட்டளவு தொகை பாணை விநியோகிக்க எண்ணி அடுத்த வாரம் வெள்ளிக் கிழமை குறித்த தொகைப் பாணுடன் ஆலய வாசலை அடைந்தோம். கொண்டு சென்ற பாணை சரியான முறையில் யாவர்க்கும் கிடைக்கும் வகையில் எம்மால் பகிர்ந்தளிக்க முடியாத நிலை அங்கு ஏற்பட்டது. அவ்வேளை "தம்பி உந்தப் பாணை மோகன் ஐயாவிடம் கொடுத்தால் நல்லது. அவர் உதைச் சரியாகப் பகிர்ந்தளிப்பார்" என ஒரு பெண்ணின் குரல் கேட்கின்றது. அதனைச் செவிமடுத்த வண்ணம் சந்நிதியானை வழிபட்டு திரும்பி வீடு செல்லத் தயாராகுமுன் சந்நிதியான் ஆச்சிரமத்தை அடைகின்றோம்.

வாருங்கள் இருங்கள் என்ன செய்ய வேண்டும்? சாப்பிடுகின்றீர்களா, அல்லது தேநீர் தரவா? மோகன் ஐயாவின் கேள்விகளுடன் கூடிய வரவேற்பை நாம் எதிர்பார்க்கவில்லை. அன்றுதொட்டு இன்றுவரை ஐயா முதற் பேசும் விடயம் இவ்வளவுமாக இருக்கும். எமக்கும் நல்ல பசி. சாப்பிடவேண்டும்போல் இருந்தது. நிறைவாகச் சாப்பிட்டு முடிந்ததும் அடியவர்களுக்கு அமைதியாக இருப்பதற்கு ஒதுக்கப்பட்ட வாங்கில் இருந்தாலும் ஐயாவிடம் நாம் சிந்தித்த விடயத்தைப் பேசுவதற்கு சற்று பயமாகவும் இருந்தது. ஆனாலும் எமது பாண் வழங்குகின்ற விடயத்தை எடுத்துக் கூறினோம். அதற்கு ஐயா "சந்நிதியான் செய்விக்கின்றான் நாம் செய்கின்றோம்" அனுப்பிவையுங்கள் என்றார். நாமும் பிரதி வெள்ளிதோறும் இந்தப்பணியை சந்நிதியான் ஆச்சிரமத்தினூடாக நிறைவாகச் செயற்படுத்தி வந்தோம். கடந்த ஓராண்டிற்கு மேலாக எம்மால் இப்பணியை தொடரமுடியவில்லை. இப்பணியை என்றென்றும் தொடர்வதற்கு குருவருளையும் திருவருளையும் இம்மலரின் ஊடாக வேண்டி நிற்கின்றேன்.

"அமரத்துவம் அடைந்த எனது கணவரின் உள்ளத்தில் தோன்றிய தர்ம சிந்தனை எமது சந்ததி சந்ததியாக வளரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்".

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 14. மகாபிரபு ரமணன்

ஆதிகாலத்திலிருந்தே பகவானின் அடியார்களில் ஒருவரான காலஞ்சென்ற M.G. சண்முகம் அடக்கம் மிகுந்தவர். எதிலும் முந்திக் கொள்ளாமல் ஒதுங்கியே இருப்பார். அவர் தமிழில் எழுதிய பகவானின் சரிதம் இந்த ஆச்சிரமத்தின் ஆரம்ப நாட்களுடனே முடிவுற்றது. அதாவது 30-35க்குள். அவர் அதைப் பூர்த்தி செய்யாதது வருந்தத் தக்கதே. ஏனெனில் அது பகவானுக்குப் பிடித்திருந்த தென்று சிவராம ரெட்டியார் என்னிடம் சொல்லியிருக்கிறார்.



நல்ல வேளையாக சண்முகம் தமிழில் சில குறிப் புகள் விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றில் பகவானைக் குறித்த விஷயங்கள், அதன் போதனைகள் தவிர, ஆன்மீக விஷயமாக தன் அபிப்பிராயங்கள் முதலியன உள்ளன. அவற்றில் சில வற்றைக் கீழே தந்திருக்கிறேன்.

"பகவானுடன் நெருங்கிப் பழகிய இந்த இருபத்து நான்கு வருடங்களில் எனக்குத் தெரிந்தவரை அது அனேகமாக விஸ்தாரமாக போதனை செய்ததில்லை. பகவான் தரும் சில குறிப்புக்களைக் கூர்ந்து கவனித்து, சாதகர்கள் தம் சாதனையில் அதைத் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும். அதனுடைய அமுத மொழிகளிலிருந்தும் சில அபூர்வமான ரத்தினச் சுருக்கமான வாக்கியங் களிலிருந்தும் வேண்டியதனைத்தும் கற்றுக்கொள்ளலாம். கற்றதைப் பின்பற்றி கதியடையலாம்.

ஆன்ம விசாரம் செய்வதற்கு நேரமும் காலமும் பார்க்கத் தேவையில்லை, ஒவ்வொரு கணமும் அதற்குப் பொருத்தமானதும் மங்களமானதுமாகும். ஒருவிதமான கட்டுப்பாடும் தேவையேயில்லை என்று பகவான் ஒருதரம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில், மற்றவர்களின் கவனத்திற்குட்படாமலும் ஆன்ம விசாரம் செய்யலாம். மற்ற எல்லா சாதனங்களுக்கும் வெளிப்புற சாதனங்களும் இசைவான சூழ்நிலையும் வேண்டிவரும். ஆனால் ஆன்ம விசாரத்திற்கோ, தன்னை விட்டு புற விஷயம் ஒன்றும் தேவையில்லை. மனதை உள்முகமாகத் திருப்புவது மாத்திரமே வேண்டியது. ஆன்ம விசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டே, இதர அலுவல்களையும் எளிதாகச் செய்யலாம். தவிர, ஆன்மவிசாரம் முழுக்க முழுக்க உள்ளுக்குள் நிகழும் செய்கையாதலால் சுற்றியிருப்பவர்களுக்குச் சற்றும் தொந்தரவு இருக்காது. ஆனால் பூஜை முதலிய பிற சாதனைகள் பிறர் கவனத்தை ஈர்க்கின்றன. விசாரத்திற்கு இன்றியமையாதது ஒருமுனைப்பட்ட உறுதியான விடாமுயற்சி ஒன்றேயாகும். அது எப்பொழுதும் முற்றும் உள் விஷயமே. தனக்குள் ஒளிரும் 'அகம்' என்பதில் குன்றாத கவனம் அவசியம்.

"பகவான் எனக்கருளிய சில வழிமுறைகள் இதோ:-

1. நீ உன் சுவாசத்தை ஒருமுனைப்பாகக் கவனித்தால், அது தானாகவே கும்பகத்தில் (நிறுத்தல்) உன்னைக் கொண்டு சேர்த்து விடும். இது பிராணாயாமம்.

2. நீ எவ்வளவுக்கெவ்வளவு அடங்கிப் பணிவாக இருக்கிறாயோ அத்தனைக்கத்தனை எல்லா விதத்திலும் உனக்கு நல்லது.

3. மனதை உள்ளிழுத்துக் கொள்வதால் எங்கு வேண்டுமானாலும் எந்தச் சூழ்நிலையிலும் இருக்கலாம்.

4. உலகைக் கனவாக மாத்திரமே கருத வேண்டும்.

5. மனதை நீ வெளி விஷயங்களிலும், எண்ணங்களாலும் திசை திருப்ப விடக்கூடாது. வாழ்வில் உனக்குக் கடமையாக அமைந்த வேலைகளை நிறைவேற்றும் வேளை தவிர மீதமான நேரமெல்லாம் ஆன்ம நிஷ்டையில் செலவிட வேண்டும். ஒரு கணமும் கவனக் குறைவிலோ, சோம்பலிலோ வீணாக்காதே.

6. யாருக்கும் இம்மியும் தடையோ, தொந்தரவோ விளைவிக்காதே. தவிர உன் வேலைகளையெல்லாம் நீயே செய்துகொள்.

7. விருப்பும், வெறுப்பும் இரண்டும் தவிர்க்கத் தக்கவை.

8. எண்ணங்களனைத்தையும் குவித்து ஒருமுகப்படுத்தி தன்னுள் செலுத்தி தயங்காமல் "நான் யார்" விசாரணை செய்ய வேண்டும். ஒரு முனைப்பாக இதைச் செய்தால் சுவாசம் தானே அடங்கும். இந்த மாதிரி கட்டுப்பாடாக சாதனை செய்யும் சமயம், மனம் திடீரென்று கிளம்பும். அதனால் மிகக் கவனமாக விசாரத்தை தொடர வேண்டும்.

'நான் யார்' என்று எண்ணங்களின்றி இருத்தல் நிஷ்டை.
'நான் யார்' என்று எண்ணங்களின்றி இருத்தல் ஞானம்.
'நான் யார்' என்று எண்ணங்களின்றி இருத்தல் மோட்சம்
'நான் யார்' என்று எண்ணங்களின்றி இருத்தல் சகஜம்.

அதனால் எண்ணங்களின் நிழல் கூட இல்லாமல் இருத்தலே பரிபூரண நிலையாகும். - இது நிஜம்.

சண்முகத்தின் டைரி (நாட்குறிப்பு)யிலிருந்து தொடரும் சில ருசிகரமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

நாங்கள் தாராபுரத்தில் வசித்த காலத்தில் ஏழு வயதில் லிங்க பூஜையில் தீக்ஷை பெற்றேன். பாரம்பரிய முறையில் வளர்க்கப்பட்டதால், கிரமமாக சூத்திர பாடம், ஜபம், பஜனை, சகுண, நிர்க்குணத்தியானம், முறையான முக்கால பூஜை முதலியன தொடர்ந்தன. இந்தக் காலகட்டத்தில் எனக்கு மூன்று குருமார்கள் இருந்தனர். மனித வாழ்க்கையின் குறிக்கோள் ஜீவன்முத்தியே என்று உறுதியாகத் தெரிந்து கொண்டேன்.

1921-25இல் திருச்செங்கோடில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பதினெட்டு வயதாகியிருக்கும்போது, யாராவது ஜீவன் முக்தரைச் சந்தித்து அவரது ஆசி பெற வேண்டுமென்று மிக ஆர்வமாகப் பிரார்த்தனை செய்து வந்தேன்.

வெகு சீக்கிரமாகவே என் பிரார்த்தனை பலித்தது. போலீஸ் ஆபிசரான என் தந்தை திருவண்ணாமலைக்கு மாற்றலானார். அங்கு வாழ்ந்த ரமண பகவானைப் பற்றி கேள்விப்பட்டேன்.

படிப்பை விட்டு அருணாசலத்துக்கு விரைந்தேன். ரயிலில் அண்ணாமலை செல்லும் வழியில் எனக்கு காட்பாடியில் அபூர்வமான பகவானின் தோற்றம் கிடைத்தது. இப்படியாக நேரில் பகவானின் தரிசனம் ஆகுமுன்பே என் சத்குரு வலிய வந்து என்னை ஆட்கொண்டார்.

நான் ஆச்ரமத்தை வந்தடைந்ததும், பகவான் புன்னகையுடன் என்னை வரவேற்றது. அன்றுதான் முதன்முறையாக பகவான் என்னைப் பார்த்ததே. அதனால் என்னைப் பார்த்தவுடன் கேட்ட இரண்டு கேள்விகள் எனக்கு ஆச்சரியமாக இருந்தன. எப்போது வந்தாய்? உன் வலது கை எப்படி இருக்கிறது? பதினான்கு வயதில் என் வலது கை எலும்பு மோசமாக முறிந்தது. ரணம் ஆறிவிட்டாலும் கை வளைந்து குட்டையாக இருந்தது. நான் எப்போதும் முழுக்கை சட்டை அணிவதால் என் நெருங்கிய தோழர்களுக்குக்கூட இந்த அங்கஹீனம் தெரியாது. அப்படியிருக்க அப்போதுதான் என்னைப் பார்த்த பகவானுக்கு இது எப்படித் தெரிந்தது? எத்தகைய அன்பு நிறைந்த பரிவு! பகவானின் அந்தக் கேள்விக்குப் பின், அதுவரை என்னுள் இருந்து என்னை வாட்டி வந்த அந்தக் (குட்டைக் கை பற்றிய) தாழ்வு மனப்பான்மை என்னைவிட்டு நிரந்தரமாக அறவே விலகிவிட்டது. இதெல்லாவற்றையும்விட, என்னைத் தனக்கு எதிரே உட்கார வைத்தது. பகவானைப் பார்த்துக்கொண்டே நான் அமர்ந்திருந்தேன். அதன்பின் என்ன நடந்ததென்ற உணர்வே எனக்கு இருக்கவில்லை. நான் எழுந்தபொழுது இரண்டு மணிநேரம் ஆகிவிட்டிருந்தது. இந்த அனுபவம் எனக்கு முற்றிலும் புதிது. என்றும் அறிந்திராதது. அதை நான், என் வாழ்நாளில் முதன்முறையாக எனக்குக் கிடைத்த மிகச்சிறந்த வரப்பிரசாதமாகப் போற்றுகிறேன். "கேளாதளிப்பார் சத்குரு" என்ற பிரபல வாக்கியத்தின் கருத்தைப் புரிந்துகொண்டேன். அக்கணமே பகவான், தன் அடியார் திருக்கூட்ட மரபில் என்னையும் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று என் மனம் மகிழ்வால் நிறைந்தது. பகவானின் மகாசமாதி வரை, ஏன், அதற்குப் பின்னும் இந்தப் பலமான ஆனந்தத்தை அனுபவித்து வருகிறேன்.

தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு நான் பகவானிடம் போய்விட்டு இரவு எட்டுமணி சுமாருக்கு வீடு திரும்புவேன். பரம பக்தரான என் தகப்பனார் இருபது வருடகாலம் பகவான் இடைவிடாது இருந்து அருள்பாலித்த பழைய ஹாலை நிர்மாணிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். ரிபுகீதை, கைவல்ய நவநீதம், ஞான வாசிட்டம் முதலிய ஞான நூல்களிலிருந்து பாடல்கள் எடுத்துச்சொல்லி, பகவான் எனக்கு அவற்றின் பொருளையும், அதன் அளவற்ற பெருமையையும் தினம் விரிவாக விளங்க வைக்கும். அந்தச் சமயத்திலெல்லாம், அந்த வேத நூல்களெல்லாம் புகழ்பாடும் பிரம்ம ஞானியின் ஆனந்த சந்நிதானத்தில் இருக்கிறோம் என்ற உணர்வு என்னுள் இருந்துகொண்டேயிருக்கும்.

பகவான் சர்வமுமறிந்த ஞானி. இவ்வுண்மை நான் கேட்காமலேயே, பலமுறை எனக்கு நிரூபணமாகி இருக்கிறது. அந்நாட்களில் என் தந்தை எனது கைச்செலவுக்காக தினந்தோறும் மூன்றணா தருவார். அத்தொகையில் நான் சாம்பிராணி வாங்கி பகவான்முன் தினமும் தூபம் போடுவது வழக்கம். ஒருநாள் என் தந்தை பணம் தராததால் அன்று என்னால் சாம்பிராணி வாங்க முடியவில்லை. எனவே அன்று நான் பகவானைத் தரிசிக்கச் செல்லவில்லை. அடுத்த நாள் பகவானைத் தரிசிக்கச் சென்றபொழுது, பகவான் "நேற்று நீ சாம்பிராணி வாங்க முடியாததால் வரவில்லை. அதனாலென்ன? இதயத்தில் பக்தி

ஞானச்சுடரின் சிறப்புப் பிரதி பெறும் அன்பர்கள் வரிசையில் வருடாவருடம்
தை மாதம் இடம்பெறும் சிறப்புப் பிரதி நிகழ்வில் கலந்துகொண்டோர்



வெளியீட்டுரை நிகழ்த்திய Dr.V. பாலகிருஸ்ணன் அவர்களுடன்
பிரதி பெற்றவர்கள்



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைத் தலைவர்
அமரர் க. சிவக்கொழுந்து JP அவர்களுடன் பிரதி பெற்றவர்கள்



வெளியீட்டுரை நிகழ்த்திய கிராமசேவையாளர் திரு. சி. சிவபாலசிங்கம்
அவர்களுடன் பிரதி பெற்றவர்களில் ஒரு சிலர்



ஒன்றே போதுமானது" என்று மிகக் கருணையுடன் கூறியருளினார்.

திடீரென்று அப்பாவுக்கு வேலூருக்கு மாற்றலாகி விட்டது. எங்களில் யாருக்கும், முக்கியமாக எனக்கு பகவான் தரிசனத்தை விட்டுப்போக மனமில்லை. வேலூர் போய்விட்டால் தினமும் பகவான் தரிசனம் கிடைக்காதே. நாங்கள் பகவானிடம் எங்கள் குறையைச் சொல்லி முறையிட்டோம். பகவான் மௌனமாக என்னைப் பார்த்துப் பரிவன்புடன் புன்னகை செய்தது. அதிசயமாக அப்பாவின் மாற்றல் உத்தரவு ரத்தாகி விட்டது. நான் பகவானது நிகரற்ற பெருமையையும் அதன் மௌனத்தின் சக்தியையும் தவிர வேறொன்றையும் கவனித்தேன். ஒருவர் மனதில் எழும் சந்தேகங்களுக்கு விடை, அதிசயமான முறையில், ஹாலில் யார் மூலமாகவாவது கிடைத்துவிடும். ஒருவர் மனதிலிருந்த சந்தேகத்தை ஹாலில் வேறு யாராவது அகஸ்மாத்தாக பகவானிடம் கேட்பார்கள். பகவான் அவர்களுக்கு விடையளித்துவிட்டு, முதலில் மனதில் சந்தேகப்பட்டவரைப் பார்த்து மென்னகை புரியும். இப்போது உன் சந்தேகம் தீர்ந்ததா? என்பது போல். பகவான் மலர்ந்த தன் நீலோத்பல நயனங்களில் காருண்யத்தை தேக்கி, அருள் பொழிந்து சதா அமர்ந்திருக்கும் ஹாலில் தெய்வீக மௌனம் நிலவும். அனைவரிதயத்திலும் அமைதியும், சாந்தியும் கமழும். அந்தத் தக்ஷிணாமூர்த்தியின் உபதேசமும் இந்த மௌனம்தான்.

பகவான் தன் சிறு தலையசைப்பால் தன் ஒப்புதலைத் தெரிவித்த பின் என் திருமணம் 1937இல் நடந்தேறியது. என் மனைவியுடன் நான் நேராக பகவானிடம் ஆசிபெற வந்தேன். புதுமணத் தம்பதியருக்கு பகவான் விருந்து செய்வித்தது. இது மிக அசாதாரணமான அருட்செய்கை என்பது தெரிந்ததே. நாங்கள் இரண்டு வாரம் தங்கினோம். எங்கள் குடும்பத்துடன் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்ள பகவான் சம்மதித்தது, கருணாவதாரம் அல்லவா? மனைவியுடன் என் பகவானருகில் நின்று போட்டோ எடுத்துக் கொள்வதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி என்பது அதற்கு நன்கு தெரியுமே! எத்துணை மகான், பிரம்ம நிஷ்டர், என் ஆசை மட்டத்துக்கு இரங்கி, இறங்கி வந்து போட்டோ எடுத்துக்கொண்டது! இதுதான் பகவான்!

(தொடரும்...

## ஆன்மீக சிந்தனை

பக்தியுடன் இறைவனை வணங்குபவன் கோபத்துடன் வணங்குவது கூடாது. காந்த சக்தி உள்ள இரும்பைச் சூடேற்றினால் அதன் சக்தி போய்விடும். அதேபோல கோபம் என்ற சூடு நம் உடலில் ஏறினால் பக்தியினால் கிடைத்த சக்தி முறிந்துபோய் விடுகிறது. மனிதனைப் பாவத்தினால் அழுத்துகிற இரு பெரும் சக்திகள் காமமும் குரோதமும் ஆகும். கோபத்தினால் நமக்கே நாம் தீங்கு செய்து கொள்கிறோம். ஆத்திரம் வந்தால் நம்முடைய உடம்பு, மனம் இரண்டுமே கெட்டுப்போகிறது. அன்பாக அமைதியுடன் இருந்து பழகுவதுதான் மனிதனின் இயல்பான தன்மை. அதை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அன்பே சிவம் என்பார்கள். அந்த அன்பு நம்முடைய மனத்தில் வளரும்படியான பண்பை நமக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும். அமைதியும் ஆனந்தமும்தான் பக்தியினால் நமக்குக் கிடைக்கும் நல்ல பலன்கள். கோபப்படுவதன் மூலம் அதைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது.

**சோம்பித் திரிபவன் அழிவை நெருங்குகிறான்.**

# தியாகத்தின் மாண்பு

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்; தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடத் தப்பவல் லேனல்லன்; நானினிச் சென்று
ஆளாவதெப்படி யோதிருக் காளத்தி அப்பனுக்கே.

-பட்டினத்தார்.

இறையருளை வேண்டி முற்றுந்துறந்த துறவியான பட்டினத்தார் தமது அவதார நியதிப்படி ஆலய தரிசனை உலாவில் திருக்காளத்தீஸ்வரரை வணங்கிப் பாடினார். இத்தலத்தில் கண்ணப்ப நாயனாரின் தியாக உணர்வையும் சிறுத்தொண்டர் மற்றும் திருநீல கண்ட நாயனார்களின் தியாகத்தையும் எண்ணினார். இவர்களின் அர்ப்பணத்தைப்போல் தமக்கும் அர்ப்பணஞ் செய்ய முடியவில்லையே என்றும் தம்மையும் ஆளாக்குமாறு பணிகிறார். மேற்கூறிய மூன்று நாயன்மார்களின் பக்தியையும் தியாக உணர்வையும் அவர்கள் செய்த தியாகத்தினையும் நோக்குவோம்.

## கண்ணப்ப நாயனார்

திருக்காளத்தி மலைச்சூழலில் சற்றுத் தொலைவில் வாழ்ந்த வேடர் குலத் தலைவனின் மகன் திண்ணன் இறை பணிக்கென்றே அவதரித்தார். பதினாறு வயது வந்ததும் திண்ணன் தமது குல மரபுப்படி வில்லேந்தும் விழா நாயகனானார். அன்று பிற்பகலில் அனுபவம் மிக்க வேட்டையாளர் இருவருட்பட பணியாளர் கூட்டத்துடன் வேட்டைக்காக முதன்முதல் புறப்படுகிறார். எதிரில் வந்த மிருகங்கள் யாவும் வதைக்கப்பட்டன. இறையருளின் தூதாக எதிரில் வந்த கரிய பெரிய பன்றி ஒன்று இவர்களை ஏமாற்றிய வண்ணம் ஓடுகிறது. ஓட்ட வேகத்தில் கூட்டத்தினர் வழிதடுமாற அனுபவம் மிக்க இருவரும் திண்ணனுடன் பன்றியைத் துரத்துகின்றனர். பன்றி திருக்காளத்தி மலையருகே அம்புபட்டு மடிகிறது. திண்ணன் அதனைக் கொன்றார்.

வெகுதூரம் அலைந்தவர்களைப் பசியும் தாகமும் பற்றிக்கொண்டது. ஒருவன் பன்றி இறைச்சியைப் பதஞ் செய்கிறான். திண்ணனும் அடுத்தவரும் நீர் தேடிச் செல்கின்றனர். அச்சூழலில் அமைந்த மணிமுத்தாற்றின் அண்மையில் திருக்காளத்தீஸ்வரரின் சிவலிங்கத் திருமேனி திண்ணனைக் கவர்கிறது. திண்ணன் ஓடிச்சென்று திருக்காளத்தியப்பரின் லிங்கத் திருமேனியை இறுகத் தழுவி இன்புறுகிறார். பக்தியால் தன்னை மறந்தார். இறைவனின் ஆளானார். அவரை விட்டகலாதவாறு பக்தி கவர்கிறது.

இரவு முழுவதும் இறைவனைச் சுற்றி வந்து காவல் புரிந்தார். காலையில் இறைவனுக்குப் பசிபோக்க எண்ணி மிருகவேட்டைக்குச் செல்ல முற்படுகிறார். அச்சமயம்

பூக்களைக் கண்டதும் இறைவனுக்குப் பூசை செய்ய விரும்பினார்.

காட்டுக்குச் சென்றவர் முதலில் ஒரு மிருகத்தைக் கொன்று அதன் இறைச்சியைப் பதப்படுத்தித் தன் வாயால் ருசி பார்த்து நல்ல பகுதியை ஒரு தொன்னையில் நிரப்பினார். காட்டு மலர்களைக் கொய்து தமது தலையிற் சொருகினார். அபிஷேகத்துக்காக ஆற்று நீரை வாயில் மொண்டு கொண்டு இறைவனை நாடினார். தமது பாதணி பூண்ட காலால் இறைவன் மேலிருந்த வாடிய மலர்களை அகற்றினார். வாயிலிருந்த நீரால் இறைவனுக்கு அபிஷேகஞ் செய்தார். மலர் சாத்தியதும் இறைச்சியைத் திருவமுதாகப் படைத்து இன்புற்றார். ஆலயச் சூழலில் காவல் புரிந்தார். மறுநாட்காலை வழமைபோல இறைவனின் பூசைக்கானவற்றைக் கொண்டுவரச் சென்றார்.

வழமைபோல அன்று வந்த பூசகர் ஆலயத்திற் சிதறிக் கிடந்த மாமிசத்தை அப்புறப்படுத்தி மனக் கவலையுடன் சுத்தஞ் செய்து தம்பணியை நிறைவு செய்தார். இவ்வாறு படிப்பறிவில்லாத பக்தனின் வேட்டுவ பூசையும், வேதியரின் சிவபூசையும் ஐந்து நாட்கள் தொடர்ந்தன. யாவற்றையும் இறைவன் ஏற்று மகிழ்ந்தார். ஐந்தாம் நாளிரவு சிவபூசகர் இறைவனிடம் தமது கவலையை விண்ணப்பித்தார். இறைவன் வேதியரின் கனவிற் தோன்றி மறுநாட்காலை சிவபூசை முடிந்ததும் மறைந்திருந்து தமது பக்தனின் பணியை நோக்குமாறு தெரிவித்தார்.

ஆறாம்நாட் காலை வேதியர் தமது சிவபூசை நிறைவில் மறைந்திருந்து நோக்கினார். திண்ணனும் வழமைபோல் வேண்டியவற்றுடன் வருகிறார். இலிங்கத் திருமேனியின் வலது கண்ணிலிருந்து இரத்தம் வடிகிறது. இதனை நோக்கிய திண்ணனார் "ஆ என் அப்பனுக்கு ஏதோ தீங்கு நேரிட்டதே" என்று பதறிய வண்ணம் நிலத்தில் விழுந்து அழுது புலம்பினார். கண்ணில் வடிந்த இரத்தத்தைத் துடைத்தார். மூலிகை இலைச்சாற்றினால் மருத்துவம் செய்தார். பலன் கிட்டாததால் தமது வலக்கண்ணை கூரிய அம்பினாற் தோண்டி எடுத்து இறைவனின் ஊனமுற்ற கண்மீது அப்பினார். சுகம் கண்டதும் ஆனந்தக் கூத்தாடினார்.

சிறிது நேரத்தில் இடது கண்ணிலிருந்தும் இரத்தம் வடிந்தது. செய்வதறியாது திகைத்தார். தமது இடக்கண்ணையும் அர்ப்பணிக்கத் துணிந்தார். தமது இரு கண்ணும் இல்லாமல் அடையாளம் காண்பதற்காக இறைவனின் இடது கண்மீது தமது பாதணி பூண்ட காலால் தொட்டுக்கொண்டு தமது கண்ணைத் தோண்ட முற்பட்டார். இலிங்கத் திருமேனியிலிருந்து ஒரு கை தோன்றித் திண்ணனின் அம்புபிடித்த கையினைத் தடை செய்ததுடன் "நில்லு கண்ணப்ப" என்று தடுத்தது. இவ்வரிய பக்திநெறிமூலம் இறையருளால் திண்ணனுக்கு இரு கண்பார்வையும் பிரகாசித்தது. திண்ணனுக்கு கண்ணப்பர் என்னும் பெயர் நிலைத்தது. கண்ணப்பர் இறைவனின் அருகிருந்து பணியாற்றும் பேறு பெற்றார்.

இறை பக்தியில் வேடுவராக இருந்தபோதும் யாவரிலும் உயர்வடைந்தார். கண்ணப்ப நாயனாரின் வரலாறு 63 நாயன்மார்கள் வரலாற்றில் இடம்பெற்றமை சிறப்பானது. பன்னெடுங்காலமாகத் தவமிருந்தும் எவராலும் காணாத இறையருளைக் கண்ணப்பர் தமது ஆறுநாள் வேடுவப் பூசையுடன் காட்டிய பக்தியால் சிறப்படைந்தார். இவரின் தியாக உணர்வு மகத்தானது.

(தொடரும்...

(தொடர்ச்சி...


# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

கோயில் வழிபாடு இன்றியமையாதது. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது மூதுரை. சிவாலயங்கள் இல்லாத ஊர் ஊரன்று. அது அடவி (காடே) என நாயனாரொருவர் அறைந்து கூறியுள்ளார். இவையனைத்தும் சிவாலய மகிமையினையே பகருகின்றன. இறைவன் எங்கும் வியாபித்து நிற்பவன். "இத்தகையோன் ஏன் கோயிலை உறைவிடமாகக் கொண்டான்? அங்கு சென்று வழிபடும் முறை ஏன் ஏற்பட்டது?" என்ற கேள்விகள் எழுவது இயற்கையே. பசுவிடத்தில் பால் உடம்பு முழுவதும் செறிந்து வேற்றுருவில் நிற்பது எனினும், அது வேறெந்த இடத்தும் தோற்றாது கன்று தொட்ட மாத்திரத்தே முலையிடத்திலிருந்து பெருகிப்பாயும். மரக்கட்டையெங்கணும் எரி உருக்கரந்துறையினும் கடையுமிடத்து மட்டுமே உறைவதென நாம் உணரும் வண்ணம் தோற்றும். இவ்வாறே, எங்கும் பரந்து விளங்கும் இறை, வழிபடும் மெய்யன்பர்க்கு விஷேடமாகத் திருக்கோவிலிலே வெளியாகி அருளுவர். தேவாலயங்களில்லாத ஏனைய இடங்களில் இறைவன் வியாபித்து நிற்கும் நிலை, பாலில் நெய் சிறிதளவும் புறத்தே தெரியாது பரந்து விளங்குவது போன்றது. இறைவன் கோவில்களில் சாந்நித்தங் கொண்டெழுந்தருளுவது, தயிரில் நெய் இருப்பதை நிகர்ப்பது. திருத்தலந்தோறும் யாத்திரை செய்து புனித தீர்த்தங்களில் மூழ்கி அங்கெழுந்தருளியிருக்கும் மூர்த்தியைத் தரிசித்து அக்கோலம் அறிவுறுத்தும் உண்மையினையும், அங்கு நிகழும் கிரியைகளையும் கண்குளிரக்கண்டு, அவை சுட்டுந் தத்துவங்களையும் உணர்ந்து வரும் ஒருவன், நாளடைவில், அகத்திலே இறையைக் கண்டு, புறப் பூசையினும் அகப் பூசையில் பேரின்பங் காணத் தலைப்படுவான். இது பதிமுதுநிலை காண்பதற்கு அருஞ்சாதனமாய் அமைவது. இந்நிலையினை அடைப்பித்து உண்மையினை ஆன்மாக்களுக்கு விளக்கத் திருக்கோவில்கள் பெருஞ்சாதனைகளாய் விளங்குவது உய்த்து உணரற்பாலது.

இறைவழிபாடு இருவகையாக நிகழ்கின்றதைக் காண்கிறோம். இவ்விரண்டினுள் வழிபாட்டுக்குரிய திருக்கோவிலில் தீர்த்தம், தூபம், தீபம், அலங்காரப் பொருட்கள், பூமாலை, நைவேத்தியம் முதலிய பொருள்களையெல்லாம் துணைகொண்டு, புறத்தே நிகழ்த்தும் பூசை, நாமனைவரும் புறக்கண்களாலே காணத்தக்கது; அனைவரும் அறிந்தது. இவ்வாறு புறத்தோற்றம் பெறாது இப்பொருள்களனைத்தையும் அகக்கண்ணால் கண்டு நுண்ணிதாக நெஞ்சினுட் கற்பித்து வழிபடுவது அகத்தில் நிகழும் வழிபாடு. இது புறத்தே ஏனையோர்க்குப் புலனாகாதது. இது உள்ளே நிகழும் வழிபாடானதால் அந்தர்யஜனம் எனப் பெயர் பெற்றது. புறத்தே புலனாகும் புறக்கிரியை வழி நிற்பவர்களை ஞானவழியை நோக்கி இட்டுச்செல்ல இது முக்கியமாதல் பற்றியே ஆகமம் இதனைக் கிரியைகளெல்லாவற்றிற்குமே இன்றியமையாத தாகக் குறிப்பிடுகின்றது. அந்தர்யாகம் இன்றேல் வெளியே நிகழ்த்தப்படும் வெளிப்பூசை பயன்தராது. அந்தர் யாகத்தை முதலில் நிறைவேற்றியே சிவாச்சாரியார் பகிர்யாகத்தைத் தொடங்குதல் வேண்டும் என அஜீதாகமம் கூறுகின்றது. அந்தர்யாகம் கட்டாயமாக

கதிர்காமத்தில் சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் வேல் வடிவிலான முருகப் பெருமானுக்கு பிரசாதமாக அவல் படைக்கும் நிகழ்வில் ஈடுபடும் அன்பர்களும் ஆச்சிரம சுவாமிகளும்





மலர் வெளியீட்டின்போது சிறப்புப் பிரதி வழங்கும் நிகழ்வில்
இளை. கிராம சேவையாளர் சி. சிவபாலசிங்கம் அவர்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு



சிறப்புப் பிரதி வழங்கும் வைபவத்திற்கு வருகைபுரிந்த கிராம சேவையாளர்
சோ. பரமநாதன் அவர்கள் பிரதிகளை வழங்கும் காட்சி



நிகழ்த்தப்படவேண்டுவது என்பதைச் சித்தாந்த நூல்கள் எடுத்துக்காட்டுக்கள் மூலம் நம்மைத் தெளிவாக உணரவைக்கின்றன. உள்ளே சிவத்தை ஆவாகித்துப் பூசை செய்யாது வெளியே பூசை செய்தல், உள்ளங்கையிலிருக்கும் பாலை விடுத்துப் புறங்கையை நக்கும் செயலை ஒக்கும். தேவாலயம் முதலிய புற வழிபாடு, அகத்தே நிகழும் அந்தர்யாகம் முதலிய உள் வழிபாட்டினைச் சிறிதாக இடம்பெறச் செய்யும். அவ்வழிபாட்டால் அநுபவம் பெருகி வளரும்பொழுது சிவஞானப்பேறு கிட்டும். இது ஈற்றில் வீடுபேற்றை அடைவிக்கும்.

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உண்டெனும் அடிப்படையில் "புறத்தே பூசைக்கு வேண்டும் சூழ்நிலை இறைவனை அகத்தே பூசை செய்வதற்கேற்றதாக எம் உள்ளத்திலும், அதை நடுவே கொண்டமையும் எம் சரீரத்திலும் அமைந்துள்ளது என்பதை நமது சாத்திரங்கள் தனித்தனியே எடுத்துக்காட்டியுள்ளன. பஞ்சபூதங்களும், முத்தானங்களும், மும்மண்டலங்களும், பதினான்கு உலகங்களும், மலைகளும், தீவுகளும், சமுத்திரங்களும் புறவுலகிற் காணபதுபோல் சரீரத்திலும் காணப்படுமாற்றைத் தனித்தனி காட்டி விளக்குவன. புறவுலகில் உயிர்கள் தோன்றி ஒடுங்கும் நிகழ்ச்சியினை நிகர்த்துச் சரீரத்திலும் இவையிரண்டும் நிகழ்தலையும் நூல்கள் உணர்த்துகின்றன.

உடம்பில் தலை ஸ்ரீபர்வதமாகவும், நெற்றி திருக்கேதாரமாகவும், புருவமத்தி காசியாகவும், குய்யம் குருஷேத்திரமாகவும், இதயம் பிரயாகையாகவும், இதயத்தின் நடு சிதம்பரமாகவும் திருத்தலங்கள் உடம்பில் விளங்குமாற்றைச் சூதசங்கிதை எடுத்தோதுகின்றது. நம்முடலிற் காணப்படும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை முதலிய ஆறாதாரங்களாக முறையே திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணா மலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்னுந் தலங்கள் அமைவதையும் மதுரையம்பதி பிரமாந்திரமாய் விளங்குவதையும் திருவிளையாடற் புராணம் கூறும்.

திருக்கோவிலிற் காணப்படும் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் மண்டபங்கள் முன்னர் கூறப்பட்ட ஆறு ஆதாரங்களால் உணர்த்தப்படும். ஆயிரங்கால் மண்டபத்தை சஹஸ்ராரம் குறிக்கும். சஹஸ்ராரத்திலிருந்து பெருகும் அமிர்தம், அடுத்திருக்கும் சந்திரபுஷ்கரணி தீர்த்தமாகவும் அறிவு நூல்கள் விளக்கிக் கூறுகின்றன. இவ்வாறே புறக்கோவிலிற் காணப்படும் கோவிற் பிரகாரங்கள், கதவு, பஞ்ச சபைகள், ஸ்தூபி, கொடிமரம், பத்திரலிங்கம், தூலலிங்கம், சூக்குமலிங்கம் எனப்படும். மூவகை லிங்கங்களும், சுயம்புலிங்கம் - ஊர்த்துவலிங்கம் - மகாலிங்கம் முதலிய இலிங்கபேதங்களும் உடலிலே அமையுமாற்றைச் சிவாகமங்களும், சித்தாந்த நூல்களும் அவற்றின் துணை நூல்களும் விரிவாகக் காட்டியுள்ளன.

கருவறையில் உள்ள இலிங்கத்திற்கு எதிரே நேராக நிமிர்ந்து நிற்பது கொடிமரம். இதைப்போன்று உடலையும் நேராக இருத்தி இடை, பிங்கலை எனும் இருநாடிகள் வழியே பிராணவாயுவை நடுநாடியில் நிறுத்தித் தியானம் செய்யும்போது பிராணவாயு அசைவின்றி நிற்கும்; இது யோக நூல்களில் கும்பகம் எனப் பெயர் பெறும். இவ்வாறு நிறுத்தும்பொழுது மனம், ஐம்பொறிகள், அவற்றின் விடயங்கள் முதலியன படிப்படியாக ஒடுங்கும். ஒடுங்க, மனம் ஒரு வழிப்பட்டு பரமசிவ தரிசனம் ஏற்படும். இவ்வாறு கொடிமரம் உணர்த்தும் தத்துவத்தினை நூல்கள் விளக்கியுள்ளன.

கருப்பக்கிருகத்தில் நிறுவியுள்ள சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனப்படும். ஸ்தூபி தூலலிங்கம்; பலிபீடம் பத்திரலிங்கம் உலகில் உள்ள உயிர்கள் யாவும் ஒடுங்கும் இடமாய் விளங்குதலான் இது லிங்கம் எனப்படலாயிற்று. எல்லாவற்றிற்கும் ஆதாரமானதால் இது லிங்கமாயிற்று எனவும், பிரகாசமே இலிங்கம் எனவும், வேதாந்த ஞானமே இலிங்கம் எனவும், சத்தியமே இலிங்கம் எனவும் இலிங்கத்தின் பல இயல்புகள் நூல்களில் விளக்கிக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இலிங்கம் பிரணவ வடிவுகொண்டு அமைந்துள்ளது. நாதமாகிய அகரம் சிவத்தையும், விந்துவாகிய உகரம் சக்தியையும், கலையாகிய மகரம் பரத்தையும் குறிக்கும் எனச் சிவலிங்கம் பிரணவமாயமையுந் தத்துவம் விளக்கப் பட்டுள்ளது. சிவலிங்கத்தின் வட்டவடிவாயமைவது உருத்திரபாகம். எண்கோணவடிவினது விஷ்ணுபாகம். அடியில் விளங்கும் நாற்கோண வடிவான அடித்தளம் பிரமபாகம்.

சிவலிங்கம் பதி எனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் பாசம் எனவும் கொள்ளப் படுகின்றன. வேதாகமங்களும் சித்தாந்த நூல்களும் குறிப்பிடும் இம்முப்பொருளைக் கோவில் இவ்வாறு உணர்த்தி நிற்கக் காண்கிறோம். விக்கிரகங்களைச் சூழ்ந்து வட்டமாக அமையுந் திருவாசி பிரணவமேயாகும். சிவனை மறைத்து நடுவே இடர்படும் திரைச்சீலை மாயையாகும். திருவருள் என்னும் சக்தியைத் துணை நாடி, அதை அகற்றி, அறிவு என்னுங் கண்கொண்டு பார்ப்பவர்கள் சிவதரிசனப்பேறு பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வெய்துவர்.

தம்மை மறந்து தற்போதமுற்றவராய் ஒளியை உள்ளே இருத்தி இம்மை, மறுமை என்னும் இரண்டினையும் அகற்றி, வாயுவை ரேசகபூரகங்களால் இழுத்து நிலை நிறுத்தி, மூலாக்கினியை மூட்டிக் குண்டலினியை எழுப்பிப் பஞ்சபூதங்களாலான பௌதிக உடலைத் தகித்து, ஆறாதாரங்களில் உள்ள தெய்வங்களின் தரிசனங்கண்டு, அதற்கு மேலாக விளங்கும் பிரமரந்திரசஹஸ்ராரத்தில் இருந்து பிரவாகிக்கும் அமிர்தத்தை நாடிகளில் நிரப்பும்போது நாதாந்தத் தொனி தோன்றும். இது மணியொலியாயும், குழலொலியாயும், மத்தளவொலியாயும் தோன்றும். நாதோபாசனை மெய்ஞ்ஞான முத்தியை எய்துவிக்கத் தனிப்பெருங் கருவியாய் விளங்குவன. இவ்வொலிகள் அகத்தேயுள்ள பஞ்சபூதங்களுடன் தொடர்புகொண்டவை. பஞ்சமகா பூதங்களை அடிப்படையாகக்கொண்டு நாதங்களை ஐந்து வகையாக எழுப்பும் இசைக்கருவிகள், இறைவழிபாட்டிற்கு பயன்படுமாற்றினைக் கிரியை நூல்களிற் கண்டிருக் கிறோம். வாத்தியங்கள் ஐந்து பூதங்களினின்றும் பிறப்பதனால் ஐவகைப்படும். மரத்தில் அமையும் வாத்தியத்திலிருந்து பிறப்பது மண் ஒலியாகும். சங்கொலி நீரிடந்தோன்றும் ஒலி. உலோகங்களிலிருந்து பிறப்பது ஒளி ஒலியாகும். குழலிலிருந்து பிறப்பது வளியொலியாகும். பாட்டு விண்ணொலி எனப்படும். இவ்வாறு மண், நீர், ஒளி, வளி, விண் என்னும் ஐம்பூதங்களிடம் தோற்றும் ஒலிகள் கூறப்படுவன. எவ்வகை வாத்தியங்களிலெழும் ஒலியாயினும் இவ்வைந்தினுள் அடங்கும்.

(தொடரும்...

# பிரார்த்தனை உரை

திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள்

தன்னை வந்தடையும் அடியவர்களுக்கு எந்நிதியும் தந்தருளும் செல்வச்சந்நிதியான் "அன்னக்கந்தன்" என்று சிறப்பாகப் போற்றப்படுகின்றவன். ஆம்! தன்னை நாடி வந்து வழிபடும் அடியவர்களது குறைகளை - விண்ணப்ப வாசகங்களை - பரிவுடன் திருச்செவி மடுத்தருளி அக்குறைகளைக் காலக்கிரமத்தில் நிவர்த்தி செய்வதுடன், உடனே அவர்களுடைய பசியையும் போக்கியருள்பவன் அவன். அதற்கென்றே அப்பெருமான் தன் திருக்கோயிலுக்கு அருகாமையிலே அன்னதான மடங்கள் பலவற்றை இயக்கி அருள்கின்றான். அவ்வகையில் தனிச்சிறப்புடன் இயங்கிவரும் சந்நிதியான் ஆச்சிரமம் மயில்வாகனம் சுவாமிகளுடைய பாரம்பரியத்தில் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை இந்நாட்டுச் சைவர்கள் எல்லோரும் அறிவர்.

தினமும் ஆலயத்துக்கு வருபவர்களுக்கு அன்னதானம் செய்வதோடமையாது திருக்கோயில் வளாகத்திலேயே சந்நிதியானே தஞ்சமென்று வந்து நிரந்தரமாகத் தங்கி இருப்பவர்களுக்குக் காலையிலும் தேநீர், சிற்றுணவு போன்றவற்றையும் ஆச்சிரமம் கொடுத்துதவுகிறது. மேலும் அவர்களுக்கு அவ்வப்போது வஸ்திர தானமும் செய்யப்படுகிறது. சமூகத்தில் நோயுற்றவர்களுக்கு இலவசமாக வைத்திய உதவியும் மருந்துகளும் தரப்படுகின்றன. தகுதியான மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி, கற்றல் உபகரணங்கள் போன்றவற்றையும் அவ்வப்போது ஆச்சிரமம் வழங்கி வருகிறது. வெள்ளிக்கிழமைகள், உற்சவ தினங்கள், கந்தசஷ்டி விரத தினங்கள் போன்ற நாட்களிலெல்லாம் அறிஞர்களது சொற்பொழிவுகள், கலைஞர்களது வில்லுப்பாட்டு, பண்ணிசைக் கச்சேரி போன்றவற்றையும் ஆச்சிரமம் நடாத்தி வருகிறது.

ஆச்சிரமம் வெளியிடும் "ஞானச்சுடர்" திங்கள் இதழோ பல ஆண்டுகளாக அறிஞர்களது கட்டுரைகள், கவிஞர்களுடைய கவிதைகள் ஆகியவற்றைக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது. அதனுடைய 200ஆவது வெளியீடு இடம்பெறுகிறது என்பதை எண்ணவே மனம் இறும்பூதெய்துகிறது. ஆம்! இன்றைய காலகட்டத்திலே - இந்த விளம்பர யுகத்திலே- விளம்பரம் எதனையும் ஏற்காமல், வேடிக்கைகள் காட்டாமல் பூரணமான ஆன்மீக இதழாக ஒரு சஞ்சிகையை மிகக் குறைந்த விலையில் (அன்பளிப்பில்) இவ்வளவு காலமாக வெளியிட்டு வருவதென்றால், இதனைச் சந்நிதியான் திருவருளின் வெளிப்பாடு என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்வது? இன்றும் திருவாசகத்துக்குச் சங்கநூற் செல்வர் அருளம்பலவனாரும் கந்தரநுபூதிக்குக் கிருபானந்த வாரியாரும் எழுதிய பதவுரை விளக்கவுரைகள் தொட்டு, சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் வரை தாங்கி வருகின்றது இச்சஞ்சிகை. சிவயோக சுவாமிகளின் திருவுருவப்படம் தொட்டு சிறுவர்களுக்கான படங்கள் வரை இதில் இடம்பெறுகின்றன. இவ்விதழோடு இணைந்து வரும் விபூதிப் பிரசாதம் வாசகர்களைச் சந்நிதியானிடமே அழைத்துச் சென்று விடும். இத்தகைய சஞ்சிகை மேலும் பல நூற்றுக்கணக்கான இதழ்களைப் பல்லாண்டுகள் வெளியிடவேண்டும் என்றும், அடியார்களுடைய உடல், உளப் பிணிகளைப் போக்கும் வகையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் தொண்டு மேலும் சிறந்தோங்க வேண்டுமெனவும் பரம கருணாநிதியாகிய சந்நிதியானைப் பிரார்த்திப்போமாக.

# இன்றைய தலைமுறையும் ஆன்மீகமும்

திருமதி S.K. சிந்துரா அவர்கள்

இன்றைய கலியுகத்தில் மானிடர்கள் தம்முடைய பகுத்தறிவை ஆக்கபூர்வமாக பயன்படுத்தாமல் புலன் உணர்ச்சிகளால் ஈர்க்கப்பட்டு, அவற்றிலே மயங்கி, அறிவிலே குறுகி, வாழ்வின் இனிமையை சீர்குலைத்து தமக்கும் பிறருக்கும் சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கின்றனர். அதனாலேயே தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி.... என உலகம் முழுவதும் அமைதி யாவும் கெட்டு மக்கள் அனைவரும் அல்லல்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த அவல நிலையிலிருந்து மனிதர்கள் மீட்சிபெற வேண்டுமெனின், இன்றைய தலைமுறையினரிடம் ஆன்மீகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

இன்றைய கணனியுகத்தில் ஆன்மீக சமய வழியில் பயணிப்பவர்கள் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் சமய நம்பிக்கைகள் குறைந்து வருவதால்தான் அதிகமான பிரச்சினைகள் உருவாகின்றன. "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" இவர்களிடம் பெற்றோர்கள் ஆன்மீக சமய வழிபாட்டின் பலாபலன்களை விஞ்ஞான, மருத்துவ, அறிவியல் சார்ந்து வலியுறுத்த வேண்டும்.

இன்றைய விஞ்ஞான உலகத்தில் வாழும் சிறார்கள் எதனையும் காரண காரியத்துடன் கூறினாலே ஏற்றுக் கொள்வர். எனவே சமய வழிபாட்டின் முக்கியத்துவத்தை புராண இதிகாச கதைகளை அடிப்படையாகக் கூறி விளங்கப்படுத்தினால் ஏற்க மாட்டார்கள். அதனையே விஞ்ஞான ரீதியில் கூறினால் ஏற்றுக்கொள்வர்.

உதாரணமாக,

நெற்றியில் திருநீறு பூசி சந்தனம் வைப்பது இந்துக்களின் பண்பாட்டு அடையாளம் எனக்கூறினால் அதனை பின்பற்றுபவர்கள் அரிது. அதனையே நெற்றியில் நரம்புகள் எல்லாம் ஒன்று குவிகின்றன. எனவே அவ்விடத்தில் சந்தனம் வைப்பது உடலுக்கு குளிர்மை தரும் என மருத்துவ ரீதியாக கூறினால் பலர் ஏற்றுக்கொள்வர்.

இன்னுமொரு உதாரணம்,

கோயிலுக்குள் ஆண்கள் மேல் ஆடையுடன் உட்செல்வது கடவுளை அவமதிப்பதாகும் எனக் கூறினால் இன்றைய இளைஞர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனையே நம் முன்னோர்கள் இப்பண்பாட்டை பின்பற்றியதற்கு காரணம் ஆண்கள் மேலாடை இன்றி ஆலயத்தினுள் செல்லும்போது அங்குள்ள கருங்கல் விக்கிரகங்களிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கும் என்பதால் ஆகும் எனக் கூறினால் எல்லோரும் ஏற்றுக்கொள்வர். விஞ்ஞானம், மருத்துவம் தோன்றுவதற்கு முன்னரே சமயங்கள் அவற்றை எல்லாம் கூறிவிட்டன. இன்று சமூக விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம், உளவியல் விஞ்ஞானம் எனக் கற்கின்றோமே தவிர எல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமுமான சமய விஞ்ஞானத்தை விளங்கிக்கொள்ள இன்றைய இளைய சமூகம் முன்வருவதில்லை.

சிறப்புப் பிரதியை பெற்றோர்களின் கைகளில் தவழும் மலர்கள்





மலர் வெளியீட்டின்போது வருகைபுரிந்து சிறப்புப் பிரதி பெற்றோர்






மலருக்குரிய சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள் தாம் பெற்ற பிரதிகளுடன்





ஞானச்சுடர் மலரின் சிறப்புப் பிரதி பெற வருகை தந்தோர் சிலர்





உலக சுகாதார நிறுவனத்தின் (W.H.O) வரைவிலக்கணத்தின்படி ஒரு மனிதன் உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியில் நலமாக வாழ்வதே உண்மையான ஆரோக்கியம் ஆகும். எமது சமூகத்தில் ஆன்மீக வாழ்வை அதிகரிப்பதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும். மருத்துவர்கூட சில சமயம் புற்றுநோய் போன்ற ஆட்கொல்லி நோய்கள் இறுதிக் கட்டத்தை அடையும்போது நோயாளியை வீடு சென்று கடவுளை வழிபடும்படி கூறியனுப்புவார். நாம் கண்ணால் பார்க்கும் கடவுளாகக் கருதும் வைத்தியர்கூட சில சமயங்களில் நோய்களைத் தீர்க்க கடவுளைத்தான் நம்பச் சொல்லி எம்மிடம் கூறுவர். எனவே நாம் ஆன்மீக வழியில் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆலய வழிபாட்டை பின்பற்ற வேண்டும்.

மனம் ஒரு குரங்கு எனக் கூறுவர். இம்மனமாகிய குரங்கை மரம்விட்டு மரம் தாவாது, ஒரு இந்துவாக வாழ்வதோடு, எமது வாழ்வின் இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும். "உள்ளம் பெரும் கோயில், ஊனுடம்பு ஆலயம்" எனத் திருமூலர் கூறியுள்ளார். அந்த வகையில் உள ஆரோக்கியம்தான் எம்மை வாழ வைக்கும். இவ் உள ஆரோக்கியத்தைப் பெற சிறுவர்களை சிறுவயதிலிருந்தே ஆன்மீக சமய வாழ்வை வாழப் பெற்றோர்கள் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## கோயிலுக்குள் செல்லுமுன் செருப்பைக் கழற்றிப் போடுவது ஏன்?

புண்ணிய கருமங்கள் எல்லாமே காலணி இல்லாமல் செய்யவேண்டும் என்று கூறுவதுண்டு என்றாலும் கோயிலில் நுழையும்போது செருப்பணியல் ஆகாது என்பது கட்டாயம். சில கோயில்களில் சட்டையும் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் செருப்பணிவது கட்டாயமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை காரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வணங்கிவிட்டுச் செல்வதையும் நாம் காண்கின்றோம்.

கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வபூமி என்பதே இந்துமத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலைகொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். செருப்பைக் களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்த சக்தியுடைய தரையில் பதிகின்றன. மனிதனின் உடல்நலத்திற்கு உத்தமமானதெனக் கண்டறிந்துள்ள பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு, பாதம் தரையில் பதியும்போது உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல மூலிகைகளுடைய மலர்களும் இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால் கோயில் சுற்றுமுள்ள மண்ணுக்கு மருத்துவக் குணங்களும் இருக்கலாம்.

இவையெல்லாம் மனதிற்கொண்டு கர்வத்தையும் காலணியையும் களைந்து இறை தரிசனம் செய்யும்போது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற "மாக்னடிக் தெரபி" அல்லது காந்த சிகிச்சை நம்முள் நடக்கின்றது.

இஷ்ட தெய்வத்தை நினைத்து தியானித்து வெகுநேரம் கோயிலில் செலவழிக்கும்போது மனதுக்கும் உடலுக்கும் ஒரேபோல் நன்மைகள் கிடைக்கப்பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

*-ஓலைச்சுவடி-*

# 200ஆவது மலராக நடைபோடும் "ஞான பொக்கிசம்"

திரு சிவ. ஆறுமுகசாமி அவர்கள்

காலச்சக்கரம் மிகவேகமாக சுழன்று கொண்டிருக்கின்றது பூவுலகில் மானிடராய்ப் பிறந்துவிட்ட நாம் இரண்டு வகையாக வாழ்கின்றோம். ஒன்று இப்படித்தான் வாழவேண்டுமென்ற நியதியின்படி, மற்றது எப்படியும் வாழலாம் என்ற எண்ணப்படி. இறைவனை எம்மால் ஆட்டிப்படைக்க முடியாது. அவன் அருள் வேண்டும். அந்தவகையில் உமையம்மை கை தழுவ உவக்கும் முருகன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருள் ஆட்சி செய்கின்றான்.

இன்று மலரில் செய்திகளாக எழுதப்படுபவை நாளை சரித்திரமாகப் பதியப்படுகின்றது. சரித்திரம் என்பது கடந்த காலம் பற்றியது. செய்தி என்பது நிகழ்காலம் பற்றியது. இது நாளைய சரித்திரத்திற்கான மலரின் செய்தியாகும். காலத்தின் அடிப்படையில், வாசகரின் அடிப்படையில், முக்கியத்துவத்தின் அடிப்படையில், இம்மலரினை சிறந்ததாக, தெளிவாக வகைப்படுத்தி எழுத்துப் பிழையின்றி வெளிவரும் இம்மலருக்கு மோகன் சுவாமிஜீ ஒரு கருவியாக செயற்பட்டுக்கொண்டே இருக்கின்றார்.

200ஆவது "ஞானச்சுடர்" மலரை நினைவிற் கொள்ளவேண்டுமாயின் சிறந்த சிந்தனையின் வடிவமாக, எப்படியெல்லாம் நடைமுறையில் செயல்வடிவம் பெற்று வெளிவருகின்றது என்பதனை நாம் முதலில் நோக்க வேண்டும்.

ஆச்சிரமத்தில் நடைபெறும் எல்லா வகையான செயற்பாட்டுக்கும் தொண்டு, தியாகம், பக்தி, மனிதநேயம், சமய, சமூக, சமுதாய, மனித உயர்ச்சியை தன்னகத்தே கொண்டு, சமத்துவமாக பாரபட்சமின்றி யாரையும் அரவணைத்து அன்பு செலுத்தி, இடம், பொருள், ஏவல் என்பதற்கேற்ப பண்போடு கூடிய செயற்பாடே முயற்சிக்குப் பெருமை சேர்க்கின்றது. அந்த வகையில் "ஞானச்சுடரும்" தனித்து தன் பணியைத் தொடருகின்றது.

படைப்பாளிகள், எழுத்தாளர்கள், வாசகர்கள், இலைமறை காயாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் உயர்வுக்கு வழிசமைத்து வெளிக்கொணர்ந்த பெருமை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் உண்டு.

நிர்வாக நடைமுறையென்பது எல்லோராலும் செயற்படுத்த முடியாது. அந்தவகையில் பல தமிழ்நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், தோற்றம் பெற்று, மறைந்து, காலகதியில் மறைந்து மறைந்து தென்படுகின்றன. நல்ல நூல்கள் கிடைப்பது அரிதாகின்ற இவ்வேளையில் மிகமிக இக்கட்டான காலகட்டத்தில் (பஞ்சம், பசிப்பிணி) அடியெடுத்து தொடங்கிய இம்மலர் இன்று 200ஆவது மலராக வெளிவருவதோடு அமையாது தொடர்ந்துவரும் எல்லாவற்றையும் உள்வாங்கி அது எமது ஆட்சிக்கு உட்பட்டது அல்ல முருகனின் ஆட்சிக்குட்பட்டதே என்பது முடிந்த முடிபாகும்.

**மனச்சாட்சியில் நீதிபதியாக கடவுள் மட்டும்தான் நுழையலாம்.**

மனித நேயமே மக்களின் சமூக நன்மைக்கு நல்ல சிந்தனை முறைமையே சான்று பகர்கின்றது. கலை, கலாச்சாரம், பண்பாடு, வளரவேண்டுமாயின் வறுமை நிலையைப் போக்க வேண்டும். அறிவார்ந்த நல்ல நூல்களே மக்கள் சமுதாயத்தை நல்நிலைக்கு அபிவிருத்தியடைய வழி சமைக்கின்றது.

மக்களின் ஆதரவே சமுதாயத்தை உயர்த்தும் என்ற குறிக்கோளுடன் "ஞானச்சுடர்" என்ற மலரை பொதுநோக்குடன் எத்தனையோ இடர்களைத் தாண்டி சுவாமிஜீ அவர்கள் உருவாக்கினார்கள்.

தொடக்க காலத்தில் இம்மலர் தவழத் தொடங்கியபோது இருந்த நிலைமையும் தற்போது வெளிவர இருக்கும் 200ஆவது மலருக்கும் இடையில் சில மாற்றங்கள் காலகதியில் உருவாகியது. முதன்முதலில் வெளிவந்த மலர் உரியவர்கட்கு தபாலில் அனுப்பப்படும்போது அதன் உள்ளே மலர், அதோடு பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் நிகழ்ச்சி நிரல், மாதாந்த முடிவில் மலர் வெளியீட்டு தினத்தன்று மலரை பெற்றுக்கொள்பவருக்கு சுவாமிஜீயின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இம்மூன்றும் வைத்து எதுவித கட்டணமுமின்றி அனுப்பி வைக்கப்பட்டது.

அன்று தொடங்கி இன்று 200ஆவ்து மலர்வரை எதுவித தடங்கலுமின்றி இன்று தனிமலராக, விளம்பரமோ, விற்பனையோ இன்றி, வெற்றிநடைபோடுகின்றது.

உலகெங்கும் வாழும் எம்மக்கள் கைகளிலும் வேற்று இன மக்களும், மதத்தவரும் பாராட்டும் விதத்தில் சிறப்புற்றோங்கி நின்று பெருமை பெறுகின்றது. உண்மை, சமநிலை, தெளிவு, நம்பகத்தன்மை, காலம், இடம், விடயமுக்கியம், சுருக்கம், மனித உணர்வு யாவற்றையும் உள்ளடக்கி இன்று வெளிவரும் இம்மலர் ஒரு ஆவணமே.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் எது நடைபெறுகின்றது என்பதைவிட எது நடைபெற வில்லை என்பதை சிந்தித்து உணர்ந்து கொண்டால் அதன் தனிச்சிறப்பே சிறப்பாகும். தனி மனித ஆளுமையின் தனிச்சிறப்புக்கு சந்நிதியான் ஆச்சிரமம் ஒரு சான்றாகும்.

ஒழுக்கமே உயர்வுக்கு வழி சமைக்கும்.

## ஆன்மீக சிந்தனை

தூய மனம், தூய சிந்தனை, தூய செயல் உயிருக்கு அமிர்தமாகும். இதற்கு மாறான தீய மனமும், தீய சிந்தனையும், தீய செயலும் உயிருக்கு விஷமாகும். நல்ல எண்ணங்கள் மனத்தை வலிமைப்படுத்துகின்றன. மாசற்ற மனம்கொண்டவர்களே உலகில் சிறப்பான வாழ்க்கை வாழ்பவர்கள்.

இம்மை வாழ்வு சிறப்பாக அமையும். நிரந்தரப் பேரின்ப மறுமை வாழ்வு கிட்டவும், மனத் தூய்மையே அடித்தளமாக விளங்குகின்றது. இறைவனிடம் நாள்தோறும் மனதை ஈடுபடுத்தினால் மனம் அமைதியாக, அடக்கமாக, கவலையில்லாமல் இருக்கும்.

**இலங்கையின் முத்தான மூத்த பிரஜைகளுள், சிவத்தமிழ் வித்தகராம், முதுபெரும்புலவர், புலவர்மணி, கலாபூஷணம் இணுவிலூர், அளவை வாசர், பேராசான், பண்டிதர், ஆசுகவி திரு வை.க. சிற்றம்பலம் ஐயா அவர்களின் 100ஆவது அகவை (16.09.2014) பேறுடையதாக அமைய வாழ்த்துகின்றோம்.**

சந்நிதியான் ஆச்சிரமம்

இணுவில் பேராயிரவன் வழிவந்த, சிவகாமி அம்மன் கோவில் முகாமையாளர் வேலாயுதர் முதலித்தம்பியின் மூத்தமகன் வைத்தியலிங்கம். அவரது மூத்த மகன் கந்தர். இவரது தந்தை இணுவில் மஞ்சத்தடி ஆறுமுகம் வேலாயுதரின் மூத்தமகள் ஆனந்திப்பிள்ளை இவரது தாய். 16.09.1914இல் புலவர் ஜனனம்.



1932 - 1934 திருநெல்வேலி சைவாசிரியர் கலா சாலையில் ஆசிரிய பயிற்சி. 1934- 1971 ஆசிரிய பணி. 1947இல் திருமணம். குருவாக அமைந்தவர்கள், பண்டிதமணி கணபதிப் பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை, மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி ஆகியோர். குடும்ப வழிகாட்டி தவத்திரு யோகர் சுவாமிகள். தமிழ், இலக்கியம், இலக்கணம், சைவ சமயம், கவிதை, வரைதல், பண், இசை, புராணபடனம், பிரபந் தங்கள் ஆகியவற்றில் மட்டுமல்ல சோதிடக் கலையிலும் வல்லவொரு ஆசானாகத் திகழ்கின்றார். அரச, ஆலய மற்றும் நிறுவனங்களும் விருதுகளையும், பட்டங்களையும் வழங்கியுள் ளன. ஆச்சிரம "ஞானச்சுடர்" சஞ்சிகை இப்பொழுதும் இவரது கவிதைகளைப் பிரசுரித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் இற்றைவரை இலக்கிய, இலக்கண, வாசகர் தர்மத்திற் கமைவாக 40ற்கும் மேற்பட்ட பிரபந்தங்களைப் படைத்துள்ளார். பண்டிதமணியின் சீடன் என்பதனாலன்றோ இத்தகைய பிரபந்தங்களைப் பாடமுடிந்தது. பிரதானமாக, கும்பழாவளைப் பிள்ளையார் நான்மணிமாலை, இணுவில் சிவகாமியம்மை, திருவிரட்டை மணிமாலை, சிவகாமியம்மை திருப்பள்ளியெழுச்சி, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் மும்மணிமாலை, உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை, வடிவேற் சுவாமிகள் ஒருபா ஒருபது, வடிவேற் சுவாமிகள் திருவிரட்டை மணிமாலை, நல்லூர் ஒருபா ஒருபது, நல்லூர் இணைமணிமாலை, நல்லூர் கலம்பகம், மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் நான்மணிமாலை, மேற்படி ஆலய செந்தமிழ்மாலை, இலங்கைவளம், அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் போற்றிப்பத்து, சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை, சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ், சிவகாமியம்மை இடர்களைப்பதிகம், திரு வருக்கமாலை, நல்லூர் ஆதீனம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அட்டமங்கலம், பண்டிதமணி இருபா இருபது, மாவை முருகன் ஆற்றுப்படை, சந்நிதி முருகன் ஆற்றுப்படை, இலண்டன் முருகன் திருவிருத்தங்கள், இணுவில் மஞ்சம் செய்த பெரிய சந்நியாசியார் புராணம், திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள் புராணம், கோண்டாவில் அம்பலவாணர் சுவாமிகள் புராணம், இணுவில் சிவகாமி அந்தாதி, ஈழத்துச்


மாதாந்த மலர் வெளியீட்டில் சிறப்புப் பிரதி பெற்றோர்களில் சிலர்





சிறப்புப் பிரதியைப் பெற்றவர்களில் சிலர்





மலர் வெளியீட்டுக்கு வருகைபுரிந்து சுடரைப் பெற்றோர்





மாதாந்த மலர் வெளியீட்டுக்கு வருகைபுரிந்தோர்





சிவன் ஆலய இசைப்பாடல்கள், இணுவில் சிவகாமி பிள்ளைத் தமிழ், சித்தன்கேணி சிவன் திருப்பதிகங்கள், சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய பிள்ளைத்தமிழ், உடுவில் சொர்ண சித்தி விநாயகர் அற்புதப் பதிகம் மற்றும் திருப்பள்ளி எழுச்சிகளோடு அமைந்த திருவூஞ்சல்கள் என இன்னும் பலவற்றை ஆக்கியளித்துள்ளார்.

ஆன்மீகத்தில் அதீத நம்பிக்கை கொண்ட புலவர், இலங்கையின் சொத்தாக, என்றோவொரு நாள் போற்றப்படுவார் என்பதை கல்விப்புலம் ஆவணப்படுத்தியே தீரும். இல்லையேல் கவலைப்படவேண்டிய நிலைக்குள் வரலாறு பதிவு செய்யும்.

## சந்நிதி வந்தால் சந்தோஷம்

சந்நிதி வந்தால் சந்தோஷம்
சாந்தம் அமைதி பிரசாதம்
எந்நிதியும் தரும் சந்நிதியான்
தன் நிதியால் எமை ஆட்கொள்வான்

வாரண முகத்தான் துணையுடனே
பூரணம் பொலிய வீற்றிருந்தே
தரணி ஆளும் பூவரசன்
நாரணன் மருகன் எமையாள்வான்

வேலும் மயிலும் கொண்டவனாம்
பாலும் பழமும் உண்டவனாம்
நூலும் நுண்ணறிவும் அருள்பவனாம்
நாலும் தேர்ந்த நல் சற்குருவாம்

பசிப்பிணி போக்கிடும் பார்வேந்தன்
காசினி காத்திடும் கருணை வள்ளல் – அவன்
பேசிடும் மொழியே அமுத கானம்
வீசிடும் தென்றலில் அவன் வாசம்

நாளும் பொழுதும் அவன் சந்நிதியில்
தாளம் மேளம் கொண்டாட்டம்
நாளும் கோளும் என்செய்யும் – அவன்
தாளினை சரணம் அடைந்திட்டால்

கூவி அழைத்தால் வருவானாம்
தாவி அனைத்தே அருள்வானாம்
மூவிரு முகங்களும் முன்வினை அறுக்கும்
கவி நயம் தந்தே களித்திருப்பான்.

*-திருமதி பரமேஸ்வரி நடராஜா-*

(தொடர்ச்சி...)

# ஸ்ரீ கருட புராணம்



திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

ஒருவன் மரணமடைந்து ஓராண்டு முடியுந்தருவாயில் அந்த ஆன்மா பிண்டத்திலான உணவை விட்டு எமலோகத்திற்குச் சென்றடைவர். ஆனால் எமலோகத்திற்கு அந்தப் பிண்டத்திலான உடல் செல்லாது. அந்தப் பிண்ட சரீரம் எமபுரியை அடையமுன்பு ஒரு கட்டைவிரல் அளவுள்ள ஒரு புதிய வடிவம் பெற்று, ஒரு வன்னி மரத்தில் சிலகாலம் தங்கியிருக்கும். அச்சமயம் அதற்கு கர்மத்தாலாகிய புதுச்சரீரம் உண்டாகும். அதன்பின்தான் எமதூதர்கள் அந்த ஆன்மாவை சித்திரகுப்தன் வசிக்கும் பட்டினத்தின் வழியாக எமலோகத்துக்கு அழைத்துச் செல்வர்.

அந்த உயிர் புண்ணியம் செய்ததாக இருந்தால், எமலோகம் அழகிய பட்டினமாக காட்சிதரும். பூலோகத்தில் இறந்தவனைக் குறித்து இரும்பாலாகிய ஊன்றுகோல், உப்பு, பருத்தி, எள்ளோடு பாத்திரம் ஆகிய பொருள்களைத் தானம் செய்திருந்தால், அந்த உயிர் எமலோகத்தை நெருங்கியவுடன் அங்கு வாசலிலுள்ள பூதகணங்கள் அவர்களைக் கண்டு மகிழ்ந்து காலம் தாமதிக்காமல் அந்த ஜீவன் வந்திருப்பதை எமதர்மராஜனிடம் தெரிவிப்பார்.

எமலோகத்தில் எமதர்மராஜனின் அருகிலேயே தர்மத்துவஜன் என்பவன் சதா காலமும் இருப்பான். அவன்தான் ஆன்மா புண்ணியம் செய்ததா? பாவம் செய்ததா? என்பதை தெரிவிப்பான்.

பூமியில் இறந்தவனைக் குறித்து கோதுமை, கடலை, மொச்சை, எள், கொள்ளு, பயறு, துவரை ஆகிய நவதானியங் களைப் பாத்திரங்களில் வைத்து தானம் செய்திருந்தால் அதனால் தர்மத்துவஜன் திருப்தி அடைந்து, “அந்த ஜீவன் புண்ணியம் செய்தவன்; நல்லவன் என்று தெரிவிப்பான்”

அதனால்த்தான் பூமியில் ஒருவர் வாழ்ந்திருந்தபோது தான தருமங்கள் செய் திருந்தாலோ இறந்தபின் அவருக்காக அவரது உறவினர்கள் தான தருமங்களை செய்தாலோ அந்த ஆன்மாவுக்கு எமலோகத்தில் மதிப்பும் நல்ல வரவேற்பும் இருக்கும்.

பாவம் செய்தவர்கள் எமலோகத்தைக் கண்டாலே நடுங்குவர். அவர்களுக்கு இது பயங்கரமாகத் தோற்றமளிக்கும். அவர்களுக்கு எமதூதர்களும் எமதர்மராஜனும்கூட பயங்கர மானவர்களாக - கொடூரமானவர்களாகத் தோன்று வர். அவர்களைக் கண்டு பயத்தால் கத்தி ஓலமிடுவர்.

புண்ணியம் செய்தவராக இருப்பின் எமதூதர்கள், எமதர்மராஜன் போன்றவர்கள் நல்லவர்களாகத் தோற்றமளிப்பர். புண்ணியம் செய்த அந்த ஆன்மா அருகில் சென்றதும், எமதர்மராஜன் தான் அமர்ந்திருக்கும் சிம்மா சனம் விட்டு எழுந்து மரியாதை செய்வான். காரணம் புண்ணியம் செய்தவர் சூரிய மண்ட லம் வழியாக பிரம்மலோகம் செல்லத்தக்க வர்கள். அவர்களுக்கு அங்குள்ள எமதூதர் கள் கூட தங்களிடமிருக்கும் பாசம், உலக்கை போன்ற ஆயுதங்களை ஏந்தியவண்ணம் அணி வகுத்து நின்று மரியாதை செய்வர்.

புண்ணியம் செய்தவர்கள் பூலோகத் தில் மட்டுமல்ல; எல்லா லோகங்களிலுமே மதிக்கப்படுவர்.

இறந்துபோனவருக்கு மாசிகம் முத லானவற்றைச் செய்யவில்லையெனில் அந்த உயிர் துன்பத்திற்குள்ளாக நேரும். அத்தகைய ஆன்மாக்களை எமதூதர்கள் பாசத்தால் இறு கக்கட்டி உலக்கையால் அடித்து ஆடுமாடு களைப் போன்று இழுத்துச் சென்று எமதர்ம ராஜன் முன் நிறுத்துவர்.

ஒரு உயிர் செய்த பாவ புண்ணியங் களின் அளவுக்கேற்ப வேறு பிறவி உண்டாகும். பெருமளவு புண்ணியம் செய்திருந்தவரை எம தூதர்கள் துன்புறுத்தாமல் எமதர்மராஜன் முன்பு சென்றதும் தேவர்களுள் ஒருவராக உருமாறி தேவலோகம் செல்வர்.

அப்படியின்றி அந்த உயிர் பாவச் செயல் புரிந்ததாக இருந்தால் கிருமி, புழு முதலான பிறவியை அடையும். அது மானிடப் பிறவி அடைவது அரிது.

அந்த உயிர் மிதமான புண்ணியம் செய்தவையாக இருப்பின் முன்போல அது மானிடப் பிறவியைப் பெறும். தானதருமங்கள் செய்தவர் யாராக இருந்தாலும் அந்த தானதரு மங்களுக்குரிய பயன்களை அவர்கள் மறு பிறவியில் நிச்சயம் பெறுவர்.

ஒருவன் தாம் வாழும் காலத்தில் மிகப் பெரிய செல்வந்தனாக, உயர்ந்த பதவி வகித் தவராக, அறிவிலே பேரறிஞராக, உடல் பல மிக்கவராக, சகலகலா வல்லவராக, மதத் தலைவராக பல்வேறு துறைகளில் பிரசித்தி பெற்றுத் திகழ்ந்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் இறந்த பிறகு அவரது உடலில் அரைசாண் கயிற்றையும் விடாது அறுத்தெறிந்து விடுவர். அவரது உடலை மண்ணில் புதைத்தோ, தகனம் செய்தோ அழித்துவிடுவர். இதுதான் மானிடத் தன்மையாகும். இருப்பினும் ஒருவருக்கு கிடைத்தற்கரியது மானிடப்பிறவி அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது. அப்படியெடுத்த மானிடப்பிறவியில் பாவச் செயல்களை விடுத்துப் புண்ணியங்களைச்

செய்து இறைபக்தியுடன் ஒழுக்கத்தில் சிறந் திருந்து முத்தி - வீடுபேறு அடைய முயற் சிக்க வேண்டும். அதற்கு மாறாக பாவகாரியங் களைச் செய்தால் நரகத்தில் வீழ்ந்து பல துன்பங்களுக்கு உள்ளாக நேரும். இழிவான பிறவிகளை எடுக்கவும் நேரும்.

ஒரு சிலர் மரணத்திற்குப் பிறகு எம தூதர்களுடன் எமலோகம் செல்லாது காற்று உருவமான பிரேத ஜென்மம் எடுத்து பூவுல கிலேயே அலைந்து திரிந்து வருகின்றனர். அத்தகையவர்கள் புரிந்த பாவங்களைப்பற்றி கருடாழ்வார் மாதவனிடம் கேட்க, அவர் அதற் கான விளக்கத்தை கூறியருளினார்.

உலகில் பிறந்து வாழும் ஒருவர் பிறருடைய பொருள்களையும், பிறர் மனைவி யையும் அடைபவர் எவரோ அவரே மரண மடைந்த பின்னும் வேறு சரீரம் அடையப்பெறா மல் காற்று ரூபமான பிரேத ஜென்மத்தை அடைவர். அவர்கள் எமனுடைய காவலுக்கும் அடங்காது பசிதாகத்தோடு பல இடங்களிலும் அலைந்து திரியும்.

மேலும் ஒருவர் இறந்துவிட்ட பிறகு அவருடைய பூதவுடல் வீட்டிலிருக்கும் போதே அதைப்பற்றி வருத்தப்படாமல், அவரின் உற் றார் உறவினர்கள் எல்லாம் ஏமாற்றி அவர் விட்டுச் சென்ற பொருள்களை வஞ்சகமாக அபகரிக்கும் பாவம் செய்பவர் காற்று ரூபமான பிரேத ஜென்மம் அடைவர். அத்துடன் அவர் கள் தன் குடும்பத்தாரையும் உற்றார் உற வினர்களையும் துன்புறுத்துவர்.

பிரேத ஜென்மத்துடன் இருப்பவர், தாம் வசித்துவந்த இடத்தையே சுற்றித் திரிவர். பிதுர்களின் தினத்தில் வீட்டிற்கு வரும் பிதுர்களை வீட்டினுள் நுழையவிடாமல் வாசலி லேயே தடுத்து நிறுத்துவர். அவர்களுக்கு வழங்கப்படும் அவிசுகளையும் அவரே வாங்கி உண்டுவிடுவார். அதுமட்டுமா? தம்வீட்டிலுள்ள பொருள்களை தன் குடும்பத்தைச் சார்ந்தவர் களும் பிறரும் அனுபவிக்க முடியாமலும் வீணாகக் கிடக்கச் செய்வர்.

தம் புத்திரர் புத்திரி முதலானவர் களுக்கு சந்ததி ஏற்படாமல் செய்து வம்ச நாசம் அடையச் செய்வர். தம் புத்திரர்களுக்கு கடும் நோய்களை உண்டாக்கி துன்புறுத்துவர். இவ்வாறு பிரேத ஜென்மம் எடுத்தவர் புரியும் தீய காரியங்களை பரந்தாமன் கூறியதும், அதைத் தொடர்ந்து அவரிடம், ஒருவர் பிரேத ஜென்மத்துடன் அலைந்து திரிந்து வருகிறார் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும் என்ற சந்தேகத்திற்கு விளக்கம் கேட்கிறார் கருடாழ்வார். அதற்குப் பதிலளிக்கிறார் ஸ்ரீ நாராயணன்.

பிரேத ஜென்மம் அடைந்தவர் தன்னைச் சார்ந்தவர்களையே அதிகம் பாதிப்புக்குள்ளாக் குவர்.

இருப்பினும் தான தர்மங்கள் செய்பவர் களையும் கடவுள் வழிபாடு செய்து வருபவர் களையும், பிதுர்களைக் குறித்து சிரார்த்தம் செய்து வருபவர்களையும் புனித தலங் களுக்கு தீர்த்த யாத்திரை செய்தவர்களையும் பிரேத ஜென்மத்தினரால் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாக்க முடியாது.

அவ்வாறின்றி தானதர்மம் போன்று நற்காரியங்கள் எதையும் செய்யாதவர் கட வுளை வணங்காது நிந்திப்பவர்கள் புலால் உண்டவர், மது அருந்தியவர், பொய் பித்தலாட் டக்காரர் போன்றவர்களுக்கு பிரேத ஜென்மம் அடைந்தவர்களால் பெருமளவு துன்பம் உண் டாகும்.

ஒருவர் ஆண் மகவைப் பெறாமல் பெண்களையே பெறுவதற்கும் அப்படி ஆண் குழந்தைக் கருத்தோன்றினாலும் பிறந்து இறப்பதற்கும் குடும்பத்தினருக்கிடையே ஒற்றுமையின்றி சண்டை சச்சரவுகளுடன்

மதிப்புரை ஆற்றிய இளை. பிரதிக்கல்விப் பணிப்பாளர்
ஆறுமுகம் ஶ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களும் பிரதி பெற்றவர்களும்



சிறப்புப் பிரதிபெற்ற அன்பர்களோடு மதிப்புரை ஆற்றிய சைவப்புலவர் க. நித்தியதசீதரனும்
வெளியீட்டுரை நிகழ்த்திய திரு. சி. பத்மநாதன் J.P. அவர்களும் காணப்படும் காட்சி



ஞானச்சுடரின் சிறப்புப் பிரதி பெறுவதற்கு வருகைபுரிந்தவர்கள் தாம் பெற்றுக்கொண்ட மலர்களுடன்





வெளியீட்டுரை நிகழ்த்திய திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்களும் மதிப்புரை ஆற்றிய திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களுடன் பிரதி பெற்றவர்கள்



சிறப்புப் பிரதி பெற்றவர்களுடன் மதிப்புரை ஆற்றிய திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்



வெளியீட்டுரை நிகழ்த்திய கிராமசேவையாளர் சோ. பரமநாதன் அவர்களுடன் பிரதி பெற்றவர்கள்



சிறப்புப் பிரதி பெற்றவர்களுடன் வெளியீட்டுரை ஆற்றிய சிவ ஆறுமுகசாமி அவர்களும் மதிப்புரை நிகழ்த்திய ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்களும்



வாழ்வதற்கும் உற்றார் உறவினர், நண்பருடன் பகைமை கொள்ள நேர்வதும் கடவுள் பக்தி செய்யவும், யாகம், வேள்வி செய்ய இயலா மல் போவதற்கும் தமக்குக் கீழானவருடன் தொடர்பும் அதனால் வேதனை ஏற்படுவதற்கும் தேவர்களையும் அந்தணர்களையும் தாய் தந்தையரையும் மற்றுமுள்ள பெரியோர்களை யும் இகழ்வதற்கும் அயலாரை கொல்ல முயற்சிப்பதற்கும் காரணம் வேறு யாருமல்ல, பிரேத ஜென்மம் அடைந்தவர்களாலேயே இவை நிகழ்கின்றன.

இவை மட்டுமா! பயிர்கள் நன்றாக விளைந்திருந்தும் அதன் பயனை முழுமை யாக அடைய முடியாமல் போவதற்கும், பொருத்தமற்ற தொழில்களைச் செய்வதற்கும் எப்போதும் நல்லனவற்றையே நினைக்காமல் அதர்ம சிந்தனைக்கு உட்படுவதற்கும், எதிலும் துணிச்சலின்றி கோழையாக இருப் பதற்கும், நோய்நொடிகள் அடிக்கடி ஏற்படு வதற்கும், தம் துணைவருடன் சேர்ந்து வாழா மல் போவதற்கும், தம் புத்திரர்களே தமக்குப் பகைவர்களாகி நடப்பதற்கும் இத்தகைய நிகழ்வுகளுக்கு காரணம் அந்தக் குடும்பத்தில் பிறந்து இறந்து பிரேத ஜென்மம் அடைந்தவரே காரணமாகின்றார்.

பிரேத ஜென்மம் அடைந்தவர் கொடூர முகத் தோற்றமும், வாள் போன்ற கூரிய பற்கள் கொண்டவராய் தம் குடும்பத்தினரின் கனவில் தோன்றி தம்மைக் காப்பாற்றுபவர் யாரும் இல்லையே என்று அழுது புலம்புவர். இவ்வாறு கனவில் தோன்றுவர் என்பது கட் டாயமல்ல. தோன்றாமலும் போகலாம். ஆனால் தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு துன்பங் கள் செய்வர்.

இத்தகைய பிரேத ஜென்மம் இறக்கும் அனைவருக்கும் ஏற்பட்டு விடுமா? என்ற சந் தேகம் நமக்கு ஏற்படுவது போன்று யாருக்கு இத்தகைய பிரேத ஜென்மம் ஏற்படும் என்ற சந்தேகம் கருடனுக்கும் ஏற்படுகிறது. அதற் கும் பகவானே விளக்கம் அளிக்கிறார்.

பூர்வ ஜென்மத்தில் கொடிய பாவம் புரிந்தவர்கள் யாரோ, அவர் தான் பிரேத ஜென்மம் அடைவார்கள்.

ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவர் தர்ம சிந்தனையுடன் பொது இடங்களில் கிணறு, குளம் போன்ற நீர்நிலைகள் வெட்டியும், தண்ணீர்ப்பந்தல் சத்திரம் (யாத்திரிகர் மடம்) கோயில்கள் முதலியவற்றைக் கட்டியும், முதி யோர் தங்குமிடம், ஊனமுற்றோர் பாதுகாப்பு நிலையங்கள் போன்ற பொதுமக்களுக்கு பயன்படும்படியான தர்மத்தை செய்திருப்பர். அதற்குப் பின்னர் அவரே அத்தகைய பொது நலனுக்காக ஏற்படுத்தியவற்றை விற்க நேர்ந் தாலோ தம் சுயதேவைக்கு உபயோகப் படுத்திக்கொண்டாலோ இவ்வமைப்புகளில் ஊழல் புரிந்தாலோ, இந்நிறுவனங்கள் மூல மாகத் தனக்குப் புகழ் சேர்க்க நினைத்தாலோ அவர் பிரேத ஜென்மம் அடைவர். அல்லது அவருக்குப் பின் அவர் குடும்பத்தில் பிறந்த ஒருவர் அவற்றை விற்று பொது நலனுக்கு கேடு விளைவிப்பாராயின் அவர் இறந்த பின்பு பிரேத ஜென்மத்தை அடைவர்.

அதுமட்டுமன்றி பிறருக்கு உரிமை யான பொன், பொருள், பூமி போன்றவற்றை அபகரித்தவர் வயலின் எல்லைகளையும், குடியிருப்பு நிலத்தின் எல்லைகளையும், மாற்றி அமைத்து தம் நிலத்தோடு சேர்த்துக் கொள் பவர் தர்மச் சொத்துக்களை அபகரித்தவர். குளம், கிணறு போன்ற நீர்நிலைகளைத் தூர்ந்து போகச் செய்து அதைத் தமக்குரிய தாக்கியவர், இடிவிழுந்து மாண்டவர், தீ விபத்தில் சிக்கியும், தீயிட்டு தம்மைக் கொளுத்தியும், தூக்கிலிட்டுக் கொண்டவர், விசம் அருந்தி இறந்தவர், துப்பாக்கி, கத்தி

போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டு இறந்தவர், அயல் நாடுகளில் தம் குடும்பத்தினர் அறியாமல் இறந்தவர்கள், தம் தாய் தந்தையருக்கு சிரார்த்தம் செய்யாமலேயே இறந்து போகிறவர் போன்றவர்கள் பிரேத ஜென்மம் அடைந்து அலைவர்.

பஞ்சமா பாதகம் எனும் தீயனவற்றைச் செய்பவரும் தற்கொலை செய்து கொண்டவர்களும் தந்தை, தாய், மனைவி, மகள், மருமகன், மகன் போன்றவர்மீது அபாண்டமான பழிசுமத்தியவர், சாதுக்கள், பசுக்கள் போன்ற உயிர்களைத் துன்புறுத்துபவர், இறைவழிபாடு அற்றவர். இறைவன் பெயரில் வேள்வி நடத்தி ஆடு, மாடு கோழியைக் கொல்பவர்கள், மதுபானம் அருந்துபவர், தம்முடைய குருவின் மனைவியை - குரு பத்தினியைக் கூடியவர் போன்றவர்களும் பிரேத ஜென்மத்தை அடைவர் எனப் பரந்தாமர் விளக்கமாகக் கூறினார்.

(தொடரும்...

எந்நிதி கொடுத்தும் உன்னடி காண
சந்நிதி வேலவ சரணம் ஐயா – முருகா
மருதர் கதிர்காமர் செய்தவம் பெரிதே – யான்
அவர் பாதம் பணிதலன்றி வேறொரு பேறும் கிடைத்திடலரிதே.

கதிரமலை கண்டு வந்தவராம் நீர் – பெரும்
கோயிலெனக்கேன் என்றதுவும் நீரே – பின்னர்
வாயிலொரு சீலை கட்டி வாய் வீடா மந்திரம்தான்
போதுமெனப் புகன்றீரே புண்ணியவா போற்றி

ஆலமிலைதன்னில் அமுதளித்த பேறுபெற்ற கதிர்காமா
ஞாலமது போற்றிடும் நினைவழியா உன் வேல் – இன்று
நாற்பது மடங்களிலே அமுதுண்ணும் எம்மடியார்
மறப்பரோ சந்நிதி வேலவனை – சொல்.

பழம்பெரும் பூவரச மரமருகே நின்ற வேளை
வலம் வரும் உன் நினைவலைகள் கடல்போல்
இதம் தரும் ஆற்றோரக் காற்றும் மர நிழலும் – நீ
மனமுவந்தே எமக்களித்த பேறே – முருகா.

சோலைகள் சூழ் சுந்தர வேலவன் நீ – தினம்பல
வேலைகள் மறந்து வந்திடுவேன் பாரும் – உன்
சாலையில் கால் பதித்த வேளை கடும் பக்தியும்
சேருமென் கனலுடன் மனத்தில்.

எனக்கொரு வரமருள்வாய் குகனே – யான்
மனத்திடையுனை நினைக்கவும் நிலைக்கவும்
அகத்திருள் அகலவும் அறிவு மேலோங்கவும்
பலத்தொடு வாழவும் உன் நினைவுடன் முருகா – கேள்.

சந்நிதியானே வேலவா போற்றி
எனக்கொரு வரமருள்வாய் குகனே போற்றி

*-கு. சிவபாலராஜா-*

# சைவப் பணியில் சந்நிதியான் ஆச்சிரமம்

திரு சிவகுரு கணேசலிங்கம் அவர்கள்

உலகெலாம் சைவம் பரப்பிவிட பணிசெய்த முதன்மைப் பங்கு ஈழத்துக்கு உரியது. ஆறுமுக நாவலரில் இருந்து தொடர்ச்சியாக பரவிவரும் இப்பணியில் சந்நிதியான் ஆச்சிரமமும் முக்கியமான இடத்தினை வகிக் கின்றது. முருகனின் நிழலில் இருந்து கந்தபுராணபடனம் மூலமே நாவலர் சைவத்தைக் காக்கப் போராடினார். அதனாலேயே "கந்தபுராண கலாசாரம்" என்று பண்டிதமணியால் யாழ்ப்பாணம் போற்றப்பட்டது. நல்லூர்த் திருவிழாவைத் தொடர்ந்து செல்வச்சந்நிதி திருவிழா தொடங்கு வது போல நல்லை நகர் ஆறுமுகநாவலரின் பணியை செல்வச்சந்நிதி நிழலில் சந்நிதியான் ஆச்சிரமம் ஏதோவொரு வகையில் தொடர்வது முருகனின் அருட்கடாட்சமே.

சந்நிதியான் ஆச்சிரமம் சமய, சமூக பணிகளிலே தன்னை ஈடுபடுத்தி உழைப்பதனால் உலகெலாம் பரவி நிற்கிறது. இதன் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" மாதந் தவறாமல் வெளிவரும் மாண்பும் நெறியும் யாவராலும் போற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் தமிழ்ப்பூங்கா அச்சகத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பும் உறவும் இறுக்கமும் வார்த்தை கடந்த ஆத்மார்த்தத்துக்குரியது.

1993ஆம் ஆண்டில் வாராந்த நிகழ்வுகளுக்கான துண்டுப் பிரசுரங்களை அச்சடிக்கத் தொடங்கியது முதல் இன்று வரை இறுக்கமான அன்பை உணர்கின்றோம்.

200ஆவது இதழாக முகிழும் இந்த ஞானச்சுடரின் முதலாவது இதழில் இருந்து சில இதழ்கள் எமது அச்சகத்திலேயே மலர்ந்தன என்பதை நினைக்கும்போது உள்ளம் ஆனந்தம் கொள்கின்றது.

அன்பும் உரிமையும் மிக்கவர்களின் தொடர்பு சந்நிதி முருகனின் அருளால் வாய்த்ததே. ஞானத்தையும் சைவத்தையும் முருகன் அருளையும் பரப்பும் பணி என்றும் தொடர கந்தப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சிப் போற்றுகின்றேன்.

# சைவசித்தாந்தம்

இரா. சாந்தன் அவர்கள்

சைவசித்தாந்தம் கணித சாத்திரத்தைப்போல யாவராலும் அங்கீகரிக்கத்தக்கது. அதற்குப் பிரமாணமாயுள்ளவை காட்சி, கருதல் ஆகிய இரண்டுமே. காட்சியாவது கண், காது முதலிய பொறிகளால் அறியப்படுமுணர்வு. இந்த உணர்வு எவர்களும் ஏற்கத்தக்கது. சைவசித்தாந்தம் காண்டல், கருதலோடு மாத்திரம் நிற்றலினாலே அதற் கூறப்படுபவை உலகம் முழுவதும் அங்கீகரிக்கத்தக்கவை. இந்த முறைமை, சைவசித்தாந்த சாத்திரங்களில் ஒன்றாகிய சிவஞானபோதத்தின் முதற் சூத்திரத்திலமைந்திருப்பதைக் காணலாம்.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி என்மனார் புலவர்"

இதன் பொருள்:- நாம் காணும் பிரபஞ்சம் அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் குறிக்கும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை உடையதாதலால் இது தோற்றப்பட்ட பொருளாம். இது இவ்வாறு விரிந்தது மலமிருத்தலினால், இதைத் தோற்றுவிப்பவன் அரன், இவ்வாறு கூறுவர் தர்க்கநூலிற் சிறந்தோர்.

இந்தச் சூத்திரத்திலே காட்சியைப் பிரமாணமாகக் கொண்டு ஆண் என்றும், பெண் என்றும், மிருகமென்றும், பறவையென்றும், புல்லென்றும், பூண்டென்றும் பல்வேறு வகைப்பட்ட வடிவங்கள் இருத்தல் நிச்சயிக்கப்படுகின்றது. இந்தப் பொருள்களெல்லாம் அணுக்களாலாக் கப்பட்டவை. காட்சியால் உணரப்படத்தக்கவை. ஆதலால் இந்த உலகம் அணுக்களிலிருந்து தோன்றியது என்பது கருதலாற் பெறப்படும். இந்த அணுக்களும் பகுக்கப்படத்தக்கனவாயின் அப்படி வகுத்துக் கொண்டு போகும்போது, இறுதியில் பகுக்கப்படாத ஒரு பொருள் வருமென்பது கருதலாற் பெறப்படும். இதற்கு ஒரு பொருள் வேண்டும். இப்பொருள் மாயை எனப்பட்டது. மாயை என்ற சொல்லுக்கு ஒடுங்கி விரிவது என்பது கருத்து. ஒடுங்குதலாவது காரியம் காரணமாதல் அதாவது, காரியமாகிய உலகம்தான் தோன்றுதற்குக் காரணமாகிய மாயை ஆதல். விரிதலாவது காரணம், காரியமாதல். அதாவது மாயை உலகமாதல், உலகம் மாயையினின்றும் தோன்றியது என்று காட்டப்பட்டது. ஆனால் மாயை தானாக எப்படி ஒரு மனித வடிவத்தையும், ஒரு மர வடிவத்தையும் எடுக்கும்? அணுக்கள் தாமாகவே ஒன்றோடொன்று சேரவும், பிரியவும் தமக்குள் வல்லமையுடையன என்று வைத்துக்கொள்வோம். இரண்டு வகையான அணுக்கள் சேர்ந்து தண்ணீர் உண்டாகின்றது. எவ்வளவு காலம் சென்றாலும் அவைகள் அந்த அளவாகச் சேர்ந்தால் நீராகுமன்றி வேறொன்றாகமாட்டா. ஆயினும் உலகத்திலே காணப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் தம்மிலும் வேறானவைகளாய்த் தோற்றியே ஆண், பெண் முதலிய பேதங்களை உண்டாக்கின. அந்தப் பேதத்தை ஆக்கக்கூடிய வல்லபம் அணுக்களுக்கில்லை. அந்த வல்லபம் வேறொரு பொருளிலிருந்து

சிறப்புப்பிரதி பெற்றுக் கொண்டவர் தாம் பெற்ற பிரதிகளுடன் காணப்படும் காட்சி






தாம் பெற்ற பிரதிகளுடன் அன்பர்கள் காணப்படும் காட்சி





சிறப்புப் பிரதி பெற்றவர்கள் தாம் பெற்ற பிரதிகளுடன்
காணப்படும் காட்சி





மலருக்குரிய சிறப்புப் பிரதி பெற்றவர் தாம் பெற்ற பிரதிகளுடன்





வரவேண்டும். அந்தப் பொருள் இந்த அணுக்களையாளத் தக்கதாகவும் இருக்கவேண்டும். அந்தப் பொருளுக்கு ஓர் பெயர் உண்டானது. அது கடவுள் எனப்பட்டது.

ஆகவே இந்தச் சூத்திரத்தின் முதற்பகுதி மாயை கடவுளாகிய இரண்டு பொருள்கள் இருத்தலையும் அவற்றின் தன்மையையும் காட்சியினாலும், கருதலினாலும் சாதிக்கின்றது. இறைவன் இருக்கிறார் என்பதை நம்பு என்று இந்த நூலில் கட்டளை பண்ணவில்லை.

இந்தச் சூத்திரத்தின் இரண்டாம்பகுதி இந்தப் பிரபஞ்சந் தோற்றுதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்கின்றது. மனிதர், மிருகம், பறவை முதலிய இவைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பொருள் இருப்பதைக் காண்கிறோம். அந்தப் பொருளுக்கு சீவன் அல்லது உயிர் என்று பெயர். இந்த உயிர்கள் யாவற்றிலும் குறைபாடு இருக்கின்றது. இவைகளுக்குள் சிறந்ததாகிய மனிதப் பிறவியில் தானும் அறிவுக்குறைவு, அன்புக் குறைவு, செய்கைக் குறைவு ஆகிய குறைவுகள் இருக்கின்றன. இது காட்சியாற் பெறப்படுவது. இதற்குக் காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். இந்தக் காரணத்திற்கு ஒரு பெயர் வேண்டும். அது ஆணவம் எனப்படும். ஆணவம் என்ற சொல்லின் கருத்து அணுவாகுவது என்பது, அதாவது உயிர்களின் வல்லபங்களை அஃணுவாக்குவது. சூத்திரத்தின் இரண்டாம் பகுதியிலிருந்து உயிர் ஆணவமாகிய இந்த இரண்டு பொருள்கள் இருத்தலும், அவைகளின் தன்மையும் காட்சி கருதலாகிய இரண்டினாலேயே பெறப்பட்டன. இப்படியே சைவசித்தாந்தம் கணித சாத்திரம்போல யாவரும் ஏற்கக்கூடிய உண்மைகளையே உடையது. இதையுணராத பேதையர் சைவசித்தாந்தம் ஒடுங்கிய மனப்பான்மையுடையோருக்குத் தக்கதென்று பிதற்றுவர். இனிமேல் இந்த நான்கு பொருள்களுடைய தன்மையையும் காண்டல், கருதல் என்ற இரண்டு பிரமாணங்கள் கொண்டு ஆராய்வோம்.

## கடவுள்

இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் தோற்றுவிப்பவர் கடவுள் என்றோம். ஆதலால் இந்தப் பிரபஞ்சத்திலே நடக்கும் செயல்களெல்லாம் அவரிலிருந்தே தோன்றுவன. இதனாலே அவருக்குச் சர்வவல்லமை உண்டென்று சொல்வதுண்டு. அப்படிச் சொல்வது கடவுளுக்கு ஒரு குறைவாக முடியும். எப்படி என்றால், ஒரு தடையை நீக்குதற்கான வல்லபம் வேண்டும். பிரபஞ்சம் முழுவதும் அவருடைய ஆணைக்குள் நிற்றலால் அவருக்கு வல்லமை தேவையில்லை. இது போலவே கடவுள் எல்லாம் அறிபவர். எங்கும் உள்ளவர் என்பனவும் கடவுளுக்கு இழுக்கானவைகளாம். இதனாலேதான், கடவுளுக்கு எதிர்மறை இலக்கணங்கள் சிவஞானசித்தியாரிற் சொல்லப்பட்டன. ஆயினும் அவருடைய தன்மைகளுள் ஒன்றின் பயனை நாங்கள் யாவரும் எப்போதும் அறிந்து கொண்டிருக்கிறோம். அது என்னவென்றால் அவருடைய எல்லையில்லாத அருள் அணுக்களால் ஆக்கப்பட்ட பிரதமசீவனை (தொடக்கத்திலே, உயிர் பொருளோ அல்லவோ என்று சந்தேகிக்கத்தக்கதாகிய ஆதி உயிர் பொருள்) சம்பந்த சுவாமியுடைய திருவுருவத்தின் நிலைக்குக் கொண்டு வந்து அதன் வழியாக எல்லையில்லாத அறிவையும், ஆற்றலையும் பெறச்செய்த பொருள் அன்பல்லாமல் வேறெது? இந்த நேசமே கடவுளுடைய லட்சணங்களுள் நாம் அறிந்த ஒன்று இது பிரபஞ்சம் முழுவதும் நின்று பிறவிகளை மேம்படுத்தி ஆன்மாவின் அறிவு

தொழில் இச்சைகளை ஏற்றிவருகின்றது. இது ஆன்மாக்களுக்குத் தக்கதக்கபடி உடல்களைக் கொடுத்து (சிருஷ்டி- படைத்தல்) அவ்வுடல்களை இரட்சித்து (திதி- காத்தல்). உடலோடு வாழும்பொழுது ஆன்மாவுக்கு வேண்டிய அறிவைக்கொடுத்து அதற்கு உரிய செயல்களை செய்வித்து செயல்களின் பயனாக இன்ப துன்பங்களை அனுபவித்து ஆணவமலத்தின் வலியைத் தடுத்து (மறைதல்- நிரோபலம்) நல்வழியிற் செலுத்துகின்றது. பெற்ற உடல் ஆன்மாவுக்குப் பொருந்தாமல் நேரும்போது இது அந்த உடம்பை நீக்கி (சங்காரம்- அழித்தல்) அதற்குரிய வேறுநிலையில் விடுகின்றது. இறுதியில் ஆணவ மலத்தின் தடையை முற்றாக நீக்கி ஆன்மாவைச் சிவமாக்குகின்றது (அனுக்கிரகம்- அருளல்)

இவற்றுள் சிவமாதல் நெடுங்கால முயற்சியால் வருவது, சிவமாவதற்கு முன் சிவத்திலே எல்லையில்லாத பற்று வரவேண்டும். அந்தப் பற்று வருவதற்கு மற்றைய பொருள்களிலுள்ள பற்று நீங்க வேண்டும். மனமானது ஏதாவது ஒரு பொருளைப் பற்றாமல் இராது. எதிலே அதற்கு உறுதியான பற்றோ அதையே அது நாடும். வேறெந்தத் தொழிலில் நின்றாலும் அதிலேதான் செல்லப்பார்க்கும். உலகப்பற்று அதிகம் உள்ளவர்கள் கடவுளை நினைக்கும்போது உலகப்பொருள்களிலே அடிக்கடி மனத்தைச் செலுத்துவார்கள். ஆதலால் கடவுளிலே மிகுந்த பற்றுக்கொள்ள வேண்டுமானால் அந்த வழியிலேயே மனத்தைச் செலுத்திப் பழக வேண்டும். இதற்கு நாம் முதற் செய்யவேண்டியது கடவுளை நினைத்தல், நினைத்த பின்புதான் பற்றுண்டாகும். ஆயினும் கடவுள் எங்களுடைய நினைப்புக்கு எட்டாதவர். ஆதலால் எமது மனதுக்கு எட்டக்கூடிய ஒரு வடிவமாகக் கடவுளை நாம் நினைக்க வேண்டும். அந்த வடிவம் கல்லினாலேனும், உலோகங்களினாலேனும் ஆக்கப்பட்ட விக்கிரகங்கள் ஆகலாம். அல்லது அவைகளைப்போல மனதிலே கற்பிக்கப்பட்ட வடிவங்களாகலாம். இவைகளைக் கடவுளாகப் பாவித்து இவைகளை நினைத்து இவைகள் மூலமாகவே இறைவனிலே அன்பைச் செலுத்தி அந்த அன்பை வளர்த்துக் கொண்டு வரவேண்டும். கண்ணுக்குத் தோற்றாத ஒரு பொருளுக்குப் பதிலாகக் கண்ணுக்குத் தோற்றக்கூடியதாக ஒரு வடிவம் உண்டாகும். ஒரு வழக்கம் எல்லாரிலும் உண்டு. எழுத்துக்கள், ஒலிகள் அவை கண்ணுக்குத் தோற்றாதவை ஆயினும், அவற்றுக்குப் பதிலாக எழுத்து வடிவங்களை உண்டாக்கி அவைகளை எழுதியும், வாசித்தும் வருகின்றோம். ஆதலால் கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாத பொருளாகிய கடவுளுக்குப் பதிலாக இவற்றிற்கு எட்டக்கூடிய வடிவங்களைக் கொண்டு நினைத்தல் இயல்பேயாம். கடவுளை நேரேயறியும் அறிவுள்ளவனுக்கு வழிபாடு தேவையில்லை. நேரே காணமாட்டாதவர்கள் யாவரும் பதில் வடிவங்களைக் கொண்டே வழிபடவேண்டியவர்கள். ஆதலால் கடவுள் வழிபாடு செய்கின்றவர்கள் யாவருக்கும் பதில் வடிவங்கள் வேண்டியவைகளாம். மானச வடிவத்தால் வணங்குபவர் சிலர் விக்கிரக வணக்கம் செய்வோரை நிந்திப்பது தகாது. மானச வடிவமும் கடவுளுடைய உண்மையான வடிவமல்லாமையால், இவ்வாறான வடிவங்களை நினைத்து நினைத்து அன்பைச் செலுத்தி வளர்த்துக் கொண்டு வந்தால் எங்களுடைய மனம் கடவுளுடைய எண்ணத்தால் நிறைந்து உலகப் பொருள்களில் நாட்டமில்லாமல் அவரிலே தாகமுடையதாக வரும். அப்படி வரும்போது அவர் குருவடிவத்தில் நின்று சிவஞானத்தைத் தந்து எங்களைச் சிவமாக்குவர்.

(தொடரும்...

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 26.08.2014 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெற்ற விஷேட நிகழ்வுகள்

**26.08.2014 செவ்வாய்க்கிழமை (2ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

**27.08.2014 புதன்கிழமை (3ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகனின் திருப்பெரு வடிவம்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர்)

**28.08.2014 வியாழக்கிழமை (4ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆறாத இன்பம் அருள்வான்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்
(இளை. ஆசிரியர்)

**29.08.2014 வெள்ளிக்கிழமை (5ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "நலம் தரும் நம்பிக்கை"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு சி. நவரத்தினம் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர்)

**30.08.2014 சனிக்கிழமை (6ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "வேலோடும் விளையாடும் வேலவன்"

வழங்குபவர் :- பண்டிதர் திரு சி. வேலாயுதம் அவர்கள்

**31.08.2014 ஞாயிற்றுக்கிழமை (7ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணத் தத்துவம்"

வழங்குபவர் :- சைவப்புலவர் திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்
(அதிபர்)

**01.09.2014 திங்கட்கிழமை (8ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆலய வழிபாடு"

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் /கல்லூரி வட்டுக்கோட்டை)

**02.09.2014 செவ்வாய்க்கிழமை (9ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மனம் துடித்தது மானம் தடுத்தது"

வழங்குபவர் :- செஞ்சொற் செம்மல் திரு இரா. கேதீசன் அவர்கள்

**03.09.2014 புதன்கிழமை (10ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "இன்றைய தேவைகளும் சமயப் பணிகளும்"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

பூங்காவனம்

**04.09.2014 வியாழக்கிழமை (11ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகனும் அழகும்"

வழங்குபவர் :- திரு க. கைலைநாதன் அவர்கள்

(ஆசிரியர்)

**05.09.2014 வெள்ளிக்கிழமை (12ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஓவற இமைக்கும் ஒளி"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

**06.09.2014 சனிக்கிழமை (13ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பழையோள் குழவி"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**07.09.2014 ஞாயிற்றுக்கிழமை (14ம் திருவிழா) முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "உள்ளம் பெருங் கோவில்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(அதிபர்)

சப்பறம்

**08.09.2014 திங்கட்கிழமை தேர்த்திருவிழா**

**09.09.2014 செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழா**

ஞானச்சுடர் 200 ஆவது மலர் ஆவணி

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

**05.09.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஒவற இமைக்கும் ஒளி"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

**12.09.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்தியசகிதம்)

வழங்குபவர் :- திரு செ. ஞானசொரூபன் அவர்கள்

[இசை ஆசிரியர் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்]

---

**19.09.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**26.09.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை]

201ஆவது மலர்

பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

